மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மதுரை நகரில் உடனடி குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக திருப்புவனம், மணலூர், சோழவந்தான், மேலக்கால் ஆகிய இடங்களுக்கு மேலக்கால் என்பது சோழவந்தானில், அது 'விநின் பிராக்கெட்'; வைகையாற்றின் மணல் படுகையிலிருந்து வடி குழாய்கள் அமைத்து, நிலத்தடி நீரைக் கொண்டுவந்து, மதுரை குடிநீர் தேவைக்கு உபயோகிக்கும் திட்டம் ஒன்று சுமார் 300 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தீட்டப்பட்டு, தற்சமயம் அது தலைமைப் பொறியாளர் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம் செயல்பட்டால் நாள் ஒன்றுக்கு சுமார் 2 முதல் 3 மில்லியன் காலன் குடிநீர் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தெரிவித்துள்ளது.

[முற்பகல் 9.20]

மதுரை மாநகரத்தில் தேர்தலுக்குப் பின்னால் கொடுத்த வாக்குறுதிக்கேற்ப அவசரம் அவசரமாக தயார் செய்யப்பட்டிருக்கின்ற திட்டமாகும் இது.

அடுத்து இப்போது தண்ணீர் கொடுப்பதற்காக வைகை நீர்த்தேக்கத்தில் 600 மில்லியன் கன அடி நீர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, இந்நீர் கோடை நாட்களில் வைகை ஆற்று தரைப் பகுதியை ஈரப்படுத்தி நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவதற்குப் பயன்படுகிறது. இந்த ஒதுக்கீட்டை ஆயிரம் மில்லியன் கன அடியாக உயர்த்தும் குறிப்பு ஒன்றும் அரசின் பொதுப் பணித்துறையின் பரிசீலனையில் உள்ளது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மெத்த மகிழ்ச்சி கொள்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

1979 ஏப்ரல் 26]

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவரவர்களே, மதுரை நகரில் குடிதண்ணீருக்காக ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு? அதன் வேலை எப்போது தொடங்கப்படும்? அந்த வேலை எப்போது முடியும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, நாம் எல்லோரும் சேர்ந்து தேர்தல் காலத்தில் குடி தண்ணீர் அதிகமாகத் தருவோம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம், மாண்புமிகு உறுப்பினர் திரு. சொர்ணம் உட்பட, திரு அம்பிகாபதி உட்பட. எனவே ஆய்வு விவரமாக செய்திருக்கிறோம். ஆய்வு என்பது எவ்வளவு மதிப்பீடு எப்படி செய்வது என்பதாகும். மிக விரைவிலே செய்வதாக இருக்கிறோம் அதாவது ''ப்ரேக்னெக் ஸ்பீடிலே'' போகிறோம்.

மன்னார்குடி நகரில் அரசு ஊழியர்களுக்கு வீடுகள்.

* வினா எண். 833—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மன்னார்குடி நகரில் அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவரவர்களே, மன்னார்குடி நகரில் அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டுவதற்கான ஒரு செயற்குறிப்பு தயாரிக்கப்பட்டதாக நான் கேள்விப்பட்டேன். ஆனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் இல்லை என்று பதில் சொல்கிறார்கள். அது என்ன காரணம் என்பதை அறிவிக்க இயலுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி மன்னார்குடி நகரில் அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா என்பது. பரிசீலனையில் உள்ளதா என்று கேட்டிருந்தால் சரியான விடை கிடைத்திருக்கும். அரசின் பரிசீலனையில் இல்லை. தற்போது அரசிடம் இதுபற்றிய செயற்குறிப்பு ஏதும் இல்லை. ஆனால் தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 132 வாடகை வீடுகள் கட்டுவதற்கான செயற்குறிப்பு வீட்டு வசதி வாரியத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அங்கே

ஏற்கெனவே சிலபேர் குடியிருக்கிறார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். அவர்கள் அங்கே விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த இடத்தை வீட்டு வசதி வாரியம் பெற்று அங்கே வீடு கட்டுவதற்கு ஒத்துழைப்பு தர வேண்டும் என்று நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டிருக்கிறேன். அவர் தருவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. ஆகவே செயற்குறிப்பு இருக்கின்றது. 132 வாடகை வீடுகள் கட்டுவதற்கு வீட்டுவசதி வாரியத்திடம் செயற் குறிப்பு இருக்கின்றது. அவர்கள் அது குறித்து அரசுக்கு அனுப்பு வார்கள்.

தீண்டாமை ஒழிப்புப் பணிகளுக்கு ரோந்துக் காவல் படை.

* வினா எண். 834—திரு. ரா. மார்க்கபந்து, திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீண்டாமை ஒழிப்புக்கென தனி போலீஸ் ரோந்துப் படை அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) அது எந்தெந்த மாவட்டங்களில் செயல்படுகிறது?

(இ) மற்ற மாவட்டங்களுக்கு அதை விஸ்தரிக்கும் உத்தேசம் உண்டா?

(ஈ) இதற்கு மத்திய—மாநில அரசுகளின் பங்கு என்ன?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) தீண்டாமை ஒழிப்புக்கென தனி போலீஸ் ரோந்து படை அமைக் கப்பட்டுள்ளது.

(ஆ) அது தற்போது கோயம்புத்தூர், மதுரை, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய ஆறு மாவட்டங்களில் செயல்படுகிறது.

(இ) இந்த ரோந்து படையினை பிற மாவட்டங்களுக்கு விரிவுப்படுத்தும் உத்தேசம் உண்டு.

(ஈ) ஏற்கெனவே இயங்கி வரும் ஆறு ரோந்து காவல் படைகளுக்கு ஆகும் செலவை மாநில அரசே ஏற்கிறது.

புதிதாக மேலும் செங்கல்பட்டு, இராமநாதபுரம், கன்னியா குமரி, வட ஆற்காடு, நீலகிரி, சேலம், தர்மபுரி ஆகிய 7 மாவட்டங்களில் அமைக்கப்படவிருக்கும் ரோந்து காவல் படை களுக்கு ஆகும் செலவினை மத்திய அரசே முழுவதுமாக ஏற்றுக் கொண்டு இதனை ஒரு மத்திய அரசின் திட்டமாக (Centrally sponsored scheme) அமுல்படுத்த மத்திய அரசு 21-8-1978 அன்று சம்மதித்து இத்திட்டத்திற்காக 1978-1979-ம் ஆண்டில் நான்கு இலட்சம் ரூபாய் கொடுக்க ஒப்பு தலளித்துள்ளது.''

1979 ஏப்ரல் 26]

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவரவர்களே, இது வரைக்கும் இந்தத் தீண்டாமை ஒழிப்பு சட்டத்தின்கீழ் எத்தனை வழக்குகள் நிருபிக்கப்பட்டு தண்டனை அளிக்கப்பட்டிருக்கின்றன. அந்த வழக்குகள் தோற்றுவிட்டிருந்தால் எந்த அடிப்படையில் அவைகள் தோற்று விட்டன என்பதை அறிய விரும்புகிறேன்.

அத்துடன் எந்தவிதமான procedure has been adopted in trying these cases என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே 31-8-78 வரை அறிவிக்கப்பட்ட வழக்குகள் 7,434, பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 7,137. தண்டனை கொடுக்கப் பட்ட வழக்குகள் எண்ணிக்கை, 3956 ஆகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த அடிப்படையில் வழக்குகள் நடத்தப் படுகின்றன. என்ன 'ப்ரொசிஜர்' என்று கேட்டிருக்கிறார்கள். அவர் வழக்கறிஞர். அதைப் பற்றி நன்கு தெரிந்திருப்பார்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இப்போது ஹோட்டல்களில் காலில் செருப்பு போட்டுக் கொண்டும், தோளில் துண்டு போட்டுக்கொண்டும், கிராமங்களில் போகமுடியாத நிலை இருப்பது சர்வ சாதாரணம். அது ஒரு அசிங்கமான நிகழ்ச்சி, வெட்கப்பட வேண்டிய ஒன்று. இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரு வழக்குப் பதிவு செய்தாலும், அதன்மீது சாட்சியம் சொல்வ தற்கு அனுமதிக்கப்படாமல், வெளியேற்றப் படுகிறார்கள். போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று உடனடியாக எப். ஐ ஆர். ரிப்போர்ட் கொடுத்தாலும் அதைப் பதிவு செய்வதில்லை. இதற்கு ஒரு தனி போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. அங்கே போய் பதிவு செய்துகொள்ளலாம் என்று சொல்கிறார்கள். அது நியாயம் அல்ல. ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்கு உத்தரவு பிறப்பிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் ; தலைவர் அவர்களே, ஒவ்வொரு காவல் துறையிலும் வழக்குகளைப் பதிவு செய்வதில் சில நேரங்களில் குறைபாடு இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார். ஆகவே தனி ரோந்து படையை அமைத்தால் இந்த வழக்குகளை தீவிரப்படுத்தவும், உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், சாத்தியக்கூறு இருக்கும் என்பதால் அரசாங்கம் இந்த நடை முறையைப் பின்பற்றுவதற்கு இன்றைக்கு தனி கவனம் செலுத்தி வழக்குகள் பதிவு செய்யப்படுகிறது. அவர்களுக்கு அக்கறை இருக்கும் என்ற காரணத்தால் இந்த தனி படை நிறுவப்பட் டிருக்கிறது. நிதி நிலைக்கு ஏற்ப பிற்காலத்தில் அது பரிசீலிக்கப் படும்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, காவல் துறையினா மத்தியில் பல அதிகாரிகள் இன்று 'ஆன்டி-அரிசன்' என்ற முறையில் ஒரு பிரிஜிடிஸ்—ஆக இருக்கிறார்கள். ஆகவே. பொதுக் கிணற்றில் இருந்து தண்ணீர் எடுக்கும் பிரச்னை வந்த போது அந்தப் போலீஸ்காரர்கள் 'லாண்ட்-லார்ட்ஸ்' பக்கத்தில் இருப்பதனால் இன்றைக்கு பல 'இன்சிடென்ஸ்' நடந்துகொண்டிருக்கின்றன. நேற்று வந்த தந்தி ஒன்றை உங்கள் அனுமதியோடு படிக்கிறேன். விருதுநகர் மாரிமுத்து நாடார் என்பவர் "Virudhunagar Marimuthu Nadar having orchards at Pavali near Virudhunagar obstructs the way to burial ground (Stop) Police is acting biased and started brutal attack, on the Harijans (Stop pray intervention and order." ஆகவே இப்படி அன்றாட பிரச்னையாக வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, போலீஸ் மத்தியில் இருக்கக் கூடிய இந்தக் 'காஸ்ட்—பிரிஜிடிஸ்' 'கன்ட்ரோல்' பண்ணுவதற்கும் குறைப்பதற்கும், அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது ஒன்பதை அறிவிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்கு இதுபோன்ற தகவல்கள் வந்தவுடனே, அரசு விசாரித்து அறிந்து, சம்பந்தப்பட்டவர் மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. இதுபோன்று காவலர்கள் தவறு செய்யும்போது அவர்கள் மீதும் வழக்கு பதிவு செய்கின்ற ஒரு சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

திரு. இ. தமிழரசன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எத்தனை பேர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு தண்டனை பெற்றிருக்கிறார்கள்? அதுபோல் குறிப்பாக' எனது ஊருக்குப் பக்கத்தில் இருக்கும் எனக்குத் தெரிந்த அரிசன குடிமகன் ஒருவர் பொதுக் கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்த காரணத்தால், அவர் அந்த ஊரில் இருந்து துரத்தி, துரத்தி அடிக்கப்பட்டு, பிறகு காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்ய போனபோது, அந்த வழக்கைப் பதிவு செய்யவில்லை. அந்தக் காவல் துறையினர் அவர்களைப் புறக்கணித்திருக்கிறார்கள். அதைப் போக்குவதற்கு அரசு வேறு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தமிழரசன் அவர்கள் கால தாமதமாக வந்தார் என்று கருதுகிறேன். ஏற்கெனவே ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும்போது, மொத்த வழக்குகள் பதிவு செய்யப்பட்டவை. 7,434, தண்டனை வழங்கப்பட்டது 3,956 என்று சொல்லியிருக்கிறேன். இப்போது இருக்கிற சட்டப்படி அந்த வழக்குகளை 'காம்பவுன்ட்' பண்ணும் முறை பின்பற்றுவதில்லை.

1979 ஏப்ரல் 26]

(முற்பகல் 9.30)

ஆகவே வழக்கு கண்டிப்பாக போடவேண்டும் என்று தான் விதிமுறை இருக்கிறது. இதைப்பற்றி தனியாக எழுதித் தந்தால் அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. ரா. கிருஷ்ணன் : ஏற்கனவே இது போன்ற வழக்குகளை போலீஸ் ஸ்டேஷன்களில பதிவு செய்வதற்கு தயங்குகிறார்கள். இதற்கென்று தனியாக விசேஷ போலீஸ் படை இருப்பதாகவும் சொல்லுகிறார்கள். ஆனால் இது காக்னஸபிள் அஃபன்ஸ்–ஸாக இருப்பதால் எந்த போலீஸ் ஸ்டேஷனிலும் வழக்கை பதிவு செய்யலாம். விசேஷ போலீஸ் படை என்பது எங்கேயோ ஒரு மையத்தில் இருக்கிறது. அங்கே போய் பதிவு செய்யும் போது டிலே ஆகிறது. இதனால் கேஸ் விடுதலையாவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, எல்லா போலீஸ் ஸ்டேஷன்களிலும் இது போன்ற வழக்குகளை பதிவு செய்யவேண்டும் என்று கண்டிப்பாக அரசு ஒரு உத்தரவு பிறப்பிக்குமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இப்போது நடைமுறையில் இதுபோன்ற வழக்குகளை போலீஸ ஸ்டேஷன்களிலும் பதிவு செய்கிறார்கள். இப்படிப்பட்ட வழக்குகளில் தீவிரம் காட்டவேண்டும் என்பதற்காகவும், தனியாக அக்கரை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதற்காகவும் தனிக்காவல் படை செயல்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீண்டாமையை ஒழிக்க எத்தனை விசேஷ போலீஸ் படையைப் போட்டும் தீண்டாமையை ஒழிக்க முடியவில்லை. மேலும் மேலும் வளர்ந்துகொண்டு தான் வருகிறது, தீண்டாமை இங்கு இருக்கிறது என்று ஏதாவது ஒரு இடத்தில் வழக்கு போடும் போது அங்குள்ள, உயர்ந்த ஜாதிக்காரர்கள் இங்கு தீண்டாமை கிடையாது என்று போலி ரிப்போர்ட்டை கொடுத்து விடுகிறார்கள். ஆகவே நமது அமைச்சர் அவர்கள் இதை ஒழிக்க தனி முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். தீண்டாமை குற்றத்திற்காக தூக்குத் தண்டனை கொடுக்க அரசு தனிச்சட்டம் கொண்டு வரவேண்டும். அதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, என்னதான் சட்டம் இயற்றினாலும், எவ்வளவு தான் காவல்படை போட்டாலும்' சமுதாயத்தில் மனமாற்றம் ஏற்பட்டு இன ஒற்றுமை ஏற்பட்டால்தான் இந்த தீண்டாமை ஒழிக்க முடியும். இந்த உணர்வுகள் சமுதாயத்தில் ஏற்பட வேண்டும்

இதை ஒழிப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தூக்கு தண்டனை கொடுப்பதற்கு சட்டம் இயற்றப்படுமா என்று கேட்டார்கள். கனம் உறுப்பினர் அவர்கள் மிகவும் ஜாக்கிரதை யாக இருக்கவேண்டும். பாதுகாப்புடனும் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : அமைச்சர் அவர்கள் பதில் அளித்த திலிருந்து 3,000 வழக்குகள் தோற்று விட்டிருப்பதாக தெரிகிறது. எந்த அடிப்படையில் இவை தோற்கடிக்கப்பட்டிருக்கின்றன என்ப தற்கு ஏதாவது குறிப்புகள் இருக்கிறதா? * Untouchability Act has been misused, என்கிற தகவல் ஏதாவது அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : எந்த அடிப் படையில் இந்த வழக்குகள் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரங்கள் இருக்கிறதா என்று கேட்டார்கள், நீதிவழங்கப் பட்டதின் அடிப்படையில் தான் இந்த வழக்குகள் தோற்கடிக்கப் பட்டிருக்கலாம். இதர விவரங்கள் இங்கே இல்லை.

ஊட்டியில் அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்திற்கு ஏற்பட்ட பொருட்சேதம்.

*வினா எண். 835— திரு. வ. மு. சுப்பிரமணியம் ; மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 4-11-78 அன்று ஊட்டியில் பெய்த பெருமழையின் காரணமாக அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக்கழகத்திற்கு ஏற்பட்ட பொருள் சேதத்தின் மதிப்பீடு எவ்வளவு?

(ஆ) இதுபற்றி அரசுக்கு தெரிவிக்கப்பட்டதா?

(இ) மதிப்பீட்டுக்குரிய பொருள்கள் அத்தனையும் வெள் ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டதா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) 4-11-78 அன்று, ஊட்டியில் பெய்த பெருமழையின் காரணமாக தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சி கழகத்திற்கு ஏற்பட்ட பொருள் சேதத்தின் மதிப்பீடு ரூ. 63,881/ ஆகும்.

(ஆ) இதுபற்றி அரசுக்கு தெரிவிக்கப்பட்டது.

(இ) மதிப்பீட்டுக்குரிய பொருள்கள் அத்தனையும் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டது.

1979 ஏப்ரல் 26]

திரு. வ. மு. சுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, என்னென்ன பொருட்களுக்கு சேதம் ஏற்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் அறிந்த வரையில் சிமிண்ட் மூட்டைகளும், இரும்புக் கம்பிகளும் அடித்துச் செல்லப்பட்டிருப்பதாக சொல்லுகிறார்கள். இது உண்மையிலேயே வெள்ளப்பெருக்கினால் தான் அடித்துச் செல்லப்பட்டதா. அல்லது வேறு ஏதாவது மோசடி நடந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த விவரங்களை எல்லாம் தெரிந்து வைத்திருக்கிறார்கள். சிமிண்ட் மூட்டைகளும் இரும்பு கம்பி களும் அடித்து செல்லப்பட்டன என்று சொல்லப்பட்டிருக்கிறது. அங்கே பெரும் மழை பெய்தது என்பது உண்மை, அந்த வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருப்பது உண்மையாக இருக்கலாம்.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : அமைச்சர் அவர்கள் அதிகாரிகள் தந்திருக்கின்ற அறிக்கையின் மூலம் இந்த விவரத்தை பதிலில் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி மறுபடியும் விசாரணை செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட நேரத்தில் தான் இது நடந்தது என்று அதிகாரிகள் அனுப்பியிருக்கும் தகவல்களின் அடிப்படையில் தான் இந்தப் பதிலை கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக தகவல் ஏதாவது இருந்து, அதை எழுதிக் கொடுத்தால் நிச்சயமாக இந்த அரசாங்கம் அதைப் பற்றி மறுபரிசீலனை செய்து விசாரணை நடத்தும்.

சென்னையில் ரிக்ஷாக்களுக்கு மோட்டார்கள் பொருத்தும் திட்டம்.

*வினா எண். 836—திரு. சு. பாலன் : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தற்போது சென்னையில் ஓடும் எல்லா ரிக்ஷாக்களுக்கும் மோட்டார் பொருத்தி ஓட்டும் முறையை சர்க்கார் அமுல் படுத்த உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : புதிதாக சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு உரிமம் வழங்காமல், மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு மட்டுமே உரிமம் கொடுத்து படிப்படியாக மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷாக்களையே நடைமுறைக்கு கொண்டுவர உத்தேசித்துள்ளது.

[1979 ஏப்ரல் 26

தேவாரத்திலிருந்து கேரளாவை இணைக்கும் சாலைத்திட்டம்.

* வினா எண். 837—திரு. பி. ராமதாஸ்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தேவாரத்திலிருந்து - கேரளாவை இணைக்கும் சாகலூத்துமெட்டு சாலைத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை துரிதப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை. எனினும், இப்பணி மாநில தொடர்பு மற்றும் பொருளாதார முதன்மைப் பணித் திட்டத்தில் ஆறாவது அய்ந்தாவது திட்டத்தின்கீழ் (1978-83) மாநில திட்டக்குழுவிற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

நாகர்மேடு அருகே தடுப்பணை.

* வினா எண். 838—திரு. பொ. முனுசாமி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வடஆற்காடு மாவட்டம் வந்தவாசி தொகுதியில் நாகர்மேடு என்னுமிடத்தில் உள்ள ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது பணி மேற்கொள்ளப்பெறும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்திற்கான மதிப்பீடு தல அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

திரு. பொ. முனுசாமி : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில், வந்தவாசி தொகுதியில், நாகர்மேடு என்னுமிடத்தில் தடுப்பு அணை கட்டினால், அங்குள்ள விவசாயிகள் பயனடைவார்கள். அதனால், உடனடியாக அந்த அணையைக் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய நன்மையைக் கருதித்தான், சீக்கிரமாக நடைபெறுவதற்கு உண்டான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

1979 ஏப்ரல் 26]

திரு. பொ. முனுசாமி : தலைவர் அவர்களே, அதைக் கட்டுவதற்கு எந்த அளவுக்குப் பணம் ஒதுக்கீடு செய்வார்கள்? அது எப்போது கட்டப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. மதிப்பீடு முடிந்தவுடன் உடனடியாக அதற்கு எவ்வளவு தொகை செலவாகும் என்பதையெல்லாம் விவரமாகச் சொல்ல முடியும்.

கிருதுமால் நதித் திட்டம்.

*வினா எண். 839 திரு. ஆர். சி. சுப்பிரமணியம் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வைகை திட்டத்தில் விரகனூர் ரெகுலேட்டரிலிருந்து பிரிந்து செல்லும் கிருதுமால் நதித்திட்டத்தை முதுகுளத்தூர், கடலாடி தொகுதிகள் பயன்பெறும் வகையில் விஸ்தரிக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இல்லை. ஆனால், வைகையாற்றின் வெள்ள உபரிநீரை கிருதுமால் ஆற்றுப் படுகைக்கு திருப்பிவிட விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. இதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக கண்டறிந்தால் இது தனியொரு திட்டமாக மேற்கொள்ளப்படும்.

திரு. டி. இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, வைகை சீரமைப்புத் திட்டம் எப்போது முடிவடையும் என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார்-வைகை சீரமைப்புத் திட்டம் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. ஏறத்தாழ 41 கோடி ரூபாய் இதற்கு செலவழிக்கப்பட்டு, கடந்த 2, 3 ஆண்டுகளாக நடந்து வருகின்றது. இன்னும் 3 அல்லது 4 ஆண்டுகளில் அது முடிவடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, வைகையிலிருந்து வருகின்ற வெள்ளத்தை முதுகுளத்தூர், கடலாடி பகுதிகளுக்குத் திருப்பி விடுவதற்காக, பார்த்திபனூர் ரெகுலேடரிலிருந்து பரலை ஆற்றுக்கும், வீரகனூர் ரெகுலேடரிலிருந்து கிருதமால் நதிக்கும் திட்டங்கள் போடுவதாக அமைச்சர் அவர்கள் விவசாய மானியத்தின்போது

சொன்னார்கள். இந்தத் திட்டங்கள் எந்த நிலையில் இருக்கின்றன என்பதைக் கொஞ்சம் விரிவாகச் சொல்லும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, வைகை ஆற்றின் வெள்ள உபரி நீரை கிருதமால் படுகைக்கு கொண்டுபோய் திருப்பி விடுவதன் மூலமாக ஏறத்தாழ 27,000 ஏக்கர் பாசன வசதி பெறுகின்ற அளவிலே இந்தத் திட்டம் தீட்டப்பட்டு வருகின்றது. இதற்காக ஏறத்தாழ 70 இலட்சம் ரூபாய் ஆகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சீ. செல்வராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, வீரகனூர் அணைத் திட்டத்தில் இருக்கும் துணைக் கால்வாயில், கால்வாய் உடைந்துபோய், பழுதடைந்து தண்ணீர் அதனால் சேதமாகின்றது. அதைத் தடுப்பதற்கு பெரியாறு கால்வாயிலுள்ள துணைக் கால்வாயில் எப்படி சிமெண்ட் ஸ்லாப் போடப் பட்டிருக்கின்றதோ, அதைப்போல் இங்கேயும் சிமெண்ட் ஸ்லாப் போடுவதற்கு அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி தனிக் கேள்வி போட்டால், விவரம் சொல்லப்படும்.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, கிருதமால்-வைகை பிரிந்துபோகிற மாணிக்கரை பகுதி தூர்ந்துபோய் கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதியை வீரகனூர் ரெகுலேட்டருடன் இணைக்கும் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இதுபற்றிய விவரம் இல்லை.

(முற்பகல் 9.40)

திரு. என். லட்சுமிநாராயணன் : கிருதுமாலுக்கு வைகை வெள்ள நீரைத் திருப்பி விட்டால் மட்டும் போதாது. கிருதுமால் தண்ணீரைப் பெறக்கூடிய கண்மாய்களுக்கு ஒழுங்காக நீர் போகக்கூடிய அளவுக்கு கால்வாய் சீர்திருத்தம் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இந்தத் திட்டத்தின் மூலம் கிருதுமால் நதிப் பகுதியில் 39 கண்மாய்களும், குண்டாறு பகுதியில் 64 கண்மாய்களும் தண்ணீர் பெற்று அதன் மூலம் அவற்றைச் சார்ந்த 25,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

1979 ஏப்ரல் 26]

காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்தில் துணைத் தொழிற்சாலை.

* வினா எண். 840— திரு. கெ. சொக்கலிங்கம் : மாண்புமிகு கிராமத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்தில் டான்சி நிறுவனத்தின் துணைத்தொழிற்சாலை அமைக்கும் வேலை எப்போது துவங்கப்பட்டது?

(ஆ) அந்த வேலை எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) தற்போது கிண்டியில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் டான்சியின் சார்பு நிறுவனமான தமிழ்நாடு மோபட்ஸ்க்காக காட்டாங்கொளத்தூர் ஒன்றியம் மறைமலை நகரில் நிறுவப்படவிருக்கும் தொழிற்சாலைக்கான கட்டுமான வேலைகள் 1979-ம் வருடம் ஜுலை மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

(ஆ) தொழிற்கூடத்தின் புறச்சுவர்கள் கதவு மேல்மட்டத்திற்குச் சரியாக எழுப்பப்பட்டுவிட்டன. மீதமுள்ள வேலைகள் இவ்வாண்டு ஜுன் மாதம் முடிவடைந்து விடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. யா. சை. மு. யூசுப் : டான்சி நிறுவனத்தின் துணைத் தொழிலகங்கள் தமிழகம் முழுவதும் எத்தனை ஒன்றியங்களில் அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மூலக் கேள்வி டான்சி நிறுவனத்தின் துணைத் தொழில்கள் காட்டாங்குளத்தூரில் அமைப்பது பற்றியதாகும். அது சம்பந்தமாகத் துணைக் கேள்வி கேட்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினருக்கு வாய்ப்புக் கொடுக்கும்போதே நினைத்தேன். காட்டாங்குளத்தூர் பகுதியில் துணைத் தொழில்கள் நிறுவப்படுவதைப் பற்றிய மூலக் கேள்வியில் அது குறித்த துணைக் கேள்வியைக் கேட்காமல் வேறு எங்கோ உறுப்பினர் செல்லுகிறார்.

ஆட்டோ சர்வீசிங் கூட்டுறவுச் சங்கங்கள்.

* வினா எண். 841— திரு. ந. தனசேகரன் : மாண்புமிகு கிராமத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இயங்கிவரும் ஆட்டோ சர்வீசிங் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அரசு துறையைச் சேர்ந்த வாகனங்கள் பழுது பார்ப்பதற்கு மேற்படி சங்கங்களுக்கு அனுப்பப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஒன்பது. (இ) இல்லை.

திரு. இ. தமிழரசன் : ஒன்பது இடங்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதைத் தவிர மாவட்டம் மற்றும் தாலுகா தலைநகரங்களில் வாகனங்கள் அதிகமாக இருக்கும் இடங்களில் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் வகையில் இதைப்போன்ற சங்கங்களை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இந்த ஆட்டோ செர்வீசிங் கூட்டுறவுச் சங்கங்கள் இந்திய அரசின் அரை லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப் பட்டது. ஆரம்பிக்கப்பட்ட இடங்களில போதுமான அளவு உற்சாகத்தோடு இதிலுள்ள உறுப்பினர்கள் பணியாற்றி வர வில்லை என்ற காரணத்தால் பல இடங்களில் பணி மையங்கள் சிறப்பாகச் செயல்படவில்லை. இப்போதுதான் அவை சிறப்பாகச் செயல்படுவதற்கான சாத்தியக்கூறுகளை அரசு ஆராய்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த ஒன்பது இடங்களிலும் வெற்றிகரமாக நடத்தினால் பிறகு ஒவ்வொரு மாவட்டத்தின் முக்கிய பகுதிகளிலும் இந்த அமைப்புகளை ஏற்படுத்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

டாக்டர் கே. சமரசம் : அரசுத் துறையைச் சார்ந்த வாகனங்கள் பழுது பார்க்க தனியாரிடத்தில் செல்லக்கூடிய காரணத்தால் பல தவறுகள் ஏற்படுகின்றன என்பது அரசு அறியுமா? அதிலிருந்து விடுபடக்கூடிய வகையில் அரசு வாகனங் களை அரசே இயக்கும்படியான பணிமனைகளில் பழுது பார்க்க வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே இராஜா முகமது : இந்த ஒன்பது ஆட்டோ செர்விஸ் தொழில் கூட்டுறவுச் சங்கங்களில் அரசுத் துறை வாகனங்களை ரிப்பேர் செய்ய வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. மற்றப்படி வேறு எங்கெங்கே ரிப்பேர் செய் கிறார்கள் என்பது இந்தத் துறைக்கு உட்பட்ட கேள்வி அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : இதிலே வட ஆற்காடு மாவட்டம் விடுபட்டிருப்பதாகத் தெரிகிறது. அதற்கும் இதை எக்ஸ்டெண்ட் செய்ய அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இது இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தொடங்கப்பட்டது அல்ல. ஏற்கனவே வட ஆற்காடு மாவட்டத்தை விட்டிருக்கிறார்கள். நான் முதலிலேயே

1979 ஏப்ரல் 26]

கூறியபடி ஒன்பது பணி தொழில் கூட்டுறவுச் சங்கங்களைச் சிறப்பாகச் செயல்படுத்திவிட்டபிறகு மற்ற மாவட்டங்களுக்குக் கொண்டுவர பரிசீலனை செய்யும்போது வட ஆற்காடு மாவட்டத்திற்கு முன்னுரிமை—'பஸ்ட் பிரிபரன்ஸ்' கொடுக்கப் படும்.

சேரன்மாதேவி அரசினர் மருத்துவமனை

*வினா எண். 842—திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சேரன்மாதேவி அரசினர் மருத்துவமனையை விரி வாக்குவது குறித்து அரசிற்கு மாவட்ட மருத்துவ அதிகாரியிட மிருந்து மதிப்பீடு வந்துள்ளதா?

(ஆ) அப்படியானால் எவ்வளவு?

(இ) எப்போது விரிவாக்கல் பணிகள் ஆரம்பித்து முடிவடையும்?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ), (ஆ) & (இ) : இம்மருத்துவமனைக்கு புதிய கட்டிடம் கட்ட 1979—80 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதி புதிய பணித் திட்டத்தில் சேர்க்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. பி. எச். பாண்டியன் : இந்தப் பெரியார் நூற்றாண்டு விழாவில் சேரன்மாதேவியைத் தாலுகாவாக மாற்ற வருவாய்த் துறை அமைச்சரும், புரட்சித் தலைவரும் அறிவித்திருக் கிறார்கள். திராவிட சமுதாயத்தின் பெயர்பெற்ற சேரன்மாதேவி தாலுகா ஆகின்ற நேரத்தில் அந்த மருத்துவமனையை தாலுகா மருத்துவமனை அளவுக்கு உயர்த்த அரசு முற்படுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே 6 படுக்கை வசதிகள் கொண்ட அந்த மருத்துவ மனை தற்போது இன்னும் நிறையப் படுக்கை வசதிகள் இருக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு 20 படுக்கை வசதிகளைச் செய்ய, பிரசவப் பிரிவு, அறுவை அரங்கம் இவைகளை வைத்து சுமார் 2 லட்சம் ரூபாய் செலவில் கட்டுவதற்கான திட்டம் ஒன்று 1979—80 ஆம் ஆண்டில் 2-வது பிரிவுத் திட்டமாக செய்யப்பட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இயக்குநரிட மிருந்து வரைபடம், மதிப்பீடுகள் இவைகளைப் பெற்று அதற்கு ஒப்புதல் வழங்கப்படும். படிப்படியாக இந்த மருத்துவ மனையின் தரம் உயர்த்தப்படும்.

[1979 ஏப்ரல் 26

அரசு மருத்துவமனைகளில் வழங்கப்பெறும் மருந்துகள்.

* வினா எண். 843— டாக்டர் ஏ. பொன்னுசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தரம் குறைந்த மருந்துகள் அரசு மருத்துவமனைகளில் வழங்கப்படுவதைத் தடுக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: அரசு மருத்துவமனைகளில் வழங்கும் மருந்துகள் யாவும் மத்திய/மாநில அரசுடன் இணைந்துள்ள பெரும் நிறுவனங்களிடமிருந்து வாங்கி விநியோகிக்கப்படுவதால் தரம் குறைந்த மருந்துகள் அரசு மருத்துவமனைகளில் வழங்கப்படுவதற்கு இடமில்லை. மத்திய/மாநில இணைப்பு உடைய நிறுவனங்களில் சில மருந்து இனங்கள் கிடைக்காத வேளையில் தனியார் நிறுவனங்களில் வாங்கும்போது சம்பந்தப்பட்ட மருத்துவமனைகள் ஒப்பந்தப் புள்ளி கோரி மருத்துவ நிபுணர்களின் ஒப்புதலின் பேரில் வாங்கப் படுகின்றது.

மேலும் மருந்தக ஆய்வாளர்கள் அவ்வப்போது அரசு மருத்துவமனைகளிலிருந்தும் மருந்து தயாரிப்பாளர்களிட மிருந்தும் மற்றும் மருந்து விநியோகஸ்தர்/மொத்த வியாபாரிகளிட மிருந்தும் மாதிரி மருந்து வகைகளை எடுத்து அவைகள் தரம் வாய்ந்தவையா என்று சோதித்துப் பார்க்கிறார்கள். அச்சோதனையின் வாயிலாக குறிப்பிட்ட எந்த மாதிரி மருந்து வகையானது தரம் குறைந்தது என்று அறியவந்தால் உடனடியாக அந்த மாதிரி மருந்தினத்தைச் சார்ந்த மொத்த இருப்புகளை கைப்பற்றி அவற்றை எவ்விதத்திலும் பயன்படுத்தாவண்ணம் முடக்கி அந்த மருந்து விநியோகஸ்தரின் பேரிலும் தயாரிப்பாளரின் பேரிலும் 1940-ம் வருடத்திய மருந்து மற்றும் வாசனைப் பொருட்கள் சட்டத்தின் கீழ் குற்ற நடவடிக்கை எடுக்கிறார்கள்.

திரு. இ. தமிழரசன்: தலைவர் அவர்களே, இந்த மருந்துகளை டெண்டர்கள் மூலமாக வாங்குவதால் மிகக் குறைந்த விலைக்கு கொடுக்கவேண்டுமென்று அவர்கள் தரம் குறைந்த மருந்துகளைக் கொடுப்பதாகவும், காலாவதியான மருந்துகளை திரும்பவும் அரைத்து ரசாயனங்களை சேர்த்துக் கொடுப்பதாகவும் அதை மிகக் குறைந்த விலைக்குக் கொடுப்பதாகவும் எனக்கு மிகவும் நெருங்கிய நண்பர், அப்படிப்பட்ட தனியார் கம்பெனியிலே வேலை செய்கிறவர் எனக்குச் சொன்னார். அந்தத் தகவலை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா? ஆகவே தரமுள்ள மருந்துகளை நேரடியாகவே வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

1979 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் எந்த விதமான நிகழ்ச்சியும் நடப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. அவர்களே சொன்னார்கள், அவருக்கு நெருங்கிய நண்பர், அந்தக் கம்பெனியில் வேலை செய்கிறவர் அப்படிச் சொன்னார் என்று சொன்னார். எந்தக் கம்பெனி என்று அவர் விளக்கமாகச் சொன்னால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கு. ரமணி : அரசாங்க மருத்துவ மனைகளில் மருந்துகளை வாங்குகிற காலத்தில் அரசாங்கத்தினால் உற்பத்தி செய்யப்படக்கூடிய மருந்துகள் அல்லது ஏராளமான ரக மருந்துகள் தனியார் கம்பெனிகளிடம் இருந்து வாங்கப்படுவது என்பது உண்மை. இன்றைக்கு நடக்கிறது. இந்த மருந்துகளின் தரப் பரிசோதனை தொடர்ச்சியாகவே நடத்தப்பட்டு வந்து தான் அரசு மருந்துகளை வாங்குகிறதா? அல்லது தனியார்களுடைய கம்பெனிகளின் லேபிளைப் பார்த்து அவர்கள் சொல்லியிருக்கக் கூடிய வரையறைகளை நம்பி வாங்குகிறார்களா? அப்படி வாங்குவதில் அந்த மருந்துகள் சரியாக தயாரிக்கப்பட்டனவா இல்லையா என்று புரியாமல் ஈக்குவிலன்ட் ஆக இருக்கிற மருந்துகளை வாங்கிக் கொடுப்பதால் தவறுகள் ஏற்படுகின்றன. அதை எப்படி அரசு சமாளிக்கப்போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, மத்திய, மாநில அரசினுடைய நிறுவனங்களிடமிருந்து தான் மருந்துகள் வாங்கப்படவேண்டுமென்று ஆணைகள் அவ்வப்போது பிறப்பிக்கப்பட்டுள்ளன. சில நேரங்களில் இந்த மத்திய, மாநில அரசின் நிறுவனங்களிடம் இருந்து மருந்துகள் கிடைக்காத சில சூழ்நிலைகள் ஏற்படுகிறபொழுது, அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறபோது தனியார்களிடமிருந்தும் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படி வாங்கப்படுகிற மருந்துகள் ஆய்வாளர்களால் அவ்வப்போது பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. ஏதாவது குற்றம் இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டால் அந்த பேட்ச் மருந்துகள் எல்லாம் மக்களுக்கு வழங்கப்படாமல் அப்படியே நிறுத்தி வைக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட மருந்துகளை யார் கொடுத்தார்களோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(முற்பகல் 9-50)

ஆகவே, குறிப்பாக இதுபோன்ற தவறுகள் நடைபெறாத வண்ணம் செய்யப்படுகின்றன. மற்ற மருந்துகள் ஏதாவது, அதற்கு சப்ஸ்டிடியூட் என்று சொல்லக்கூடிய வகையில் பயன்படுத்துகிற நேரத்தில், இத்தகைய நிலைகள் ஏற்படுகிறதா

[1979 ஏப்ரல் 26

என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கூறி இருக்கிறார்கள். இன்றைக்கு ஆம்பிசிலின் என்று சொல்லக்கூடிய அதே மருந்து, பலவேறு விதமான நிறுவனங்களாலே, பல்வேறு பெயர்களாலே தயாரிக்கப்படுகிறது. I. D. P. L. தயாரிக்கின்ற அதே மருந்தை, Hindusthan Antibiotics தயாரிக்கின்ற அதே மருந்தை, Tamil Nadu Dada Chemicals தயாரிக்கின்ற அதே மருந்தை, பல்வேறு விதமான பெயர்களாலேதான் தயாரிக்கிறார்களே தவிர, ஆனால், அந்த மருந்தினுடைய இணைப்பிலே இருக்கிற சக்திகள், ஒரே சக்தியைத்தான் பெற்றிருக்கின்றன. ஆகவே, ஏதாவது தவறுகளைக் காணும்போது, அவ்வப்போது ஆய்வாளர்கள் அதைத் தேர்ந்தெடுத்து பரிசோதனை செய்து நடவடிக்கை எடுக்கிறார்கள்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, அரசு மருத்துவ மனைகளிலே பணியாற்றக்கூடிய மருத்துவர்கள் தனியாகத் தொழில் செய்யக்கூடிய காரணத்தாலும், வேறு பல சந்தர்ப்பச் சூழ்நிலைகளாலும் அரசு மருத்துவ மனைகளில் அதிக அளவு மருந்து களவாடப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அந்த நிலையில் அரசு மருத்துவ மனைகளில் வழங்குகின்ற மருந்துகளின் மீது அரசு முத்திரை பதிக்கக்கூடிய நிலை வருமா? அப்படி முத்திரை பதிக்கப்பட்ட பின், அம்மருந்துகள் வெளியே வேறிடங்களில் கண்டெடுக்கப்படுமானால் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படும். ஆகவே, அப்படிப்பட்ட ஆலோசனையை ஏற்று அரசு பரிசீலிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, இது போன்ற மருந்து திருட்டை நிறுத்துவதற்காகத்தான் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே அந்த மருந்துகளிலே அரசினுடைய சின்னம் பொறிக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு, இன்றைக்கு அவைகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, கடந்த 6 மாத காலத்தில் மதுரை, திண்டுக்கல், திருச்சி அரசு மருத்துவமனைகளிலே 3 பேர் பென்சிலின் இன்ஜக்ஷன் போட்டதால், மரணம் அடைந்து இருக்கிறார்கள் என்ற தகவல்கள் நமக்கு முன்னால் இருக்கின்றன. இது மருந்துகள் தரக் குறைவினாலேயா அல்லது பென்சிலின் என்ற இன்ஜக்ஷன் இன்றையதினம் வைத்தியத்திற்கு உபயோகப்படாமல் இருக்கிறதா? அப்படி மரணம் அடைந்தவர் குடும்பங்கள்--சிகிச்சைக்காக வந்தவர்கள் திடீரென்று மரணம் அடைந்திருக்கிறார்கள்—ஆகவே, அந்தக் குடும்பங்களை—பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

1979 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, தற்பொழுது அந்த பென்சிலின் மருந்து மருத்துவ மனைகளில், 'ஓ. பி.' என்று சொல்லக்கூடிய வெளி நோயாளி களுக்குப் போடுவது தடை செய்து, நிறுத்தி வைக்கப்பட்டிருக் கிறது. பென்சிலின் மருந்தினால் ஏற்படக்கூடிய இத்தகைய விளைவுகளுக்கு காரணம் 'எக்ஸ்டெர்னல் அப்ளிகேஷன்' என்று சொல்லக்கூடிய வகையில், 'பென்சிலின்' களிம்புகளையும் நாம் தோலிலே, ஏதாவது சரும வியாதிகள் ஏற்படுகிற நேரத்தில் போடுவதாலும், இத்தகைய பென்சிலின் உடலிலே ஏற்றும் பொழுது, அந்த பென்சிலின் சக்தி மயிர்க்காலிலே, உடலிலே ஊடுருவிச் செல்வதாலே. பென்சிலின் மொத்தமாக ஊசிமூலம் ஏற்றப்படுகிறபொழுது இத்தகைய விளைவுகள் ஏற்படுகிறது. ஆகவே, அதிகமாக, 'எக்ஸ்டெர்னல் அப்ளிகேஷன்ஸ்', இருக்கிறது. இன்றைக்குத் தொண்டையிலே வலி ஏற்படுமானால் கூட, பென்சிலின் லாஸ்ஸஞ்சஸ் வாங்கிச் சாப்பிடுகிற நிலைமைகளை நாம் பார்த்திருக்கிறோம். ஆகவே, இன்றைக்கு பென்சிலின் உட்கொள்ளுகிற காரணத்தாலே, பயன்படுத்துகிற காரணத்தாலே உடலிலே பென்சிலின் ஏற்றும்போது, இத்தகைய விளைவுகள்-- இழப்புகள் ஏற்படுகிறது. ஆனால், சில இன்றியமையாத வியாதிகளுக்கு பென்சிலின் ஒரு இன்றியமையாததாக இருக்கிறது என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது..... இந்த பென்சிலி னால் ஏற்படும் விளைவு 1 முதல் 6 வயது உள்ள குழந்தை களுக்கு ஏற்படுவதில்லை. ஆனால், குழந்தைகளுக்கு எந்தவித மான வியாதிக்கும் பென்சிலின் இன்றியமையாததாக இருக்கிறது என்பதையும் நாம் உணர்ந்திருக்கிறோம். இன்றைக்குக் கூட பல மருத்துவ மனைகளிலே இருந்து மருத்துவர்கள் சில குறிப்பிட்ட நோய்களுக்கு இந்த பென்சிலின் தர வேண்டாமென்பதிலிருந்து விதி விலக்குத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் மானியக் கோரிக்கை மீது பேசுகிறாரா என்ன? துணைக் கேள்விக்குச் சுருக்கமாகப் பதில் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, அவர் கேட்ட கேள்வியில் இவ்வளவும் இருக்கிறது, சொல்லித்தான் ஆகவேண்டும். அவர் கேள்வியைச் சுருக்கி இருப்பாரானால் நான் விடையையும் சுருக்கி இருக்கலாம். ஆகவே, பென்சிலின் இப்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது, மக்களுடைய உடலை, உயிரைக் காக்கத்தான்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே ஏ. பி. சி, சல்பேடக்ஸ் போன்ற மாத்திரைகள் இரண்டு பைசா விற்கும் இருக்கிறது 10 பைசாவிற்கும் இருக்கிறது. அதேபோல

இன்ஜெக்ஷன்களும் 1 ரூபாய்க்கும் இருக்கிறது. 5 ரூபாய்க்கும் இருக்கிறது, அது அந்தக் கம்பெனிகளின் தரத்தைப் பொறுத்தது. அரசு மருத்துவ மனைகளில் பாம்பே டேப்பிலட் கம்பெனி என்ற கம்பெனியிலிருந்து சீப்ரேட்டாக மருந்துகள் வரவழைக்கப் படுகின்றன. ஆனால் அவைகள் விலைமலிவாக இருப்பதினாலேயே தரம் குறைந்திருக்கிறது. அதனால் அரசு பெரிய கம்பெனிகளில் விலை கூடியிருந்தாலும், பூட்ஸ், ஸ்டேண்டர்ஸ், டி. சி. எப், கிளாக்ஸோ போன்ற புகழ்பெற்ற மருந்து கம்பெனிகளில் விலை உயர்ந்ததாக இருந்தாலும் மருந்தை வாங்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாநில, மத்திய அரசினுடைய மருந்து தயாரிக்கும் நிறுவனங்களிலிருந்துதான் அரசு மருத்துவ மனைகளுக்கு மருந்துகள் வாங்கப்படுகின்றன.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, மத்திய மாநில அரசு மருந்து தயாரிக்கும் நிறுவனங்களிடமிருந்துதான் அரசு மருத்துவ மனைகளுக்கு மருந்துகள் வாங்கப்படுகிறது என்று சொன்னார்கள். அந்த மருந்து அங்கே இல்லை என்று சொன்னால், இல்லாத மருந்தை மற்ற கம்பெனிகளிடமிருந்து தானே வாங்கவேண்டி ஏற்படுகிறது. அப்படி வாங்கும்போது கொடேஷன் போட்டு வாங்கக்கூடிய நிலை சரியில்லை. கொடேஷன் போடுவதால் குறைந்தவிலையில் கிடைக்கும். ஆனால் குறைந்தவிலையில் கிடைக்கக்கூடிய மருந்துகள் தரமானதாக இருக்காது. மருந்தின் தரத்தைப்பார்த்து நல்ல கம்பெனிகளில் பெரிய கம்பெனிகளில் மருந்தை வாங்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க அரசு முன் வருமா என்று கேட்கிறேன்?

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர்களே, அரசு மருத்துவ மனைகளில் நோயாளிகளுடைய நோய்களுக்குத் தக்க மருந்துகள் ஸ்டாக் இருப்பது இல்லை என்ற பிரச்னை நடைமுறையில் இருந்து வருகிறது. குறிப்பாக சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு அவர்களுக்கு எழுதிக் கொடுக்கும் மருந்துகள் தேவையான மருந்துகள் மருத்துவ மனையில் இருப்பது இல்லை, வெளியே சென்றுதான் வாங்கிக்கொண்டு வருகிறார்கள். தேவையான மருந்துகளை வாங்கி வைப்பதற்கான ஏற்பாடுகளை அரசு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

1979 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல குறைபாடுகள் ஏற்படக்கூடாது என்று எல்லா மருத்துவ மனைகளிலும் தேவையான மருந்துகள் கிடைக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. இருந்தாலும் சில நேரங்களில் அதிகமாக உபயோகம் இல்லாத மருந்துகள் ஏதாவது தேவைப்பட்டால் அவைகள் மருத்துவ மனைகளில் கிடைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கும்: அப்படிப்பட்ட நேரத்தில்தான் வெளியே இருந்து வாங்கிக் கொண்டு வரப்படுகிறது. அதிக அளவு பயன் படாத மருந்துகளை அதிக அளவில் வாங்கி வைத்திருந்தால் பின்னால் அது உபயோகம் இல்லாமல் போகும்போது வெளியே தூக்கி எறிந்துவிட வேண்டிய நிலை ஏற்பட்டு விடும். அதனால் தான் அப்படிப்பட்ட மருந்துகளைத் தவிர மற்ற தேவையான மருந்துகள் எல்லாம் எல்லா மருத்துவ மனைகளிலும் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பிட்டு இந்த மருத்துவ மனையில் இல்லை என்ற விவரத்தை சுட்டிக் காட்டுவார்களே யானால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தயாரிக்கப்படுகிற மருந்துகளை எத்தனை பேர் களுக்கு, எத்தனை தனியார் மருந்து தயாரிப்பவர்களுக்கு உரிமம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழக அரசு உரிமம் தருகிறதா அல்லது மத்திய அரசு உரிமம் தருகிறதா ? அப்படி உரிமம் கொடுக்கப்படுவதற்கு ஏதாவது தடைகள் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் ; தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் அதிகமாக விவரங்களை விடையாகச் சொல்ல இயலும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மருத்துவ மனைகளில் நோயாளிகளுக்கு ஊசி போடுகிறபோது ஏதாவது மாற்றிப் போட்டுவிட்டால் இறந்து விடுகிறார்கள். அப்படிப் பட்டவர்களின் குடும்பத்திற்கு, அவர்கள் வைத்தியம் செய்து கொள்ளவருகிறார்கள், ஆனால் இறந்து விடுகிறார்கள், அவர் களுடைய குடும்பத்திற்கு நிவாரணம் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் ; தலைவர் அவர்களே, அப்படி குறிப்பிட்ட நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டு வார்களேயானால் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

[1979 ஏப்ரல் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :- ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

2. தகவல் கோரல்

அ. கைது செய்யப் பெற்ற விவசாயிகள் விடுதலை குறித்து

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, முன்பு நடந்த இந்த விவசாயிகளின் பந்த்தின்போது ஆயிரக்கணக்கான பேர்கள் கைது செய்யப்பட்டார்கள், அவர்களை விடுதலை செய்யவேண்டும் என்று பல்வேறு ஊர்களில் இருந்து தந்தி வந்து இருக்கிறது. மதுரை, திருச்சி ஆகிய ஊர்களில் எல்லாம் கொள் அளவுக்கு மேல் ஜெயிலில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் அவர்களையெல்லாம் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அவர்களை ஏன் இவ்வளவு நாட்கள் வைத்திருக்கிறார்கள் என்று எனக்கு தெரியவில்லை. சம்பவங்கள் நடந்து முடிந்தபிறகும்கூட போலீஸ்காரர்கள் அவர்கள் மீது அடக்குமுறை அதிகாரம் செய்து வந்திருப்பதாக...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேறு விஷயம். அதைபிறகு பேசலாம் நீங்கள் பேசவந்ததை முதலில் பேசி முடியுங்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, இது இப்பொழுது நடந்த சம்பவம்தான்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அது பற்றி பின்னர் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளும்போது பேசிக்கொள்ளலாம், விவசாயிகள் விடுதலை குறித்து மட்டும் விளக்கிவிட்டு உட்காருங்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : சரி, இம்மாதிரி பந்துக்கள நடைபெறுவது போன்ற சம்பவங்கள் நிற்கப்படவேண்டும். போலீசினுடைய வன்முறைச் செயல்கள் தடுக்கப்படவேண்டும், கைது செய்யப்பட்டவர்கள், இந்த பந்துகளில் கைது செய்யப் பட்டவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 26]

(ஆ) 'பசு பராமரிப்பை'—மைய அரசின் கீழ் எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான விஷயத்தை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அனிமல் ஹஸ்பெண்டரி இன்றைக்கு மாநில அரசின் அதிகாரத்தில் இருக்கிறது. அதன்கீழ் தான் பசு வதை போன்றவைகள் வருகின்றன. அதை மாநில அரசின் அதிகாரத்திலிருந்து பிரித்து மத்திய அரசினுடைய அதிகாரத்தின்கீழ் கொண்டு வரப்போவதாக அதற்கான அரசியல் சட்டத்தை திருத்த போவதாகவும் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு பிரதம மந்திரி அவர்கள் பேசியதாக பேப்பரில் வந்தது பார்த்தேன். இதைத் தடுக்க நீங்கள் நிச்சயமாக ஏதாவது செய்ய வேண்டும். ஒவ்வொரு அதிகாரமாக இப்படி பிடுங்கிக் கொண்டே இருந்தால் எப்படி? ஏற்கெனவே குறைந்த அதிகாரங்கள் தான் இருக்கின்றன. இப்படிப்போய் கொண்டே இருந்தால் "We will be worse than a Municipality" அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்கின்ற நேரத்தில் இருப்பதையும் பறித்துக் கொள்வதை தடுக்க வேண்டும், அதற்கு இந்த அரசாங்கம் நல்ல பேர்ம் ஸ்டேண்ட் எடுக்க வேண்டும். அப்படி எடுக்காவிட்டால் It will be too late. So I would request the State Government to take up the opposition firmly to taking away this power.
மாநில அரசாங்கம் இதை தீவிரமாக எதிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10.00]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவசாயப் பிரச்னை சம்பந்தமாக இன்றைக்கு ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானமே இங்கே வர இருக்கிறது. அது சம்பந்தமாக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் காலையில் தொடர்பு கொண்டு பேசியபோது தடுப்பு நடவடிக்கையாக கைது செய்யப்பட்டவர்களைப் பற்றிக் கேட்டால் என்ன சொல்வது என்பதை நல்லவேளையாக நான் முன்கூட்டியே கேட்டுத்தெரிந்து கொண்டேன். அவர்கள் சொன்னது, இத்தகைய சுடை அடைப்புப் போராட்டத்தில் வழக்கமாக வன்முறைகள் கட்டவிழ்த்து விடுவது விவசாய சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு வாடிக்கையாக இருக்கிறது என்ற முறையில் வன்முறை அதிகமாக ஆகிவிடக்கூடாது என்பதற்காகத்தான் தற்காப்புக் காவல் என்ற அடிப்படையில் சில பேர் கைது செய்யப்பட்டார்கள் என்பதும் ஆனால் இப்போது ஓரளவு அமைதியான நிலைமை ஏற்பட்டு இருக்கிற காரணத்தாலும் மாண்புமிகு இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பொறுப்புமிக்க திரு. ஏ. ஆர். மாரிமுத்து போன்றவர்கள் அவர்களை விடுவிக்கலாம் என்ற கருத்தை எடுத்துச் சொல்லி இருக்கிற காரணத்தாலும், அரசு இன்றைய

[திரு. ச. இராமச்சந்திரன்] [1979 ஏப்ரல் 26

தினம் எங்கெங்கே வழக்குகளில் சம்பந்தப்படாமல் குறிப்பிட்ட எந்த வன்முறை சம்பவங்களிலும் சம்பந்தப்படாமல் முன் எச்சரிக்கையாக கைது செய்யப்பட்டு இருக்கிறார்களோ அந்த விவசாயிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் ஒரு பிரச்னையை எழுப்பினார்கள். இப்போது பசு வதைத் தடைச் சட்டத்தை அமலாக்குவதற்காக அரசியல் சட்டத்திலேயே ஒரு மாற்றம் கொண்டு வரலாமா என்ற கருத்தை மத்திய அரசு பரிசீலித்து வருவதாகவும், அது பற்றி திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் விடுத்த அறிவிப்பையும் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அது வெறும் மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் உள்ள அதிகார பங்கீடு என்ற முறையில் அல்ல. இன்று ஏற்பட்டு இருக்கிற இன்னும் சொல்லப்போனால் யதார்த்தமான நிலை என்று சொல்கிற அந்தச் சூழ்நிலையில், அந்த நிலையில் இருப்பதை நாம் கவனிக்கவேண்டும்.

மாநில அரசுகள் சில தேசிய முடிவுகளை தாங்களே முன் வந்து நிறைவேற்றுகிற நிலைமைகளை கடைபிடித்தார்கள் என்றால் மத்திய அரசு இந்த நிலைக்கு தள்ளப்பட்டு இருக்காது. குறிப்பாக, மேற்கு வங்கமும், கேரள மாநிலமும், பசு வதை தடை சட்டம் கொண்டு வருவது அவ்வளவு உகந்தது அல்ல என்ற கருத்தை எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பசு வதை கட்டாயமாக தடை செய்யப்பட்டேயாகவேண்டும் என்பதற்காக திரு. வினோபா பாவே அவர்கள் சாகும் வரை உண்ணாவிரதம் என்று தொடங்கி, உண்ணாவிரதம் மேற்கொண்டு இருக்கிறார். நாட்டுக்காக தியாகம் செய்த மிகப் பெரிய மனிதர் அவர் என்ற காரணத்தாலே அவருடைய கருத்துக்கு மதிப்பளிக்கிற வகையில் அது பற்றியும் சிந்திக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு பிரச்னையைப்பற்றி எண்ணுகிறபோது அதில் இருக்கிற நிலைமைகளைப் பற்றியும் கருதி முடிவு எடுக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. இன்று கூட மேற்கு வங்கமும், கேரளாவும் நினைத்தால் இந்த மாநில சுயாட்சி காப்பாற்றப்படுவதற்கு எல்லா வாய்ப்புகளும் உண்டு என்பதை நான் மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. உமாநாத் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் மாநிலங்களுக்கு இருக்கும் அதிகாரங்கள் மத்திய அரசாங்கம் எடுத்துக்கொள்வதை இந்த அரசாங்கம் எப்போதும் ஏற்காது.

திரு. மு. அம்பிகாபதி: பாயின்ட் ஆப் ஆர்டர் சார்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த நேரத்தில் ஒழுங்குப் பிரச்னை எழுப்ப முன் வரிசையில் இருப்பவர்களுக்குத்தான் வாய்ப்பு கொடுக்கப்படும். உங்களுக்கு இல்லை, உட்காருங்கள்.

[1979 ஏப்ரல் 26]

திரு. மு. அம்பிகாபதி : நான் பேசிக்கொண்டே இருப்பேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசிகொண்டே இருங்கள்.

(திரு. மு. அம்பிகாபதி நின்று கொண்டு இருந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக்குழுவில் முன் வரிசையில் இருக்கிற தலைவர்கள் தான் ஜீரோ அவரில் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம் என்று முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, இப்போது திரு அழகர்சாமி வேண்டுமானால் கேட்கலாம். திரு. அழகர்சாமி அவையில் இல்லாமல் இருந்து இருந்தால் திரு. மு. அம்பிகாபதியை அனுமதித்து இருப்பேன். அங்கே இப்படி முடிவு எடுத்துக்கொடுத்துவிட்டு, இங்கே வந்து இப்படி நடந்துகொள்ளக்கூடாது. ஆகவே, திரு. அழகர்சாமிதான் இப்போது கேட்கவேண்டும். திரு. மு. அம்பிகாபதிக்கு அனுமதி கொடுக்க முடியாது.

திரு. மு. அம்பிகாபதி : கேரள அரசைப் பற்றி அமைச்சர் கூறி இருப்பதால், நான் இப்போது பேசியே தீருவேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனுமதிப்பதாக இல்லை. (திரு. மு. அம்பிகாபதி நின்று கொண்டிருந்தார்) நீங்கள் நின்று கொண்டே இருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உங்களை அனுமதிக்க முடியாது. ஏற்கெனவே எடுத்திருக்கிற முடிவுப்படி முன்வரிசையில இருக்கிற தலைவர்கள்தான் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம். வேண்டுமானால் அழகர்சாமி கேட்கட்டும்.

திரு. ரா. உமாநாத் : மேட்டர் என்ன என்பதை நான் சொல்லி விடுகிறேன். பர்சனல் எக்ஸ்பிளனேஷன் என்ற முறையில் கூட அதை சொல்லலாம். அமைச்சர் அவர்கள் சொன்னதிலிருந்து, மேற்குவங்க அரசும், கேரள அரசும் நினைத்தால் மாநில சுயாட்சியைப் பாதுகாக்க முடியும் என்று தெரிகிறது, அப்படியானால் அந்த இரண்டு அரசாங்கங்களும்தான் மாநில சுயாட்சிக்கு குறுக்கே நிற்கின்றன என்ற 'இம்ப்யூட்டேஷன்' அதிலே இருக்கிறது இது ஒரு சீரியசான சார்ஜ். இதை நான் சீரியசாகவே சொல்கிறேன். மாநில சுயாட்சிக்கு போராட்டம் நடத்துவோம் என்று சொல்லுகிறவர்கள் இங்கே இருக்கிறார்கள். அதற்கு நீங்கள் 'காம்பைன்' நடத்துகிறவர்கள். அப்படிப்பட்ட நீங்கள் இந்த இரண்டு அரசுகள்தான் குறுக்கே நிற்கின்றன என்று சொல்வது தப்பு. அமைச்சர் அந்த முறையில் சொன்னதை வாபஸ் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1979 ஏப்ரல் 26

திரு. சோ. அழகர்சாமி : நானும் என்னுடைய கருத்தைச் சொல்லி விடுகிறேன். கேரள அரசுக்கு இந்தி மொழியில் கடிதம் வந்தால் மலையாளத்தில்தான் பதில் எழுதுவோம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மாநில சுயாட்சிக்கு அவர்கள் குறுக்கே நிற்கிறார்கள் என்ற முறையில் பேசுவது சரியல்ல. வினோபா பாவே அவர்களை நேரடியாகவே சந்தித்து, நல்ல விளக்கங்களை எல்லாம் அளித்திருக்கிறார்கள். வினோபாஜி பெரியவர், உயர்ந்தவர் என்பதை மதிக்கிறோம். ஆனால் இந்த நாட்டிலே மனிதர்களை எல்லாம் வதை செய்து, அவர்கள் கொல்லப்பட்ட காலத்தில் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட வில்லை இன்றைக்கு வினோபாஜி உண்ணாவிரதம் இருக்கிறார்கள். பசு மட்டும் இன்றைக்கு வதை செய்யப்படவில்லை; ஆடு வதை செய்யப்படுகிறது. மாடு வதை செய்யப்படுகிறது, கோழி வதை செய்யபபடுகிறது. அதையெல்லாம் உண்ணாவிரதம் இருந்து தடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. பசுவதையை தடை செய்ய வேண்டுமென்று சொல்லி அவர்கள் உண்ணா விரதம் இருக்கிறார்கள். அது அவர்களுடைய விருப்பம். ஆனால் மற்றவர்களை கட்டாயப்படுத்துவது முறையல்ல. ஆகவே, ஒரு அரசாங்கத்தைப்பற்றி இங்கே அமைச்சரவர்கள் இப்படிச் சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, நான் இந்தப் பிரச்சனைக்குள் போகவில்லை. வினோபாஜி எல்லோராலும் மதிக்கப்படக் கூடியவர்; அவர் இன்றைக்கு உண்ணாவிரதம் இருக்கிறார். அதை வைத்து நாம் முடிவு செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் நண்பர் அம்பிகாபதி அவர்கள் பேசும்போது வினோபாஜி உண்ணா விரதம் இருப்பதுபற்றி கவலையில்லை; கேரள அரசு செய்வது தான் சரி என்று சொன்னார்கள். அதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் வினோபாஜி உண்ணாவிரதம் இருப்பதைப்பற்றி கவலையில்லை, கேரள அரசைப் பற்றிச் சொன்னதற்கு கவலைப்படுகிறார்கள்; அதுதான் அவர்களுடைய போக்கு என்று கருதுகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, பர்சனல் எக்ஸ் பிளனேஷன் என்ற முறையில் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களை அனுமதிக்க முடியாது; திரு. அழகர்சாமி வேண்டுமானால் பேசட்டும்.

1979 ஏப்ரல் 26]

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் சொல்வது சரியல்ல. வினோபாஜி அவர்கள் தன்னுடைய கருத்தில் ஆழமாக இருக்கிறார்கள் என்பது எங்களுக்கும் தெரியும். அவரை நாங்கள் மதிக்கிறோம். ஆனால் அதற்காக ஒரு மாநில சர்க்காரை குறை சொல்வது சரியல்ல. இன்றைக்கு எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு தடைச்சட்டம் கேரளத்தில் இருக்கிறது. 10 வயதுக்குக் குறைந்த கன்றுகளை, 14 வயதுக்குக் குறைந்த கன்றுகளை கொல்லக்கூடாது என்ற தடைச்சட்டம் அங்கே இருக்கிறது. காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற எந்த மாநிலத்திலும் இந்தத் தடைச் சட்டம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இந்த குறிப்பிட்ட பிரச்சனைக்கு மட்டும் பதில் சொல்லுங்கள். மற்றவைகளை அனுமதிக்க முடியாது.

திரு. ரா. உமாநாத் : சார், நான் 'ரெய்ஸ்' பண்ணுவது 'கான்ஸ்டிடியூஷனல் ஆஸ்பெக்ட்'.

(திரு. மு. அம்பிகாபதி எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அம்பிகாபதி, நீங்கள் உட்காருங்கள்; உங்களுடைய தலைவர் அதற்குப் பதில் சொல்வார்.

திரு. சோ. அழகர்சாமி : கேரளத்தில் இருப்பதைப்போன்ற தடைச் சட்டம் காங்கிரஸ் ஆட்சி நடக்கும் எந்த மாநிலத்திலும் இல்லை ; பக்கத்திலே இருக்கிற கர்நாடகத்திலும் இல்லை. ஆகவே, காங்கிரஸ் தலைவர் அவர்கள் சொன்னதை மறுபடியும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. எம். ஏ. லத்தீப், திரு. கே. கந்தசாமி — எழுந்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் இதிலே எழுப்பக்கூடாது. (குறுக்கீடு) திரு. லத்தீப் அவர்களுக்கு இப்போது வாய்ப்பு தரமுடியாது. இப்படி 235 உறுப்பினர்களும் கேட்டால் என்ன செய்வது? அத்தனை பேரையும் அனுமதித்து, அவையின் நேரத்தை வீணாக்க நான் விரும்பவில்லை. (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். (திரு. கே. கந்தசாமி எழுந்தார்) திரு. கந்தசாமி, உங்களுக்கும் சேர்த்துதான் சொல்கிறேன், எல்லோரும் உட்காருங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

[1979 ஏப்ரல் 26

திரு. எம். ஏ. லத்தீப் : ஒரு முக்கியமான பிரச்சனையில் என்னுடைய கருத்தைச் சொல்வதற்கு இடமில்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இப்போது பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப வேண்டிய அவசியம் இல்லை; அனுமதிக்க முடியாது.

[முற்பகல் 10.10]

(திரு. எம். ஏ. லத்தீப் நின்றுகொண்டேயிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத்தலைவர் : அனுமதி கிடையாது. திரு. லத்தீப் அவர்களே, தாங்கள் தலைவர் என்று நினைத்துக் கொண்டு பேசுகிறீர்கள். இந்தப் பிரச்சினையில் தொடர்ந்து எல்லோரும் பேசிக் கொண்டிருந்தால் நேரம் வீணாகிவிடும். (குறுக்கீடு) திரு. லத்தீப் அவர்கள் சில நேரம் நம்மைத் தலைவர் என்று சொல்லிக் கொள்கிறார்கள் சில நேரம் தம்மை தொண்டர் என்று சொல்லிக் கொள்கிறார்கள் எப்படி இருந்தாலும் இப்போது நான் அவரை அனுமதிக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பி அரசு தரப்பிலேயும் பதில் சொல்லிவிட்டார்கள். ஆகவே இந்தப் பிரச்சினையை மேலும் வளர்ப்பது கூடாது. ஒவ்வொரு கட்சியினரும் தமது கருத்துக்களை கூற ஆரம்பித்தால் நேரம் போதாது. ஆகவே நான் அனுமதிக்க முடியாது. அமர வேண்டும்.

(திரு. கே. கந்தசாமி அவர்களும், திரு. எம். ஏ. லத்தீப் அவர்களும் நின்று கொண்டிருந்தார்கள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படியே அனுமதித்து அனுமதித்துதான் திரு. லத்தீப் அவர்கள் கட்டாயப்படுத்தி அனுமதி கேட்கிறார். ஆகவே நான் யாரையும் அனுமதிக்கத் தயாராக இல்லை. அமர வேண்டும்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, நான் சொல்ல விரும்பவது. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அம்பிகாபதி அவர்களுக்கும் நான் சொல்கிறேன். அவர்களுடைய தலைவர் பதில் சொல்லிவிட்டார். ஆகவே, கட்டுப்பாடோடு அமரவேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, என்னை அனுமதிக்க வேண்டும். . . .

[1979 ஏப்ரல 26

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனுமதிக்க முடியாது. அமருங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : நான் அமர முடியாது. நின்று கொண்டே இருப்பேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, அப்படியானால் நின்று கொண்டே இருங்கள். தலைவர் சொல்கிறபடி கேட்கவேண்டும். அனுமதிக்க இயலாது என்று கூறிவிட்டேன். ஆகவே, அமர்ந்து விடுங்கள். இல்லாவிட்டால் மேற்கொண்டு அதற்கான நடவடிக்கையை எடுக்க நேரிடும்.

திரு. எம். ஏ. லத்தீப் : நான் அமர முடியாது. என்னை அனுமதிக்க வேண்டும். நான் அனுமதி கேட்டால் எல்லா உறுப்பினர்களையும் காட்டுகிறீர்களே. எனக்கு அனுமதி வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து திரு. லத்தீப் அவர்கள் உட்காரவேண்டும் அல்லது நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. எம். ஏ. லத்தீப் : நடவடிக்கை எடுங்கள். பரவாயில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து திரு. லத்தீப் அவர்கள் அமருங்கள். இல்லை என்றால் விதியின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். (கூச்சல், குழப்பம்.)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்ட்கட்சியின் தலைவர் திரு. அழகர் சாமி அவர்களும், முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்த திரு. லத்தீப் அவர்களும் நான் சொன்னதைத் தவறான எண்ணத்திலே புரிந்து கொண்டார்களோ என்று உண்மையிலேயே ஐயப்படுகிறேன். மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் பேசியபோது நான் இங்கே எடுத்துச்சொன்னது அந்த இரு அரசுகளுக்கும் களங்கத்தைக் கற்பிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அல்ல. அந்தப் பிரச்சினையினுடைய தன்மைகளைப்பற்றியும் அல்ல. மாண்புமிகு

திரு. உமாநாத் அவர்கள், மாநில மத்திய அரசுகளுக்குரிய அதிகாரப் பங்கீடு குறித்து இப்படி ஒரு நிலைமை ஏற்படலாமா என்பதைப்பற்றி இங்கே எழுப்பினார்கள். ஆனால், நான் என்ன சொன்னேன் என்பதைக் சொல்கிறேன். இந்தப் பிரச்சினைக்குரிய சூழ்நிலையை எடுத்துச் சொல்லி ''இந்தப் பிரச்சினையைத் தவிர்க்கின்ற வகையில் ஈடுபட்டிருந்தால் மாநிலங்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தை மத்திய அரசு எடுக்கவேண்டிய நிலைமை இல்லாமல் போய்விடும் அல்லவா'' என்று தான் சொன்னேனே தவிர இரண்டு அரசுகளுக்கும் களங்கம் கற்பிக்க வேண்டும் என்ற நோக்கம் நிச்சயமாக இல்லை.

மேலும், கேரள மாநில அரசோடு நல்ல தொடர்பு நம்முடைய அரசுக்கு இருக்கின்றது. குறிப்பாக கேரள மாநில முதலமைச்சரோடு தனிப்பட்ட முறையில் எனக்கு நெருங்கிய தொடர்புண்டு. கேரள மாநில அரசைப் பொறுத்தவரையில் அவர்கள் ஒரு முடிவுக்கு வருவதற்கும் வராமல் இருப்பதற்கும் கேரள மாநில மக்களுடைய நிலைமைகளைப் பொறுத்து அவர்கள் முடிவு எடுக்க வேண்டி வருகிறது. அதேபோல மேற்கு வங்க அரசு அங்கே உள்ள நிலைமைகளின் அடிப்படையிலேதான் முடிவுகளை எடுக்க வேண்டி வருகிறது. ஆனால், அந்த அரசு எடுக்கின்ற முடிவுகள் சரியானதல்ல என்றோ அல்லது தவறு என்றோ நான் குறிப்பிடவில்லை. ஏற்பட்டுவிட்ட சூழ்நிலையில் இத்தகைய நிலைமை இருக்கின்றது ஆங்கிலத்திலே கூடச் சொல்வார்கள்,

What is the right decision is different from what is the best decision என்று சொல்வார்கள். சில நேரங்களில் முடிவுகள் சரியானதாக இருந்தாலும்கூட அப்போது இருக்கின்ற நிலைமைகளுக்கு உகந்ததாக இல்லாமல் போய்விடும். ஆகவே, சரியான முடிவுகளை எடுக்கின்ற நிலைமைகளை மாற்றி சில நேரங்களில் முடிவுகளை எடுக்கவேண்டி வரும். இந்த மன்றத்திலேகூட பல முடிவுகள் அப்படி எடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில், வாட் இஸ்தி பெஸ்ட் என்கின்ற அந்த அடிப்படையில் தான் குறிப்பிட்டேனே தவிர வேறல்ல. நம்முடைய மாநில அரசுக்கும் அந்த அரசுக்கும் இடையே நல்ல உறவு இருக்கின்றது; நல்ல உடன்பாடு இருக்கின்றது. அதற்கு எந்தவிதமான குந்தகமும் ஏற்படுகின்ற வகையில் நான் இதைத் தெரிவிக்கவில்லை என்பதை தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, இத்தோடு இந்தப் பிரச்சினையை வீட்டுவிடுவது நல்லது. ஏனென்றால், ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு வகையான கருத்து இருக்கலாம். அதை எல்லாம் அனுமதித்தால் அதுவே பெரிய விவாதமாக ஆகிவிடக்கூடும் என்று தங்களுக்கிருக்கின்ற ஐயமும் நியாயமானதுதான். ஆகவே, இத்தோடு பிரச்சினையை விட்டுவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானம்..

திரு. எம். ஏ. லத்தீப்: எனக்கு உரிமையில்லையா?......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தலைவருக்கு நிச்சயம் உரிமை உண்டு. இப்படி என்னை கட்டாயப்படுத்தி, குரல் எழுப்ப வேண்டாம். அப்படி நடந்துகொண்டால் அவையின் நிகழ்ச்சிகள் சுமுகமாக நடைபெற இயலாது.....

திரு. எம். ஏ. லத்தீப்: எனக்குத் தெரியும்.. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் நின்று கொண்டிருக்கிறேன். உட்காருங்கள் என்று சொல்கிறேன். உட்கார முடியாது என்று சொன்னால் இது என்ன விதி? நீங்கள் உட்காருங்கள்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, நான் இந்த நேரத்தில் வேண்டிக்கொள்வதெல்லாம், இன்று 26 தேதி ஆகிறது. இன்னும் 2 நாட்களில் சபைக் கூட்டம் முடியப் போகிறது. 'பார் ஏ லாங் கிரி மந்த்ஸ்' இந்த மன்றக் கூட்டம் நடந்து வந்திருக்கிறது. இந்த நேரத்தில் 'எலாஸ்டிசிடி' ஜாஸ்தி வேண்டும், அங்கத்தினர்களோடு, நான் கேட்டுக் கொள்வதெல்லாம், அந்தப் பயங்கரமான வார்த்தையை 'யூஸ்' பண்ணவேண்டியதில்லை இப்போது மூன்று டி. எம். கே. உறுப்பினர்களை வெளியேற்றியபிறகு, நடவடிக்கை எடுப்பேன் என்று உங்கள் வாயில் இருந்து வெளிவருவது எந்த அளவிற்கு முறை என்பது எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து பொதுவாக வேண்டுகோள் விடுகிறேன்.... ..

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, நடவடிக்கை என்று சொல்கிறது, அது 'செல்ப் ரெஸ்பெக்ட்' பிரச்னையாக இருக்கிறது. நான் இந்த நேரத்தில் வேண்டிக்கொள்வதெல்லாம், இன்னும் 2 நாட்களில் இந்த மன்றக் கூட்டம் முடியப்போகிறது. இப்போதுதான் கொஞ்சம் 'எலாஸ்டிசிடி' ஜாஸ்தி இருக்க வேண்டும். மன்றத்தை நல்ல முறையில் நடத்த வேண்டும் என்று சொன்னால் 'வி வில் கோவாபரேட்'.

[1979 ஏப்ரல் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடந்த ஆண்டுகளாக அப்படிபட்ட வார்த்தையை நான் உபயோகப்படுத்தவில்லை. அதே நேரத்தில் எதிர்வரிசையில் இருக்கக்கூடிய தலைவர்கள் அவையின் விதிகளுக்கு உட்பட்டு நடக்கவேண்டிய கடமை அவர்களுக்கு இருக்கிறது. நான் அமருங்கள் என்று சொல்கிற போது, திரு. உமாநாத் அவர்கள், அவரை அமரச்செய்து, பிறகு பேசலாம் என்று சொல்லியிருந்தால் அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். கடந்த இரண்டு ஆண்டுகளாக அப்படிப்பட்ட வார்த்தையை நான் சொன்னதில்லை. ஆனால் உட்கார முடியாது, நீங்கள் நின்றாலும், நான் நின்று கொண்டே இருப்பேன் என்று முன் வரிசையில் உள்ள தலைவர்கள் சொல்கிற போது, விதிகளுக்கு அப்பாற்பட்டு நடப்பேன் என்று சொல்கிற போது, திரு. உமாநாத் அவர்கள் அவரை உட்கார வைத்திருந் தால், அது நியாயமாக இருந்திருக்கும். நான் அனுமதிக்க வில்லை என்று சொன்னபிறகு, இப்படி ஒரு எதிர்க்கட்சியின் தலைவர்கள் சொல்வார்களானால், நிச்சயமாக நான் உமாநாத் அவர்களைக் கேட்கிறேன் — 'உங்கள் அனுபவத்தை வைத்துச் சொல்லுங்கள், அப்படி நடக்க நான் தயாராக இருக்கிறேன். ஆனால், அதை விட்டுவிட்டு நாங்கள் இப்படித்தான் வற்புறுத்து வோம் என்று சில தலைவர்கள் சொல்வார்களானால், அப்போது என்ன கட்டுப்பாடு இருக்கிறது? இப்படி அவர்கள் பேசினால் நான் எப்படி அனுமதிக்க முடியும்? எப்படி அவையின் நிகழ்ச்சிகளை சுமூகமாக நடத்த முடியும்? உட்காருங்கள் என்று சொன்னால், சிரித்த முகத்துடன் உட்கார்ந்து விட்டு, மறுபடியும் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டால் பரவாயில்லை. நான் என்ன சொன்னாலும், என் அனுமதி இல்லாமல், பேசித்தான் தீருவேன், உட்கார மாட்டேன் என்று சொன்னால்— நான் திரு. லத்தீப் அவர்களைச் சொல்லவில்லை, மொத்தத்தில் சொல்கிறேன். நீங்கள் அதைப்பற்றி தவறாக நினைத்துக்கொண்டு அதற்காகப் பேசவேண்டாம். நான் மொத்தத்தில் சொல்கிறேன்— எதிர் வரிசையில் இருக்கும் தலைவர்கள் விதிகளுக்கு உட்பட்டு நடக்க வேண்டும். எனக்கு இந்த அவையின் மரபைக் காப்பாற்ற வேண்டும், விதிகளுக்கு உட்பட்டு நடக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.20)

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

செங்கற்பட்டு மாவட்டம், திருவள்ளூர் அருகே காவல் துறையினர் நடத்திய தாக்குதல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செங்கற்பட்டு மாவட்டம், திருவள்ளூர் அருகே 23—4—1979 அன்று போலீசார் நடத்திய தாக்குதல் குறித்துப் பேரவையில் விவாதிக்க பேரவையின்

1979 ஏப்ரல் 26] [பேரவைத் தலைவர்]

இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு திருவாளர்கள் ஜே. ஜேம்ஸ், எம். ஏ. லத்தீப். சோ. அழகர்சாமி, பொ. விஜயராகவன், எஸ். சிவசாமி, பி. சொரணம், என். வரதராஜன், ஆர். உமாநாத், தே. ஞானசிகாமணி, சி. கோவிந்தராசன், சேலம் திரு. ஆறுமுகம், மு. அம்பிகாபதி, ரா. மார்க்கபந்து, எ. ஆர். மாரிமுத்து, எஸ். சதாசிவம், நெல்லை ஆர். ஜெபமணி ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்து உள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச்சுருக்கமாக விளக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். திரு. ஆர். ஜெபமணி.

* திரு. ர. ஜெபமணி : சபாநாயகர் அவர்களே, திருவள்ளூர் தாலூகாவில் வெள்ளியூர் என்ற கிராமத்தில் நடந்திருக்கின்ற நிகழ்ச்சிகளை நானும் எனது அருமை நண்பர் அழகிரிசாமி அவர் களும் நேரடியாகச் சென்று பார்த்தோம். இப்பேர்ப்பட்ட நிலை இந்த நாட்டில் நடக்க ஆரம்பித்தால், இது இந்த நாட்டு மக்களை எங்கே கொண்டுபோய் விடும் என்று தெரியவில்லை. அங்கே நான் பார்த்தவைகளை எல்லாம் இங்கே விரிவாக பேசுவதற்கு தலைவர் அவர்கள் எனக்கு அனுமதி தரமாட்டார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கு ஏழு கட்சிகளின் தலைவர்கள் பேச வேண்டும். அதற்காகத்தான் சொல்லுகிறேன். எனக்கு ஒன்றும் ஆட்சேபனையில்லை. மின்சார வாரியத்தின் மீது குறைவாக பேசிக்கொண்டால் எனக்கு ஒன்றும் இல்லை.

திரு. ர. ஜெபமணி : நாம் ஒழுக்கத்தோடு இருந்தால் தான் விளக்கு எரியும். ஒழுக்கம் எல்லாம் கெட்டுவிட்ட பிறகு விளக்கு எதற்கு எரியவேண்டும்?....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விஷயத்திற்கு வாருங்கள்.

திரு. ர. ஜெபமணி : போராட்டம் வாபஸ் பெறப்பட்ட பிற்பாடு அங்கே நடந்த காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை மனித உள்ளம் படைத்தவர்கள் யாரும் அனுமதிக்க முடியாது. கனம் அமைச்சர்கள் யாராவது அங்கு சென்று பார்ப்பார்களே யானால் அவர்கள் நிச்சயமாக ரத்தக் கண்ணீர் வடித்திருப் பார்கள். பாரதியார் 60 ஆண்டுகளுக்கு முன்னாலே பாடினார்—

''மாதரைக் கற்பழித்து வன்கண்மை பிறர் செய்யப்
பேதைகள் போலுயிரைக் கிளியே! அஞ்சிக்
கிடந்தாரடி!''

எவ்வளவு பயங்கரமான சூழ்நிலை. போலீஸ் அதிகாரிகள் அந்த வீடுகளைத் தாக்கி, கதவுகளை உடைத்து, கதவுகளைத் திறக்க மறுத்த தாய்மார்களைப் பார்த்து, பார்த்து, கதவுகளில் பெட்

ரோல் ஊற்றி நெருப்பு வைப்போம் என்று பயமுறுத்தி பின்னால் திறந்திருக்கிறார்கள். அவர்களுடைய ஜாக்கட் கிழிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய உடம்பெல்லாம் அடிக்கப்பட்டிருக்கிறது. எங்கேயோ ஒரு அதிகாரி இறந்தார்—அவர் இறந்ததைப்பற்றி அரசாங்கம் கவலைப்படுவதைவிட நாங்கள் அதிகமாக கவலைப்படுகிறோம். ஆனால் அதற்காக (மணியடிக்கப்பட்டது) ஐயா..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பெரியவர் அவர்கள் அங்கே போய் பார்த்துவிட்டுத்தான் பேசுகிறார்களா? அல்லது சொந்தக் கருத்துக்களை வைத்து பேசுகிறார்களா?....

திரு. ர. ஜெபமணி: பார்த்துவிட்டு வந்துதான் பேசுகிறேன். கண்ணீர் விட்டேன். அங்கே நீங்கள் கண்ணீர் விடவில்லை. இங்கேயிருக்கிறீர்கள். தாய்க்குலம் அங்கே அழுது மடிகிறது. வயதான பெண்கள் எல்லாம் அவமானப்படுத்தப்பட்டு கொண்டிருக்கிறார்கள். அங்கே கல்லூரி படிப்பு படித்துவிட்டு வந்திருக்கின்ற பெண்கள்இழுத்துப்போட்டு அடிக்கப்பட்டிருக்கிறார்கள். ரேடியோ உடைக்கப்பட்டிருக்கிறது, விசிறிகள் உடைக்கப்பட்டிருக்கிறது, அங்கே கடிகாரங்கள் உடைக்கப்பட்டிருக்கிறது. அடுப்பில் சாதம் வெந்து கொண்டிருந்தபோது, பாத்திரங்கள் பண்டங்கள் உடைக்கப்பட்டிருக்கிறது. மிருகத்தனமான ஆட்சியா? இது என்ன நினைக்கவே முடியவில்லை. 42-ல் நடந்தது எனது சொந்த கிராமத்தில் நடந்ததை நான் பார்த்தேன். அதைவிட பயங்கரமான காட்சி. தாய்க்குலம் தாக்கப்பட்டிருக்கிறது என்றால், அவர்கள் கைது செய்யப்படுகிறார்கள் அங்கே திருவள்ளூர் ஆசுபத்திரியிலே நான்கு பெண்கள் அட்மிட் பண்ணப்பட்டிருக்கிறார்கள். யாருக்கு ஐயா இந்த துணிச்சல் வரும்? நாம் எல்லாம் அக்காள் தங்கையோடு பிறக்கவில்லையா? இதைப்பற்றி விவாதிக்க வேண்டாமா? அதைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்றால், சபையின் இதர அலுவல்களை ஒத்திவைப்பதில் என்ன தவறு? மின்சாரம் என்ன அவ்வளவு பெரியது? மானம் போன பின் மின்சாரம் வேண்டுமா? மானம் அல்லவா வேண்டும்..

மானம் சிறிதென் றெண்ணி
வாழ்வு பெரிதென் றெண்ணும்
ஈனர்க் குலந் தனில் கிளியே;
இருக்க நிலைமை யுண்டோ!

என்று பாடினான் பாரதி. ஆக இதர நடவடிக்கைகளை எல்லாம் ஒத்தி வைத்து இந்த மானப்பிரச்னையைப்பற்றி விசாரித்து, அமைச்சர் கூட்டம் ஒன்று சென்று அந்த இடத்திற்கு சென்று அந்த தாய்க்குலத்திற்கு நல்ல கனிவோடு

1979 ஏப்ரல் 26] [திரு. ர. ஜெபமணி]

அன்போடு, பாசத்தோடு ஆறுதல் சொல்லா விட்டால் ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளையொக்கும் என்று கேட்டு, சபையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து இந்த பிரச்னையை விவாதிக்கவேண்டும் என்று கேட்டு அமருகிறேன். ஜெய் ஹிந்த்.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, மிக பயங்கரமான முறையில் செங்கற்பட்டு மாவட்டம், வெள்ளியூர், பாலவாக்கம், முருக்கம்சேரி இந்த சுற்று வட்டங்களில் எல்லாம்—நாம் இந்தப் பகுதிகளை மட்டும் ஏன் சொல்லுகிறேன் என்றால் இந்தப் பகுதிகளை மட்டும்தான் பார்த்துவிட்டு வந்திருக்கிறேன். பார்த்த பிறகு இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கு காப்பாற்றப்பட வேண்டும் என்று எந்தத் துறை செயல்படுகிறதோ அந்தத் துறை சட்டம் ஒழுங்கை கெடுப்பதற்கும் சட்டம் ஒழுங்கை ஒழுங்காக குலைப்பதற்கும் அவர்களே பயன்படுத்துகிறார்களே என்று பார்க்கும்போது இந்த நாட்டில் உண்மையாக ஒரு அரசு இருக்கிறதா சட்டம் இருக்கிறதா என்று நமக்கெல்லாம் ஐயம் ஏற்படும் வகையில் இன்றைக்கு காரியங்கள் நடைபெற்று இருக்கின்றன. ஆண்களை எல்லாம் இன்றைக்கு ஊனமாக்கி முடமாக்கி வைத்திருக்கிறார்கள்.

எத்தனையோ பேர்கள் கால்களை இழந்தவர்களாக, கைகளை இழந்தவர்களாக காட்சி தந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு போலீஸ்காரரை அடிக்கும் அளவுக்கு உங்களுக்கு தைரியம் வந்துவிட்டதா என்று சொல்லிச் சொல்லி அடித்திருக்கிறார்கள். தெரியாமல் நடைபெற்ற ஒரு சம்பவத்திற்கு மாநிலம் முழுவதும் இருக்கின்ற விவசாயிகளை, 'ஒரு போலீசாரை அடிக்கும் உங்களுக்கு தைரியம் வந்துவிட்டதா' என்று கேட்டு அடித்து, மண்டை பிளந்தவர்களாக, கை இழந்தவர்களாக, கால் இழந்தவர்களாக இன்றைக்கு அங்கே காட்சி தந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், அங்கே இருக்கின்ற கிராமங்களிலே ஆண்கள் இல்லை. பயந்துபோய் பலர் சென்னைக்கு ஓடி வந்திருக்கிறார்கள்; சிலர் வேலூருக்குப் போயிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் அங்கே உள்ள வீடுகள் எல்லாம் விறிச்சோடி கிடக்கின்றன. அதற்கு யார் காரணம்? திருடனா? தீவட்டிக் கொள்ளைக்காரனா? போலீஸ்காரர்கள் காரணம் என்று சொன்னால். இதை இந்த அரசு பார்த்துக்கொண்டிருப்பதா? எவ்வளவு பதட்ட நிலையை இதுஉருவாக்கும் என்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். பெண்களை அடித்திருக்கிறார்கள். இது ஒரு முறையா? பெண்களின் சேலைகளை உரித்திருக்கிறார்கள் பெண்களின் ரவிக்கையை கிழித்திருக்கிறார்கள். பெண்களை மிருகத்தனமாக கீழே போட்டு, அடித்திருக்கிறார்கள். அவர்களை (*) தடியால் குத்தியிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் என்ன கொடுமை. இவ்வளவு பயங்கரமான....

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணக்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * என்ற வார்த்தை வேண்டாம்.

திரு. எம். ஏ. லத்தீப் : நடந்திருக்கிறது; பார்த்ததைத் தான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவ்வாறு அங்கே நிகழ்ச்சி நடந்திருக்கலாம். ஆனால், அந்த வார்த்தை தேவையல்ல; அழகல்ல. நீங்கள் சொல்வது வழக்கில் இருக்கிறது; ஆனால் இந்த அவையிலே அந்த வார்த்தை வேண்டாம். எனவே, அவர் சொன்ன * என்ற வார்த்தைகளை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : அடிக்கக்கூடாத இடங்களிலே எல்லாம் அடித்திருக்கிறார்கள், பெண்களையெல்லாம் நிர்வாணப்படுத்தியிருக்கிறார்கள்; நிர்வாணப்படுத்தி அழைத்துச் சென்றிருக்கிறார்கள் இந்த நிலை வேண்டுமா? இது நாடா? என்று நான் கேட்க விரும்புகிறேன்.

சிறையிலே கைதிகளை இப்படியா அடைப்பது? திருச்சி சிறைச் சாலையிலே கைதிகளை அடைப்பதற்கு இடமே இல்லை. எங்கள் வாணியம்பாடியிலே பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வெள்ளியூர் சம்பவம். தயவுசெய்து வாணியம்பாடிக்குப் போகவேண்டாம்.

திரு. எம். ஏ. லத்தீப் : எங்கள் பகுதியிலே கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். அவர்களை அடைப்பதக்கு சிறைச் சாலையிலே இடமே இல்லை. எங்கள் பகுதி...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறுபடியும் உங்கள் தொகுதியைப்பற்றிப் பேசுகிறீர்கள். இது வெள்ளியூர் சம்பவம்.

திரு. எம். ஏ. லத்தீப் : வெள்ளியூர் பகுதியிலும் திருவள்ளூர் பகுதியிலும் பிடித்துக் கொண்டுபோய், அவர்களையெல்லாம் இன்றைக்குச் சிறையிலேஅடைத்திருக்கிறார்கள். அப்படி அடைத்த அவர்களுக்கு சாப்பாடு போடவில்லை. அங்கே இருக்கின்ற அவர்களுடைய சொந்தக்காரர்கள் தப்பித் தவறிப் போய் கேட்டால், போலீஸ்காரர்கள் அவர்களைப் பார்த்து எல்லோரும் எங்காவது வசூலித்துக் கொண்டு வந்து போடுங்கள் என்று அவர்களிடம் சொன்னால், இதைவிட வேறு என்ன அக்கிரமம் இருக்க முடியும்?

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1979 ஏப்ரல் 26] [திரு. எம். ஏ. லத்தீப்]

என்பதை இந்த நேரத்தில் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, உடனடியாக இன்றைக்கு நடந்து கொண்டிருக்கும் போலீஸ் அராஜகத்தை நிறுத்தவேண்டும். இந்த மாநிலத்திலே விவசாயிகள் போராட்டம் நடத்துகிறார்கள் என்றால், அந்தப் போராட்டத்தினால் ஒரு பாவமும் அறியாத விவசாயிகள் இவ்வளவு கொடுமைப்படுத்தப்படுவதா? கைது செய்யப்படுவதா? அவர்களை அடித்திருக்கிறார்கள், பெணகளை அடித்திருக்கிறார்கள் என்றால், இது மிகப் பெரிய மன்னிக்க முடியாத குற்றம். இதைச் செய்தவர்கள் யாராக இருந்தாலும், குற்றவாளிக் கூண்டிலே இன்றைக்கு இல்லாவிட்டாலும், கால கட்டத்தில் கொண்டுவந்து நிறுத்தப்படுவார்கள். எனவே, இந்த விவரங்களை எல்லாம் நாம் இன்றைக்கு விரிவாகப் பேசுவதற்கு வேண்டிய முறையில், இந்த அவையின் இதர அலுவல்களையெல்லாம் ஒத்திவைத்து விவாதிப்பதற்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறி அமர்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றிச் சுருக்கமாகப் பேசினாலும்கூட, கொஞ்ச நேரமாகும். எனவே, சுருக்கமாகப் பேசவேண்டும் என்று சொல்லக்கூடாது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தெரியும். இருந்தாலும் இந்த அவையிலே இதற்காக எவ்வளவு நேரம் ஒதுக்குவது என்கின்ற பொறுப்பும் எனக்கிருக்கிறது. நீங்களே சொல்லுங்கள். இப்போது சொன்னவைகளைப் பற்றியெல்லாம் மீண்டும் சொல்லாமல், பேசுங்கள். இன்னும் 5 பேர்கள் பேச வேண்டியிருக்கிறது. அதனால் தான் சொல்கிறேன்.

[முற்பகல் 10.30]

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மதிப்பிற்குரிய நண்பர்—தலைவர் ஜெபமணி அவர்கள் அழகாகச் சொல்லிவிட்டார்கள். அவரும் நானும் நேற்று அங்கு போய்ப் பார்த்தோம். இன்னும் கூட என்னுடைய மனத்திலிருந்து ஆத்திரம் அடங்கவில்லை. வாஸ்தவத்தில் இங்கு ஜனநாயக ஆட்சி நடக்கிறதா அல்லது வெளிநாட்டிலிருந்து படையெடுப்பு நடந்து இவ்வளவு மோசமான அருவருக்கத்தக்க நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றனவா என்று புரியவில்லை. பெண்களைக் கேவலமாகப் பேசியதோடு மட்டுமல்லாமல் தாக்கியும் இருக்கிறார்கள். மங்கம்மாள் என்ற மூதாட்டி 85 வயது, கட்டிலில் படுத்திருக்கிறார், நிலம் கிடையாது. குடிசை. எங்களுடன் ரமணிபாய் அம்மையாரும் வந்திருந்தார்கள். அவர்களைத் தனியாக வீட்டுக்குள்ளே அழைத்துச் சென்று எங்கெங்கு அடி, எப்படி தாக்கப்பட்டார்கள் என்பதை

[திரு. சோ. அழகர்சாமி] [1979 ஏப்ரல் 26

யெல்லாம் எடுத்துக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் அந்தக் காட்சியைக் கண்டு கண்ணீர் விட்டாக வேண்டும். ஒரு வீடாகட்டும் அல்லது நாடாகட்டும்— வீட்டிலே பெண்களைப் பாதுகாக்கவில்லை என்றால் வீடு அழியும்; நாட்டிலே பெண்கள் மதிக்கப்படாமல் பாதகம் ஏற்பட்டால அந்த நாடு நாசமாகப் போய்விடும். அங்கு நடந்த சம்பவங்களை என்னவென்று எடுத்துச் சொல்வது? அந்த ஊரிலே ஒரு பேயாட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ரோட்டை விட்டு ஒரு பர்லாங்கு தூரம் வரை ஊருக்குள்ளே புகுந்து கதவைப் பூட்டிக்கொண்டு வீட்டுக்குள்ளே இருந்த பெண்களையெல்லாம் கதவை உடைத்து உள்ளே புகுந்து தொடையில் தடியால் இறுத்தியிருக்கிறார்கள்; வீட்டு ஆண்கள் எங்கே என்று கேட்டு அவர்களைத் தாக்கியிருக்கிறார்கள், சட்டிபானைகளை உடைத்திருக்கிறார்கள். அமைச்சர்கள் போய் அந்த இடத்தைப் பார்க்கவேண்டும். குறிப்பாக பெண் அமைச்சர்கள் போய்ப் பார்க்கவேண்டும். பூட்ஸ் காலால் மிதித்து 60 வயதான பெண்மணியையும், காந்தம்மாள் என்ற 70 வயது பெண்மணியையும் தாக்கியிருக்கிறார்கள். மகன் பெங்களூருக்குப் போயிருக்கிறான் என்று சொன்னதற்கு ‘என்ன, பொய்யா சொல்கிறாய்? என்று கேட்டு அடித்திருக்கிறார்கள். இவ்வளவு மோசமாக நடக்க என்ன காரணம்? முதலமைச்சர் அவர்கள் வானொலியில் பேசியது கரரணமா? எங்களை எதிர்த்துப் போராடுகிற விவசாயிகளை அடித்து நொறுக்குங்கள் என்று உத்தரவு போட்டிருக்கிறார்களா என்ற சந்தேகம் எங்களுக்கு ஏற்படுகிறது.

இந்த மாதிரி பல ஊர்களில் நடந்திருக்கின்றன, தந்திகள் வந்திருக்கின்றன. 20 வயது, 18 வயது படித்த பிள்ளைகளை எல்லாம் அடித்து ஆஸ்பத்திரியில் போட்டிருக்கிறார்கள். நாங்கள் ஆஸ்பத்திரிக்குச் சென்று அடிபட்டவர்களைப் பார்வையிடச் சென்றபோது ‘விடமாட்டோம். எஸ். பி. உத்தரவு’ என்று சொன்னார்கள். ‘இது ஒன்றும் சிறைச்சாலை அல்ல, நான் போய்ப் பார்க்கத்தான் செய்வேன். வேண்டுமானால் என்னைக் கைது செய்யுங்கள்’ என்று சொல்லி நான் உள்ளே போய்ப் பார்த்தேன். அங்கே போய்ப் பார்த்தால் பெண்கள் என்னிடம் முறையிட்டார்கள். நளினி என்ற பெண்மணி போலீசால் தாக்கப்பட்டிருக்கிறார். பெண்களைத் தடியால் அடித்தார்கள் ஏதோ இரண்டு சிறுவர்கள் கல்லெடுத்துப் போட்டுவிட்டார்கள் என்ற காரணத்தால் கண்டபடி அடித்து விரட்டியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு ஆண்கள் போன பிறகு பெண்களை வீட்டுக்குள் புகுந்து அடித்தார்கள் என்று சொல்லி கண்ணீர் விட்டு அழுதார்கள். 72 பேர் மேல் கேஸ் போட்டிருக்கிறார்கள். திருவள்ளூர்

1979 ஏப்ரல் 26] [திரு. சோ. அழகர்சாமி]

ஆஸ்பத்திரியில் 4 பெண்கள் 24 ஆண்கள் இருக்கிறார்கள். பாலவாக்கம் என்ற இடத்தில் எந்தச் சம்பவமும் நடக்கவில்லை. அங்கே லட்சுமண ரெட்டியார் என்பவரை அடித்து காலை ஒடித்து விட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்தி வைக்க வேண்டிய அவசியமே இல்லாமல் ஒத்தி வைத்தது போல் எல்லாவற்றையும் தாங்கள் பேசிவிட்டிருக்கிறீர்கள்.

திரு. சோ. அழகர்சாமி: பவானி தாலுகாவில் கவுந்தம்பாடி சுமதிபாளையத்தில் 24, 25 தேதிகளில் இரவு நேரத்தில் போலீஸ் புகுந்து பெண்களை மானபங்கப்படுத்தி ஆடுமாடுகளை அடித்துச் சென்றார்கள். வீடுகளைக் கடப்பாறையால் நொறுக்கியிருக்கிறார்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் எங்கெங்கோ செல்லுகிறது. வள்ளியூரோடு நில்லுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி: இங்கே இப்படி என்றால் நெல்லை மாவட்டத்தில் சப் இன்ஸ்பெக்டர் இறந்துவிட்ட இடத்தில் எப்படி நிலைமை இருக்குமென்று நினைத்துப் பாருங்கள். பல இடங்களில் பயங்கரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. முக்கியமான பிரச்சினை— பெண்களின்மீது எந்த விதமான வழக்கும் போடக்கூடாது. அவர்கள் தாக்கியிருந்தாலும் தற்காப்புக்காக இருக்கும். தாக்குதலுக்காக அல்ல. எந்த இடத்தில் கைது செய்து வழக்குப் போட்டிருந்தாலும் அதை விடுத்து உடனடியாக அவர்களை விடுதலை செய்ய வேண்டும். திருச்சி சிறைச்சாலையில் மூவாயிரம் பேர் இருந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே இடம் இல்லை. ஆகவே ஒத்தி வைத்தால்தான் பூரணமாக விவாதிக்க முடியும். பல விவரங்கள் இருக்கின்றன, நாங்கள் பார்த்து வந்திருக்கிறோம், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும் பார்த்து வந்திருப்பார்கள், மிகப் பயங்கரமான சூழ்நிலை ஏற்படக்கூடும். நாங்கள் போய் பார்த்து வந்தது மட்டுமல்ல, தகவல்களை வைத்திருக்கிறோம், மிகப் பெரிய மோசமான நிலைமை தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது. இதை விவாதிக்கவும் தமிழகத்திலே உள்ள விவசாயிகளுடைய பிரச்சினையையும் சேர்த்து இதோடு தீர்த்து வைக்கக்கூடிய முறையிலே ஒருமணி நேரமாவது இந்த அவையை ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை விவாதிக்க ஏன் அவையை ஒத்திவைக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய

[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்] [1979 ஏப்ரல் 26

இந்தத் தீர்மானத்தில் என்னுடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஏற்கெனவே சிலர் பேசும்பொழுது இங்கே மின்சார துறைபற்றி விவாதம் இருக்கிறது, அதற்கு நேரம் வேண்டும் ஆகவே சீக்கிரம் முடிக்கவேண்டுமென்று சொன்னீர்கள், நான் தெரிவித்துக் கொள்கிறேன், அதைப்பற்றி விவாதிக்கலாம் அல்லது மாலையிலே அதைப்பற்றிய விவாதத்தை வைத்துக்கொள்ளலாம். இந்தச் சம்பவங்கள் பரவலாக தமிழகம் பூராவும் நடைபெற்றிருக்கிறது. ஆகவே இதை விவாதிக்க வேண்டுமென்று கூறுகிறேன்— சுருக்க மாகப் பேசவேண்டுமென்று நீங்கள் சொன்னீர்கள்— சுருக்க மாகவே நான் பேச விரும்புகிறேன்.

இங்கே திரு. நெல்லை ஜபமணி அவர்கள் விவரங்களை யெல்லாம் சொன்னார்கள். ஆகவே நான் அவைகளை திருப்பிச் சொல்லவேண்டியது இல்லை, ஆகவே அதையே நானும் சொல்லியதாக ரிக்கார்டுகளிலே ஏற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே இங்கே திரு. லத்தீப் அவர்கள் பேசினார்கள், அவர்கள் பேசிய கருத்துக்களுக்கும் உடன்பாடு எனக்கு இருக்கிறது, ஆகவே நான் அவைகளைத் திரும்பப் பேசவில்லை, அதையும் நான் சொன்னதாக ரிக்கார்டு களில் பதிவு செய்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். அடுத்து திரு. அழகர்சாமி அவர்கள் குறிப்பிட்டவை களைப் பொறுத்த வரையிலும் எனக்குக் கருத்து வேறுபாடுகள் இல்லை, ஆகவே அதையும் நான் பேசியதாக குறிப்பிலே ஏற்றிக்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு அவர்கள் சொல்லாத சில விஷயங்களைப்பற்றி மட்டும் நான் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

ஏற்கெனவே பேசிய திரு. அழகர்சாமி அவர்கள் இங்கே பேசினார்கள். அதிலிருந்து தொடர்கிறேன். அங்கே நளினா என்ற பெண் எஞ்சினியரின் மனைவி. அவர் பி. எஸ்ஸி., பட்டதாரி. அவர்களுக்கும் இதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. எஞ்சினியர் வேலைக்குச் சென்றிருக்கிறார், போலீஸ் அவர்களுடைய வீட்டிற்குள் புகுந்து அடித்து நொறுக்கி சாமான்களை எல்லாம் நாசமாக்கியிருக்கிறார்கள். நளினா என்ற பட்டதாரி என்ன கொடுமைப்படுத்தப்பட்டார் என்பதை யெல்லாம் இந்த அவையிலே சொல்லக்கூடிய நிலைமையிலே வார்த்தைகள் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அவ்வளவு கேவலமாக கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள். கிரிஜா என்ற கல்யாணம் ஆகாத பெண் பட்டதாரி கொடுமையாக நடத்தப்பட்டிருக்கிறார், தாக்கப்பட்டிருக்கிறார். ஆஸ்பத் திரியிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். எந்த இடத்திலே காயம் என்று சொல்லமுடியாத அளவிற்கு காயப்படுத்தி இருக்கிறார்கள், அவ்வளவு கேவலமாக நடத்தப்பட்டிருக் கிறார்கள். போலீஸ் கொடுமை அந்த அளவிலே இருக்கிறது மற்ற கிராமங்களுக்குப் போகவேண்டாமென்று சொல்கிறீர்கள்

1979 ஏப்ரல் 26] [திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்]

போலீஸ் தாக்கப்படாத இந்தக் கிராமங்களிலே இப்படி நடந்தது என்றால் திரு. அழகர்சாமி சொன்னதுபோல், சங்கரன் கோவிலில் என்ன நடந்து இருக்கும் என்று சொல்லவேண்டிய தில்லை. இன்றைக்குப் பல கிராமங்கள் காலிசெய்யப்பட்டு இருக்கிறது. வீட்டிற்குள் புகுந்து, ஆண்களையும் பெண்களையும் அடித்திருக்கிறார்கள். இந்த சம்பவத்திற்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சொன்னதற்குப் பிறகும் இன்றைக்கு அந்தக் கட்சியின் ஊழியர்கள் இப்போதும்கூட கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். திரு. அழகர்சாமி குறிப்பிட்டதைப்போல் நானும் சொல்ல விரும்புகிறேன், அரசாங்கம் உத்திரவிட்டிருக்கிறதா இல்லையா என்று நான் சொல்லமாட்டேன், போலீஸ்காரர்கள் தாக்கு கிறார்கள், போலீஸ்காரர்களின் ஆட்சி நடக்கிற மாதிரி கொடுமைப்படுத்துகிறார்கள். அதனால் அவர்களுக்கு ஒன்றும் இல்லை, அரசாங்கத்திற்கு இழுக்கு ஏற்படக்கூடிய நிலைமையிலே போய்க்கொண்டிருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டு மென்ற முறையிலே அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டு மென்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக பல கிராமங்களிலே இப்படி நடப்பதைக் கவனத்திற்குக் கொண்டுவரவும் நான் இதைச் சொல்கிறேன். கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதே சட்டமன்றத்திலே மாலை 6 மணிக்குப் பிறகு எந்தப் பெண்ணும் லாக்—அப்பிலே வைக்கப் படமாட்டார்கள் என்று கூறினார்கள். ஆனால் கல்யாணம் ஆகாத பெண்களும் கல்யாணம் ஆன பெண்களும் பெண் முதியோர்களும் ஆக இன்றைக்கு 27 பெண்களை போலீஸ் லாக்கப்பில் அடைத்துவைத்து அவர்கள் உடைகளை எல்லாம் அகற்றி பாவாடையைத் தவிர அனைத்தையும் எடுத்துவிட்டு நிர்வாணமாக ஆக்கி உள்ளே விடிய விடிய வைத்துள் ளார்கள். அடித்தும் இருக்கிறார்கள், என்று சொன்னால் முதல் அமைச்சர் உத்திரவை எந்த அளவிற்கு இந்த போலீஸ் கேட்கிறது என்பதை நான் உங்களுடைய கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

[முற்பகல் 10-40]

ஆகவே, அரசாங்கம் அதிலே உடனடியாக கவனம் செலுத்தி, போலீசை கூப்பிட்டு வைத்து, முக்கிய அதிகாரிகளைக் கூப்பிட்டு வைத்து, இந்த விதமான கொடுமைகள் சரியல்லவென்று தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்று உத்தரவிட வேண்டு மென்று வற்புறுத்துவதற்காக, பல விவரங்கள் நான் பேச வேண்டிய நிலை இருப்பதன் காரணமாக, மின்சார வாரிய விவாதத்தை மாலையில் வேண்டுமானால் வைத்துக் கொள்ள லாம். ஆகவே, இந்தச் சமயத்திலாவது பேரவையை ஒத்தி வைத்து பேச வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டு விடை பெறுகிறேன், வணக்கம்.

*திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவரவர்களே, நேற்றைய முந்தைய நாள் நடந்த இந்தச் சம்பவங்கள் போலிசுக்கு ஒரு நீதி பொதுமக்களுக்கு ஒரு நீதி என்ற முறையிலே நடைபெறுவதாக அறிகிறோம். சமீபத்திலே நடைபெற்ற நிகழ்ச்சிகளின் காரணமாக, போலிஸ் துறையினர் பொதுமக்களைப் பழி வாங்க வேண்டுமென்ற உணர்வோடு செயல்பட ஆரம்பித்துவிட்டார்கள் என்கின்ற அச்சம் நமக்கு ஏற்படச் செய்கிறது. இந்த வழக்கினுடைய—இந்த நிலைமைகளுடைய பின்னணியைப் பார்க்கின்ற காலத்தில், பொதுமக்கள் தரப்பிலே இருந்து போலிசார் மீது ஒரு கல் போடப்பட்டது. அதனுடைய விளைவு சிறுவர்களும், பெண்களும், முதியோர்களும், வயதானவர்களும், வீட்டை விட்டு வெளியே செல்ல முடியாதவர்களும், வீட்டிலேயிருக்கிற பொழுது, அங்கே ரோட்டிலே நடைபெற்ற ஒரு சிறு சம்பவத்திற்காக, போலீசார்கள் ஒரு பெரிய பட்டாளத்தையே அழைத்துச் சென்று வீட்டிலே இருப்பவர்களையெல்லாம் அடித்தும் உதைத்தும், இருக்கிற சொத்துக்களைச் சேதப்படுத்தியும் அங்கே அபரிமிதமான ஒரு செயலை நடத்தியிருக்கிறார்கள். அந்த நிலைமைகளுக்குப் பின்னாலே அடி வாங்கியது மட்டுமல்ல, ஆஸ்பத்திரியிலே சேர்த்திருப்பது மட்டும் அல்ல, ஏறக்குறைய 72 பேர்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் பின்னணியைப் பார்க்கிறபொழுது, இந்த தரப்பிலேயிருந்து ஒரு கல்—இவ்வளவு விளைவுகளுக்குக் காரணமாகி விட்டது என்ற நிலைமைகளை பார்க்கும்போது தடியெடுத்தவன் தண்டல்காரன் என்ற நிலைமைக்கு போலிஸ்காரர்கள் வந்து விட்டார்கள் என்ற நிலைமையை அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது. இப்படி அனுமதிப்பதன் மூலமாகத்தான் எங்கேயோ நடைபெறுகின்ற சில சம்பவங்களுக்கு இந்த அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டிய நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், அபரிமிதமான அதிகாரத்தை போலிசாரிடம் விடுகின்ற காரணத்தாலே, நமக்கு, பலவிதமான சிக்கல்களை ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலைகள் ஏற்படுகிறது. ஆகவே, இந்தச் சம்பவத்தில், இந்த நிலைமையில் ஈடுபட்ட போலிஸ்காரர்கள் மீது கடுமையான நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அப்படி எடுப்பதன் மூலமாகத்தான் சிறு சம்பவங்களைப் பெரிதாக்குகிற அளவுக்கு, தமிழகத்திலே குழப்பத்தை ஏற்படுத்துகிற அளவுக்கு அவர்கள் அமைதியைக் குலைக்கிறார்களே, அதை அனுமதிக்கும் வகையில் செயல்படுவது என்பது ஒவ்வாத ஒன்று என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இதிலே காயம் அடைந்தவர்கள் மீது. 72 பேர்கள் மீது வழக்குகள் தொடர்ந்திருக்கிறார்கள். இந்த வழக்குகளை வாபஸ் பெறவேண்டுமென்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். இதே போன்ற நிலைமைகள்தான் பல்வேறு பகுதிகளிலும் நடக்கிறது. ஆகவே, இந்த நிலைமைகளை ஆற, அமர விவாதிப்பதற்கு, இந்தச் சபையினுடைய இதர அலுவல்களை ஒத்தி வைக்குமாறு கேட்டு முடிக்கிறேன்.

1979 ஏப்ரல் 26]

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, திருவள்ளூர் பகுதியிலே, வள்ளியூா கிராமத்திலே நடந்த சம்பவங்களைப் பற்றி, உறுப்பினர்கள் எல்லாம் கருத்துக்களைக் கூறினார்கள். நான் நேரில் சென்று பார்க்கவில்லை. மதிப்பிற்குரிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் அழகர்சாமி அவர்கள் அந்த இடத்தை நேரில் பார்த்து அந்தச் சம்பவத்தைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். (குறுக்கீடு) மதிப்பிற்குரிய ஜெயமணிஅவர்களும் அழகர்சாமி அவர்களும் நேரில் பார்த்துக் கூறியிருக்கிறார்கள். அதில், மிகைப்படுத்திக் கூறி இருப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. உண்மையை அப்படியே சொன்னதாகத் தான் நான் கருதுகிறேன். போலீஸ்காரர்களுக்குக் கொஞ்சம் கொடுத்து விட்டாலே தாங்க முடியாது. முழுச் சுதந்திரம் கொடுத்திருப்பார்களானால், ரொம்ப விளையாடி இருப்பார்கள் எனபதிலே எனக்கு மாறுபாடே கிடையாது. அங்கங்கே, விவசாயிகள் போராட்டம் என்று சொல்லும்போது சிறுசிறு சம்பவங்கள் நடந்திருக்கலாம். ஆனால், அதற்காக, கிராமத்திலே புகுந்து, தாய்மார்களைத் தாக்குவது என்பது சகிக்க முடியாத ஒன்று. அதை, ஏதோ விவசாயிகள் போராட்டம்—நெரருக்கி விட்டோம் என்ற கண்ணோட்டத்திலே பார்க்கக் கூடாது. அதனாலே, அரசின் பேரிலே ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சி எப்படி இருக்கும் என்பதைப் பார்க்க வேண்டும். வெளியிலே இருக்கிற விவசாயிகள் அதைப் பத்திரிகையிலே பார்க்கும்போது எப்படி உணர்வார்கள் என்பதை அரசாங்கம் உணரவேண்டும்.

சம்பவங்கள் நடந்த பிறகும் கூட பல கிராமங்களிலே வீடுகளிலே புகுந்து தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வந்திருந்த தந்திகளையெல்லாம் கொடுத்திருக்கிறேன். இம்மாதிரி சம்பவங்கள் தொடர்ந்து நடக்குமேயானால் அரசு நிலைத்து நிற்காது என்று தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஏதோ போராட்டத்திலே வன்முறைகள் நடந்திருக்குமேயானால் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கலாம், ஆனால் ஊருக்குள் புகுந்து, வீட்டிற்குள் புகுந்து அடிப்பது என்பது, அதுவும் தாய்மார்களை தாக்குவது என்று சொன்னால், அதை தீவிரமாக பரிசீலனை செய்யவேண்டும். அது எப்படி நடந்திருக்கிறது? யார் மீது தவறு இருக்கிறது என்று பல்வேறு முறைகளில் பார்த்தால்தான் அதனுடைய கட்டுப்பாடு முறை தவறிய செய்திகளை புரிந்துக் கொள்ள முடியும். அதைப்பயன்படுத்தி இம்மாதிரி சம்பவங்கள் மீண்டும் நடக்காமல் இருப்பதற்கான நடைமுறைகளை அரசு உணர்ந்துக் கொண்டால்தான் இந்நடவடிக்கைகள் பயன் உள்ளதாக இருக்கும் என்று கூறி இதைப்பற்றி விரிவாக விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் நடந்த சம்பவங்களை பற்றி எனக்கு தந்துள்ள தகவல்களை நான் முதலிலே மன்றத்தில் படித்துக் காட்ட வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன் :

23-4-1979 அன்று தமிழக விவசாயிகள் சங்கத்தினர் நடத்திய கடை அடைப்பு போராட்டத்தில், செங்கல்பட்டு மாவட்டம், திருவள்ளூர் அருகில் உள்ள வள்ளியூர் கிராம விவசாயிகள் திரு. தாமோதரன் நாயுடு, திரு. கஜேந்திரன் ஆகியோர் தலைமையில் விடியற்காலை 3 மணி அளவில் சாலையின் குறுக்கே பெரும் பாறைகளை வைத்தும், மரங்களை வெட்டிப்போட்டும் மின்சார கம்பங்களை குறுக்கே போட்டும் வழி மறித்தனர். காஞ்சிபுரம் நோக்கி வந்து கொண்டிருந்த பல்லவன் போக்குவரத்து கழக பேருந்து, இவற்றின் காரணமாக, சாலையில் வர முடியாமல், ஓரமாக ஒதுங்கிய போது பள்ளத்தில் இறங்கிவிட்டது. இந்த தகவல் கிடைத்தவுடன் காலை சுமார் 6 மணி அளவில் திருவள்ளூர் காவல் துறை ஆய்வாளர், வட்டாட்சித் தலைவருடன் அவ்விடத்திற்கு தகுந்த பந்தோபஸ்துடன் விரைந்தார். அங்கு கூடியிருந்த கூட்டத்தினரை கலைத்து விட்டு, சாலை தடைகளையும் அப்புறப்படுத்தினர். அங்கிருந்து தாமரைப்பாக்கம் சாலை சந்திப்பில் சுமார் 30 பேர்கள் கூடி இதேபோன்ற சாலையின் குறுக்கே தடைகள் ஏற்படுத்தியதை அப்புறப் படுத்தி விட்டு, வெங்கல் காவல் நிலையத்திற்கு சென்றனர்.

மீண்டும் வள்ளியூரைச் சேர்ந்த திரு. தாமோதர நாயுடுவும், திரு. கஜேந்திர நாயுடுவும் அக்கிராமத்தைச் சேர்ந்த பெண்கள் உள்பட அனைத்து மக்களையும் சுமார் 1,000 பேர் வரை திரட்டிக் கொண்டு வந்து நெடுஞ்சாலையின் குறுக்கே முன் போலவே தடைகளை ஏற்படுத்தி, அங்கேயே மறியல் செய்தனர். இதனால், போக்குவரத்து அறவே நின்றுவிட்டது.

கம்பியில்லாத் தந்தி மூலம் தகவல் அறிந்து திருவள்ளூர் காவல் துறை துணை கண்காணிப்பாளர், கோட்டாட்சித் தலைவருடன் சுமார் 10.30 மணிக்கு ஆயுதப்படை காவல் துறையினருடன் அவ்விடத்திற்குச் சென்றார். சாலையின் குறுக்கே ஆர். சி. சி. மின்சார கம்பங்களும், முள்புதர்களும், மரத்துண்டுகளும், கற்களும், சிமிண்ட் பைப்களும் போட்டிருந்ததைக் கண்டனர். மின்கம்பிகள் அறுத்து விடப்பட்டிருந்தன. தொலைபேசி கம்பிகளும் அறுத்து விடப்பட்டிருந்தன. பல்லவன் போக்குவரத்துகழக பேருந்தும் அங்கேயே நின்றுகொண்டிருந்தது. சாலையில் முன் நான்கு வரிசைகளில் பெண்களும், அதற்கு பின் ஆண்களும் உட்கார்ந்து மறியல் செய்து கொண்டிருந்தனர். திருவள்ளூர் கோட்டாட்சித் தலைவர் எவ்வளவோ வேண்டியும் குறிப்பாக தாய்மார்களை கலைந்து போகச் சொல்லியும்

அவர்கள் கலைந்து போகாமல், சாலையை மறித்துக் கொண்டு உட்கார்ந்து இருந்தனர். கலைந்து போகும்படி எவ்வளவோ வற்புறுத்தியும்கூட கூட்டத்தினர் எவ்வித முகாந்திரமும் இன்றி கல்லெரியத் தொடங்கினர். திருவள்ளூர் வட்ட காவல்துறை துணை ஆய்வாளரும், சில காவலர்களும் ரத்த காயங்கள் அடைந்தனர். கூட்டத்தினரின் முரட்டுத் தனத்தைக் கண்டு கோட்டாட்சித் தலைவர், சட்ட விரோத கூட்டமென அறிவித்தார். காவல் துறையின் எச்சரிக்கை செய்த பின்பு கண்ணீர் புகை பிரயோகித்தனர். வன்முறை கூட்டம் கிராமத்தை நோக்கி பின் வாங்கியதென்றாலும் தொடர்ந்து நாலா பக்கங்களிலிருந்தும் கல்லெறிந்தனர். கண்ணீர் புகை பிரயோகம் பயன் அளிக்காமல் போனது மட்டுமல்லாமல், காவல்துறை அதிகாரிகள் மேலும் காயம் அடைந்தனர். இந்நிலையில் தற்காப்பிற்காக தடியடி பிரயோகம் செய்யப்பட்டது.

[முற்பகல் 10.50]

அவ்விடத்தில் சுமார் 11.50 மணியளவில் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் வந்து சேர்ந்தார். தடியடிக்கு பிறகு கூட்டம் கலைந்தது. சுமார் 56 பேர்கள் கைது செய்யப்பட்டனர். கூட்டத்தைச் சேர்ந்த சுமார் 21 பேர்கள் காயமடைந்தனர். மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், திரு. பாலகிருஷ்ணன், மற்றும் திருவள்ளூர் துணை கண்காணிப்பாளர், திரு. பாலகிருஷ்ணன் உள்பட காவல் துறையைச் சேர்ந்த 22 பேர்கள் காயமுற்றனர். காவல் துறையினர் சென்ற நெடுஞ்சாலை பிரிவு லாரி எம். எஸ். ஆர். 217-ம், வாடகைக்கு அமர்த்தப்பட்ட லாரி டி. எம். எஸ். 3580-ம் பலத்த சேதத்திற்கு உட்பட்டன.

மின்சார கம்பங்களைப் பிடுங்கி சாலையில் குறுக்கே போட்டதால், மின்வாரியத்திற்கு சுமார் ரூ. 2,000 இழப்பு இருக்கும். தொலை பேசி கம்பித் தொடர்புகளை அறுத்தெறிந்ததால், தொலைபேசி துறைக்கு சுமார் ரூ 2,000 இழப்பு ஏற்பட்டுள்ளது. காயமுற்றோர்களில் 18 பேர்களில் திருவள்ளூர் அரசு மருத்துவ மனையில் உள்புற நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டனர். மற்றவர்கள் வெளிப்புற நோயாளிகளாக சிகிச்சை பெற்று வருகின்றார்கள். திருவள்ளூர் வட்ட காவல் துறை துணை ஆய்வாளர் மற்றும் இரு காவலர்கள் உள்புற நோயாளிகளாக சிகிச்சை பெற்று வருகின்றனர். திருவள்ளூர் நகர காவல் நிலையத்தில், வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நான் இதிலே தெரிவிக்க விரும்புவது, மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச்சொல்கிறபோது குறிப்பாக தாய்மார்கள் இதிலே தாக்கப்பட்டு இருக்கிறார்கள். அவதிக்கு ஆளாகி இருக்கின்றார்கள். இது முறைதானா என்று கேட்டு, வெளி

[திரு ச. இராமச்சந்திரன்] [1979 ஏப்ரல் 26

நாட்டில் இருந்து படையெடுத்தவர்களுடைய நிலைமை போல் அந்தக் கிராமம் காட்சி அளித்ததாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் திரு. ஜெபமணி அவர்கள் மிகவும் உருக்கமாகப் பேசுகிறபோது மிருகத்தனமாக இருந்தது என்று அவர்களும் குறிப்பிட்டார்கள்.

நான் சொல்ல விரும்புவது இதிலே அரசுக்குக் கிடைத்து இருக்கிற தகவல்களை பொறுத்தவரையில், 2 காரணங்களை முக்கியமாக கவனிக்க வேண்டும். ஒன்று, இத்தகைய போராட்டங்களிலே ஈடுபடுகிறபோது தாய்மார்களை முன்னே வைத்து, அவர்களுக்குப் பின்னாலே ஆண்கள் ஒளிந்து கொள்வது சரிதானா என்பதை தயவு செய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். நான் என்ன சொல்கிறேன் என்றால், நம்முடைய திரு. மார்க்கபந்து அவர்கள் கூட குறிப்பிட்டார்கள்.

குறிப்பாக, தாய்மார்கள், சங்கத்தைச் சேராதவர்கள், வயதானவர்கள், இவர்களெல்லாம் தாக்கப்படுவது முறையல்ல என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் குறிப்பிடுகிறபோது எனக்கு நினைவுக்கு வந்தது. இந்த ஹர்த்தால் நடந்த தினத்தன்று என்னுடைய ஊரில் இருந்து சிலர் கார்களில் வந்து கொண்டு இருந்து இருக்கிறார்கள். அவர்கள் கார்களை வழிமறித்து, நீங்கள் முன்னாலே போகக்கூடாது, பின்னாலே போகக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி நிறுத்தியவர்கள் யார் என்றால் சின்னஞ் சிறிய பிள்ளைகள். அவர்களை நீங்கள் யார் என்று கேட்டதற்கு விவசாய சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னார்களாம். எந்தச் சங்கம் என்று கேட்டபோது அவர்களுக்கு பெயர் சொல்லத் தெரியவில்லை. இப்படி சிறியவர்களையும், தாய்மார்களையும் ஈடுபடுத்தி ஒரு குறிப்பிட்ட சங்கத்தினர் தங்களுடைய ஹர்த்தால் வெற்றி பெறவேண்டும் என்ற அளவிற்கு பயன்படுத்தி இருக்கிறார்கள். இது நியாயம் தானா? இதை நாம் அனுமதிக்கப் போகிறோமா என்பதையும் தயவு செய்து அத்தனைபேரும் சிந்திக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வாகைகுளம் சம்பவத்தைப் பற்றி பேசப்பட்டது. தாய்மார்களை முன்னே நிறுத்தி, அவர்களுக்குப் பின்னாலே ஆண்கள் நின்று கொண்டு கல்லெறிந்ததையும், கலவரம் செய்ததையும் நாம் அறிவோம். காவல் துறையினர் தாய்மார்களிடத்தில் எச்சரிக்கை செய்தார்கள். கூட்டத்தைக் கலைக்கவேண்டும் என்ற நிலைமை ஏற்பட்ட பின்னாலே நிலைமைகள் என்ன ஆயிற்று என்பதும் தெரியும். இப்படிப்பட்ட முறை தமிழ் நாட்டில் ஏற்றுக்கொள்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 26] [திரு. ச. இராமச்சந்திரன்]

பெரியவர் ஜெபமணி அவர்கள் 1942-ல் நடந்த போராட்டம் பற்றி குறிப்பிட்டார்கள். மகாத்மா காந்தி அவர்கள் போராட்டம் நடத்தியிருக்கிறார். நம்முடைய காலத்தில் அறிஞர் அண்ணா போன்றவர்கள் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். பல்வேறு கட்சிகள் போராட்டங்கள் நடத்தி இருக்கின்றன. போராட்டம் நடத்துகிறபோது நமக்கென வழி வகுத்துக்கொண்டு, தாய்மார்கள் கலந்து கொண்டால், அதற்காக அமைதியான முறையில் வழி ஏற்படுத்திக்கொடுத்து, சட்டவிரோதமான காரியங்களில் போராட்டத்தினர் ஈடுபடாமல் பார்த்துக்கொண்டு போராட்டங்கள் நடைபெற்று இருக்கின்றன. ஆனால் தாய்மார்கள், குழந்தைகள், வயோதிகர்கள் ஆகியோரை வைத்து போராட்டம் நடத்தியதால் தான் இத்தகைய விளைவுகள் கஷ்டங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. ஆனால் உண்மையிலேயே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன காரியங்கள் நடைபெற்று இருக்குமானால் என்னைப் பொறுத்தவரையில், இந்த அரசைப் பொறுத்த வரையில் அது போன்ற தகவல்கள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனாலும் அப்படி நடந்திருக்குமானால் நான் அதற்கு சொல்வது, முழுக்க முழுக்க இத்தகையப் போராட்டங்களை நடத்துகின்றவர்கள்தான் அதற்கு பொறுப்பு ஏற்கவேண்டுமென்று தெளிவாக்க கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் இத்தகைய போராட்டங்களை தாய்மார்களைக் கொண்டும், குழந்தைகளைக் கொண்டும் இதுவரையில் எந்தத் தலைவரும் நடத்தியதுமில்லை, நடத்த அனுமதித்ததும் இல்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவர் ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். கிராமத்தின் உள்ளே போய் அடிக்கவில்லை என்று கூறினார்கள். நடந்தது அதுவல்ல. கிராமத்தில் இருந்தவர்களை ரோட்டுக்குக் கொண்டுவந்து, வரிசையாக உட்கார வைத்து — தாய்மார்களையும் குழந்தைகளையும் வரிசையாக உட்கார வைத்திருக்கிறார்கள் (குறுக்கீடு). இத்தகைய நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதற்குப்பிறகு போலீஸ் சூப்பிரண்டு எல்லாம் காயம் அடைந்திருக்கிறார்கள்.

திரு. ர. ஜெபமணி: சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சபாநாயகர் அவர்களே, அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட அறிக்கையை பார்த்தோம். நான் அதை உண்மைக்குப் புறம்பானது என்று சொல்வதற்கு வருத்தப்படுகிறேன். நாங்கள் எல்லாம் நேரிலே போய் பார்த்திருக்கிறோம். வீடுகள் உடைக்கப்பட்டிருக்கின்றன; கடைகள் உடைக்கப்பட்டிருக்கின்றன; கதவுகள் உடைக்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் விசாரணை நடத்த நீதிபதியைகூட நியமிக்க வேண்டாம்,

எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்டு, ஒரு சர்வகட்சி குழு அமையுங்கள். அந்தக் குழுவினர் நேரிலே பார்த்து சொல்லட்டும்; அப்போது உண்மை தெரியும், அது நாட்டுக்கும் நல்லது, உங்களுக்கும் நல்லது. கண்ணகி அழுதாள் என்றால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த கருத்தோடு நிறுத்திக் கொள்ளுங்கள்; மற்றவை வேண்டாம்.

திரு. ர. ஜெபமணி: ஐயா, கொஞ்சம் என்னை அனுமதியுங்கள். நான் பேச ஆரம்பித்தாலே, என்னை தடுத்து விடுகிறீர்கள். எனக்கு யார் மேலும் கோபம் இல்லை. இந்த நாட்டிலே பெண்கள் மானத்தோடு வாழ வேண்டும். எங்களிடத்திலும் பெண்கள் இருக்கிறார்கள்; உங்களிடமும் பெண்கள் இருக்கிறார்கள். இன்றைக்கு எப்படிப்பட்ட பெண்கள் எல்லாம் தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். வீட்டைவிட்டு வெளியே வராத பெண்கள் எல்லாம் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நான் கேட்க விரும்புவது, தாய்மார்களை அவர்கள் முன்னால் 4 வரிசைகளாக உட்கார வைத்து மறியல் நடத்தினார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது; இது சரியா, இல்லையா?

திரு. ர. ஜெபமணி: உங்களுக்கு வந்திருக்கிற தகவல் சரியில்லை. அது உண்மைக்குபுறம்பான தகவல்; வேண்டுமென்றே அப்படித் தந்திருக்கிறார்கள். அதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. (திரு. சோ. அழகர்சாமி எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானத்தின்போது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை (குறுக்கீடு). முதலிலே என்னுடைய விளக்கத்தைச் சொல்கிறேன். ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அமைச்சர் விளக்கம் அளிக்கின்றபோது பாயின்ட் ஆப் ஆர்டர் கிடையாது. (திரு. சோ. அழகர்சாமி எழுந்தார்) நீங்கள் இந்த அவையிலே நீண்ட நாள் இருப்பவர்கள். ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது நீங்கள் பேசிய பிறகு, அமைச்சர் பதில் அளித்த பின்னால் மீண்டும் நீங்கள் பேசுவதற்கு வாய்ப்பு இல்லை; மேற்கொண்டு விவாதத்திற்கு இடமில்லை; இதுதான் விதி. (குறுக்கீடு) நான் விதிப்படிதான் நடக்கவேண்டும். நீங்கள் மறுபடியும் பேசுவதற்கு வாய்ப்பு இல்லை.

[1979 ஏப்ரல் 26]

திரு. சோ. அழகர்சாமி : தவறான தகவலைச் சொல்கிறார்கள். அதை நாங்கள் கேட்டுக்கொண்டிருக்க வேண்டுமா? நடந்த சம்பவங்களை எடுத்துச் சொல்வதற்கும் வாய்ப்பு கிடையாதா? இதுதான் உங்களுடைய முடிவா? எங்களுடைய முடிவு. . . .

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அவர்கள் என்ன முடிவு வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளட்டும். விசாரணையில் எது உண்மை என்பது தெரியவரும்.

(குறுக்கீடு—திரு. சோ. அழகர்சாமி, திரு. ர. ஜெபமணி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆயிரம் நிகழ்ச்சிகள் தமிழ்நாட்டிலே நடக்கலாம். அதையெல்லாம் இப்போது சொல்லிக்கொண்டிருக்க முடியாது.

திரு. சோ. அழகர்சாமி : உண்மையைப் பேசக்கூடாது என்று சொல்கிறீர்களா? எதைச் சொன்னாலும் இதுதான் விதி என்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் விதிப்படித்தான் நடப்பேன். திரு. அழகர்சாமி எழுந்தபோதெல்லாம் பேசுவதற்கு விதி இடம் கொடுக்கவில்லை. ஆகவே, நான் அனுமதிக்க முடியாது.

திரு. சோ. அழகர்சாமி : நான் பேசுவதற்கு விதி இடம் கொடுக்காது என்று சொல்கிறீர்கள். ஆகவே, உண்மைக்குப் புறம்பான விஷயங்களை சுட்டிக்காட்ட எனக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. இந்த உண்மைக்குப் புறம்பான அறிக்கையை எதிர்த்து, தாய்மார்களும், பெண்களும், குழந்தைகளும் தாக்கப் பட்டதை கண்டித்து, நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் வெளிநடப்புச் செய்தார்கள்.)

திரு. ர. ஜெபமணி : இந்த சபைக்குத் தவறான தகவல் தரப்பட்டிருக்கிறது. ஆகவே, அதை எதிர்த்து நாங்கள் வெளி நடப்புச் செய்கிறோம். (ஜனதா கட்சியினர் வெளிநடப்புச் செய்தார்கள்.)

திரு. என். சங்கரய்யா : இங்கே சொல்லியிருக்கிற தகவல் சரியானது அல்ல என்று எல்லோரும் சொல்கிறார்கள். எங்கள் கட்சியினர் அது கொஞ்சம்கூட உண்மையல்ல என்று சொல்கிறார்கள். இன்று வந்திருக்கிற தகவலைப் பார்த்தால் மிகவும் பயங்கரமாக இருக்கிறது. அரசாங்கம் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. தமிழ்நாட்டு பத்திரிகைகளில் எல்லாம்

செய்தி வந்திருக்கிறது. போலீஸ் அடக்குமுறை இன்றைக்கு கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது. அரசாங்கம் சொல்லித்தான் இந்த அடக்குமுறை நடைபெற்றிருக்க வேண்டும். அதைக் கண்டிக்கும் வகையில் எங்கள் கட்சியின் சார்பாக வெளிநடப்புச் செய்கிறோம். (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் வெளி நடப்புச் செய்தார்கள்.)

[முற்பகல் 11-00]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் போய் பார்த்து வந்ததை நம்புங்கள் என்று கூறுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நெல்லை ஜெபமணி அவர்கள் தான் பார்த்ததுதான் உண்மை என்றும் குறிப்பிடுகிறார். நான் என்ன சொல்கிறேன் என்றால் ஆய்விலே எந்த முடிவுகள் கிடைக்கின்றதோ அதைப் பொறுத்து தான் உண்மைகளை கண்டறிய முடியும். ஆனால் தாய் மார்களை முன்னே வைத்து போராட்டத்தை நடத்துகிற பேடித் தன்மைக்கு இந்த அரசு முற்றுப்புள்ளி வைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : பேரவைத் தலைவரவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திலே பல கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். அவர்களுடைய உணர்வைக் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும். அவர்கள் தாங்கள் போய்ப் பார்த்துவிட்டு வந்ததால் அந்தச் சம்பவங்கள் மிகத் தவறாக நடந்திருக்கின்றன என்று சொல்கிறார்கள். அங்கே மிகக் கடுமையாக நடந்திருக்கின்றன என்று சொல் கிறார்கள். அவர்களுக்கு அந்த உணர்வு இருக்கிறது. ஆகவே அந்த உணர்வைக் கணக்கில் எடுத்துக்கொண்டு இதைப்பற்றிய சரியான தகவல்களைச் சேகரிப்பதற்குரிய நடவடிக்கைகளைப் பரிசீலனை பண்ணவேண்டும். அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் இந்த உணர்வோடுதான் போகிறார்கள். வேண்டுமென்றே போகிறார்கள் என்று நான் கருதவில்லை. அவர்களுக்கு அந்த உணர்வு இருப்பதால்தான் போகிறார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நான் அந்த உணர்வைப் பொறுத்தவரையில் எதுவும் குறிப்பிட வில்லை. நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் இப்போது பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எல்லாம் போராட்டம் நடத்து கிறார்கள். ஆனால் இப்போது இருக்கின்ற முறையில் போராட் டங்களை ஆரம்பிக்காமல் குறிப்பாகத் தாய்மார்களை முன்னே

தள்ளி அதற்குப் பின்னாலே இருந்துகொண்டு, தாய்மார்கள் அடிப்பட்டதும், அதை வைத்து அதாவது தாய்மார்கள் அடிப் பட்டதை வைத்து உடனே அரசியல் லாபம் தேட முயற்சி செய்வதும், தாய்க்குலம் என்று பேசப்படுவதை இழித்தும் பழித்தும் பேசுவதையும் ஒரு தந்திரமாக வைத்துக்கொண்டிருக் கிறார்கள். அந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று குறிப்பிட்டேனே தவிர உண்மையிலேயே தாய் மார்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் நிச்சயமாக அது குறித்து பரிசீலனை செய்யப்படும். சமீபத்தில் வாகைக்குளத்தில் ஏற்பட்ட பிரச்சினையின்போது மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் இங்கிருந்து நேராகச் சென்று அங்குள்ளவர் களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஆறுதல் அளித்தார்கள் என்பதை அனைவரும் அறிந்திருக்கிறார்கள். ஆகவே நான் குறிப்பிட்டது வேறுபட்ட முறைகளை அங்கே அனுமதிக்கக் கூடாது என்பதுதான். அதைத்தான் எடுத்துச் சொல்ல வருகிறேனே தவிர பாதிக்கப்பட்டவர்களுக்காக பரிந்து பேசுகின்ற உணர்வை நிச்சயமாக இந்த அரசு மதிக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு இந்தப் பிரச்சினைக்காக அவையை ஒத்தி வைக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, பெண்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். பலர் இன்று சிறைச்சாலையில் இருக்கிறார்கள். அவர்களை உடனடியாக விடுதலை செய்வதற்கு இந்த அரசாங்கம் உத்தரவிடவில்லை. அதைக்கூடச் செய்ய வில்லை. ஆகவே எங்களுக்குப் பெருத்த அதிருப்தி ஏற்பட்டிருக் கிறது. அந்த அதிருப்தியைக் காட்டுகின்ற வகையில் நானும் வெளிநடப்பு செய்கிறேன்.

(திரு. எம். ஏ. லத்தீப் வெளிநடப்பு செய்தார்.)

திரு. ரா. மார்க்கபந்து: தலைவரவர்களே, இப்போது அமைச்சரவர்கள் அறிக்கை படித்தார்கள். ஆனால் வீடுகள் நொறுக்கப்பட்டிருக்கின்றன என்றும், பொருள்கள் சேதம் அடைந்திருக்கின்றன என்றும் போய் பார்த்தவர்களும் நாங்களும் சொன்னோம். அதைப்பற்றி அமைச்சரின் அறிக்கையிலே எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆக அந்த உணர்வை இங்கே எடுத்துக்காட்டி, அதேபோல பிரிவென்டிவ் அரஸ்ட் என்ற முறையிலே கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுத்து அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டிய தேவை இல்லை என்பதால் அனுமதி மறுக்கப்படுகிறது.

(4) அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 23-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 23-ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு அமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

(5) அறிக்கை அளித்தல்.

திருப்பரங்குன்றம் நிகழ்ச்சி பற்றிய அறிக்கைக்கு திருத்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவை விதி 82A-ன் கீழ் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரவர்கள் பேரவைக்கு ஒரு அறிக்கை அளிப்பார்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 25-4-79 அன்று இந்தப் பேரவையில் திருப்பரங்குன்றம் நிகழ்ச்சிகள் பற்றிய ஒரு அறிக்கை விதி 42-ன் கீழ் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப் பட்டது:—

''அந்த அதிகாரி விடுப்பில் இருக்கிறார். விடுப்பில் இருந்து வரும்பொழுது வேறு மாவட்டத்துக்கு மாற்றப்படுவார் என்று அரசு ஏற்கெனவே இந்த மன்றத்தில் அறிவித்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர்.''

இந்த வாசகங்களுக்குப் பதிலாக 27-3-79 அன்று மாண்புமிகு அவை முன்னவர் அவையில் கூறிய வாசகங்கள் அவைக் குறிப்பேட்டில் உள்ளபடி, அதாவது கீழ்க்கண்ட வாசகங்களை,

''அந்த அதிகாரி விடுமுறையிலே இருக்கிறார். அந்த விடுமுறைக்குப் பிறகு அந்த நேரத்திலே எழுகின்ற நிலைமைகளையொட்டி மாற்றப்பட வேண்டுமென்ற சூழ்நிலை எழுமானால் நிச்சயமாக இந்த அரசு பரிசீலிக்கும்'' என்று இந்த மன்றத்தில் ஏற்கெனவே அறிவித்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர் என்று சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 26]

(4). அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி).

(ஆ) விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

''பேரவையின் 41(3)-வது விதியின்கீழ் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும்.''

என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

6. கவன ஈர்ப்புகள்.

(அ) பழமங்கலம் கிராம அரிசன காலனி தீ விபத்து குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் க. மருதாசலம், ரா. அய்யாசாமி, க. நாச்சிமுத்து ஆகியோர் பழமங்கலம் கிராமம் அரிசன காலனி தீ விபத்து குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. க. மருதாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

''கோவை மாவட்டம் ஈரோடு அருகிலுள்ள பழமங்கலம் கிராம அரிசன காலனியில் 12-4-79 ஆம் தேதியன்று எற்பட்ட தீ விபத்தினால் 58 குடிசைகள் எரிந்து போனது பற்றி.''

*திரு. பி. முசிறிப்புத்தன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : 11-4-79 அன்று மாலை சுமார் 5.30 மணிக்கு கோயம்புத்தூர் மாவட்டத்தில், ஈரோடு வட்டத்தைச் சார்ந்த பழமங்கலம் மற்றும் குலவிளக்கு கிராமங்களைச் சேர்ந்த, சிற்றூராகிய கோயில் பாளையத்திலுள்ள, ஆதித் திராவிட மக்கள் வாழும் குடியிருப்பில் ஒரு தீ விபத்து நிகழ்ந்தது. செய்தி கிடைத்ததும், ஈரோடு வட்டாட்சியர் விபத்து நிகழ்ந்த இடத்திற்கு விரைந்து நிவாரணப் பணிகளை மேற்கொண்டார். தீ இரவு 10 மணி சுமாருக்கு அணைக்கப்பட்டது. நேரடி ஆய்விற்குப் பிறகு, அவர் வேளாண்மைத் தொழிலாளருக்குச் சொந்தமான 58 ஓலைக் குடிசைகள் முழுமையாக எரிந்து சாம்பலாயின எனக் கணக்கிட்டார். வட்டாட்சியர், பாதிக்கப்பட்டுள்ள மக்களைக்

கோயில்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த குலவிளக்கிலுள்ள ஆரம்பப் பள்ளியில் தங்கச் செய்து உணவுப் பொட்டலங்களும் வழங்க ஏற்பாடு செய்தார். இந்த விபத்து, ஒரு குடிசையின் எரியும் அடுப்பிலிருந்து வந்த தீப்பொறியில் ஏற்பட்டதெனத் தெரிகிறது. இந்த விபத்து தற்செயலாக ஏற்பட்டதெனக் கருதப்படுகிறது. உயிரிழப்போ, கால்நடை இழப்போ ஏற்படவில்லை. திருவாளர்கள் கணேசன், (வயது 25) மற்றும் சின்னப்பன் (வயது 30) தீ விபத்தில் சிறு காயங்கள் ஏற்பட்டு ஈரோட்டிலுள்ள அரசு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு குணமடைந்து வருகின்றனர். மொத்தபொருள் இழப்பு ரூ. 23,700/-என மதிப்பிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட குடிசைகளைச் சீர் செய்வதற்காக, குடிசைப் புனரமைப்பு மானியமாக தலா ரூ. 100/-வீதம் 58 குடும்பங்களுக்கு, மொத்தம் ரூ. 5,800/- ஈரோடு வட்டாட்சியர் வழங்கியுள்ளார். ஒவ்வொரு குடும்பத்துக்கும் 4 லிட்டர் அரிசியும் வழங்கப்பட்டுள்ளது. குடிசைகள் மீண்டும் கட்டிக்கொள்ள ரூ. 2,000/-வரை தக்காவிக் கடன் வழங்க விதியிருப்பதற்கிணங்க, தேவையானோர்க்கு விதிகளின்படி ரூ. 2,000/வரை தக்காவிக் கடன் வழங்குதலையும் கருதுமாறு கோவை மாவட்ட ஆட்சியருக்கு அறிவுரையளிக்கப்பட்டுள்ளது.

2. தீயினால் பாதிக்கப்பட்ட இடத்தை 15-4-79 அன்று கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் சென்று பார்த்தார். பாதிக்கப்பட்ட மக்கள் நன்கு கவனிக்கப்பட்டு வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

திரு. க. மருதாசலம்: பேரவைத் தலைவர் அவர்ளே, இந்தப் பகுதியில் வாழ்ந்துவரும் அரிசன மக்கள் மிகவும் ஏழைகள். ஆகவே, அமைச்சர் செயலாளர் அவர்கள், அறிவித்த அந்த 2,000 ரூபாயை உடனடியாக அவர்களுக்குத் தருவதற்கு ஆவன செய்வார்களா? என்று அறிய விரும்புகிறேன்.

திரு. பி. முசிறிப்புத்தன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): மாவட்ட ஆட்சியாளருக்கு அதற்கான உத்தரவு அனுப்பப்பட்டுள்ளது.

திரு. ரா. அய்யாசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் செயலர் அவர்கள் 2,000 ரூபாய் கடனாகக் கொடுப்பதாகச் சொன்னார்கள். அங்கு வசிப்பவர்கள் வசதியில்லாதவர்கள். அந்த ரூபாயை இலவசமாகக் கொடுக்க செயலர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. பி. முசிறிப்புத்தன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): கடன் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

1979 ஏப்ரல் 26]

(முற்பகல் 11-10)

(ஆ) வரலாற்று பாட நூலில் இஸ்லாமிய நெறிமுறைக்கு மாறான கருத்துக்கள் வெளியிடப் பெற்றிருப்பது குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள மேல்நிலை முதலாம் ஆண்டுக்கான வரலாற்று நூலில் இஸ்லாமிய நெறி முறைகளுக்கு மாறாக சில கருத்துக்கள் வெளியிடப் பட்டுள்ளதால், அச்சமூகத்தினரிடையே நிலவும் பதட்ட நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தற்போது மேல்நிலைக் கல்வி முதலாவது ஆண்டுக்குரிய வரலாற்றுப் பாட நூலில் இருக்கும் இஸ்லாமிய சமயத்தைப் பற்றியும் நபிகள் நாயகம் அவர்களைப் பற்றியும் உள்ள பகுதி சில தவறான கருத்துக்களை கொண்டுள்ளதாக அரசின் கவனத் திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதனை அரசு பரிசீலித்து, இந்த வரலாற்றுப் பாட நூலில் இஸ்லாமிய சமயம், நபிகள் நாயகம் அவர்களைப் பற்றிய பகுதியை உடனடியாக நீக்கிவிட தமிழக பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநருக்கு ஆணையிட்டுள்ளது. தவிர, அந்தப் பகுதிக்குப் பதில் இஸ்லாமிய சமயம் கலாசாரம் பற்றி நன்கு அறிந்தவர்களைக் கொண்டு, ஒரு புதிய பகுதி எழுதப்பட்டு அதை வரலாற்றுப் பாடநூலுக்குப் பிற்சேர்க்கையாக (இணைப் பாக) வருகிற ஆண்டிலிருந்து வெளியிடலாம் என்றும் முடிவு செய்துள்ளது. இது பற்றியும் பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, இப்படிப் பட்ட பாடநூல்களை தயாரிக்கும்போது, நபிகள் நாயகத்தைப் பற்றியும், இஸ்லாமிய சமூகத்தைப்பற்றியும் தவறான கருத்துக் களைப் போட்டு எழுதி வருகிறார்கள். இதைத் தவிர்ப்பதற்கு இந்த பாடநூல் நிறுவனத்தில் இஸ்லாமிய மார்க்கத்தைப்பற்றி நன்றாகத் தெரிந்த இஸ்லாமிய மார்க்க அறிஞர்களை நியமிக்க வேண்டும் என்று பல்வேறு நேரங்களில் எடுத்துச்சொல்லப் பட்டிருக்கிறது. அது இதுவரையிலும் நிறைவேற்றப்படவில்லை. இப்போதாவது பரிவோடு இதை பரிசீலித்து அதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமா?

[திரு. எம். ஏ. லத்தீப்] [1979 ஏப்ரல் 26

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசு பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இ. பல்லாவரம் கல் உடைக்கும் தொழிலாளர்களது கோரிக்கைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கே. வடிவேலு, மு. அம்பிகாபதி, செ. சதாசிவம், சின்ன சேலம் மா. சுப்பிரமணியம், இரா. தாமரைக்கனி ஆகியோர், பல்லாவரம் கல் உடைக்கும் தொழிலாளர்களது கோரிக்கைகள் குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, ''சென்னை பல்லாவரம் கல் உடைக்கும் தொழிலாளர்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததால் அவர்களிடையே நிலவும் பதட்ட நிலை'' குறித்து அவசர பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்ட குவாரி மற்றும் கல் உடைக்கும் தொழிலாளர் சங்கம் 21.12.78 அன்று தொழிலாளர் துறை ஆணையரிடம் மேற்படி தொழிலாளர்களுக்கு தொழிலாளர் சட்டங்களின் பல்வேறு பிரிவுகளை அமுல் செய்ய கோரிக்கை விடுத்தது. அச்சங்கத்தின் கோரிக்கைகள் ஆவன. (குறுக்கீடு(தலைவர் அவர்களே, அவர்கள் கொடுத்திருக்கின்ற 9 கோரிக்கைகள் இருக்கின்றன. இந்த விவரங்கள் எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். இவை அத்தனையும் படிக்கவேண்டுமா, நேரம் ஆகும். மாண்புமிகு உறுப்பினர் படிக்கவேண்டும் என்கிறார்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினரிடம் கேட்டால் படியுங்கள் என்றுதான் சொல்லுவார்கள். நீங்களாக பார்த்து முடிவு செய்து பதிலைச் சொல்லவேண்டும்.

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இவர்கள் ஒன்பது கோரிக்கைகள் கொடுத்திருக்கிறார்கள். இந்தக் கோரிக்கைகளை தொழிலாளர் துறை ஆணையர் பரிசீலித்துக் கொண்டிருக்கும் போதே இச்சங்கத்தினர் 28.3.1979 அன்று போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்தது.

[1979 ஏப்ரல் 26]

மேற்கொண்டு தொழிலாளர் துறை ஆணையரின் முயற்சிக்கிணங்க மேற்படி தொழிலாளர் சங்கத் தலைவர் 24.3.1979-ந் தேதிய கடிதத்தில் ஆணையர் அலுவலகம் முன்பு நடத்தப்போவதாகவிருந்த போரட்டத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்வதாக அறிவித்துள்ளார். ஆகவே ஆணையாளர் அலுவலகம் முன்பு இந்த தொழிலாளர்கள் எந்தவிதமான போராட்டமும் நடத்தவில்லை.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கல் உடைக்கும் தொழிலாளர்கள் கடுமையாக சுரண்டப்படுகிறார்கள். இவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாது. தங்களுக்கு பாதுகாப்பு இல்லாத அரசியல் சட்டத்தைக் கொளுத்துவோம் என்று அறிவித்திருந்தார்கள். அதன் பிறகு இந்தச் சங்கத்தின் கோரிக்கைகள் மீது முறையான பேச்சுவார்த்தைகள் நடைபெறாமல் இன்னும் தீராமல் இருந்து வருகின்றன. எந்த ஒரு பிரச்னையாக இருந்தாலும் அதை காலந்தாழ்த்தி கவனிப்பது என்பது தான் அரசாங்கத்தின் வழக்கமாக இருந்து வருகிறது. இவர்களுடைய கோரிக்கையும் அப்படியே இருக்கிறது. இதை மாற்றி, இந்த கல் உடைக்கும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது செயற்குறிப்பு வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இவர்களுக்கு பாதுகாப்பு தருவது அரசியல் சட்டம் அல்ல, பாக்டரி ஆக்டும், மைன்ஸ் ஆக்டும் தான் பாதுகாப்பு தரவேண்டும். குவாரி என்று வரும்போது அது மத்திய அரசு தான் பார்த்துக்கொள்ளவேண்டும். இப்போது இந்த கல் உடைக்கும் தொழிலாளர்களை எல்லாம் பாக்டரி சட்டத்தின் கீழ் கொண்டு வர இருக்கிறோம். இதுவரை எப்படியோ முதலாளிகள் தப்பித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதில் 23 முதலாளிகள் நடத்தக்கூடிய இந்த தொழிலில், மூன்று அதிபர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டிருக்கிறது. மீதியுள்ளவர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. ஆறு பேர்கள் மீது ஷோ-காஸ் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த 23 முதலாளிகளின் கீழ் இருக்கும் அத்தனை தொழிலாளர்களையும் பாக்டரி ஆக்டின் கீழ் கொண்டு வந்தால்.. Under the Factories Act, 1948 அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மை கிடைக்கும் என்ற காரணத்தால், அரசு அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது.

திரு. செ. சதாசிவம் : தலைவர் அவர்களே, இந்த கல் உடைக்கும் தொழிலிலே சுமார் 10,000 பேர்கள் அந்தப் பகுதியிலே இயங்குவதாகவும், அவர்களை பாக்டரி ஆக்டின்கீழ் கொண்டு வந்து, அதை உடனடியாக அமுலுக்கு கொண்டு

[1979 ஏப்ரல் 26

வருவதற்கும், அந்த முதலாளிகளையும் இந்த பாக்டரி ஆக்டின் கீழ் கொண்டு வருவதற்குமான வழிவகைகளை இந்த அரசு சீக்கிரமாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே மூன்று பேர்களை பிராசிகியூஷன் செய்திருக்கிறோம்; ஆறு பேர்கள் மீது 'ஷோ காஸ்' நோட்டீஸ் கொடுத்திருக்கிறோம். இதே தான் மற்றவர்களுக்கும். பார்த்தாயா, ஒன்பதுபேர்கள்மீது ஒழுங்குநடவடிக்கைஎடுத்திருக்கிறோம். நீங்களும் இந்த பாக்டரி ஆக்டின் கீழ் வந்து விடுங்கள் என்பதற்காக இப்படிச் செய்திருக்கிறோம். இதை எல்லோரும் புரிந்து கொள்வார்கள். ஆகவே, இந்த அரசு இத்தனை ஆண்டு காலமாக மறைந்து, தப்பித்துக் கொண்டிருந்த முதலாளிகளை இழுத்து, பாக்டரி சட்டத்தின்கீழ் கொண்டுவந்து, தொழிலாளர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது. துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தொழிலாளர்களுக்கு பல நல்ல காரியங்களை செய்து கொண்டிருக்கிறது. தொழிலாளர்கள் இந்த அரசையும், புரட்சித் தலைவர் அவர்களையும் வெகுவாகப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்த சென்னையிலே, பல்லாவரம் குவாரியிலே தொழிலாளர்கள் பிரச்னை நீண்ட நாட்களாக இருக்கிறது. அங்கே காண்ட்ராக்டர் ஒரு தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தை அமைத்து, ஏமாற்றிக் கொண்டிருக்கிறார். அதனால் அந்த காண்ட்ராக்டர் மீது நடவடிக்கை எடுத்து, தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்க புதிய ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இதுமாதிரி தொழிற்சாலை நடத்தும்போது, 'இம்மீடியட் எம்ப்ளாயர் அண்டு பிரின்சிபில் எம்ப்ளாயர்' என்று உண்டு. இதிலிருந்து அந்த முதலாளிகள் தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி முதலாளிகள் தப்பித்துக் கொள்ளாமல் இருக்கவேண்டும் என்பதற்காகவும், தொழிலாளர்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்பதற்காகவும் இந்த அரசு தக்க நடவக்கைகள் எடுக்கும். இன்னும் போகப் போக பார்க்கப் போகிறீர்கள். தாமரைக்கனி பாராட்டுவதற்கு 4, 5 நாட்கள் கொடுக்கவேண்டியிருக்கும். தொழிலாளர்களுக்கு தொடர்ந்து நன்மைகள் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறோம்.

1979 ஏப்ரல் 26]

(ஈ) மண்டபம் பகுதியில் கடல் கொந்தளிப்பால் விளை நிலங்கள் உவர் நிலங்களாக மாறியது குறித்து.

திரு. செ. சிவசாமி : கீழ்க்கண்ட அவசர பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு விவசாயம் மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

''சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளம், கடல் கொந்தளிப்பால் மண்டபம் பகுதியில் 2,000 ஏக்கர் விளை நிலங்கள் உவர் நிலங் களாக மாறியுள்ள தாலும், 100 ஏக்கர் மல்லிகை தோட்டம் அழிக்கப்பட்டுள்ளதாலும் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து''.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கடந்த 1978-ம் ஆண்டில் நவம்பர் மாதம் ஏற்பட்ட புயல் வெள்ளம் காரணமாக இராமநாதபுரம் மாவட்டம் கரையோரப்பகுதிகளில் கடல் நீர் விளை நிலங்களில் உட்புகுந்து பயிர்களை பாழாக்கியதுடன் உட்புகுந்த கடல் நீர் வெளியேறும்போது விளைநிலங்களை உப்பு நிலங்களாக மாற்றியது. இவ்வாறு மண்டபம் பகுதியில் சுமார் 100 ஏக்கர் நிலமும் இராசசிங்கமங்கலம் பகுதியில் சுமார் 2,000 ஏக்கர் நிலமும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு இயற்கையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை விவசாயத்துறை ஊழியர்கள் பார்வையிட்டனர். வானொலி மூலமாகவும் துண்டு பிரசாரங்கள் மூலமும் தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டன. மேலும் இப்பகுதி உழவர் பெருமக்கள் தங்களது நிலங்களை நன்கு உழுதுவிட்டு நிலத்தில் சற்று நேரம் நீர் கட்டி பின் உப்பினை வடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். இவ்வாறாக நிலச் சீர்திருத்தம் செய்வதற்கு ஒரு ஏக்கருக்கு சுமார் 500 ரூபாய் வரை செலவாகும். ஆனால், இப்பகுதி உழவர் பெருமக்கள் இத்தகைய உவர் நில சீர்திருத்த வேலைகளை மேற்கொள்ளும் நிதி வசதியற்று உள்ளனர். இருப்பினும் அவர்கள் தங்கள் நிலங்களில் ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 2,000 வீதம் தொகையாக முழு மானயம் வழங்கினால் சீர்திருத்த வேலைகளை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இதுபோன்ற சீர்திருத்தங்கள் பற்றி தமிழக அரசும் வெள்ள நிவாரணப் பணிகளை ஆய்வு செய்யும் பொருட்டு வந்திருந்த இந்திய அரசுக் குழுவும் ஆய்வு செய்ததில் இப்பகுதி நிலங்கள் ஏற்கனவே வளமிழந்த நிலங்கள் என்றும் பொதுவாக ஏக்கருக்கு ரூபாய் 1,000/- முதல் ரூபாய் 2,000/- வரை மதிப்புள்ளதென்றும் எனவே மேற்கூறப்பட்ட மிகவும் நுட்பமான சீர்திருத்தப்

[திரு. ப. குழந்தைவேலு] [1979 ஏப்ரல் 26

பணிகளை மேற்கொள்வது அவ்வளவாக பயனளிப்பதாகாது என்றும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் இப்பகுதி மக்கள் மேற்சொன்ன திட்டப் பணிகளுக்காகும் கடன் தொகையை திருப்பிச் செலுத்தும் வகையில்லாதவர்கள். எனவே இப்பகுதி உழவர்கள் தமது வழக்கமான முறைகளை மேற்கொள்ளுவதே நல்லதொரு வழியாகும் என்று கருதப்படுகிறது. இதன்படி இப்பகுதிகளில் கிடைக்கும் கண்மாய் வண்டல்களை பரப்பியும் தண்ணீரை நிறுத்தி வைத்தும் குறைந்த செலவில் உப்பினை வடிகட்டி விடலாம். இவ்வழியே சிறந்த வழியாகும்.

1978-ம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட புயலினால் இராமநாதபுரம் மாவட்டத்தில் கடல்நீர் பாய்ந்ததனால் மல்லிகைத் தோட்டங்கள் பாதிக்கப்படவில்லை. ஆனால் புயலை ஒட்டி ஏற்பட்ட பெருமழையினால் மண்டபம் பகுதியில் இராமேஸ் வரம் தீவில் சில நிலங்களில் மழைநீர் தேங்கி இருந்ததால் மல்லிகைப் பயிர்கள் சிறிது தற்காலிகமாக பாதிக்கப்பட்டன. ஆனால் நீர் வடிந்த பின்பு மல்லிகைப் பயிர்கள் மீண்டும் புத்துயிர் பெற்று விட்டன. தற்போது இப்பயிர்கள் நல்ல நிலைமையில் உள்ளன. மல்லிகைப் பயிருக்கு எவ்வித சேதமும் இல்லை.

(முற்பகல் 11·20)

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடிய நேரத்தில் இரண்டாயிரம் ஏக்கர் விளைநிலங்கள், 100 ஏக்கர் மல்லிகைத் தோட்டங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை ஏற்றுக்கொண்டார்கள். நன்றி. விவசாயிகளுக்கு நிவாரணம் கொடுக்கும் முறையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளாமல் துண்டு பிரசுரங்கள் மூலம் நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்ற முறையில் சொல்லுகிறார்கள். இந்த நிலைமை சரியல்ல. துப்பாக்கியால்தான் நிவாரணம் கொடுப்போம் வேறு நிவாரணம் கொடுக்கமாட்டோம் என்ற நிலையில் போகாமல் அந்த உப்புத் தண்ணீரை வடித்து கரம்பை நீக்கி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஏற்கனவே என்னுடைய பதிலிலேயே விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அந்தப் பகுதியில் உள்ள நிலங்கள் வளமிழந்த நிலங்கள். அதற்கு இரண்டாயிரம் ரூபாய் வரை செலவு செய்வது சரியாக இருக்காது என்று விவசாயத் துறை மூலமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் துப்பாக்கிக் கொண்டு ஆட்சி நடத்தவேண்டிய துர்ப்பாக்கியம் எங்களைப் பொறுத்தவரையில் எழக்கூடாது என்பதுதான் இந்த அரசின் தலையாய கொள்கை.

1979 ஏப்ரல் 26] [திரு. ப. குழந்தைவேலு]

நான் பணிவோடு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் எங்கெங்கு மக்கள் அவதிப்படுகிறார்களோ, எங்கெங்கு மக்கள் பாதிப்புக்குள்ளாகிறார்களோ அவர்களுடைய பாதிப்பை நீக்குவதற்காக இந்த அரசு விரைந்து பாடுபட்டு வருகிறது. மல்லிகைத் தோட்டங்கள் அழிக்கப்படவில்லை, மீண்டும் புத்துயிர் பெற்றிருக்கின்றன என்று நமக்குக் கொடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்கெங்கு எவ்வளவு ஏக்கர் பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை எடுத்துச் சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்கக் காத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. செ. சிவசாமி: 100 ஏக்கர் மல்லிகைத் தோட்டம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று கலெக்டர் மூலமாக அரசுக்கு ரிப்போர்ட் அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் கேட்கிறேன், அந்த விவசாயிகளுக்கு வேறு எந்த விதமான வருமானமும் கிடையாது. அரசு அவர்களைக் கைதூக்கும் முறையில் நிச்சயமாக ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும், அவர்கள் வளமிழந்த வயல்களுக்கு லோன் கொடுக்க முடியாது. லோனைத் திரும்பக் கட்ட முடியாதவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் லோன் கொடுக்கமாட்டோம் என்று சொல்லுகிற அளவுக்கு அரசு கருமித்தனமாக நடந்து கொள்கிறது என்று கூறி இந்த முறை தவறான முறை. இதை மாற்றி அந்த விவசாயிகளுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் ஆத்திரப்பட்டு வார்த்தைகளை சொல்லுகிறார்கள். ஆனாலும் நான் அவரை மீண்டும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியில் இருக்கக் கூடிய நிலங்கள் உப்புத் தன்மை வாய்ந்த நிலங்களாக இருக்கும் காரணத்தால் மீண்டும் லோன் கொடுத்து சரி செய்வது, இரண்டாயிரம் ரூபாய் செலவழித்து ரூ 500 பெறுமான நிலத்தைச் சீர்படுத்த வேண்டுமா என்பதுதான் இப்போது இருக்கக்கூடிய நிலைமை. அங்கிருக்கக்கூடிய பகுதி மக்கள் இரண்டாயிரம் ரூபாய் அவர்களுக்கு லோன் கொடுத்தால் அவர்கள் திருப்பிச் செலுத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதும் சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறதே தவிர, கொடுக்க முடியாது அல்லது கொடுக்கக் கூடாது என்பது இந்த அரசின் கருத்து அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[1979 ஏப்ரல் 26

(உ) உத்தரமேரூர் தொகுதியைச் சேர்ந்த கிராமங்களில் உள்ள சாயத் தொழிற்சாலைகளினால் கிணறுகள் பாதிக்கப் பெறுவது குறித்து.

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரமேரூர் தொகுதியைச் சார்ந்த முத்தியால் பேட்டை, அய்யம்பேட்டை, வள்ளுவம்பாக்கம் ஆகிய இடங்களில் சாயத் தொழிற்சாலைகள் செயல்படுவதால் அங்குள்ள பகுதிகளில் உள்ள கிணறுகள் பாதிக்கப்பட்டு குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலை குறித்து அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தண்ணீர் அசுத்தமடைகிறது என்கின்ற பொது மக்களின் புகாரின் அடிப்படையில் ஐயம்பேட்டை மற்றும் முத்தியால்பேட்டையில் அமைந்திருக்கின்ற சாய தொழிற் சாலைகளினின்றும் வெளியாகின்ற கழிவு நீர் சீர்செய்து முடிவு செய்தல் பற்றி இத்துறையினரால் ஒரு ஸ்தல ஆராய்ச்சி செய்யப் பட்டது.

கீளெத்திவாக்கம் கால்வாயின் இருமருங்கிலுமாக கிட்டத்தட்ட 31 தொழிற்சாலைகள் நூல் சாயம் போடும் தொழிலில் ஈடுபட்டுள்ளன இவைகளில் பெரும்பாலான தொழிற்சாலைகள் தத்தம் தொழிற்சாலைகளினின்றும் வெளிவரும் கழிவுநீரை எந்தவித சீர் செய்தலுமின்றி அப்படியே கீளெத்திவாக்கம் கால்வாயில் விட்டுவிடுகின்றன. அவைகளுக்கு சூரிய வெளிச்சத்திலும் ஆவியாக்க கூடிய தொட்டி கட்டுவதற்கு (Solar Evaporation Basin) போதிய இடவசதியில்லை. அவைகள் இத்துறையினால் சுகாதார அனுமதி (Health Clearance) பெற வில்லை. வாலாஜாபாத் பஞ்சாயத்து ஒன்றியம் இம்மாதிரியான சாயத் தொழிற்சாலைகள் கால்வாய்க்கும், ஆற்றுக்கும் அருகாமையில் அமைப்பதற்கு அனுமதித்திருக்கக் கூடாது, 13-2-78-ம் நாள் முத்தியால்பேட்டையில் கூடிய பஞ்சாயத்து ஒன்றிய ஆலோசனை சபை (Panchayat Union Council) கூட்டத்தில் இத்தொழிற்சாலைகளினின்றும் வெளிவரும் கழிவுநீர் பாதாள சாக்கடை வழியாக வேகவதி ஆற்றில் விட்டுவிடுவது எனும் ஒரு தலைமை திட்டத்தை விஸ்தரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. இத்தொழிற்சாலைகளின் கழிவுநீர் மிக அசுத்தப் படுத்தும் தன்மை வாய்ந்ததால் இம்முறை சரியானதல்ல. இத்தொழிற்சாலைகளை எல்லாம் கிராம எல்லைக்கு அப்புறம் ஒரு தனியான தொழிற்சாலை இடத்திற்கு (Industrial area) மாற்றுவது சாத்தியம் இல்லை என்றால் வாலாஜா பஞ்சாயத்து ஒன்றியமோ அல்லது இந்த தொழிற்சாலைகளே ஒன்று சேர்ந்தோ

1979 ஏப்ரல் 26] [திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்]

அவைகளினின்றும் வெளிப்படும் கழிவுநீரை சேகரித்து ஒன்றாக குழாய்களின் வழி கீளைத்திவாக்கம் கிராமத்திலுள்ள புறம்போக்கு நிலத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும். அங்கு இக்கழிவுநீர் இரசாயன முறையிலும் ஜீவ சாஸ்திர முறையிலும் ஒன்றாக சீர் செய்து நிலத்தில்தான் விடவேண்டும். இக்கழிவு நீர் ஆற்றையோ அல்லது கால்வாயையோ அடைய எந்தவித வாய்ப்பும் இருக்கக் கூடாது.

(பேரவைத் துணைத் தலைவர் — தலைமை)

நிலநீர் அசுத்தமடையாதவாறு இக்கழிவுநீரை பொது கிணற்றிற்கு வெகு தூரத்திலேயே திசை திருப்பி விடும்படி வாலாஜாபாத் ஒன்றிய ஆணையர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். அவர் இது பற்றி ஏதும் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் உடனடியாக இத்தொழிற்சாலைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். மேலும் பொது கிணற்றுத் தண்ணீர் அசுத்தமாகாமலிருக்கும்படி பார்த்துக் கொள்ளவும் கழிவுநீர் கால்வாயை நோக்கியோ அல்லது ஹரிஜன் காலனியை நோக்கியோ பாயாதவாறு பார்த்துக் கொள்ளவும் ஆணையருக்கு அறிவுறுத்தும்படி மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். அக்கடிதத்தில் இப்பிரச்சினையை இத்துடன் தீர்க்க ஒரு காவலரை நிர்ணயிப்பதற்கும் ஆலோசனை கூறப்பட்டதோடன்றி வள்ளுவபாக்கம் கிராமத்திற்கும் குடி தண்ணீர் வழங்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். முத்தியால் பேட்டை மற்றும் ஐயம்பேட்டை கிராமங்களில் அமைந்துள்ள சாயத்தொழிற்சாலைகளுக்கு வாலாஜாபாத் பஞ்சாயத்து ஒன்றிய ஆணையர் 1978–79-ம் ஆண்டிற்கான உரிமம் வழங்கப்படவில்லை எனவும் கூறியுள்ளார். இத்தொழிற்சாலைகள் அவைகளினின்றும் வெளியாகின்ற கழிவுநீரை தீங்கற்ற முறையில் சீர் செய்வதற்கு திருப்திகரமான சீர் செய்யும் உபகரணங்கள் அமைக்கும்வரை இத்தொழிற்சாலைகளுக்கான உரிமங்களை புதுப்பிக்க வேண்டாம் என வாலாஜாபாத் பஞ்சாயத்து ஒன்றிய ஆணையர் அறிவுறுத்தப் பட்டுள்ளார். அதற்கான நடவடிக்கைகளை ஆணையர் எடுத்து வருகின்றார்.

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது நெசவாளர்கள் அதிகமாக வாழுகின்ற ஒரு பகுதி. குடிநீர் பற்றாக்குறை அங்கே ஏற்படுகிற காரணத்தால் அங்கே இயங்குகிற சாயத்தொழிற்சாலைகளின் உற்பத்தியும் பாதிக்கப்படாமல் நடைபெற்றால்தான் ஏராளமான நெசவாளர்கள் பாதிக்கப்படாமல் இருக்கக்கூடிய நிலைமை உருவாகும். அதே நேரத்திலே அந்தக் கழிவுநீரை அமைச்சர் சொன்னதைப்போல் ஒரு திட்டத்தை வகுத்து அந்தத் திட்டத்தின் மூலம் செயல்படுகின்ற காரணத்தினாலே அந்த சாயத் தொழிற் சாலைகளை மீண்டும் செயல்படுத்தி அங்கே உள்ள நெசவாளர்கள் வேலை பெறவும், அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித்

த்ரவும் அதே நேரத்திலே அங்கே மருத்துவ வசதிக்காக 1 லட்சம் ரூபாயை அமைச்சர் அவர்கள் மனமுவந்து அளித்திருக்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் இதையும் நல்லமுறையிலே நடைபெறச்செய்து, குடிதண்ணீர் கெடாமல் பாதுகாத்துத் தருவார்களா என்பதை நான பொதுமக்களின் சார்பாக அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : துணைத் தலைவர் அவர்களே. இந்தத் தொழிற்சாலைகளிடமிருந்து வெளியேறுகிற கழிவுநீர் நிலத்தையோ நீரையோ மாசுபடுத்தாமல் ஒதுக்கமான இடத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்ற பணிகளை அந்த தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்டவர்களும் அங்கே இருக்கின்ற ஒன்றியத்தைச் சேர்ந்தவர்களும் தான் செய்ய வேண்டும் அதைப்பற்றிய அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். விரைவில் அதைச் செய்வதற்கான வழிவகைகளை அரசு செய்யும்.

[முற்பகல் 11-30]

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த வாலாஜாபேட் ஊராட்சி ஒன்றியத்திலே பொருளாதார நிலை அவ்வளவு சரியாக இல்லாத காரணத்தாலே, அரசே இந்தத் திட்டத்தை ஏற்று நடத்துவதன மூலம் ஏறத்தாழ 30,000-க்கும் மேற்பட்ட, நெசவாள பெருமக்கள் வாழுகின்ற அந்தப் பகுதியிலே ஒரு நல்ல சூழ்நிலையை, இந்தக் கழிவு நீரை அகற்றுவதன் மூலம், ஏற்படுத்தித் தருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, அரசு ஏற்று நடத்துவது என்பது அவ்வளவு முடியாத காரியம் ஆகும். காரணம், ஒரு பகுதியிலே இருக்கிற தொழிற்சாலைகளுக்கு அரசு, ஏற்கின்ற வழிவகைகளைக் காட்டிவிடுமானால், எல்லா பகுதியிலே இருக்கிற அனைத்துத் தொழிற்சாலைகளைச் சேர்ந்தவர்களும் அத்தகைய வழியை நாட ஆரம்பித்து விடுவார்கள். ஆகவே, அந்தப் பணியை அரசு செய்ய முயலுமானால், எந்த முக்கியமான பணிக்காக இந்தத் துறையில் செலவு செய்யப்படுகிறதோ, அந்த வகையிலேதான் குறையும். ஆகவே, அந்த வகையிலே செயல்பட முடியாது. எனவே, அங்கேயிருக்கிறவர்கள், ஒட்டுமொத்தமாக, ஒன்றாகச் சேர்ந்து, அதற்காகக் கடன் தருகின்ற நிறுவனங்கள இருக்கின்றன; ஆகவே, அங்கிருந்து கடன்களைப் பெற்று, அதைச் சுலபமான தவணைகளிலே திருப்பிச் செலுத்த வழிவகைகளைச் செய்து தரும்படி, இங்கே இருந்து, அதிகாரிகளுக்கு உரிய கருத்துக்கள் வழங்கப்படும்.

[1979 ஏப்ரல் 26]

(7). மின்சார வாரிய நிதி நிலை அறிக்கைகள் மீது விவாதம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கைகள் மீது விவாதம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின் வாரிய நிதிநிலை அறிக்கையில் நான் ஆற்ற வேண்டிய உரையினை* நூல் வடிவில் தந்துள்ளேன். அதை இந்தப் பேரவையில் ஆற்றியதாகக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1979-80 ஆம் ஆண்டுக்கான மின்சாரத் துறை வரவு-செலவு திட்டத்தின் மீது பேசுகின்ற வாய்ப்பினை நல்கியமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற ஆண்டு கூட மின்சாரத் துறையைப் பொறுத்த வரையிலும், விவசாயிகளுக்கு 1 இலட்சம் மின் மோட்டார்களுக்கு இணைப்புகள் கொடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சட்டசபையிலே அறிவித்தார்கள். அது எல்லா விவசாயிகளுக்கும் ஆசையாகவும் ருசியாகவும் இருந்தது. ஆனால், இப்பொழுது எப்படி நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அரசாங்கத்தினுடைய அறிவிப்பு சட்டசபையிலேதான் என்று சொன்னால் அங்கே 90 நாட்களாக மின் இணைப்புக்காக நோட்டீஸ் விடுகிறார்கள். மின்சார இலாகாவிலே இருப்பவர்கள். அந்த 90 நாட்களுக்குள்ளாக விவசாயிகள் மோட்டாரை வாங்கி, 'ரெடி லிஸ்டி'லே, எழுதி வைத்தும் மின் இணைப்பு கொடுப்பதில்லை. காரணம், டிரான்ஸ் பார்மர் இல்லையென்று சொல்கிறார்கள். அதற்குத் தேவையான சாதனங்கள் எல்லாம் கிடைக்கவில்லையென்று சொல்கிறார்கள், அதே நேரத்தில, விவசாயிகள், அந்தக் குறிப்பிட்ட காலத்திற் குள்ளாக மோட்டார் வாங்கி வைக்கவில்லை, ஷெட் கட்டி வைக்கவில்லையென்று சொன்னால், அதை 'கான்சல்' செய்து விடுகிறார்கள். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், அதற்குத் தேவையான டிரான்ஸ்ஃபார்மர்கள் இல்லை, இதர சாதனங்கள் இல்லை என்று சொல்லி, 'ரெடி லிஸ்டில்' இருக்கும் போதும், அங்கே மின் இணைப்பு கொடுக்கவில்லை. அப்படிப்பட்ட நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அப்படி, யாராவது, குறிப்பாக, மின் இணைப்பு வேண்டுமென்று சொன்னால், அதற்குரிய சாதனங்களுக்கு ரூ. 400 கிட்டத்தட்ட ஆகிறது என்று சொல்கிறார்கள். அந்த ரூ. 400 பெறுமானமுள்ள சாதனங்களை வாங்கித் தந்தால்தான் அவர்கள் மின்இணைப்பு கொடுக்கிறார்கள். அதற்கு மேலாக, கம்பங்கள் தேவை என்று சொன்னால், எங்கே

*133-ம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[திரு. துரை முத்துசாமி] [1979 ஏப்ரல் 26

சொல்கிறார்களோ அங்கே இருந்து வேணடிய இடத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்று விவசாயிகளை கேட்கிறார்கள். ஆனால், அரசாங்கத்திலேயிருந்து மின் மோட்டாருக்கு இணைப்பு கொடுக்கத் தேவையான சிறிய சாதனங்களுக்கு ரூ 400/-ஐ அரசாங்கக் கணக்கிலே வைத்துவிடுகிறார்கள். எடுத்துச் செல்ல லாரி வாடகையையும் அரசாங்கக் கணக்கிலே வைக்கிறார்கள். இந்தப் பணத்தை எல்லாம் யார் எடுக்கிறார்கள் என்று தெரிய வில்லை. விவசாயிகள், தங்களுடைய தேவைக்காக, மின் மோட்டாருக்கு இணைப்பு வேண்டுமென்பதற்காக, ரூ. 400, ரூ. 500 செலவானாலும் பரவாயில்லை என்று இந்தத் தேவையான சாதனங்களை வாங்கிக் கொடுக்கிறார்கள், லாரியிலே சாமான்களை அவர்களே ஏற்றி எடுத்துக் கொண்டு சேர்க்க வேண்டிய இடத்தில் சேர்க்கிறார்கள்.

லாரிகளிலே அவர்களே கொண்டுவந்து அவைகளை கொடுக்கின்றனர். இப்படி இந்த லாரி வாடகைளை கொடுப்பதோடு மின்சார சாதனங்களுக்காகவும் 400,500 ரூபாய் பெறுமானமுள்ளது அவைகளையும் அந்த விவசாயிகளே வாங்கிக் கொடுத்துவிடுகிறார்கள். அதற்குப்பிறகு அரசாங்க அதிகாரிகள் வந்து அதை எடுத்துக் கொண்டு போகிறார்கள், மின்சார மோட்டாருக்கு மின் இணைப்பு தருவதற்காக, அது மட்டும் அல்லாமல் கிராமங்களிலே மின் மோட்டார்கள் தருவதற்கு கீழ் மட்டத்திலிருந்து, மேல் வரை சுமார் 300 லிருந்து 500 வரை மாமூல் தர வேண்டும் என்று அங்குள்ள விவசாயிகள் பேசிக் கொள்கிறார்கள். காண்ட்ராக்டுகளிலேதான், பொதுப்பணித் துறையிலேதான் லஞ்ச ஊழல் இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால், மின்சாரத் துறையில் இருக்கிற ஊழலைப் பார்த்தால், அதைப்பற்றி கேள்விப்பட்டால் அந்த மின்சாரத்தைப்போல் ஷாக் அடிப்பதாகவே இருக்கிறது. ஆகவே மின்சார மோட்டார்கள் வாங்க வேண்டும் என்று சொன்னால், ரூபாய் 300-லிருந்து 500 வரை லஞ்சம் தந்தாக வேண்டும். அதற்கான சாதனங்கள், அவைகளுக்காக 500-க்கும் மேல் செலவு செய்ய வேண்டும். இப்படிப்பட்ட நிலைமை இருந்தால் விவசாயிகளின் கதி என்ன ஆவது? பெரிய விவசாயிகளுக்கு இப்படிப்பட்ட நிலைமை. சிறிய விவசாயிகள்—அவர்கள் 90 நாட்களில் அதற்குள் வாங்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு நிலவள வங்கியும் கடன் கொடுப்பதில்லை, மற்ற வங்கிகளும் கொடுக்க முன் வருவதில்லை. அவர்களை உடனடியாக 90 நாட்களுக்குள் வாங்க வேண்டும் என்று சொன்னால், அவர்களிடம் பணம் இருப்பதில்லை. அவர்களுக்கு 90 நாட்களுக்குள் வாங்குவதற்கு அரசே அதற்கான தொகையை கடனாக வழங்கி, அவர்களுக்கு வழங்கப்படுகிற மின்சார மீட்டரையே அடமானமாக வைத்துக்

கொண்டு, வேறு எதுஎதுவோ வைத்து அடமானம் செய்கிறார்களே அதனால் அந்த மின்சார மீட்டரையே அடமானமாக வைத்துக் கொண்டு, அவர்கள் அறுவடை செய்யும் காலத்தில், அறுவடையிலிருந்து அரசாங்கமே பெற்றுக் கொள்ளலாம். அவர்களுக்கு இதை உடனடியாக செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதி சேர்வராயன் மலைப்பகுதியில் இப்பொழுதுதான் அடிவாரத்தில் மின்மோட்டார்கள் கொடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அங்கே இருப்பவர்கள் மலை ஜாதி மக்கள். அவர்களுக்கு முன் உரிமை வழங்கப்பட வேண்டும். மலை யேலே இருப்பவர்களுக்கும் உதவிபுரியும் வகையில் அவர்கள் மின் தொடர்பை கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அதை உடனடியாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பிரையாரிடி பேசில் தான் கொடுக்க வேண்டும் என்று இருந்தால் இன்னும் 10 ஆண்டுகளுக்கு அவர்களுக்கு கிடைக்காது. அதனால் மலைஜாதி மக்கள் என்ற அடிபபடையில் அவர்கள் மனு கொடுத்த உடனேயே அவர்களுக்கு மின் மோட்டார்கள் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பல ஆண்டுகளுக்குப் பிறகு இந்தப் பகுதியில் மின்சார மோட்டார் வந்திருக்கிறது. பத்து ஆண்டுகளாக மின்சார உற்பத்தி இல்லை. 1967-க்கு பிறகு தான் மின்சார உற்பத்தியே ஆரம்பிக்கப்பட்டது. மின்சார உற்பத்தி இல்லாவிட்டாலும் மின்சார விஸ்தரிப்பு செய்திருக் கிறார்கள். சமீப காலமாக 2, 3 இடங்களில் நமது அமைச்சர் அவர்கள் உற்பத்தி செய்வதற்காக துவங்கியிருக்கிறார்கள். அவைகள் உடனடியாக நிறைவேற்றப்பட்டு அமுல் ஆக்கப்பட்டு எல்லா விவசாயிகளுக்கும் பயன்படுகிற வகையில் மின்சார உற்பத்தியைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் வியாபாரிகளுக்கும், ஸ்தாபனங்களுக்கும் கொடுக்கப் படுகிறது. ஆனால், விவசாயிகளுக்கு இரவிலேதான் மின்சாரம் கொடுக்கப்படுகிறது. அதன் விளைவாக ஏழை விவசாயிகளின் மீட்டர்கள் எல்லாம் தீர்ந்துவிடுகின்றன. வியாபாரிகளும், ஸ்தாபனங்களும் ஜெனரேட்டர்கள் வைத்துக் கொண்டு சமாளிப்பார்கள். ஆனால், விவசாயிகள் மின்சார மோட்டார் தீர்ந்துபோனால் அதை ரிப்பேர் செய்வதற்குக் கூட முடியாத நிலைமையில் இருக்கிறவர்கள் அவர்கள். அதனால் தொழிற் சாலைகளுக்கு கொடுக்காவிட்டாலும் கூட விவசாயிகளுக்கு பகலிலே மின்சாரத்தை ஒதுக்க வேண்டும். அதனால் அவர்களுடைய மீட்டர்கள் தீர்ந்து போகாமல் அவர்களை காப்பதற்கு வாய்ப்பு இருக்கும். சில இடங்களில் வைக்கப்படும் மீட்டர்களின் பவர் 50 வோல்டேஜ் என்று சொன்னால், 100 வோல்டேஜ் போகிற வரையில் கொடுக்கிறார்கள். ஆகவே, அங்கே

இருக்கிற டிரான்ஸ்பார்மர்களின் பவரிலேயே மின்சாரத்தை ஓட்ட அனுமதிக்க வேண்டும். எவ்வளவு கெப்பாசிட்டி இருக்கிறதோ அந்த அளவுக்கு மின் மோட்டார்களுக்கு தர வேண்டும். அதன் விளைவாக விவசாயிகளுக்கு மோட்டார்களின் பாதிப்பு இருக்காது. ஆகவே, டிரான்ஸ்பார்மர்கள் எவ்வளவு ஹார்ஸ் பவர் இருக்கிறதோ அவ்வளவு பயன்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இரண்டு திட்டங்கள்— மின்சார திட்டங்கள் இருக்கின்றன. விழுப்புரம், கடலூர் என்று 2 பிரிவுகளாக பிரித்து அந்தத் திட்டங்களை நிறைவேற்ற விருக்கிறார்கள். ஏனென்றால் தென்னாற்காடு மாவட்டம் மிகப் பெரிய மாவட்டம் — 60 மைலுக்கு 60 மைல் மின்சாரத்தை இழுத்துக் கொண்டு போக வேண்டியிருக்கிறது. அரசுக்கு செலவு ஒன்றும் அதிகமாகிவிடாது. அதே அதிகாரிகளைக் கொண்டுதான் நிறைவேற்றப் போகிறார்கள். இந்த மின்சார திட்டத்தை இரண்டாகப் பிரிக்கப்படுவதின் மூலமாக பொதுமக்களுக்கு நல்ல பயன் கொடுக்கும் என்ற முறையில் அதை உடனடியாக பிரித்து அந்த திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லி கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

இந்த மின்சார இலாகாவைப் பொறுத்தவரையில், இப்படி விவசாயிகளுக்கு ஒரு கஷ்டம் என்றால், பஞ்சாயத்து போர்டில் பஞ்சாயத்து தலைவர்களுக்கு எல்லாம் ஒரு சங்கடம் இருக்கிறது. இப்போது பஞ்சாயத்து தலைவர்கள் மின்சார பல்பை வாங்கி போடலாம் என்று சொல்கிறார்கள். அந்த பல்புகளை ஊராட்சி ஒன்றியத்தில் வாங்கித் தருகிறார்கள். அதை பொறுத்துவதற்காக ஹெல்பர்கள், லைன்மென்கள், தனியாக பஞ்சாயத்துகளில் இருந்து சார்ஜ் வசூலிக்கிறார்கள். பல்புக்கு 50 பைசாவும், டியூப் லைட்டிற்கு ரூ. 1 என்றும் வசூலிக்கிறார்கள். அந்த மின்சார இலாகாவில் பணிபுரியும் ஹெல்பர்கள், லைன்மென் களுக்கு ஏற்கனவே இலாகாவில் சம்பளம் தருகிறபோது, இதற்காக தனி சார்ஜ் வசூலிக்க உத்தரவிட்டு இருப்பதாகத் தெரிகிறது. இது எதற்காக? இப்படி தனிக்கட்டணம் வசூலிக்க வேண்டும் என்று இருக்கிற காரணத்தால், அந்த பல்புகளைப் பொறுத்துவது என்கிற முறையில் அவர்கள் ஒரு கிங்மேக்கர்களாக லைன்மென்கள் — ஹெல்பர்கள் — இருக்கிறார்கள். அவர்கள் பஞ்சாயத்து தலைவர் பல்பு வாங்கிக் கொடுக்கவில்லை. அதனால் பொருத்தவில்லை என்ற முறையில் பிரசாரம் செய்து தலைவருக்கு கெட்டபெயரையும் ஏற்படுத்தி விடுகிறார்கள். ஆகவே, மின்சார இலாகா மூலமாகவே அந்தத் தெருவிளக்குகளை எறிய வைக்கவும், அதற்கு பல்பு போடுதல் மற்றவற்றையும் செய்ய அரசு உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மின் கட்டணத்தைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு சிறு விவசாயிக்கும் 12 பைசா என்றும், பெரிய விவசாயிக்கு 14 பைசா என்றும் அரசாங்கம் அறிவித்து இருக்கிறது. ஆனால் இன்னும் அது அமலாக்கப்படவில்லை. இப்போது வசூலிப்பது எப்படி இருக்கிறது என்றால், மீட்டர் வாடகை எனவும், சர்சார்ஜ் பீஸ், கால் பீஸ், சோதனை செய்யும் அதிகாரிகள் கட்டணம் என்று இப்படி சிறு விவசாயிகளிடமிருந்து ஒவ்வொரு யூனிட்டிற்கும் 30 பைசா என்று கணக்கிட்டு வசூலிக்கிறார்கள். அதை விட்டுவிட்டு, யூனிட்டுக்கு மட்டும் 12 பைசா, 14 பைசா என்று வசூலிக்க வேண்டும். அது போன்ற கட்டணங்கள் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று விவசாயிகள் சார்பாக நான் அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன். அடுத்தாற்போல் இன்று ஒவ்வொரு ஊரிலும் தெரு விளக்குகள் எரிவது இல்லை. மோட்டார் இணைப்பு சம்பந்தமாக அரசாங்கம் இணைப்பு கேட்டு மனுப் போட்டவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று முடிவு எடுத்ததை ஒட்டி, அங்கே நடைமுறையில் ஏராளமான லஞ்ச ஊழல் நடை பெறுகிறது. அங்கே வாய்ஸ் இல்லாதவர்கள் அப்ளிகேஷன் போட்டும் கிடைக்காமல் இருக்கிறார்கள். வாய்ஸ் உள்ளவர்கள் அப்ளிகேஷன் எதுவும் இல்லாமல் இணைப்பு வாங்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட முறைகேடுகளை கண்காணிக்கவும், இணைப்பு கொடுப்பதில் சீரான முறையைக் கடைபிடிக்கவும், எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள், அதிகாரிகள் கொண்டு ஒரு குழு அமைத்து, அதன் ஆலோசனையின் பேரில் அந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மாதிரி ஒரு ஆலோசனைக் குழு போட்டால் சரியான முறையில் மின் இணைப்பு கொடுக்க ஏதுவாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

லோ வோல்டேஜ் காரணமாக மோட்டார் காயில்கள் தீய்ந்து போய் விடுகின்றன. அமைச்சருக்கு எங்கள் பகுதியில் இருந்து ஏராளமான புகார்கள் வந்து இருக்கின்றன. மின் உற்பத்தி எந்த அளவிற்கு இருக்கிறதோ அந்த அளவிற்குத்தான் மின் விஸ்தரிப்பு இருக்கவேண்டும். மின் உற்பத்தியை அதிகரிக்காமல், விஸ்தரிப்பு மட்டும் செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு செய்து விட்டால் அதன் விளைவு விவசாயிகள் மோட்டார் காயில்கள் தீய்ந்து பாதிக்கப்படுகிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்றி அமைக்க, டிரான்ஸ்பார்மர்களில் எத்தனை எச்.பி. மின்சாரம் இருக்கிறதோ அந்த அளவிற்குத் தான் இணைப்பு தரவேண்டும், அதன் மூலமாக விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்கச்செய்யலாம். அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரம் எடுத்துச்செல்லும் கம்பிகள் முன்பு செப்பு கொண்டு செய்யப்பட்டு வந்தது. தற்போது துத்தநாகத்திலும் அலுமினியத்திலும் இருக்கின்றது. அதனால் தான் லோ வோல்டேஜ், அடிக்கடி தடை ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். முன்பு போலவே செப்பு கம்பிகள் கொண்டு மின்சாரம் எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல விவசாயிகள் அவர்களுடைய மின்சார மோட்டார் இணைப்புக் கட்டணமாக இருந்தாலும் சரி, வீட்டு உபயோகக் கட்டணமாக இருந்தாலும் சரி, அந்த கட்டணங்களை கட்டுவதற்கு ஒரு நாள் வீணாகிறது. ஆகையால் 200 அல்லது 500 சர்வீஸ்களுக்கு ஒரு பில் கலெக்டரைப் போட்டு, அவர் கிராமப்புறங்களுக்குச் சென்று, மணியக்காரர் வசூல் செய்வதைப் போல மின்சாரர் கட்டணங்களை வசூல் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். நகரத்திலே இருப்பவர்களுக்கு கஷ்டம் கிடையாது. ஏனென்றால் அங்கேயே ஆபீஸ் இருக்கிறது, ஆனால் கிராமங்களில் இருக்கிறவர்கள் நகரங்களுக்கு, நீண்ட தூரம் போய் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த வேண்டி யிருப்பதால் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, 200 அல்லது 500 சர்வீஸ்களுக்கு ஒரு பில் கலெக்டர் என்ற முறையில் போட்டு, அவர்கள் இந்த நாளில் இந்த கிராமத்தில் வந்து வசூல் செய்து கொள்வார்கள் என்ற உத்தரவையும் போட்டுவிட்டால் கிராம மக்களுக்கு உதவியாக இருக்கும். அவர்களுக்கு நேரமும் வீணாகாது; காசும் செலவாகாது. அந்த வகையில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று, இப்போது மின்சார இலாகாவினர் சங்கம் வைத்திருக்கிறார்கள். அதை வேண்டாமென்று சொல்லவில்லை. சில இடங்களில் மின்சார இலாகாவில் வேலை செய்கிறவர்கள் ஒரு குறிப்பிட்ட கட்சியில் மறைமுகமாக இருக்கிறார்கள். அதைப்பற்றியும் கவலைப்படவில்லை. அவர்கள் சங்கம் வைத்திருப்பதைப்பற்றியோ அல்லது ஒரு கட்சியில் உறுப்பினராக இருப்பதைப்பற்றியோ எங்களுக்கு ஆட்சேபம் இல்லை. ஆனால் அவர்கள் பொதுக் கூட்டங்களில் அரசியல் வாதிகளைப்போல பேசுகிறார்கள். அவர்கள் எந்தக் கட்சியாக இருந்தாலும் பரவாயில்லை. போக, போக பகலில் அலுவலகத்தில் வேலை செய்வது, இரவில் அரசியல்வாதிகளைப்போல பொதுக் கூட்டங்களில் பேசுவது என்ற நிலை வந்துவிட்டால் அலுவலக வேலை ஒழுங்காக நடக்காது. ஆகவே, அவர்கள் பொதுக் கூட்டங்களில் பேசுவதை தடை செய்ய வேண்டும்; தடுத்து நிறுத்த வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 26] [திரு. துரை முத்துசாமி]

அடுத்தபடியாக, கல்வராயன் மலைப்பகுதியில் மின்சார விஸ்தரிப்பு செய்திருக்கிறோம் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இன்னும் பாலப்பட்டு கிராமத்திற்கு மட்டும் தான் மின்சார விஸ்தரிப்பு செய்யப்பட்டிருக்கிறது. மலை உச்சிக்கு இன்னும் செல்லவில்லை; அடிவாரத்தில் மின்னிணைப்பு கொடுக்கவில்லை. சமீபத்தில்தான் அந்த பகுதி மக்கள் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். ஆகவே, அந்தப் பகுதிக்கு தனிச் சலுகை காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக 'ரெடி லிஸ்ட்டில்' இருக்கக் கூடியவர்களுக்கு 90 நாள் நோட்டீஸ் கொடுக்கிறார்கள். அப்படி நோட்டீஸ் கொடுத்துவிட்டால் அதற்குள்ளாக எல்லா வேலைகளையும் முடித்து, இணைப்புப் பெற்றுக்கொள்ள வேண்டும். ரெடி லிஸ்டில் வைக்கும்போது சில சமயங்களில் மீட்டர் அந்தக் குறிப்பிட்ட காலத்திற்குள் கிடைக்காமல் போய்விடுகிறது. அந்த சாதனம் கிடைக்காததால் மின் இணைப்பு கிடைக்கவில்லை. ரெடி லிஸ்ட் என்று ல்லும்போதே அந்த சாதனமும் ரெடியாக இருக்க வேண்டும். அம்மாதிரியான நேரங்களில் அதிகாரிகள், தங்களுக்கு வேண்டியவர்களாக இருந்தால் காலம் கடந்தாலும் இணைப்பு கொடுத்துவிடுகிறார்கள்; வேண்டாதவர்களாக இருந்தால் 90 நாள் கழிந்துவிட்டது, இணைப்பு கிடைக்காது என்று சொல்லி தள்ளிவிடுகிறார்கள். இப்படிப்பட்ட நேரங்களில் பொதுவாக மின்சார வாரியத்திற்கு தகுந்த ஆலோசனைகளை வழங்க ஒரு ஆலோசனைக் குழு அமைத்து, தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்தமைக்கு நன்றி தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. செ. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1978-79 ஆம் ஆண்டு மின்சார நிதி நிலை மசோதாவில் கலந்துகொண்டு என்னுடைய கருத்துக்களைக் கூற வாய்ப்பு அளித்ததற்கு தலைவர் அவர் களுக்கு நன்றி தெரி வித்துக் கொள்கிறேன்.

1978-79 ஆம் ஆண்டு மின்சாரத் துறைக்கு 152 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது பாராட்டக்கூடிய செயலாகும். இந்தத் துறையை வகிப்பவர் மிக்க அனுபவம் உள்ள எஞ்சினியர் ஆவார். அவர் பல நல்ல திட்டங்களை அறிவித்திருப்பது தமிழக முன்னேற்றத்திற்கு நல்லதொரு எடுத்துக்காட்டாகும்.

குறிப்பாக, கிராமப் பகுதிகளுக்கு இன்னும் அதிக நிதி ஒதுக்கீடு செய்திருக்க வேண்டும்.

[திரு. செ. பட்டாபிராமன்] [1979 ஏப்ரல் 26

[முற்பகல் 11-50]

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக அளவில் மின் தொடர்புகள் உள்ளன. மொத்த கிராமங்களில், சிற்றூர்களில் 98 சதவீதத்திற்கு அதிகமாக உள்ளது. குறிப்பாம் என்னுடைய திருவள்ளூர் தொகுதியில் உள்ள கிராமப்புறங்களில் உள்ள தெரு விளக்குகள் சரிவர இயங்குவதில்லை. இது இன்றும் மக்களிடையே பெரிய குறையாக இருக்கின்றது. தெரு விளக்குகளை மாற்றி அமைக்கும் பொறுப்பு இப்போது ஊராட்சி மன்றத் தலைவர்களிடத்தில் உள்ளது. அதனை பராமரிக்குக் பொறுப்பு மின்சார ஊழியரிடம் இருப்பதால் இதில் பல சிரமங்கள் உள்ளன. சில இடங்களில் தொடர்ந்து பல நாட்கள் பழுது அடைந்த பல்புகளை சரிபார்ப்பது கிடையாது.

மின் வாரியத் தொழிலாளர்கள் இந்த விஷயத்தில் கவனக் குறைவாக இருப்பதே காரணம். இந்தக் குறையை நீக்கும் பொருட்டு, அவர்களுக்கு சில கண்டிப்பான உத்தரவுகளை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மிக முக்கியமாக ஹெல்ப்பர்கள் அவ்வப்போது ஊராட்சி மன்றத் தலைவர்களைச் சந்திக்க உத்தரவு இடவேண்டும். என்னுடைய திருவள்ளூர் தொகுதியில் பல இடங்களில் குறைந்த ஒல்ட்டேஜ், அதிக ஒல்ட்டேஜ் என்ற குறை இருக்கின்றது. குறிப்பாக பகல் காலங்களில் குறைந்த ஒல்ட்டேஜால் மோட்டார் காயில் எரிந்து போய் ஏழை விவசாயிகளுக்கு பல நூறு ரூபாய் நஷ்டம் ஏற்பட ஏதுவாக இருக்கின்றது. இந்தப் பெருங்குறையை நீக்குவதற்கு நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ளபடி சிறந்த நிபுணர்களைக் கொண்டு இந்தக் குறையைக் களைவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், அதுபோன்று இன்று பெரும்பான்மையான கிராமங்களில் செல்லும் மின்பாதை தொடர்களில் உள்ள உலோகக் கம்பிகள் திருடு போவதால் மின் வாரியத்திற்கு நஷ்டம் ஏற்படுகிறது. அதனால் விவசாயிகளுக்கும் பல சிரமங்களும் பண நஷ்டமும் ஏற்படுகிறது. எனவே இந்த குறையைப் போக்க கம்பியைத் திருடும் நபர்களை மிகவும் கண்டிப்பான முறையில் தண்டிக்க சட்டத்தில் வழிவகை செய்ய வேண்டும்.

கடந்த காலங்களில் மின் இணைப்புகள் வழங்குவதில் இருந்து வந்த பத்து சதவீதம் வருவாய், நிலத்தடி நீர்த்துறையின் சர்டிபிகேட் போன்றவற்றை நீக்கி, தற்போது இலகுவாக மின் இணைப்பு வழங்குவதையும், அதிலும் முன்னுரிமை வரிசைப்படி வழங்கி வருவதும் பாராட்டக்கூடிய செயலாகும். இந்த முறை ஏழை விவசாயிகளுக்கு மிகவும் உதவிகரமாகவும் இருக்கிறது. இதில் ஊழல் நடப்பதற்கும் வழியில்லாமல் எல்லா மக்களுக்கும் பொது நீதி ஏற்பட்டு இருக்கிறது. இந்த ஏற்பாட்டால் ஏழை விவசாய மக்கள் இந்த அரசைப் பெரிதும் பாராட்டுகிறார்கள்.

1979 ஏப்ரல் 26] [திரு. செ. பட்டாபிராமன்]

புதிய மின் இணைப்புகள் கொடுக்கும்போது பம்புசெட் இணைப்பாக இருந்தாலும் சரி, வீட்டுக்கு இணைப்பாக இருந்தாலும் சரி அதற்குத் தேவைப்படும் அத்தனைப் பொருட்களையும் மின்வாரியம் வழங்குவதில்லை. சில பொருட்களை மட்டும் கொடுத்துவிட்டு, மீதிப்பொருட்களை வெளியில் விவசாய மக்களை வாங்கித் தரும்படி கோருகிறார்கள். அவ்விதம் தரப்படாத பொருட்களின் தொகையை எஸ்டிமேட்டில் கழிப்பதும் கிடையாது. எனவே இந்தக் குறைவை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கழக ஆட்சி பொறுப்பேற்றவுடன், யூனிட்டுக்கு 16 காசாக இருந்ததை பெரிய விவசாயிக்கு 14 காசாகவும் சிறு விவசாயிக்கு 12 காசாகவும் குறைந்தது. அந்த நஷ்டத்தை வாரியமே ஏற்றுள்ளது. இந்தச் சலுகையால் பெரும்பாலான ஏழை விவசாயிகள் இந்த அரசைப் பாராட்டுகிறார்கள். ஆனால் பெரிய விவசாயிகள் மட்டும் இன்றும் கிளர்ச்சி செய்கிறார்கள். அது மட்டும் அல்லாமல் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குத் தேவையான நிலக்கரி எரி எண்ணை போன்ற பொருள்களின் விலைகள் கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் தற்போது பன்மடங்கு உயர்ந்திருந்தாலும், அண்டை மாநிலங்களிலிருந்து ஒரு யூனிட் ஒன்றுக்கு 18 காசுகள் என்ற அளவில் விலை கொடுத்து வாங்கினாலும், விவசாயிகளுக்கு மட்டும் இந்த அரசு சலுகை செய்துள்ளது. இதுபோன்ற நல்ல திட்டங்களையும் பாராட்டாத நல்ல மனிதர்களும் தமிழகத்தில் இருப்பது வேதனைக்குரிய விஷயமாகும்.

இன்றைக்கு மின்சாரத்துறையை பொருத்தமட்டில் மீட்டர் கணக்கு எடுப்பதில் பல முறைகேடுகள் நடக்கின்றன. இதனால் வாரியத்திற்கு பெரிய நஷ்டமும் ஏற்படுகிறது. இந்தக் குறையை போக்க படித்த ஹெல்ப்பர்களை அதற்கு நியமிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இன்னும் பல ஹெல்ப்பர்களுக்கு மீட்டர் கணக்கு எடுப்பதற்குத் தெரியவில்லை. இதனால் வாரியத்திற்கும், விவசாயிகளுக்கும் நஷ்டம் ஏற்படுகிறது. மேலும் நிலுவையில் உள்ள மின் கட்டண பாக்கிகளை வசூலிப்பதில், கடந்த மாதம் அறிவித்த சில சலுகைகளுக்குப் பிறகும் கட்டாத நிலை இருந்து வருகின்றது. இதனால் மின் வாரியம் மிகவும் கடுமையான நிதிப் பற்றாக்குறைக்கு ஆளாகி உள்ளது. எனவே நிலுவை பாக்கித் தொகையை வசூலிக்க அரசு முயலவேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

நிலைமைகள் இவ்வாறிருக்க, சில மின் வாரிய தொழிற் சங்கங்கள் சில காரணங்களைக் காட்டி மின்கட்டணப் பட்டியலைத் தயாரிக்காமல் தேக்கி வைத்துள்ளனர் எனத் தெரிகிறது. இவ்விதம் செய்வதை அனுமதிக்கலாமா என்றுதான் கேட்கிறேன்.

அடுத்து இன்று நமது மாநிலத்திலே உள்ள, எல்லா மின்சாரத் துறை அலுவலகங்களும் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இதனால் பல இலட்ச ரூபாய்கள் வாடகைத் தொகையாக வரயம் ஆகின்றது, எனவே மின் வாரியம் தனது நிதிநிலைகளைக் கொண்டு, வருங்காலத்திலாவது சொந்த கட்டிடங்கள கட்டி இயங்கி வந்தால் நிறையத் தொகை மிச்சமாகும். இதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனத்தில் கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கிராமப்புறங்களில் ஹெல்ப்பர்ஸ், அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள தலைமையிடத்தில் அதாவது ஹெட் குவார்ட்டர்ஸில் இல்லாமல் வேறு இடத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கு சரியான இடவசதி கிடையாது. எனவே அவர்களுக்கு பணியாற்றும் இடத்திலேயே வீடுகள் கட்டித்தர வேண்டும். அப்படி கட்டித்தரப்படுமானால் அவர்கள் பணியை செம்மையாக செய்ய அது உதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுப்படுத்துகிறேன். இந்த அரசு ஏழைகள் மீது கவனம் செலுத்தி இருக்கிறது என்பதற்கு உதாரணமாக அவர்கள் மின்சாரத்தின் பயனையும் பெறவேண்டும் என்ற நல்லெண்ணத்தில் மீட்டர் இல்லாமல், மிகக் குறைந்த கட்டணத்தில் குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்க இருக்கும் திட்டத்தை வெகுவாகப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அதிலும் குறிப்பாக முதலில் கிராமங்களில் இது அமலாக்கப் பட இருப்பதை எண்ணி மெத்த மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

அடுத்து நான் சார்ந்துள்ள திருவள்ளூர் வட்டத்தை, செங்கை மின் திட்டத்திலிருந்து சென்னை மின் திட்டத்தில் இணைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். காரணம் சென்னைக்கு 40 கி.மீ. தூரத்தில் இருக்கிற செங்கை மின் திட்டத்தில் இணைக்கப் பட்டுள்ளதால் இத்திட்டத்தின் தலைமை அலுவலகம் காஞ்சி புரத்தில் இருப்பதால் எங்கள் பகுதி மக்களுக்குக் சங்கடமாக் உள்ளது. மேலும் டிரான்ஸ்பார்மர்கள் பழுது பட்டால், அதைக காஞ்சிக்கு எடுத்துச் சென்று மீண்டும் வேறு டிரான்ஸ்பார்மர்கள் கொண்டு வந்து மாற்ற வேண்டுமானால் காலதாமதம் பிடிக்கிறது. எனவே, இச்சங்கடத்தை எல்லாம் தவிர்க்கும் நடவடிக்கையாக எங்கள் பகுதியை சென்னை மின் திட்டத்தில் இணைப்பதற்கு மாண்புமிகு மின் துறை அமைச்சர் ஆவன செய்ய வேண்டும் என இப்பேரவையின்வாயிலாக கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன், நன்றி வணக்கம்.

1979 ஏப்ரல் 26]

* திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தினுடைய இந்த நிதிநிலை அறிக்கையின் மீது வழக்கம்போல் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கை ஓராண்டு அறிக்கை அல்ல, 1978-79, 1979-80-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கைகளும். 1977-78, 1978-79-ம் ஆண்டுகளின் துணை நிதிநிலை அறிக்கைகளும் ஆக நான்கு ஆண்டுகளின் அறிக்கைகளை இப்போது விவாதிக்க வேண்டியுள்ளது. இதை விவாதிக்கலாமே தவிர, அதனால் எந்தவிதமான பயனும் இல்லை. இந்த பட்ஜெட் மீது பேசிக்கொண்டிருக்கலாம், ஆலோசனைக் கூறலாம். 254 கோடி ரூபாய் கொண்ட இந்த பட்ஜெட் மீது நாம் வோட் செய்வதற்கு உரிமை கிடையாது. இந்த 850 கோடி ரூபாய் கொண்ட தமிழக அரசின் பட்ஜெட் மீது ஓட் செய்ய இந்த மன்றத்திற்கும், உறுப்பினர்களுக்கும் உரிமை உண்டு. ஆனால் மின்வாரியத்தின் பட்ஜெட் 254 கோடி ரூபாய் என்று சொன்னால், இந்த சட்டமன்றத்திற்கு வோட் செய்வதற்கு உரிமை கிடையாது. வெறுமனே பேசலாம். அது ஒரு 'ஆட்டோனமஸ் பாடி' என்று சொல்லப்படுகிறது. இப்படி மாநிலத்தில் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன்களும், வாரியங்களும் ஆட்டோனமஸ் பாடிகளாக இருக்கின்றன. அவைகளெல்லாம் சட்டமன்றத்தில் வோட்டிற்கு விடப்படுகின்றன, அதற்கு இந்த மன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் இதை ஒரு ஆட்டோனமஸ் பாடி என்று சொல்லிக்கொண்டு அந்தப் பிரச்னையில் தலையிடமுடியாது என்று சொல்வதற்கு அடிப்படையான காரணம் அது எலக்ட்ரிசிடி ஆக்ட், 1948-ல் தான் என்று கூறப்படுகிறது. அந்த எலக்ட்ரிசிடி சட்டம் இங்கே சட்ட மன்றத்தில் இருக்கக்கூடிய உறுப்பினர்களின் உரிமையைப் பறிக்கக் கூடிய சூழ்நிலையில் இருக்கிறது என்பதை மின்துறை அமைச்சர் அவர்களே தன் அறிக்கையில் 24-வது பக்கத்தில் குறிப்பிடுகிறார்கள். அப்படிப்பட்ட நிலை இருக்கும்போது அதை மாற்ற முடியாதா என்ற கேள்வி எழுகிறது. அடிப்படை உரிமைகள் பறிக்கக்கூடிய நிலையில் அரசியல் சட்டத்தில் ஷரத்து இருக்குமானால் அந்த ஷரத்தையே மாற்றக்கூடிய நிலை இருக்கும் போது இந்தச் சட்டமன்றத்தின் உரிமைகளைப் பறிக்கக் கூடிய இந்த எலக்ட்ரிசிட்டி ஆக்ட்டைத் திருத்த முடியாதா? 'இட் இஸ் நாட் ஈவன் இண்டியன் கான்ஸ்ட்டிடியுஷன்' அதிலேயே சேன்ஜ் கொண்டு வரவேண்டும் என்று சொல்லும்போது அந்த எலக்ட்ரிசிடி ஆக்ட்டை திருத்துவதற்கு ஏற்பாடு செய்ய முடியாதா என்பது தான் கேள்வி? முடியாது என்று அமைச்சர் அவர்கள் கை விரிக்கிறார்கள். அவர்களே கூறுகிறார்கள். ''1948-ம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டம் என்னும் ஒரு மத்திய சட்டத்தினால் நெறிப்படுத்தப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அதனால் மத்திய அரசாங்கத்திற்குத்தான் அதிகாரம் இருக்கிறது.'' தொடர்ந்து படிக்கிறேன். ''மாநில சட்டமன்றத்திற்கும், பொது மக்களுக்கும் மாநில அரசு கொண்டுள்ள உள்ளார்ந்துள்ள

பொறுப்புக்களுக்கு ஏற்ப இச்சட்டம் அமையவில்லை. இது இன்றுள்ள நிர்வாக நடைமுறைகளுக்கு சிறிது கூட ஏற்றதல்ல.'' இதை நீங்கள் ஒத்துக்கொள்கிறீர்கள், பொது நிறுவனங்களை நடத்துவதில் அரசு மேற்கொள்ள வேண்டிய பொறுப்புகளுக்கும் உகந்ததல்ல. மாநில அரசின் அதிகாரங்களை இவ்வாறு மத்திய அரசு வைத்துக்கொண்டிருப்பது அகற்றப்படவேண்டும் என்பது இவ்வரசின் ஆழ்ந்த அறிந்த கருத்தாகும் என்று கூறிக் கொண்டிருக்கிறோமே தவிர, அதை மாற்றியமைக்க என்ன ஏற்பாடுகள் என்பது குறித்து இதில் குறிப்பிடப்படவில்லை. இது குறித்து பல ஆண்டுகளாக இந்தச் சட்டமன்றத்தில் இந்த நிதி நிலை அறிக்கை வரும்போது எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும் கூறிக்கொண்டு வருகிறோம்.

(நண்பகல் 12-00)

நானே இரண்டு மூன்று நிதிநிலை அறிக்கையைப்பற்றி பேசும்போது, இந்த நிலையை மாற்றவேண்டும் என்று கூறி வந்திருக்கிறேன். இப்போது அந்தக் கருத்து அரசின் சார்பிலும் ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது இந்த அறிக்கையில். ஆகவே இதை மாற்றுவதற்கு அரசு முயற்சி எடுத்து மாற்றுவதற்கான முறையை ஆராய்ந்து, மற்ற மான்யங்கள் எல்லாம் எப்படி விவாதித்து ஓட்டளிக்கின்றோமோ அப்படிப்பட்ட நிலைக்கு இதையும் உட்படுத்தவேண்டும் என்று அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்குப்பிறகு, இதனால் தான் கணக்கு தயாரிக்கக்கூடிய முறைகளில் சரியான முறையில்லை என்பது வருகிறது. ஏனென்று சொன்னால் இந்த போர்டு 1957 ஜூலை 1-ம் தேதி ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து இப்படிப்பட்ட நிலைமை ஆரம்பத்திலிருந்தே எலக்ட்ரிசிட்டி சப்ளை ஆக்ட் அடிப்படையில் இந்தக் கணக்குகள் தயாரிக்கப்படுவதில்லை. நீண்ட நாட்களாக தொழிற்சங்கங்கள் எல்லாம் கூறி வருகின்ற முறையில் அதாவது கமர்ஷியல் முறையிலும் தயாரிக்கப் படுவதில்லை. மின்வாரியத்திற்கு 782 கோடி ரூபாய்க்கு சொத்து இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அக்கௌண்டண்ட் ஜெனரல் என்ன சொல்லுகிறார்கள் என்றால் இந்தக் கணக்குகள் எல்லாம் உரிய பாரத்தில் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டு 1977-78-ம் ஆண்டு கணக்கை எடுத்துக் கொண்டால் அதில் அக்கவுண்டண்ட் ஜெனரல் கூறியிருக்கிறார்.

1979 ஏப்ரல் 26] [திரு. சி. கோவிந்தராசன்]

"....Section 69 (1) of the Electricity Supply Act, 1948—provides that the Annual Statements of accounts including the profit and Loss Account and Balance sheet shall be prepared in such form as may be prescribed by the State Government in consultation with the Comptroller and Auditor-General of India"

ஆனால் என்ன நடக்கிறது....

"The form in which accounts are prepared now is that prescribed by State Government in consultation with Accountant-General, Tamil Nadu, which is a tentative arrangement pending adoption of the prescribed form under the Act. A form suggested by Central Electricity Authority is under examination by the Board and a final decision is yet to be taken.

இத்தனை வருடங்களாக, 22 வருட காலமாக, எலக்ட்ரிசிட்டி போர்ட் ஆரம்பித்த காலத்திலிருந்து அக்கௌண்டண்ட் ஜெனரல் ரிமார்க் எழுதிக்கொண்டேயிருக்கிறார், நீங்களும் அதை பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம் என்று பதிலை மட்டும் சொல்லிக் கொண்டேயிருக்கிறீர்கள், வேறு எந்தவிதமான மாற்றமும் இல்லை.

இதே மாதிரி கணக்கு, தயாரிக்கின்ற முறையில் மற்றொரு குறைபாடு, 782 கோடி ரூபாய்க்கு சொத்து இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. இதை எவ்வாறு மதிப்பீடு செய்தீர்கள் என்பதற்கான சரியான விவரம் இல்லை. சரியானபடி 'பிஸிக்கல் வெரிபிக்கேஷன்' செய்திருக்கிறார்களா என்றால் இல்லை. இதை ஆரம்பத்திலேயே அக்கௌண்டண்ட் ஜெனரல் 1973-74 ரிப்போர்ட்டில் சொல்லியிருக்கிறார்...

"No physical verification of the Capital Assets has been conducted by the Electricity Board ever since its inception."

ஆரம்பத்திலிருந்தே பிஸிக்கல் வெரிபிக்கேஷன் செய்யவே இல்லை என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் சொத்து 782.15 கோடிக்கு இருக்கிறது என்று எப்படி முடிவுக்கு வந்தார்கள்? அது சொல்லப்படவில்லை. கேப்பிட்டில் அக்கௌண்டிலும் சரி, பிராப்பர்டி அன்ட் அஸட்ஸ் அக்கௌன்டிலும் சரி முறையாக கணக்குகள் வைக்கப்படவில்லை என்று அக்கவுண்டண்ட் ஜெனரல் அவருடைய 1977-78 ரிப்போர்ட்டில் கூறியிருக்கிறார்.

"Property and Assets

3. Capital account -

(b) The property Register maintained in the Systems / Circles indicate the book value under each category of asset only and not the details of the original value, withdrawals and depreciation there of for individual assets under each category. என்று குறிப்பிடுகிறார்கள். அது மட்டுமல்ல...

....(d) Postings in the Asset-cum-property Register are incomplete (Madras Electricity System / Distribution / South). இப்படி பல்வேறு குறைகளை எல்லாம் சுட்டிக்காட்டியிருக்கும் போது, பிஸிக்கல் வெரிபிக்கேஷன் இல்லாமல் இருக்கும் போது, 782.15 கோடிக்கு சொத்து இருக்கிறது என்று எப்படி முடிவுக்கு வந்தார்கள். நீங்கள் சொல்வதை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய சூழ்நிலை தான் இருக்கிறது. எந்தத் தலைப்பின்கீழ் எவ்வளவு வருமானம் வருகிறது, எந்தத் தலைப்பின்கீழ் எவ்வளவு செலவாகிறது என்று இல்லை. உற்பத்திக்காக செலவழித்தது எவ்வளவு, விநியோகத்தின் மூலம் வருவாய் எவ்வளவு என்பதையெல்லாம் கமர்ஷியல் பாலன்ஸ் ஷீட் அடிப்படையில் கணக்குக் காட்டவும் இல்லை. அதே சமயத்தில் நஷ்டம், நஷ்டம் என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இதைப்பற்றி சொல்லும்போது, நான்கு ஆண்டுகளைப் பற்றி விவாதிக்க வேண்டியிருக்கிறது. கடந்த ஆண்டைப்பற்றி நாம் விவாதிக்கவே இல்லை. இந்த ஆண்டைப்பற்றி சொல்லும்போது, நான்கு அறிக்கைகளை விவாதிக்க வேண்டும்.

இந்த சமயத்தில் இன்னொன்றும் நான் கூற விரும்புகிறேன். 48.60 கோடி ரூபாய் துண்டு விழுகிறது என்று சொல்கிறார்கள். சொல்கிற கணக்கை ஏற்றுக்கொள்ள வேண்டியது தான். இதிலே 254.38 வரவு. 230.61 செலவு. இந்த அடிப்படையில் பார்த்தால் 23.77 மிச்சம். ஆனால், துண்டு எப்படி விழுகிறது என்று சொன்னால், ஆண்டுதோறும் அரசுக்கு வட்டி செலுத்துகிறார்கள். இந்த ஆண்டு, இந்த ரிப்போர்டில் 22.22 கோடி வட்டியாக செலுத்தப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. தேய்மானம் 21.53 கோடி. இந்த தேய்மான கணக்கு எப்படிப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்? எந்தெந்த மெஷினுக்கு தேய்மானம் என்பது தெரியாது. புதிய மெஷினுக்கா, பழைய மெஷின்களுக்கா என்றும் தெரியாது. ஒரு மெஷினின் ஆயுட்காலம் 20 ஆண்டு காலம் என்று முடிந்தாலும், தேய்மானம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து இது சம்பந்தமாக நீண்ட நாட்களாக இந்த மன்றத்திலே எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் கூறிக் கொண்டு வருகிறோம்.

1979 ஏப்ரல் 26] (திரு. சி. கோவிந்தராசன்)

அரசாங்கம் இந்த வாரியத்தில் பணத்தைப் போட்டிருக்கிறது. இது அரசாங்கத்தின் வாரியம். போட்டிருக்கக் கூடிய இந்த கடனை ஈகுவிடி காபிடலாக மாற்றுங்கள் என்று தொடர்ந்து சொல்லி வருகிறோம். பல்வேறு ஆலோசனைகள், பல அடிப்படையிலே சொன்ன போதிலும், அவர்கள் அதை ஏற்றுக்கொள்வது கிடையாது. இந்த ஆண்டு 22 கோடி ரூபாய் தமிழக அரசுக்கு வட்டியாக கொடுக்கப்பட்டிருக்கிறது. பல ஆண்டுகளாக அரசுக்குத் தொடர்ந்து வட்டி கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கத்தால் தான் தொழில்களுக்கு குறைந்த செலவில் மின்சாரமும், இதர சலுகைகளும் கொடுக்கப்படுகின்றன. விவசாயிகளுக்கு குறைந்த கட்டணம் என்று சொல்லும்போதும், மற்றவர்களுக்கு வேறு சலுகைகள் கொடுக்கும் போதும், பெரும் தொழில்களுக்கு 4 பைசா, $4\frac{1}{2}$ பைசா என்று சொல்லும்போதும், உற்பத்திச் செலவு 19 பைசா, 20 பைசா என்றிருந்தாலும், சலுகைக்கட்டணம் கொடுக்சக் கூடிய அளவு $4\frac{1}{2}$ பைசா, $3\frac{1}{2}$ பைசா என்று வரும்போது, அரசாங்கம் கொடுக்கச் சொல்லக் கூடிய சலுகைகளைத் தான் இந்த வாரியம் கொடுக்கின்றது. அப்படியிருக்கும் அரசாங்கம் கொடுத்திருக்கக் கூடிய கடனை ஈகுவிடி காபிடலாக மாற்றி டிவிடெண்ட் எடுப்பதற்குப் பதிலாக, ஆண்டுதோறும் வட்டி ஒதுக்கிவிட்ட பிறகு, டிப்ரிசியேஷன் போன்றவை எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்ட பிறகு என் துண்டு வருகிறது. 48.60 துண்டு வருகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால், இந்தக் கணக்கைப் பார்த்தால் 23.77 கோடி மிச்சம் வரும். எனவே, இதையெல்லாம் கொஞ்சம் சீர்தூக்கிப் பார்த்துச் செய்ய வேண்டும் என்று இந்தச் சமயத்திலே எடுத்துச் சொல்லப் பிரியப்படுகிறேன்.

அது மட்டுமல்ல, மதிப்பீடு போடுகிறார்கள். எந்தத் திட்டத்திற்கும் மதிப்பீடு போடும்போது, உண்மையிலேயே செலவாகும் ஆக்சுவல் எக்ஸ்பென்டிசருக்குக் கூடுதலாகத் தான் எஸ்டிமேட் போடுவது வழக்கம். மின்சாரவாரியத்தில் மட்டுமல்ல. எங்குமே மதிப்பீடு என்று சொல்லும்போது கொஞ்சம் கூடுதலாகப் போட்டு, அந்தக் கணக்குப்படி வேலைப் பொறுப்பு எடுத்துக் கொள்ளுகிறார்கள். மின்வாரியத்தில் திட்டங்களை மதிப்பீடு செய்பவர்களேதான் அவைகளை நிறைவேற்றிக் கணக்குகளை காண்பிப்பவர்களாகவும் இருக்கிறார்கள், அதனால் பல முறை கேடுகள் ஏற்படுகின்றன. உதாரணத்திற்கு, 10 கோடி ரூபாயில் ஒரு திட்டத்தை முடிக்கலாம் என்று திட்டமிட்டால், அதற்கு 12 கோடி மதிப்பீடு போடுவார்கள். இந்த மதிப்பீடு போட்டு, பிறகு 10 கோடியிலே முடித்து விடுகிறார்கள். அப்போது சில லட்சம் ரூபாய் மிச்சம் என்று சொல்கிறார்கள். பல லட்சங்கள் வீண் விரையமாக வாய்ப்பிருக்கிறது.

(திரு. சி. கோவிந்தராசன்) [1979 ஏப்ரல் 26

இத்தகைய மதிப்பீடுகளை மேல் மட்டத்தில் தகுதி மிக்கவர்களாக உள்ளவர்கள் பரிசீலனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுவதில்லை. அதனால் இப்படிப்பட்ட கோளாறுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கின்றது என்பதை நான் இந்தச் சமயத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதற்கு அரசு என்ன ஏற்பாடு செய்ய இருக்கின்றது என்பதை நான் இந்தச் சமயத்தில் அறிய விரும்புகிறேன்.

உதாரணத்திற்கு ஒரு விஷயத்தை நான் சொல்கிறேன். தேவையற்ற செலவு என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கை ரேகை நிபுணர் என்று ஒருவர் இங்கே இருக்கிறார். அவருக்கு ஆயிரக்கணக்கில் சம்பளம் மின்சார வாரியத்தாலே கொடுக்கப்படுகின்றது. கை ரேகை நிபுணர் என்று சொல்லும்போது

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத்தலைவர் அவர்களே, கை ரேகை நிபுணர் என்றால் ஜோஸ்யர் என்று பொருள். ஆகவே, அந்த வார்த்தைக்கு விளக்கம் சொல்ல வேண்டும்.

திரு. சி. கோவிந்தராசன் : 'தம்ப் இம்ப்ரஷன்' நிபுணர் என்று கூறுவார்கள். இப்படி ஆங்கிலத்தில் சொன்னால் தான் சரியாக இருக்கிறது. கை ரேகைகளை பரிசோதனை செய்வ வதற்காக ஒரு நிபுணர். இவருக்கு பகுதி நேர வேலைதான் இருக்கிறது. எப்போதும் பரிசோதனை செய்யும் வேலை இருக்காது, இதே பணியைச் செய்பவர்கள் போலீஸ் இலாகா வில் இருக்கின்றனர். அவர்களிடம் இந்த வேலையைக் கொடுக்காலாம் அல்லது அவர்களை வரவழைத்துக் கொள்ள லாம். முழு நேர ஆளாக வைத்து, அதற்காக ஆயிரக்கணக்கில் சம்பளம் கொடுக்க வேண்டியது அவசியம் தானா ?

(பிற்பகல் 12-10)

தேவையற்ற செலவுகள் பல நடக்கின்றன என்பதற்கு ஒரே ஒரு உதாரணமாக இதைக் கூறப் பிரியப்படுகிறேன்.

உற்பத்தி, விநியோகம் கணக்கு அடிப்படையில் தெரிவது— சாதாரணமாக வீடுகளுக்குக் கொடுக்கப்படுகிற டொமஸ்டிக் கன்சம்ஷனுக்கு 1976—77 அட்மினிஸ்ட்ரேஷன் ரிப்போர்ட்டில் இருப்பதைக் குறிப்பிடுகிறேன் - 23,88,99,350 ரூபாய்; 8 பர்சன்ட் அதற்குச் செலவு செய்கிறோம். கமர்ஷியல் அடிப்படையில் வியாபாரம் மற்ற விஷயங்களுக்கு 27,14,99,905 ரூபாய், அதற்கு 7 பர்சன்ட் செலவு செய்கிறோம் உங்கள் கணக்குப் பிரகாரம். தொழில்களுக்கு 84,56,19,814 ரூபாய் அதற்கு 46 பர்சன்ட் செலவு செய்கிறோம். விவசாயிகளுக்கு

35,94,92,227 ரூபாய்; 27 சதவிதம் செலவு செய்கிறோம். வீடுகளுக்கு ஒதுக்கக்கூடிய 8 சதவிகிதத்திற்கு வருவாய் எவ்வளவு என்று சொன்னால் 12 சதவிகிதம் வருவாய் வருகிறது தொழில்களுக்கு 46 சதவிகிதம் ஒதுக்குகிறோம்; அதிலிருந்து 37 சதவிகிதந்தான் வருவாய் வருகிறது. இதை கம்பேர் பண்ணிப் பார்க்கவேண்டும். வருவாய் குறைவாக இருக்கிறது பர்சன்டேஜ் அடிப்படையில். இவர்களுக்குச் சலுகைகள் எப்படிப் போய்க் கொண்டிருக்கின்றன? புதிதாக ஆரம்பிக்கப் படக்கூடிய தொழில்கள் என்று வரும்போது முதல் மூன்று ஆண்டுகளுக்கு அவர்கள் 66.33 சதவிகிதம் கட்டினால் போதும். அவர்களுக்கு ஒரு யூனிட்டுக்கு 4 பைசா, 8 பைசா, 10 பைசா என்ற அளவுதான் வரும். புதிதாகத் துவக்கக்கூடிய தொழில் களுக்கு முதல் மூன்று ஆண்டுகளுக்கு 2/3 பங்கு கட்டினால் போதும். நான்காவது ஆண்டில் 80 சதவிகிதம், ஐந்தாவது ஆண்டில் 90 சதவிகிதம், ஆறாவது ஆண்டில்தான் முழுமை யாக, தொழில்கள் என்று வருகிற போது அதற்குண்டான மின் கட்டணக் கணக்கைச் சொல்லுகிறேன். சிமென்டுக்கு ஒரு யூனிட்டுக்கு 8.50 பைசா என்று இருக்கிறது. காஸ்டிக்சோடா தொழிலுக்கு 4.50 பைசா, பெர்டிலைசர் என்றால் 10 பைசா, சேலம் ஸ்டீல் பிளாண்ட் 5 பைசா, சின்தடிக்ஜெம் 4 பைசா ரயில்வேக்கு 10 பைசா, பொதுவாக ஹை டென்ஷன் இருக்கக் கூடிய தொழில்களுக்கு முதல் ஐந்து லட்சம் யூனிட்டுகளுக்கு யூனிட்டுக்கு 12 பைசா; ஐந்து லட்சத்திற்கு மேல் 11 பைசா. இப்படி சலுகைகளைக் கொடுத்திருக்கிறார்கள். தொழில்களுக்குச் சலுகை கொடுக்கக் கூடாது என்பதல்ல — அரசாங்கத்தின் பொறுப்பில் இவ்வாறு சலுகைகளை செய்துவிட்டு அரசு கொடுத்திருக்கக்கூடிய கடனுக்கு வட்டி ஏன் எடுக்கவேண்டும்? சலுகைகளை ஒரு யூனிட் காஸ்ட் ஆப் ப்ரொடக்ஷனையும் விடக் குறைவாகக் கொடுக்கும் நிலைமை இருக்கிறது. அதிக மான சலுகைகளை அரசு மின் வாரிய மூலம் அளிக்கக்கூடிய சூழ் நிலை இருக்கிறது. ஆனால் வீட்டு உபயோகத்திற்கு யூனிட்டுக்கு 35 பைசா, சர்சார்ஜ் 3 பைசா; விவசாயிகள் சம்பந்தப்பட்ட வரை யூனிட்டுக்கு 16 பைசா என்று இருந்ததை 14 பைசா வாகவும் 12 பைசாவாகவும் இந்த அரசு வந்த பிறகு குறைக்கப் பட்டிருக்கிறது. இந்த 12 பைசா என்று சொல்லுவது இரண்டரை ஏக்கர் நஞ்சை நிலமோ 5 ஏக்கர் புஞ்சை நிலமோ வைத்திருப் பவர்களுக்குத்தான். குறைக்கப்பட்ட சலுகையை விவசாயிகள் பெறக்கூடிய நிலை இன்று இல்லை. குறைத்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள், அது உண்மை. ஆனால் அந்தச் சலுகையை விவசாயிகள் அனுபவிக்க முடியாததற்குக் காரணம் இந்த சிறு விவசாயிகள் கர்ணத்திடமிருந்து இரண்டரை ஏக்கர் நஞ்சைதான் இருக்கிறது அல்லது 5 ஏக்கர் புஞ்சைதான் இருக்கிறது என்று சர்டிபிகேட் வாங்கிக் கொண்டு போக வேண்டும். அந்த சர்டிபிகேட் வாங்குவதில் உள்ள சிக் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய நாட்டில

பொதுவாகக் கூட்டுப் பட்டாதான் இருக்கிறது. ஒரு குடும்பத்தில் 10 ஏக்கர் இருக்கும். இரண்டரை ஏக்கரில் பம்ப் செட் வைத்து பயிர் செய்தாலும் கர்ணத்திடமிருந்து சர்டிபிகேட் வாங்கவேண்டுமென்ற நிலை இருப்பதால் இரண்டரை ஏக்கரில் தான் விவசாயி பயிர் செய்கிறான் என்ற முறையில் சர்டிபிகேட் வாங்க முடியாது. ஏனென்றால் அது தனிப் பட்டா அல்ல. தனிப் பட்டா என்று வைத்துக் கொண்டாலும் ஒரு விவசாயிக்கு தனிப் பட்டா 5 ஏக்கர் இருந்து அதிலே ஒன்றரை ஏக்கரில் பம்ப் செட் வைத்து பயிர் செய்கிறான் என்று சொன்னால் 3 எச்.பி. மோட்டார் வைத்திருக்கிறான் என்று சொன்னால், கர்ணம் சர்டிபிகேட் என்ன சொல்லும் என்றால் 5 ஏக்கர் வைத்திருப்பதாகத்தான் சொல்லும். ஒன்றரை ஏக்கரிலே பம்ப்செட் வைத்து பயிர் செய்கிறவர்களுக்குக்கூட இந்த 12 பைசா என்ற சலுகை கிடைக்காத நிலைதான் இருக்கிறது. ஆகவே 12 பைசா என்ற சலுகையை சிறு விவசாயிகள் அனுபவிக்க முடியாத நிலைமை இருக்கிறது. நடைமுறையிலே உள்ள நிலைமை அப்படித் தான் இருக்கிறது. இதனால் என்ன ஆகிறது என்று சொன்னால், 12 பைசாக்காரர்களுக்குக்கூட அதை அனுபவிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அது இல்லாமல் மீட்டர் சார்ஜ் என்று இருக்கிறது. 5 ரூபாயாக இருந்ததை 4 ரூபாயாக ஆக்கியிருக்கிறீர்கள். ஏற்கெனவே இது இன்னும் குறைவாக 3 ரூபாய் இரண்டு ரூபாய் என்று இருந்தது. இப்போது மீட்டர் சார்ஜ் என்பது 3 ஹார்ஸ் பவருக்கு சர்சார்ஜ் 3 ரூபாயும், 5 ஹார்ஸ் பவருக்கு சர்சார்ஜ் 5 ரூபாயும் கட்ட வேண்டியுள்ளது. எனவே இரண்டு பைசா, 4 பைசா என்று குறைக்கப்பட்டிருந்தாலும்கூட ஒட்டு மொத்தமாக மின்சாரத்திற்கு ஆகிற செலவைப் பார்த்தால் குறைந்து இருக்கிறது என்ற எண்ணம் விவசாயிகளுக்கு வரக்கூடிய சூழ்நிலை இல்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்து, ஒரு விவசாயி பம்ப்செட்டு வைத்து இருக்கிறார், ஒரு ஷெட்டில், அது கட்டடமாக இருக்கலாம், அல்லது கூரை இடமாகவும் இருக்கலாம். அவர் பக்கத்திலே பயிர் செய்ய வேண்டும், களை எடுக்கவேண்டும், தண்ணீர் பாய்ச்சவேண்டும், இரவு நேரங்களிலே போகவேண்டுமென்றால் அதற்காக லைன் இழுத்து ஒரு பல்பை இழுத்துப் போட்டார் என்றால் அதற்கு இந்த டாரிப் இல்லை என்று சொல்கிறார்கள். அதற்குள்ளே தான் பல்ப் இருக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது, ஷெட்டுக்குப் பக்கத்திலே போய் இரவு நேரங்களிலே அந்தக் காரியங்களைச் செய்யவேண்டுமென்ற முறையிலே 10 அடி தூரத்திலே ஒரு வயரை இழுத்து லைட்டைப் போட்டால்கூட 35 பைசா என்றும் 3 பைசா சர்சார்ஜ் என்றும் கட்டக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

1979 ஏப்ரல் 26] [திரு. சி. கோவிந்தராசன்]

மீட்டர் வாடகை சம்பந்தப்பட்டவரை ஒவ்வொரு நிதி நிலை அறிக்கை விவாதத்தின் போதும் சொல்லப்பட்டு வருகிறது. ஒரு மீட்டரின் விலை அதிகமாக மீறிப்போனால் 100 ரூபாய் ஆகலாம். டொமஸ்டிக் பர்ப்பஸ் ஆக இருந் தாலும சரி அல்லது அக்ரிகல்சுரல் பர்ப்பஸ் ஆக இருந்தாலும் சரி குறிப்பாக அக்ரிகல்சருக்கு மாதா மாதம் 4 ரூபாய் என்று ஆண்டுக்கணக்கிலே மீட்டர் சார்ஜ் கட்ட வேண்டிய நிலை தான் இருககிறது. நாங்கள் ஒரு யோசனை யைப் பல முறை இந்த அவையிலே சொல்லிவருகிறோம். எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட அப்படிப்பட்ட ஆலோசனையைச் சொல்லிவருகிறார்கள். மீட்டர் என்ன விலையாக இருந்தாலும் அதை நீங்களே வாங்கி வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்வதற்குப் பதிலாக அதன் விலையைப்போல் பல மடங்கு என்றால் 5, 6 மடங்கு கட்டக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதை நான் அரசின் கவனத் திற்குக் கொண்டுவருகிறேன். தயவு செய்து மீட்டர் விலையை மட்டும் பெற்றுக் கொள்ளுங்கள்.

மின்சாரக் கட்டணம் 9 கோடி ரூபாய் விவசாயிகளிட மிருந்து பாக்கி வரவேண்டியிருக்கிறது, அதை அனைவரும் அறிவார்கள், நீங்களும் அறிவித்திருக்கிறீர்கள். அந்த 9 கோடியிலே சிறு விவசாயிகளுக்கு ஒரு பகுதியை ஒதுக்கி அதை வஜா செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சர்வீஸ் கனக்ஷன்கள் கொடுக்கிறபோது சீனியாரிடி அடிப் படையிலே கொடுக்கவேண்டும், அதிகாரிகள் என்ன சொல்கிறார் கள் என்றால் எல்லா சாமான்களையும் இவர்களே வாங்கிக் கொண்டுபோய் கொடுக்க வேண்டுமென்று சொல்கிற நிலைமை இருக்கிறது. பணம் கட்டுகிறோம், டெபாசிட் பண்ணுகிறோம், ஏற்பாடுகளைச் செய்கிறோம், அவர்கள் கனக்ஷன் கொடுக்க வேண்டும், ஆனால் மின்வாரியமே கொண்டு வந்து போட வேண்டிய சாமான்களை விவசாயிகளே வாங்கிக்கொண்டு வந்து கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இது அத்தனை பேர்களும் அனுபவித்து வருகிற விஷயம்.

கைத்தறி நெசவாளர்களைப்பற்றி ஒரு விஷயம். கைத்தறி தொழில் இன்றைக்கு எப்படி இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். மாஸ்டர் வீவர்களிடமிருந்தோ அல்லது சொஸைடி யிடமிருந்தோ பாவு எடுத்துக் கொண்டுவந்து கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் வீடுகளில் நெய்கிறார்கள், அவர் களுக்கு வேலை நேரம் எதுவும் கிடையாது, நேரங்காலம் கிடையாது, கிட்டதட்ட ஒரு காட்டேஜ் இண்டஸ்ட்ரி மாதிரி தான் அந்தத் தொழில் நடந்து வருகிறது. இரவு நேரங்

களிலே வீட்டிற்குள்ளேயே அவர்கள் நெசவுத் தொழில் செய்கிற நேரத்திலே அதற்காக ஒரு பல்பை போட்டால் அதற்கு கமர்ஷியல் பேஸிஸ் என்ற முறையிலே 45 பைசா என்று கட்டணம் விதிக்கப்படுகிற நிலைமை இருக்கிறது. என்னுடைய தொகுதியில் குமரப்பநாயக்கன்பேட்டை சென்னப்பநாயக்கன் பாளையம், நடுவீரப்பட்டு, புதுப்பேட்டை ஆகிய இடங்களில் இப்படிப்பட்ட பிரச்னை வந்தது, மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களுக்கு இந்த ஊர்களெல லாம் நன்கு தெரியும். மின் வாரிய அதிகாரிகளிடம் விண்ணப்பங் களைக் கொடுத்திருக்கிறார்கள். கைத்தறி வளர வேண்டு மென்றும் அதற்கு ஆதரவு தரவேண்டுமென்றும் நாம் சொல் கிறோம். ஆனால் கைத்தறிக்கு இந்த அடிப்படையிலா மின் கட்டணம் போடவேண்டும். ஒரு ஷெட் என்று வைத்து 10, 20 தறிகள் வைத்தால்கூட கமர்ஷியல் பேஸிஸில் என்று போடக்கூடாது என்பது எங்களுடைய கருத்து ஆகும். பெருந் தொழில்களுக்கு எவ்வளவு வசதிகளைக் கொடுத்திருக்கிறோம். ஆனால் இதற்கு டொமஸ்டிக் கன்சம்ஷனுக்கு என்ன போடு கிறார்களோ அதைவிட மேலும் 10 பைசா போடுவது சரியல்ல,

[பிற்பகல் 12—20]

நியாயமல்ல. எனவே அது சரியல்ல. அப்படிப்பட்ட சூழ்நிலை இன்றைக்கும் இருக்கிறது. மேலிருந்து உத்தரவு வர வேண்டு மென்று அங்கேயிருக்கிற அதிகாரிகள் சொல்கிறார்கள். நீங்கள் கவனித்து, அதற்கேற்ற உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டு மென்று இந்தச் சமயத்தில் கூற பிரியப்படுகிறேன். எனவே, சிறு தொழில்களுக்கு ஊக்கம் அளிக்கிற வகையில், அந்த உதவியைச் செய்யவேண்டும். 'ஷெட்' போடப்பட்டிருந்தாலும், அவர்களிடம் உயர்ந்த கட்டணம் கேட்கக் கூடாது. இதை அறவே கைவிட வேண்டும். பெருந்தொழில்களுக்கு இவ்வாறு செய்யவில்லை. ஆகவே, கைத்தறி தொழிலுக்கு கமர்ஷியல் அடிப்படையில், கட்டணம் வசூலிக்காமலிருக்க வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, லைன் லாஸ், 1976-77-ல் 18.34. அதற்கு முந்தின ஆண்டில் இருந்ததை விடக் கொஞ்சம் குறைந்திருக் கிறது என்பது உண்மை. ஆனால் 1977-78-ல் 18.60. மின்சா ரத்தில் டிரான்ஸ்மிஷனில் லைன் லாஸ் ஏற்படுவது வழக்கம். நீங்கள் என்ன சொல்வீர்கள்? மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பாருங்கள். லைன் லாஸ் இங்கே குறைவாக இருக்கிறது என்பது ஆண்டுதோறும் சொல்லப்படுகிற பதில். நம்முடைய மாநிலம், இதிலும்..........

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u>: தலைவரவர்களே, நான் அந்த வகையில் சொல்வதாக இல்லை.

1979 ஏப்ரல் 26]

திரு. சி. கோவிந்தராசன் : ரொம்ப மகிழ்ச்சி, டிரான்ஸ் மிஷனில் இப்படிப்பட்ட லைன் லாஸ் ஏற்படுவது இயற்கை. ஆனால், லைன் லாஸ் ஏற்படுவது என்று சொல்வது, திருட்டின் மூலமாகத் தான் அதிகம் ஏற்படுகிறது என்பது உண்மை. இந்தத் திருட்டு எப்படி நடக்கிறது? பெரிய ரைஸ் மில் ஓனர்கள் மீட்டரிலே கோளாறு பண்ணுகிறார்கள். அல்லது, லைனிலே கோளாறு பண்ணுகிறார்கள். இதை எதிர்த்து ஒயர் மேன், லைன்மேன்கள் கேட்டால் அந்த ஓனர்கள் இஷ்டப்படி இவர்கள் போகவில்லையென்றால், அவர்களுக்கு அடி, உதை கிடைக்கிறது. நான் தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில், இப்படிப்பட்ட புகார்கள் வந்திருக்கின்றன. அது பற்றிய புகார்கள் அதிகாரிகளுக்கும் வந்திருக்கின்றன. பெரிய நிலச்சுவான்தார்களும் மின்சாரத்தைப் பயன்படுத்தும்போது, இப்படிப்பட்ட திருட்டு நடத்துகிறார்கள். இது சம்பந்தமாக நான் மட்டும் சொல்லவில்லை, சென்ற மார்ச் மாதம் 16-ம் தேதி நமது முதல்வர் அவர்கள் தொழில் அதிபர்கள் மாநாட்டிலே பேசும்பொழுது, இதுபற்றி குறிப்பிட்டிருக் கிறார்கள். அவர்கள் சொல்லியது என்னவென்றால், 'மீட்டர் களில் தில்லுமுல்லுகள் செய்து மின்சாரக் கட்டணத்தில் ஏமாற்றம் செய்வதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும்' என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால், மீட்டரில் திருட்டு ஏற்படுகிறது என்பது அரசுக்குத் தெரிந்த ஒரு விஷயம். இன்னொன்று, அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், ''மின்சாரத் திருட்டில்'' ஈடுபட்டுள்ளவர்களின் பெயர் வெளியிடப்பட்டால் அவர்கள் பெயருக்கும் புகழுக்கும் பங்கம் ஏற்படும்'' என்று சொல்லி யிருக்கிறார்கள். அப்படியானால், இந்தத் திருட்டில் ஈடுபட்ட வர்கள் யார் யார் என்பது அரசுக்கும், முதல்வர் அவர் களுக்கும் தெரியும். தெரிந்த காரணத்தினால், பெயர்களைச் சொன்னால் அவர்கள் பெயருக்கும் புகழுக்கும் களங்கம் ஏற்படும் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அவர்கள் பேசியது. 'திருடு போகின்ற மின்சாரத்தின் அளவைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் தமிழகத்திற்குத் தேவையான மின்சாரம் உற்பத்தியாகிறது என்பது புலனாகும்' என்றும் சொல்லியிருக்கிறார் என்றால், அது அந்த அளவு கணிசமாக இருப்பதாக, அரசாங்கம் — முதலமைச்சர் அவர் களே — ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு தெரிந் திருந்தும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுதான் கேள்வி.

அது சம்பந்தமாக, கடந்த கூட்டத்திலே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் ரமணி அவர்களும், அம்பிகாபதி அவர்களும் பேசியிருக்கிறார்கள், என்ன நடவடிக்கை எடுக்க

வேண்டுமென்று? 'மின்சார சக்தியைத் திருடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று சொல்லியிருப்பதற்கு (பணியடிக்கப்பெற்றது) 'திடீர் பரிசோதனைக் குழுக்கள் எல்லாப் பிரிவுகளிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்திய மின்சாரச் சட்டப்படி மின்சாரத்தைச் சட்ட விரோதமாகத் திருடுபவர்களுக்கு தண்டனை அளிக்க நீதி மன்றங்களுக்கு அதிகாரம் உள்ளது' என்று பதில் கொடுத்திருக்கிறார்கள், மின்சார வாரியத்தின் சார்பில். திருட்டுக் குற்றங்கள் எதைக் கண்டுபிடித்தாலும் தண்டனை அளிக்க நீதிமன்றங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆகவே, அந்த ஆலோசனையை இவர்கள் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. திருடுகிறார்கள் என்று தெரிந்திருக்கும்போது, ஏன் அவர்கள் மீது சட்டப்படி நீதிமன்றத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கவில்லை. இதிலே, 'லாஸ்' ஆவது, கணிசமான அளவுக்கு என்பதும் தெரிந்த உண்மை. ஏனென்றால், எத்தனையோ பெரியவர்கள் செய்கிறார்கள் என்பதும், பெரிய மனிதர்கள் கூட்டத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் பெரியவர்கள், முதலாளிகள் என்பதால் நடவடிக்கை எடுக்கவில்லையா? எனவே, அதைக் கட்டுப்படுத்துகின்ற அப்படிப்பட்ட நடவடிக்கை உடனடி தேவை என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு, மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் கொஞ்ச நாளைக்கு முன்பு பேசியது பத்திரிகையில் வந்திருக்கிறது. மின்சார இணைப்பை கிராமங்களுக்கெல்லாம் நல்ல முறையில் விஸ்தரிப்பு செய்திருக்கிறோம். இருக்கும் மொத்த கிராமங்கள் 98 சதவீதம் அதாவது மொத்தம் 64,198 கிராமங்கள், அதிலே 24,526 ஹரிஜன குடியிருப்புகள் குடிசைகள் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம்-அந்தக் குடிசைகளுக்கெல்லாம் மின் இணைப்பு கொடுக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் பேசியபடியே அந்தப் பத்திரிகைகளில் வந்தமாதிரியே கொடுத்திருக்கிற அறிக்கையிலும் குறிப்பிட்டிருக்கிறார். அவர் அதிலே குறிப்பிட்டிருப்பது போல அந்த குடிசைகளுக்கெல்லாம் மின்சார மீட்டர்கள் வைக்காமலேயே ஃபிளேட் (Flat) ரேட்டில், ஒரு 2 ரூபாய், $2\frac{1}{2}$ ரூபாய் என்று கட்டணம் போட்டு உடனடியாக அந்த 44 லட்சம் குடிசைகளுக்கும் மின் இணைப்பு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்படுகிறது)

இதோ முடித்துவிடுகிறேன். இந்த 44 லட்சம் குடிசைகளுக்கும் மீட்டர் இல்லாமல் விளக்கு கொடுத்து, அவர்களுக்கும் மின்சார வசதியை பெறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 26] [திரு. சி. கோவிந்தராசன்]

அடுத்தபடியாக, முனிசிபாலிட்டி பஞ்சாயத்துகளில் தெரு விளக்குகளே எரிவதில்லை. கிராமங்களுக்கெல்லாம், நகரங்களுக்கெல்லாம் மின்சார விஸ்தரிப்பு செய்திருக்கிறோம் என்று சொன்னாலும், அதற்காக பெருமைப்பட்டுக் கொண்டாலும், பஞ்சாயத்து தெருக்களிலே ஸ்டீரிட் லைட்டுகள் கிடையாது. அவைகள் இருளில்தான் மூழ்கிக் கிடக்கின்றன. அதனால் திருட்டுகளும் அதிகமாக ஆகிவிட்டது. முனிசிபாலிட்டிகள் தான் இதற்கு பொறுப்பு என்று மின்சார அதிகாரிகள் சொல்லி விடுகிறார்கள். முனிசிபாலிட்டியைச் சேர்ந்தவர்கள் நாங்கள் எல்லா சாமான்களையும் முனிசிபாலிட்டியோ அல்லது பஞ்சாயத்து நிர்வாகமோ கேட்கிறபடி வாங்கிக் கொடுத்து விடுகிறோம், அவர்கள் தான் போடுவது இல்லை என்கிறார்கள். மின்சாரத்துறை அதிகாரிகள், அவர்கள் சரியாகப் பொருள்களை வாங்கிக் கொடுப்பது கிடையாது என்று சொல்கிறார்கள். இப்படி ஒருவர் மேல் ஒருவர் சொல்லிக் கொண்டு அந்த தெரு விளக்குகளை எரியவிடுவதில்லை. ரோடுகள் இருளில் மூழ்கிக் கிடக்கின்றன. அதனால் திருட்டுகளும் அதிகமாகின்றன. இந்த நிலையை மாற்றுவதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சில விஷயங்கள் தொழிலாளர்களைப் பற்றி பேசிவிட்டு முடித்துக் கொள்கிறேன். மின்சார இலாகா சுமார் 1 லட்சம் ஊழியர்களைக் கொண்ட மிகப் பெரிய நிறுவனம். அங்கே இரண்டு தொழிற் சங்கங்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் இருக்கின்றன. இப்படி பெருவாரியான தொழிலாளர்கள் உள்ள நிறுவனம் பொதுத் துறையில் வேறு இருக்க முடியாது. அவைகளில் நிறைய சங்கங்கள் இருக்கின்றன. அதில் 2 சங்கங்கள் அங்கீகரிக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் அந்த சங்கங்கள் எந்தக் காலத்திலோ அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள். ஆனால் இப்போது நிலைமையில் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்பட்டிருந்தாலும் ஏற்பட்டிருக்கலாம். எனவே இப்போது மீண்டும் ரகசிய வாக்கெடுப்பு முறையில் அங்கீகாரத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதுவரை இடைக்காலத்தில் ஏதாவது முக்கிய விஷயங்களை குறித்து பேச வேண்டியிருந்தால் எல்லாச் சங்கங்களையும், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், அங்கீகரிக்கப்படாத சங்கங்கள் எல்லாவற்றையும் அழைத்து பேசி முடிவு எடுக்கப்படவேண்டும். இந்த ஆண்டு நவம்பர் மாதத்துடன் ஒப்பந்தம்-ஊழியர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தம் முடிவடைகிறது. 1-12-79-லிருந்து புதிய ஒப்பந்தம் துவக்கப்படவேண்டும். அப்போது எல்லோரையும், எல்லாச் சங்கங்களை சேர்ந்தவர்களையும் அழைத்து பேசி ஊதியப் பிரச்னையை சுமுகமாக முடிக்கப் பார்க்க வேண்டும். மின்வாரியம்

[திரு. சி. கோவிந்தராசன்] [1979 ஏப்ரல் 26

தொழிலாளர் சட்டங்களை புறக்கணிக்கிறார்கள், பல நிறுவனங்களில் ஷாப் அண்டு எஸ்டாபிளிஷ்மெண்ட் ஆக்டின் கீழ் இருக்கிறது. அச்சட்டத்திலிருந்து தொடர்ந்து விலக்கு அளிக்கப்படுகிறது. மின்சார வாரியத்தில் கூட பிடிக்கப்படும் பி. எப். பணங்களுக்கு கணக்குகள் தொழிலாளர்களுக்கு கொடுப்பதே இல்லை. இன்னமும் அவர்கள் பிடிப்பு பணம் பிராவிடண்ட் பண்ட் கணக்கில் கொடுக்கப்படாமல் சுமார் 60 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பணம் சஸ்பென்ஸ் அக்கவுண்டில் வைக்கப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக பி. எப். கமிஷனர் 16-10-78-ல் மின்சார வாரியத்திற்கு எழுதிய கடிதத்தை தலைவர் அவர்களின் அனுமதியோடு படிக்க விரும்புகிறேன்.

"......Despite issue of several letters to the S.Es and D.O.Letter to the C.E., T.N.E. Board, there is not much improvement in the rectification of the above discrepancies. Whenever the personal attention of the Chief Engineer is drawn to the above lapses, he has been explaining about the various administrative difficulties involved in implementing the Schemes and promised to set right the lapses with requests for extension of time limits. But much is required to be done despite these assurances. The only course now available is to prosecute the officers responsible for these lapses which is an unpalatable and embarrassing course of action forced on this organisation. . . ."

எனவே இது சம்பந்தப்பட்ட வரைக்கும் உடனடியாக கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மற்றும் காண்ட்ராக்ட் முறையை அகற்றுவதற்குப் பதிலாக நிரந்தர வேலை நடக்குமிடங்களிலும் விநியோகத் துறையிலும் காண்ட்ராக்ட் புகுத்தப்படுகிறது.

கடைசியாக ஒன்றை சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன். கும்பகோணம், நாகப்பட்டினம், சேலம், ஈரோடு, திருநெல்வேலி, தூத்துக்குடி, திருச்சி, வேலூர் ஆகிய 7 அண்டர்டேக்கிங்ஸில் எடுக்கப்பட்டு 5 ஆண்டுகள் ஆகின்றன. அங்கே ஏறக்குறைய 2500, தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் முழுமையாக இணைக்கப்பட்டு அவர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கவேண்டும். ஆகவே அவர்களுக்கும் எல்லா சலுகைகளும் மின்வாரிய ஊழியர்களுக்கு வழங்கப்படும், நிர்வாகம் அளிக்கின்ற அத்தனை சலுகைகளையும் அளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

1979 ஏப்ரல் 26] [திரு. சி. கோவிந்தராசன்]

எனவே, நான் கூறிய பல ஆலோசனைகளின் அடிப்படையில் கணக்குகளை தயார் செய்வதில் மாற்றம் செய்து இதில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வும், உபயோகிப்பவர்களுக்கும், விவசாயிகளுக்கும் கட்டணக் குறைவும் செய்யக் கூடிய வகையில் வாரியம் செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரி அமர்கிறேன்.

[பிற்பகல் 12.30]

* திரு. க. மருதாசலம்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் சார்பில் 1978-79-80—ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையில் வைத்து இருக்கிறார்கள். இந்த அறிக்கையை வரவேற்கின்ற முறையிலே நான் சார்ந்து இருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

'ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றம் அந்த நாட்டின் மின் சக்தி உற்பத்தியில் தான் இருக்கிறது' என்றார் மாமேதை லெனின். அதன் உண்மையை உணர்ந்த எங்கள் புரட்சித் தலைவர் அரசு மின் உற்பத்தி அதிகரிப்புக்காக 'சுருளியாறு நீர் மின் திட்டம்' 'குந்தா நீர் மின் திட்டம்', 'காடாம்பாறை நீர் மின் திட்டம்' போன்றவற்றை எங்கள் தலைவர் தங்கக் கரங்களால் துவக்கியிருப்பது இதனை நன்கு புலப்படுத்தும். அதற்காக நான் முதலில் இந்த அரசையும், இந்த மின் துறைப் பொறுப்பை ஏற்றுள்ள அமைச்சரையும் நான் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அதே நேரத்தில் இந்தத் துறையில் உள்ள சில குறைபாடுகளையும், நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஒவ்வொரு ஆண்டும் இந்தத் துறை பற்றிய அறிக்கையில் நட்டமே காணப்படுவது துரதிருஷ்ட வசமாகும். நட்டம் அதிகம் ஏற்படுவதற்கு நான் இங்கே சொல்லும் சில விஷயங்களும் காரணமாக இருக்கலாம்.

1. அதிக அளவு மின் இழப்பு ஏற்படுவது.
2. மின்சாரம் பல்வேறு துறைகளிலும் திருடப்படுவது.
3. இந்தத் துறையில் சிக்கன நடவடிக்கை இல்லாதது.
4. மிக அதிக அளவில் இந்தத் துறையின் ஒவ்வொரு பிரிவிலும் அதிகமாய் ஊழியர்கள் நியமனம் செய்திருப்பது போன்றவைகள் ஆகும்.

[திரு. க. மருதாசலம்] [1979 ஏப்ரல் 26

இது தொடர்பாக அரசு ஒரு குழு அமைத்து; இவைகளை சீர்திருத்த முன்வரவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்தத் துறையில் ஊழியர்கள் வேலை செய்யும் முறையிலும் ஒரு தவறான வழிமுறை பின்பற்றப்பட்டு வருகிறது. ஒவ்வொரு திட்டத்திலேயும் பர்சேஸ் செக்ஷன் என்று ஒன்று இருக்கிறது. இதன் வேலை கொட்டேஷன் வாங்குவது, அதற்குண்டான பொருள்களை வாங்க உத்தரவு போடுவது என்ற இரண்டே வேலைகள் தான். இதற்கென ஒரு ஏ.டி.இ.யும் பல ஏ.ஈ.க்களும் அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். இந்த வேலைகளை தலைமைச் செயலகம், மற்றும் பிற அலுவலங்கங்களில் உள்ள கிளார்க்குகள் செய்வது போல் செய்யச் சொல்லலாம். இருந்தாலும் இதற்கென ஒரு பி.இ. படித்தவர்கள் ஏன் அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. இதையெல்லாம் நீக்கிட, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும்.

மேலும், இதேபோல் டி.இ. ஜெனரல் என்று ஒருவர் இருக்கிறார். அவருடைய வேலை ஆட்களை மாறுதல் செய்யும் வேலை மட்டுமே. இதற்கென ஒரு பெரிய அதிகாரி தேவையா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மேலும், பணம் வசூலிக்க முந்தைய அரசால் பல முறை கேடான முறையால் தேவைக்கும் அதிகமாக நியமனம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். இவர்கள் வேலை செய்வதைப் பார்வையிட எஸ்.ஐ.சி.க்களும், ஐ.சி.க்களும் இருக்கிறார்கள். இதில் இன்னொரு உண்மை என்னவென்றால், இவ்வளவு பேர்கள் இருந்தும், பில்கள் ஒழுங்காக வினியோகம் செய்யப் படுவது இல்லை என்ற பயங்கரமான குற்றச்சாட்டு எல்லோரிடத்தில் இருந்தும் வருகிறது.

சமீபத்தில் எஸ்.இ.டி. கம்பெனி இத்துறையுடன் இணைக்கப்பட்டுள்ளது. அந்தக் கம்பெனியில் பணம் வசூலிக்க தனியாக கேஷியர்கள் இல்லை. அவர்கள் பாங்கிலேயே பணம் செலுத்த வசதி செய்யப்பட்டுள்ளது. அதன்படி இங்கேயும் செய்தால், அந்த கேஷியர்களையும், இன்ஸ்பெக்டர்களையும், இந்தத் துறையில் வேறு பணிகளுக்கு உபயோகப்படுத்தலாம். இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆலோசித்து ஒரு நல்ல முடிவு எடுக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, இந்தத் துறையின் பல கட்டடங்கள் பல இடங்களில் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளன. அதனால் நிர்வாகச் செலவு அதிகரிக்

கிறது. இதனை போக்கிட 'ஹட்கோ' உதவியுடன் ஒவ்வொரு முக்கிய நகரங்களிலாவது முதலில் சொந்தக் கட்டடம் கட்ட இந்த வாரியம் முன்வர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்த வாரியத்தில் கீழ் மட்டத்தில் ஹெல்பர், வயர்மேன் போன்றவர்களும், அதற்கு மேலே உள்ள சூப்பர் வைசர்களுக்கும் கூட 'மீட்டர் ரீடிங்' பார்க்கத் தெரியாத நிலை இருக்கிறது. இதனைப் போக்கிட இவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளித்து, தேர்வுக்குழு வைக்கப்பட வேண்டும்.

இந்தத் துறையினை மிகவும் அறிந்த நம்முடைய அமைச்சர் அவர்கள் நான் சொன்ன கருத்துக்களை எல்லாம் நன்கு ஆராய்ந்து, அதற்குண்டான நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

மேலும் இந்த நேரத்தில் சில தகவல்களைத் தரலாம் என்று எண்ணுகிறேன். இந்தியாவில் உள்ள எல்லா கிராமங் களுக்கும் மின்வசதி செய்துதர, 1994-95 ஆம் ஆண்டுக்குள் முடித்துத்தர, ரூ. 3,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசோடு கலந்து பேசி நமது மாநிலத்திற்கு அதிக நிதியினை இதற்கெனப் பெற முயல வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அரியானா, பஞ்சாப், டில்லி, சண்டிகார், புதுவை போன்ற மாநிலங்களைப்போல் விரைவில் நமது மாநிலத்திலும் மின்சாரத்தை வழங்கிட முயல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பற்றி சில வார்த்தை களைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் ஆனைகட்டி என்ற இடம் இருக்கிறது. அதைப்போல ஆலந்துறை, செம்மேடு இருக்கிறது. அங்கே ஏராளமான மலைவாழ் மக்கள் வாழ்கின்றார்கள். மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பல பகுதிகளில் சிறு சிறு கிராமமாக இருக்கிறது. ஒரு கிராமத்தில் 50 வீடுகள், 40 வீடுகள், 30 வீடுகள் என்று இருக்கின்றன. அந்தப் பகுதிகளுக்கு இதுவரை மின்னிணைப்புத் தரவில்லை. சுதந்திரம் பெற்று 35 ஆண்டுகள் ஆகியும் பல ஊர்கள் இந்த தமிழ்நாட்டிலே இன்னும் மின்னிணைப்பு பெறாமல் இருக்கின்றன. அப்படிப்பட்ட கிராமங்களுக்செல் லாம் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையில் அமைந்திருக்கிற இந்த அரசானது உடனடியாக மின்னொளி தர முற்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல கோவை, நீலகிரி மாவட்டங்களில் எச். டி. மின்னிணைப்பு பெறுவது மிகவும் கடினமாக இருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு இணைப்பு கொடுக்கப்படாமல் பெரிய ஓட்டல்களுக்கு இணைப்பு கொடுக்கும் நிலையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி குன்னூரை தனிக் கோட்டமாக பிரித்து, நீலகிரியை தனி சிஸ்டமாக அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அதைப்போலவே, பல கிராமங்களில் அங்கே சிறு, சிறு தொழில்கள் வைத்திருப்பவர்கள் எல்லாம் மின்வாரியத்திலே இருந்து திருட்டுத்தனமாக மின்சாரத்தை எடுத்து இன்றைக்கு தொழில் செய்து வருகிறார்கள். அவர்களைப்பற்றி ஆங்காங்கே இருக்கிற மின் நிலைய அதிகாரிகளிடம் புகார் கொடுத்தால் கூட அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அங்கே இருக்கிற அதிகாரிகள் தயங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சரவர்களின் மேலான கவனத்திற்கு வைக்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்த ராசன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல இங்கே முனிசிபாலிட் டிக்கும் சிறு சிறு பஞ்சாயத்துக்களுக்கும் இடையே வேறுபாடு காணப்படுகிறது. இவைகளை எல்லாம் ஒரே சீராக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்,

நகரங்களிலே இருப்பதைக் காட்டிலும் பல கிராமங்களில், ஒரு ஊரிலே 60 ஸ்ட்ரீட் லைட் இருக்கிறது என்று சொன்னால் இன்னமும் 50 இடங்களில் விளக்குகள் எரியாமல் இருக்கின்றன; 10 இடங்களில் தான் விளக்குகள் எரிகின்றன. இந்த குறை பாடுகளை எல்லாம் போக்குவதற்கு நம்முடைய மின்சார வாரியம் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மின்சாரத் துறை அமைச்சரவர்கள் இதிலே எஞ்சினீயராக இருந்து மிகுந்த அனுபவம் பெற்றிருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. அவர்கள் இந்த அவையிலே வைத் திருக்கிற அறிக்கையை பக்கத்திற்குப் பக்கம் நாம் படிக்கின்ற நேரத்தில் பல்வேறு கருத்துக்களை இங்கே சுட்டிக் காட்டியிருக் கிறார்கள், இவைகளை எல்லாம் எதிர்காலத்திலே இந்த அரசு செயல்படுத்த சரியான வழிமுறைகளைச் செய்யும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

1979 ஏப்ரல் 26] [திரு. க. மருதாசலம்]

என்னுடைய தொண்டாமுத்தூர் தொகுதி என்பது நீண்ட பெரிய தொகுதி. அங்கே மலைவாழ் மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். அங்கே மின் விளக்குகள் இன்னும் சரியாக இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்கு வைத்து, இந்த அறிக்கையை வரவேற்று, இந்த அவையில் மின்வாரியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

[பிற்பகல் 12.40]

திரு. அ. சுவாமிதாஸ்: பேரவைத் தலைவரவர்களே, இந்த மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன். நமது தமிழ்நாட்டிற்குத் தேவையான மின்சக்தியை நமது மாநிலத்திலேயே உற்பத்திசெய்து கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் அதிகம் இல்லை. எனவேதான் வெளி மாநிலங்களிலே இருந்தும் நாம் மின் சக்தியை அதிகமாகப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். நமது வருவாயில் ஏறத்தாழ 25 சதமானத்தை வெளி மாநிலங்களுக்குக் கொடுத்து மின் சக்தியை வாங்க வேண்டிய சூழ்நிலையிலே இருந்து கொண்டிருக்கிறோம்.

நமது மின்சாரத்தேவை ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டே போகிறது. 5 ஆண்டுக்கு ஒருமுறை, அதாவது இன்றைய தேதியிலிருந்து இன்னும் 5 ஆண்டு காலம் போனால் இரண்டு மடங்குக்கு மேல் மின்சாரத் தேவை அதிகரித்துக் கொண்டே போகின்ற நிலையைப் பார்க்கின்றோம். அந்த அளவுக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்வதிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும். அதற்கான தொகையை ஒதுக்கி அதிகப்படியாக கவனம் செலுத்த வேண்டும். ஓரளவுக்கு நாம் நம்முடைய மாநிலத்தில் இருக்கின்ற நீரைக் கொண்டு மின் சக்தியைப் பெருக்குவதற்கு திட்டங்களைப் போட்டிருக்கின்றோம். இன்னும் பல திட்டங்களைப் பற்றி இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

குறிப்பாகச் சொல்வதானால் கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கின்ற பரளியாறு திட்டத்திற்கு மத்திய அரசு இன்னும் ஒப்புதல் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். முன்பு ஒரு முறை இந்த மன்றத்திலே பேசும்போது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் 'இது 35 மெகாவாட் மின்சாரம் கிடைக்கின்ற திட்டம்தானே, இதைவிட பெரிய திட்டங்களான 100 மெகாவாட் மின்சாரம் கிடைக்கின்ற திட்டங்களைப் பற்றி எல்லாம் நாம் அதிகமாக வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே இந்தத் திட்டத்தைப் பின்னால் பார்ப்போம்' என்ற நிலையில் பேசினார்கள்.

நான் சொல்கிறேன், அது 35 மெகாவாட் மின்சாரம் கிடைக்கின்ற திட்டமாக இருந்தாலும் 10 மெகாவாட் மின்சாரம் கிடைக்கின்ற திட்டமாக இருந்தாலும் நாம் எவ்வளவு தூரம் மத்திய அரசை வலியுறுத்திப் பெற்றுக் கொள்ள வேண்டுமோ அந்த அளவுக்கு வலியுறுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்றால் நம்முடைய தேவை இன்றைக்கு அதிகமாகிக் கொண்டே போகின்றது. அந்தத் தேவைகளைக் குறைக்க முடியாது. ஆகவே எந்த வகையிலே எல்லாம் மத்திய அரசை வலியுறுத்தி நமது திட்டங்களை, ஆக்கபூர்வமான திட்டங்களை நிறைவேற்று வதற்கு முற்படுகிறோமோ அந்த அளவுக்கு நமக்குப் பயன் கிடைக்கும். இப்போது ஒரு நல்ல சூழ்நிலை இருக்கின்றது என்று கருதுகிறேன். ஆகவே, மின்சாரத்தைப் பொறுத்த வரையில் மத்திய அரசிலே எப்படி எப்படி வலியுறுத்திப் பெற்றுக் கொள்ள வேண்டுமோ அந்த அளவுக்குப் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்போதுதான் புதிய திட்டங்களை உருவாக்க முடியும். அதிலும் குறிப்பாக மின்சார வாரியம் அதிகமாக இதில் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து, இன்னும் பல திட்டங்களை ஏற்படுத்துவதற்காக இந்த இலாக்காவிலே வருகின்ற வருவாயிலே ஒரு சதமானத்தை யாவது ஒதுக்கி ரிசர்ச் செய்ய வேண்டும். ஏனென்றால் நமக்கு வேண்டிய நிலக்கரி வெளியிலே இருந்துதான் வரவேண்டி இருக்கின்றது. நீர் சக்தியும் அதிகம் இல்லை. எண்ணை வளமும் இல்லை ஆகவே, வெளிநாடுகளிலே எந்தெந்த வகையிலே மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு முயல்கிறார்களோ அதே போல் நம்முடைய மின்சார இலாக்காவிலேயும் அதற்காக ஒரு சதமானத்தையாவது ஒதுக்கி ரிசர்ச் செய்வதற்கு முற்படக் கூடாதா? நமது சீஃப் இன்ஜினியர் அவர்கள் இந்தத் துறை யிலே அதிகமான கவனம் செலுத்துவதாகக் கேள்விப்பட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

சோலார் கிரேடியன்ட் மெத்தட் எனர்ஜி என்று சொல்லப் படுகிறது. அதற்கு அதிக வாய்ப்பு இங்கே இருக்கின்றது. ஏனென்றால் சூரிய வெளிச்சம் இங்கே பெரும்பாலும் அதிகமாக வருகிறது. ஆகவே, அந்த அளவிலே சோலார் கிரேடியன்ட் மெத்தட் எனர்ஜி கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே? அதிலே கவனம் செலுத்தி அதற்கு ஏதாவது நிதியை ஒதுக்க முடியுமா என்பதைக் கவனிக்க வேண்டும்.

அடுத்து ட்ரியோ தெர்மல் பவர் என்று சொல்லப்படுகின்ற முறையில் பூமிக்கடியில் இருக்கின்ற சூட்டினைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். அந்த அளவிலே சீஃப் என்ஜினியர் அவர்கள் கவனம் செலுத்தி அதிகமான மின்சக்தியை உற்பத்தி செய்வதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

1979 ஏப்ரல் 26] [திரு. அ. சுவாமிதாஸ்]

அடுத்து, பல தடவை நான் இந்த மன்றத்திலே சொல்லிக் கொண்டிருக்கின்றேன், வின்ட் மில்ஸ் பற்றி. அதை எக்ஸ்பெரிமென்ட் என்ற பேஸிஸிலாவது எங்கேயாவது ஒரு இடத்திலாவது அமைத்துச் செய்ய முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். இதனை இந்த மன்றத்திலே பல முறை சுட்டிக்காட்டி இருக்கிறேன். ஆரல்வாய்மொழி நன்றாகக் காற்று வீசக்கூடிய இடம். ஆகவே, அங்கே இந்த மாதிரி அமைத்து மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். அதற்காகத்தான் சொன்னேன் ரிசர்ச் செய்ய வேண்டும் என்று. இதற்கெல்லாம் ஒரு தொகையை ஒதுக்கினால்தான் செய்ய முடியும். ஆனால் இது குறித்தெல்லாம் நான் சொல்கிறேன் என்றால் நான் டெக்னிஷியன் அல்ல. ஏதோ கேள்விப்பட்டதைச் சொல்கிறேன். நம்முடைய மின்சாரத்துறையிலே மிகத்திறமை வாய்ந்த டெக்னிஷியன்களும், டெக்னிக்கல் பீப்பிள்ஸ்களும் இருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன், ஆகவே அவர்களுடைய திறமைகளை எல்லாம் பயன்படுத்தி மேலும் பல வகைகளில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு இந்தத் துறை முயலவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல் கடல் அலையிலே இருந்து மின்சாரம் எடுக்கலாம் என்று 1962—லே முன்னாள் அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் கூறினார்கள். அதையும் கருத்தில் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஆக்கபூர்வமான வேலைகள் செய்ய வேண்டியிருக்கிறது. அதோடுகூட, நாம் உற்பத்தி செய்கின்ற மின்சக்தி இழப்பு இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதிலே இந்தத் துறை சற்று கவனம் செலுத்தியிருப்பதை இந்த ஆய்வுரையிலே நாம் பார்க்கிறோம். 1973-74-லே இருந்தது 21.4 சதவீதம். 1977-78-லே 18.6 சதவீதம். இது மகிழ்ச்சிக்குரிய செய்தி, இன்னும் இதிலே நாம் அதிக கவனம் செலுத்தி, மின்சாரம் திருடப்படாமல் பார்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

அதோடுகூட, செலவினங்களைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும். மிகுதியாக மீட்டர்களை வாங்குகிறோம், பல்புகளை வாங்குகிறோம், டிரான்ஸ்பார்மர்களை வாங்குகிறோம். இன்னும் இப்படி பல சாதனங்களை வாங்குகிறோம். அவைகளையெல்லாம் பெரும்பாலும் தனியார்களிடமிருந்து வாங்குகிறோம் அதை நாமே ஏற்றுக்கொள்ளக் கூடாதா? இதிலே கொஞ்சம் கவனம் செலுத்தினால், லாபம் கிடைக்குமே

அதேபோல் பிரிண்டிங் பிரஸ். இந்த மின்சாரவாரியத்திற்குத் தேவையானவைகளை, இந்த பிரிண்டிங் பிரஸ் அமைப்பதன் மூலமாக நாமே அச்சடித்துக் கொள்ளலாம். எனவே, இந்த பிரிண்டிங் பிரஸ் விஷயத்திலும் சற்று கவனம் செலுத்தியாக வேண்டும்.

வேலை அதிகம் இல்லாமல் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். அது உண்மையா என்று தெரியாது. ஒர்க் லோட் சரியாக இல்லை. 8 மணி நேரம் என்கின்ற முறையில் அவர்களுடைய முழுத் திறமையையும் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். அப்படி வேலை வாங்குவதன் மூலமாகத் தான் இந்த மின்சார வாரியத்திற்கு லாபம் ஈட்டிக் கொள்ள முடியும். மக்களுக்கு மின் கட்டணத்தை உயர்த்த முடியாமல் இருக்க முடியும்.

மின்சாரக் கட்டணம் உயர்வுக்கு விலைவாசி உயர்வை ஆதாரமாகக் காட்டியிருக்கிறார்கள். முன்பு இருந்ததைவிட நிலக்கரி விலை ஏறியிருக்கிறது என்றும், எண்ணெ விலை அதிகமாகி இருக்கிறது என்றும், தொழிலாளர்களுக்கு அதிகமாக ஊதியம் கொடுக்க வேண்டியிருக்கின்றது என்றும் சொல்லப்படு கிறது. இருந்தாலும்கூட, விவசாயத் தொழிலாளர்கள் பம்பு களுக்கு கொடுக்கவேண்டிய அந்தக் கட்டணத்தை 14 பைசா வாகப் போட்டிருக்கிறார்கள். 12 பைசா என்றும், அதற்கும் குறைவாகவும் கொடுக்க முடியுமா என்று அவர்கள் கேட்கக் கூடிய நிலை இருக்கிறது. காரணம், மின்சாரத்திற்காக அவர்கள் அதிகக் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கிறது. அது நியாயமான கோரிக்கை. மின்சார அமைச்சர் அவர்கள் எப்படி எப்படி இந்தக் கட்டணத்தைக் குறைக்க முடியும் என்ற வழி வகைகளை ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்களைப் பொறுத்த வரையில், முன்னால் ஒரு நல்ல முறை இருந்து வந்தது, மின்சார வாரியமே பல்புகளை யும், குழல் விளக்குகளையும் போட்டுக் கொண்டிருந்தார்கள். இப்போது இரண்டு முறை இருக்கிறது. பஞ்சாயத்துக்கள் அந்த நிதியிலே இருந்து பல்புகளை வாங்க வேண்டும். வாங்கிய அந்த பல்புகளை அவர்கள் பொறுத்த முடியாது. அப்படி பொறுத்து வதற்கு அவர்கள் வாரியத்தின் ஊழியர்களை நாடிச் செல்ல வேண்டியிருக்கிறது. அவர்கள்தான் வந்து போடவேண்டும். நான் சொல்வது என்னவென்றால், இதிலே பிராக்டிகல் டிபிகல்டீஸ் இருக்கிறது. முன்னால் இருந்ததுபோல் வாரியமே இந்த பல்புகளை வாங்கி, அந்த விளக்குளை எரியச் செய்ய வேண்டும். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், இதிலே ரொம்ப சிரமங்கள் இருக்கின்றன. சில இடங்களில் மின்வாரிய தொழிலாளருக்கும் பஞ்சாயத்து தலைவருக்கும், உறுப்பினர்

களுக்கும் அடிதடி சண்டை நடந்திருக்கிறது இதை சுமுகப்படுத்துவதற்கு உதவ வேண்டும். இந்த இலாகா ஊரிலுள்ள பொது மக்களுக்கு ஒளி கொடுப்பதற்கு, அவர்களுக்கு நன்மை செய்வதற்காக இருக்கிறது. தெருவிளக்குகளை அமைத்து ஒளி கொடுக்கின்ற பொறுப்பை வாரியமே ஏற்றுக்கொள்ள வேண்டும். பஞ்சாயத்துக்களிடம் கொடுக்கக் கூடாது. பஞ்சாயத்து நிதியிலே இருந்து வசூலித்துக் கொள்ளுங்கள். அவர்களைத் தேவையான பல்புகளை வாங்கிக் கொண்டு வரவேண்டுமென்று சொல்வது நடைமுறைக்கு சரியானதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-50]

இன்னும் பஞ்சாயத்துக்களில் சொல்லுகின்ற ஒரு பெரிய குறைபாடு. ஏற்கனவே மின்சாரவாரியம் பஞ்சாயத்து நிர்வாகிகளிடம் கேட்டு எங்கெங்கு தெரு விளக்குகளை போடவேண்டும் என்று கேட்டு அந்த இடங்களை எல்லாம் பார்த்து, அதற்கு வேண்டிய எஸ்டிமேட் தயாரித்து பின்னால், இவ்வளவு பணம் கட்டவேண்டும் என்று பஞ்சாயத்துக்குச் சொல்வார்கள், அப்படி கட்டணம் எல்லாம் கட்டிய பிறகு அந்த தெருவிளக்குகளை எல்லாம் போடுகிறார்கள். எங்கள் பகுதியில் இதற்கான கட்டணத்தை எல்லாம் கட்டி நான்கைந்து ஆண்டுகள் ஆகியும் இன்னும் விளக்குகள் போடவில்லை. இப்படி காலதாமதம் ஆகலாமா ? பணம் எல்லாம் கட்டப்பட்டு எஸ்டிமேட்டுகள் எல்லாம் தயாரித்தாகிவிட்டது. இன்னும் காலதாமதமாகிறது. இப்படியில்லாமல் குறைந்தது எஸ்டிமேட் போட்டு பணம் எல்லாம் கட்டிய இரண்டு மூன்று மாத காலத்திற்குள் கம்பங்களை நட்டு விளக்கு களை போட்டு கொடுக்க மின்சார வாரியம் முன் வரவேண்டும். இல்லாவிட்டால் பொதுமக்களின் அதிருப்தி தான் அதிகமாகும். (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்களே பேசிக் கொண்டிருந்தால் நாளைக்கு உங்கள் கட்சியில் இருந்து பேசுபவர்களின் நேரம் குறைந்துவிடும். சுருக்கமாக பேசி முடியுங்கள்.

திரு. அ. சுவாமிதாஸ்: இதையெல்லாம் அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மின்சாரக் கட்டணத்திற்கான பில்களை வீடுகளில் குறிப்பாக நெய்யூர் போன்ற இடங்களில் எல்லாம் இந்த பில்களை வீடுகளில் கொண்டுபோய் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது அந்தவிதமாக கொடுக்காமல் இருப்பதால் குறிப்பிட்ட காலத்திற்குள் பணம் செலுத்த இயலாமல் போய்விடுகிறது. இப்படி ஏன் கொடுக்கப்படுவது நிறுத்தப்பட்டிருக்கிறது என்று தெரிய

LEGISLATIVE ... வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வில்லை. மேற்கொண்டு, இந்த பில்லின்டடி கட்டணங்களை குறித்த காலத்திற்குள் கட்டாததால் மின் துண்டிப்பு செய்து விட்டார்கள். அதிலும் எப்போது மின்துண்டிப்பு செய்தார்கள் என்றால், மார்ச் மாதம், வீட்டில் குழந்தைகள், பிள்ளைகள் பள்ளிப் பரீட்சைக்கு படித்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில் இப்படிப்பட்ட துண்டிப்பு நடத்தப்பட்டது. நான் கேட்டுக் கொள்வது இப்படி மின் துண்டிப்பு செய்யும்போது, அதற்கு முன்னால் ஒரு வார்னிங் கொடுக்கலாம். மின் கட்டணம் கட்டவில்லை என்று முன்னாலேயே ஒரு வார்னிங்-ஒரு எச்சரிக்கை கொடுத்தால் மக்களுக்கு உதவியாக இருக்கும். அதையும் அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சில இடங்களில் வோல்டேஜ் டிராப் அடிக்கடி இருக்கிறது. குறிப்பாக வெள்ளியோடு, சாமியார்மடம், கண்டன் வினை இந்த இடங்களில் எல்லாம் அடிக்கடி இப்படிப்பட்ட வோல்டேஜ் டிராப் இருக்கிறது. இதனால் சிறிய லைட்டுகள் போட முடியாத நிலைமை ஏற்படுகிறது. இதையும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மணியடிக்கப்பெற்று திரு. உத்திராபதி பேச அழைக்கப் பெற்றார்.)

*திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1979—80 ஆம் ஆண்டுக்கான மின்சார வாரியத்திற்கான மானியக் கோரிக்கையின் மீது சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். இந்தியாவிலேயே அதிகமாக பம்பு செட்டுகளை 9 லட்சம் பம்பு செட்டுகளை வைத்திருக்கக் கூடியது தமிழகம் தான். 9 லட்சம் பம்புசெட்டு வைத்திருக்கிறோம் என்று சொன்னால் அதை நம்பி வாழக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள் பல லட்சம் பேர்கள். அவர்களுக்கு உயிராக இருப்பது விவசாயம் தான். இப்படிப்பட்ட விவசாயத்திற்கு மின்சாரக் கட்டணத்தை முன்பு 16 பைசா என்றிருந்ததை இப்போது 14 பைசாவாக குறைத்திருக்கிறார்கள். இது வரவேற்கத் தக்கதுதான். இதில் சிறிய விவசாயிகளுக்கு 12 பைசா என்றும் பெரிய விவசாயிகளுக்கு 14 பைசா என்றும் சொல்லும்போது, சில இடங்களில் கூட்டாக பம்புசெட் வைத்திருக்கிறார்கள். அதில் ஒருவருக்கு 6 ஏக்கர்கள் இருக்கும் இன்னொருவருக்கு 2ஏக்கர் இருக்கும். அப்படிவரும்போது 6 ஏக்கர் உள்ளவருக்கு 14 பைசாவும். 2 ஏக்கர் இருப்பவருக்கு 12 பைசா என்றும் பிரித்துக் கணக்கிடுவது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே எல்லோருக்கும் 12 பைசா என்று அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் விவசாயி பம்பு செட் வைத்திருக்கின்ற இடத்தில் ஒரு சிறிய கொட்டகை போட்டு அதில் பல்பு எரிந்தால் அதற்குத் தனியாக கட்டணம் செலுத்த வேண்டும், அதோடு இரவு நேரங்களில், பூச்சிகளைக்

சொல்வதற்கு மின்சாரத்தை ஒரு முறையில் உபயோகிக்கிறார்கள். அதற்குத் தனியாக கட்டணம் வசூலிக்கிறார்கள். அப்படியில்லாமல் எல்லாவற்றுக்கும் சேர்த்து, 12 பைசா என்று நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் ஒரு மீட்டருக்கு 50 ரூபாய் கிரயம். அதில் இப்போது மீட்டர் ரெண்ட் என்ற வகையில் ஐந்து ரூபாயிலிருந்து நான்கு ரூபாயாகக் குறைத்திருக்கிறார்கள். நான்கு ரூபாய் என்று வைத்துக்கொண்டாலும் கூட ஒரு வருடத்திற்கு 48 ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறது. பத்து வருடங்களுக்கு 480 ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆகவே இந்த மீட்டருக்கு 50 ரூபாய் என்று கொடுத்து விட்டால் அந்த விவசாயிக்கே அந்த மீட்டரை சொந்தமாக்கிவிட வேண்டும். அந்த முறையில் அரசாங்கம் அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இப்போது இன்ஜின்களுக்கு ஆயில் கிடைப்பதில்லை; இது அரசாங்கத்திற்கே தெரியும். அப்படியிருந்தும் 2 மணி நேரம்தான் ஒதுக்குகிறார்கள். 1 மணிநேரம், 2 மணி நேரம் தண்ணீர் இறைத்தால் போதும் என்று அரசு அறிவித்திருக்கிறது. 2 மணி நேரம் என்று சொல்லும்போது, விவசாயி ½ பர்லாங்கு தூரம் அளவுக்கு அல்லது 100, 200 கெஜம் தூரம் அளவுக்கு தண்ணீர் பாய்ச்ச வேண்டியிருக்கிறது. இரண்டு மணி நேரம் என்று தண்ணீர் திறந்து விட்டால், அந்தத் தண்ணீரை தன் வயலுக்குத் திருப்பி விடும்போது நின்றுவிடுகிறது. அதனால், இந்த விவசாயம் பாதிக்கப்படுகிறது. இந்தப் பஞ்சாலைகளில் ஒரு நாளைக்கு மின்சாரம் நின்று விட்டால், அந்த ஒரு நாளைக்குத் தான் நஷ்டம் ஏற்படும். ஆனால், 3 மாதங்களுக்குத் தண்ணீர் இறைக்கப்பட்டு, விவசாயத்தைப் பெருக்குகின்றபோது, இந்தத் தண்ணீர் நின்றுவிட்டால், ஒரு வருஷத்திற்கான விவசாய மகசூலே பாதிக்கிறது, அப்படி பாதிக்கின்றபோது, நெல் மகசூல் பாதிக்கப்படுகின்றது; கரும்பு விளைச்சல் பாதிக்கப்படுகின்றது; பருத்தி விளைச்சல் பாதிக்கப்படுகின்றது. அப்படி பருத்தி விளைசசல் பாதிக்கப்படுகின்றபோது, பஞ்சாலை அதனால் பாதிக்கப்படுகிறது. அதனால், பஞ்சாலையை நம்பியிருக்கின்ற தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். அதேபோல்தான் மற்ற விளைச்சல்களும் பாதிக்கப்படுகின்றன. எனவே, இதனையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு, இந்த விவசாயிகள் இதிலே பாதிக்கப்படாமல் இருப்பதற்காக அவர்களுக்குக் குறைந்தபட்சம் 4 மணி நேரம் தண்ணீர் பாய்ச்சுகின்ற அளவுக்கு மின்சாரம் வழங்குவதற்கு இந்த அரசாங்கம் முயற்சி எடுக்கவேண்டும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பொ. உத்திராபதி] [1979 ஏப்ரல் 26

அதேபோல், உற்பத்தி என்று சொல்லுகின்றபோது விவசாயி விவசாயத்தைப் பெருக்குவதற்காகப் போனால் இன்றைக்கு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு, அதனால் போராட்டம் ஏற்பட்டு, அதிலிருந்து இன்றைக்கு துப்பாக்கிப் பிரயோகம் நடந்து, முன்பு 5 விவசாயிகளும், இப்போது அதைக் கண்டிக்கின்ற வகையிலே நடந்த போராட்டத்திலே 2 பேர்களும் உயிரிழக்க நேர்ந்தது. கிட்டத்தட்ட கடந்த 2, 3 ஆண்டுகளாகவே விவசாயிக்குத்தான் உற்பத்தி செய்கின்ற நெல்லுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை; அதேபோல் பருத்திக்கும் நியாயமான விலை கிடைக்கவில்லை; கரும்புக்கும் அப்படியே நியாயமான விலை கிடைக்கவில்லை. இப்படி நிலைமைகள் இருக்கும்போது, வாங்கிய கடனை அவர்களால் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. இன்றைக்கு இந்தச் சூழ்நிலை உருவாகி, இப்போது விவசாயிகள் குமுறிக் கொண்டு, தமிழகம் பூராவும் போராட்டம் நடத்தக்கூடிய உச்ச கட்டத்தை அடைந்து, பந்த் என்று அறிவித்திருக்கிறார்கள். எனவே, இந்த நாட்டிலே விவசாயிகளுடைய உயிரைத் துப்பாக்கியால் பறித்துக் கொண்டிருக்கின்ற நிலைமைகளையெல்லாம் போக்கக்கூடிய அளவில், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இந்த மின்சாரக் கட்டணத்தை எல்லா விவசாயிகளுக்கும் 12 பைசா என்று அறிவிக்க வேண்டும்.

கடைசியாக, உள்ளாட்சி மன்றங்களைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். நான் இருக்கின்ற ஊராட்சியில் இரண்டு வருஷங்களாகச் சொல்லி விட்டேன். இன்றும் 2 கிலோ மீட்டர் இருட்டிலேயே போக வேண்டிய கிராமமாகவே இருக்கிறது. பஞ்சாயத்தைக் கேட்டால், யூனியன் ஆணையரைக் கேட்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஒன்றியத்திலே கேட்டால், பணம் இல்லை என்று சொல்கிறார்கள். அப்படியே வாங்கிக் கொடுத்தாலும், இந்த ஊரிலே இரண்டு நாட்கள் இருந்தாகிவிட்டது, அடுத்த ஊருக்குச் செல்ல வேண்டும் என்று அடுத்த பஞ்சாயத்திற்குப் போகிறார்கள். இப்படி இந்த மின்சாரத் துறையாலே புறக்கணிக்கப்படுகின்ற இடியப்ப சிக்கலாக இது இருக்கிறது. இடியப்ப சிக்கல் என்றால், ஒன்றுக்குள் ஒன்று சிக்கிக் கொண்டிருப்பது. ஒன்றியத்தைக் கேட்டால் பஞ்சாயத்து, பஞ்சாயத்தைக் கேட்டால் மின்சாரத்துறை என்று சொல்லக்கூடிய நிலைமைதான் இன்றைக்கு இருக்கிறது. இதையெல்லாம் போக்க, மின்சார வாரியமே இந்தப் பொறுப்பை எடுத்துக்கொண்டு, எல்லா கிராமங்களுக்கும், அங்கேயெல்லாம் வெறும் கம்பங்களாக இல்லாமல், எரியக்கூடிய பல்புகளை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கக்கூடிய காலத்தில், மின்சாரத் துறையே நேரடியாக இந்த பல்புகளையெல்லாம் வாங்கிப் பொறுத்த வேண்டும்

என்று கேட்டுக் கொள்வதோடு, விவசாயிகளும் நல்லமுறையிலே பாதுகாக்கப்பட வேண்டும். அவர்கள் சொல்லக்கூடியவைகளை யெல்லாம் இந்த அரசு பரிசீலிக்க வேண்டும். அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

8. அறிவிப்புகள்

(அ) ரஷ்ய நாட்டிற்குச் செல்லும் அவை முன்னவருக்குப் பாராட்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி. நம்முடைய பேரவை முன்னவரும், தமிழக அரசின் நிதி அமைச்சருமான மாண்புமிகு அண்ணன் மனோகரன் அவர்கள் நாளை மாலை வெளிநாடு சுற்றுப்பயணம் செல்ல இருக்கிறார்கள்.

[பிற்பகல் 1–00]

அவர் வெளிநாட்டுச் சுற்றுப்பயணம் செல்வது நமக்கு ஒன்றும் புதிதானது அல்ல. அவர்கள் ஏற்கனவே பல நாடுகளுக்குச் சென்றுவிட்டு பாராளுமன்ற முறைகளையும் அந்த அரசுகளின் நிர்வாக முறைகளையும் நன்கு தெரிந்து வந்திருப்பவர். ஆனால் இந்த அரசு ஏற்பட்டு அவர் பேரவை முன்னவராகவும், நிதியமைச்சராகவும் சிறப்பாகப் பணியாற்றும் வகையில் பொறுப்பேற்றிருக்கும் இந்தத் தருணத்தில் அவர்கள் வெளிநாடு செல்வது நமக்கெல்லாம் பெருமை மட்டுமல்ல, பூரிப்படையக்கூடிய ஒன்றாகும். அவர்கள் ரஷ்யத்துணைக் கண்டத்திற்கு அரசு விருந்தினராக அழைக்கப்பட்டிருக்கிறார். அந்த நாட்டு அரசு தமிழக அரசை மதித்து பேரவை முன்னவரை அழைத்திருககிறார்கள்.

ரஷ்ய நாட்டின் தேசியத் திருவிழாவாகக் கருதப்படுகிற மே தினவிழாவில், அதாவது தொழிலாளர்கள் தின விழாவில் அவர்கள் பங்கேற்று அந்த மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சியில் கலந்துகொள்ளச் செல்ல இருக்கிறார்கள். ஆக, நம்முடைய பேரவை முன்னவர் அவர்கள் செல்லுகின்ற நாடுகளில் எல்லாம் தமிழக அரசினுடைய சிறப்பையும், தமிழ்நாட்டின் பண்பையும், பண்பாட்டையும் எடுத்துச் சொல்வதோடு அந்த நாட்டின் அரசியல் நுணுக்கங்களையும், அந்த நாட்டின் பாராளுமன்ற

முறைகளையும் நன்றாகத் தெரிந்து கொண்டு நம்முடைய மாநிலம் பயன்படத்தக்க வகையில், ஏன் இந்தியத் துணைக் கண்டமே பயன்படத்தக்க வகையில் வருவார்கள்; அவர்களது சுற்றுப்பயணம் வெற்றிகரமாக முடியவேண்டுமென்று இப் பேரவையின் சார்பிலும், பேரவைத் தலைவர் என்ற முறை யிலும் அவரால் பல்வகையிலும் வளர்க்கப்பட்டவன் என்ற காரணத்தாலும் அவர்களுடைய பயணம் வெல்க! சிறப்புப் பெருகுக என்று கூறி தமிழகத்தின் பெருமை ஓங்க அண்ணன் வெற்றிகரமாகப் பயணத்தை முடித்து வரவேண்டுமென்று விரும்பி மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, நமது அன்புக்குரிய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வெளிநாடு செல்வதைப் பற்றித் தங்களுடைய பாராட்டைத் தெரிவித்திருக் கிறீர்கள். காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நானும் தங்களோடு சேர்ந்து என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். நமது நிதியமைச்சர் அவர்கள் மிகப் பண்போடு இனிமையாகப் பழகக்கூடிய பண்பு படைத்தவர்கள். எந்த நிலையிலும் சிரித்த முகத்தோடு, இன்முகத்தோடு இருக்கக்கூடிய ஒருவர். அவர்கள் நமது தமிழ் நாட்டின் பிரதிநிதியாக ரஷ்ய நாட்டுக்கும், செக்கோஸ்லோவாக்கியா போன்ற கம்யூனிஸ்ட் நாடுகளுக்கும், அடுத்து லண்டன், பாரிஸ், ரோம், வாடிகன் முதலிய இடங்களுக்கும் சென்று திரும்ப இருக்கிறார்கள். அவர்களுடைய பயணம் இனிமையாக அமைந்து நல்ல மகிழ்ச்சியோடு சுற்றுப் பயணம் அமைய வேண்டுமென்று என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு ஒரு மகிழ்ச்சி—ரஷ்ய நாட்டுக்கு அவர் செல்வதில். உலகத்திலேயே எடுத்துக்காட்டாக சமத்துவத்தை, வேலை செய்யாமல் யாரும் இருக்கக்கூடாது என்ற நியதியை ஏற்படுத்தி யிருக்கக்கூடிய ஒரு நாட்டிலேயே, வறுமையே இல்லையென்பதை நிரூபித்துக் காட்டிய நாட்டிலே நமது நிதியமைச்சர் அவர்கள் அடியெடுத்து வைக்க இருக்கிறார்கள். அவர்கள் இதற்கு முன்னாலும் போயிருப்பார்கள். ரஷ்ய நாடு வளர்ந்து கொண்டே வருகிறது. அன்றாடம் அந்த மக்களுடைய எண்ணங்களையும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு எம்மாதிரியான திட்டங் களை அவர்கள் போடுகிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் நீங்கள் அறிந்துகொள்ள முயற்சிப்பீர்கள் என்று நம்புகிறேன். நான் கம்யூனிச தத்துவத்தில் ரொம்ப நம்பிக்கையுள்ளவன் என்ற முறையில்—தத்துவத்தில்தான், கம்யூனிஸ்ட் கட்சியில் அல்ல—கூறுகிறேன். மார்க்சிய தத்துவத்தில் நான் ரொம்ப நம்பிக்கையுள்ளவன். அந்த முறையில் அந்த மார்க்சீய தத்துவம்

1979 ஏப்ரல் 26] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

அங்கே எப்படி நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிந்து கொள்வது, நீங்கள் இங்கே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற காரணத்தினாலும் அமைச்சரவையின் ஒரு உறுப்பினராக இருக்கிற காரணத்தினாலும் அது தமிழகத் திற்குப் பயனுள்ளதாக இருக்கும். மற்றும் ஜனநாயக முறையை அங்கே எப்படி அமல்படுத்தியிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வதும் பயனுள்ளதாக இருக்கும். நம்முடைய பாராளு மன்ற ஜனநாயக அமைப்பு முறையை நடத்திவருகிறோம். அங்கே இருக்கின்ற பாராளுமன்ற அமைப்புகளிலே இருப்பது ஜனநாயகம் இல்லை என்று இங்கே சிலர் சொல்லிக்கொண்டிருக் கிறார்கள் என்று நாம் கேள்விப்படுகிறோம். என்னுடைய சொந்த அபிப்ராயம்—அங்கேயும் ஜனநாயக அமைப்புத்தான் இருக்கிறது என்பது என்னுடைய அசைக்கமுடியாத நம்பிக்கை. ஆகவே அங்கே ஜனநாயக முறை எப்படிச் செயல்படுகிறது என்று அவர்கள் புரிந்துகொண்டால் அது நாட்டிற்கும் மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் அதைப்போலவே செக்கோஸ்லாவாக்கியா நாடும் அதைப்போன்ற ஒரு அமைப்பு உள்ள நாடுதான். அங்கேயும் அவர்கள் போகிறார்கள். பிறகு இலண்டனுக்கும் அவர்கள் போகிறார்கள். அது காமன்வெல்த் பார்லிமென்ட் நாடுகளிலே ஒரு நாடாகும். பாராளுமன்றத்தின் தாயகமாக இருக்கக்கூடிய நாடு. அங்கே ஏற்கனவே நீங்கள் பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையிலே போய்ப் பார்த்து இருக்கலாம். இப்போது தாங்கள் செல்கிறபோது அங்கே எப்படி பாராளுமன்ற அமைப்பு முறையின் சிந்தனைகள் இருக்கின்றன? எப்படி வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பதை யெல்லாம் தெரிந்துகொண்டு வந்து அந்தக் கருத்தோட்டங் களையும் இங்கே பயன்படுத்துவதற்கு வாய்ப்பு ஏற்படும். பிறகு பாரிஸ், ரோம் போன்ற இடங்களுக்குத் தாங்கள் சென்றுவிட்டு வேட்டிகன் நகருக்கும் போக இருக்கிறீர்கள். வேட்டிகன் நகரத்திலே போப் ஆண்டவரைப் பார்க்க இருக்கிறீர்கள். கடைசியாக போப் ஆண்டவரைப் பார்த்துவிட்டு ஊருக்குத் திரும்பப் போகிறீர்கள். இவைகளையெல்லாம் பார்த்து தமிழ் நாட்டிற்கு அவைகளைச் செயல்படுத்துகின்ற முறையிலே உணர்ந்து வெற்றிகரமாக திரும்பி வந்து உங்களுடைய எண்ணங் களைச் செயல்படுத்துவதற்கும் தாங்கள் முயற்சிக்க வேண்டு மென்று வாழ்த்தி உங்கள் சுற்றுப்பயணம் மகிழ்ச்சியாக, வெற்றிகரமாக அமையவேண்டுமென்று மறுமுறையும் வாழ்த்தி அமைகிறேன்.

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் சட்டமன்றப் பேரவையின் முன்னவரும் தமிழக அரசினுடைய நிதியமைச்சருமாகிய என்னுடைய பெருமதிப்பிற் குரிய மாண்புமிகு நண்பர் மனோகரன் அவர்கள் நாளை மாலை சோவியத் யூனியனுக்கும் செக்கோஸ்லவாக்கியாவிற்கும் இன்னும்

[திரு. என். சங்கரய்யா] [1979 ஏப்ரல் 26

ஐரோப்பாவிலே உள்ள சில நாடுகளுக்கும் சென்றுவர இருக்கிறார் என்ற செய்தி கேட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நண்பர் மனோகரனுடைய சுற்றுப்பயணம் செம்மையாகவும் சிறப்பாகவும் பயன் உள்ளதாகவும் அமையவேண்டுமென்று என்னுடைய கட்சியின் சார்பிலே அவருடைய சுற்றுப்பயணத்திற்கும், அவருக்கும் எங்கள் நல்வாழ்த்துகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நண்பர் திரு. மாரிமுத்து அவர்கள் குறிப்பிட்டதைப் போல் தாங்கள் இப்போது குறிப்பிட்டதற்குப் பிறகுதான் எனக்குத் தெரியும், சோவியத் யூனியனுக்குச் சென்றுவர இருக்கிறார் என்றும், அவர்கள் இப்போது நடைபெற இருக்கிற உலகத் தொழிலாளர் தினமாகிய மே தினத்திலே பங்குகொள்ளப் போகிறார்கள் என்பது அவர்கள் சொன்னதற்குப் பிறகுதான் தெரியும். சோவியத் யூனியன், திரு. மனோகரன் அவர்களைத் தங்களுடைய அரசாங்கத்தின் சார்பாக அங்கே அழைத்து இருக்கிறார்கள் என்பது தமிழ் நாட்டிலே உள்ள மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் மிகவும் சிறப்பாக அமைந்திருக்கக்கூடிய ஒன்று என்று நான் கருதுகிறேன். குறிப்பாக, மே தினத்திலே ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும் ஏகபோக முதலாளித்துவத்தை எதிர்த்தும் உழைப்பாளி மக்களின் பரிபூரணமான விடுதலைக்காக போராடிக்கொண்டிருக்கிற அந்த மே தின வரலாறு உலக வரலாற்றின் மிகச் சிறந்த தினமாகும். உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் வந்து இருக்கக்கூடிய உழைப்பாளி மக்களோடு சேர்ந்து நண்பர் மனோகரன் அவர்கள் மே தினத்திலே பங்கெடுத்துக் கொள்வது நமக்குப் பெருமையளிக்கிறது. மாமேதை லெனினுடைய தலைமையிலே 1917 ஆம் ஆண்டிலே போல்ஷ்விக் கட்சி சமுதாயப் புரட்சியை நடத்தி அன்றைக்கு அந்த நாட்டிலே ஏகபோக மூலதனங்களோ, நிலப்பிரபுத்துவமோ, வட்டிக் கொடுமையோ இல்லாத ஒரு அமைப்பை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை நண்பர் மனோகரன் அவர்கள் நேரிலே பார்க்கமுடியும். கூட்டுப் பண்ணை விவசாயத்தை நடத்தமுடியுமா, தனியார்தான் விவசாயத்தை நடத்தமுடியும் என்று சொல்லிக்கொண்டிருக்கிற ஒரு நாட்டிலே எவ்வாறு கூட்டுப் பண்ணைகள் என்பது விரிவடைந்து சமுதாய இயக்கங்களாக நடைபெற்று விவசாய உற்பத்தியைப் பெருக்கி, கூட்டுப் பண்ணையைச் சேர்ந்த விவசாயிகளுக்கும் வருமானத்தை அதிகரித்து இருக்கிறது என்பதையும் தெளிவாகப் பார்க்கமுடியும்.

(பிற்பகல் 1-10)

தொழிலாளர்களுக்கே உரித்தான, அந்த நாட்டினுடைய எல்லா தொழிற்சாலைகளும் எல்லா நிலங்களும் ஒப்படைக்கப்பட்டு, சொத்தாக்கப்பட்ட ஒரு நாட்டில் எவ்வாறு உற்பத்தியானது வரவர அதிகரித்துக் கொண்டே இருக்கிறது என்பதையும் அவர்கள் பார்க்க முடியும்.

1979 ஏப்ரல் 26] [திரு. என். சங்கரய்யா]

விலைவாசி உயர்வைப் பொறுத்தவரையில் சோவியத் யூனியனும் மற்ற நாடுகளும் எவ்வளவு கட்டுப்பாடாக 20 ஆண்டுகளுக்கு முன்பிருந்த அதே விலைவாசி நிலவரத்தைத் தான் இன்றைக்கும் வைத்திருக்கிறார்கள் என்பதை அவர்கள் நேரிலே அறியமுடியும். அதிலும் குறிப்பாக, ஆசியா கண்டத்தைச் சேர்ந்த பல கிழக்கு நாடுகளும் சோவியத் சோஷலிச ஒன்றியத்திலே அடங்கியிருக்கின்றன. அந்த நாடுகள் மிகவும் பின்னடைந்த நிலைமையிலே, இந்தியா போன்ற நிலைமையிலே இருந்த நாடுகள் எல்லாம் சோஷலிசம் என்ற அமைப்பின் காரணமாக சிறப்பாக மாறியிருப்பதையும் அவர்கள் பார்ப்பார்கள் என்று கருதுகிறேன். இதர சோவியத் யூனியனிலேயுள்ள, ஆசிய குடியரசுகளுக்கும் அவர்கள் சென்றுவர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், செக்கோஸ்லோவாக்கியா என்ற சோஷலிச நாடும் சமீபத்திலே விடுதலை அடைந்து மாபெரும் முன்னேற்றங்களை அடைந்திருக்கிறது. அதேபோல், ஐரோப்பாவிலேயுள்ள மற்ற நாடுகளும் சிறப்பான ஒரு வளர்ச்சியையும் சரித்திரத்தையும் கொண்ட நாடுகள். இந்த சோஷலிச நாடுகளுக்கும் மற்ற நாடுகளுக்கும் அவர் செல்லக்கூடிய இந்தக் காரியமானது அவருக்கும் சிறப்பாகப் பயன்படும், தமிழ்நாடு அரசாங்கத்திற்கும் அது பயன்படும் என்று கருதுகிறேன்.

'சோஷியல் செக்யூரிட்டி' என்ற சமுதாயப் பாதுகாப்பு, உழைக்கும் மக்களுக்கு எவ்வாறு சோவியத் யூனியனிலும், சோஷலிச நாடுகளிலும் அமுலில் இருக்கிறது என்பதை மாண்புமிகு மனோகரன் அவர்கள் ஊன்றி கவனித்து வந்தால், இன்று தமிழ்நாட்டிலேயும் அப்படிப்பட்ட உழைப்பாளி மக்களுக்கு அந்தச் சமுதாய பாதுகாப்பு கொடுக்க நாம் என்ன செய்ய வேண்டுமென்பதற்கு ஒரு பேருதவியாக இருக்கும் என் கருதுகிறேன்.

ஆகவே, ஒரு நீண்ட சட்டமன்றப் பேரவையினுடைய கூட்டத் தொடர் முடிந்து, பல பிரச்னைகளிலே, நாம் எதிரும் புதிருமாக இருந்து மோதிக்கொண்டாலும், இன்றைக்குத் தமிழ் நாட்டு மக்களின் சார்பிலேதான் நாம் அப்படிப்பட்ட அரசியல் பணிகளிலே இறங்க வேண்டியிருக்கிறது என்பதை ஞாபகத்திலே வைத்து, இதனுடைய இறுதிக் கட்டத்திலே, இன்றைக்கு இந்தக் கூட்டத் தொடரினுடைய இறுதிக் கட்டத்திலே, மாண்புமிகு மனோகரன் அவர்கள் அந்தச் சுற்றுப்பயணம் செய்வது எல்லா வகையிலும் அவர்களுக்குப் பேருதவியாக இருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே, அந்தச் சுற்றுப் பயண

தின் விளைவாக தமிழ்நாட்டு மக்களுக்கும் நல்ல பல செய்திகளை அவர் தெரிவிக்க முடியும். அரசாங்கத்திற்கும் பல காரியங்களைச் செய்வதற்கு, மக்களுக்கு, உழைப்பாளி மக்களுக்குச் சாதகமான காரியங்களைச் செய்வதற்கு அது உதவியளிக்கும் என்ற முறையிலே, அவருடைய அந்தச் சுற்றுப் பயணத்தை மீண்டும் வாழ்த்தி, அவருடைய சுற்றுப் பயணம் இனிதாக, சிறப்பாக அமைய வேண்டுமென்ற என்னுடைய கருத்தைக் கூறி அமர்கிறேன், வணக்கம்.

(ஆ) பார்வையாளர் மாடத்தில் அமர்ந்திருந்த ஸ்ரீலங்கா அரசு கிராம தொழில்துறை அமைச்சர் திரு. தொண்டைமானுக்குப் பாராட்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஸ்ரீலங்கா அரசின் கிராமத் தொழில்துறை அமைச்சர் மாண்புமிகு தொண்டைமான் அவர்கள் இன்றையதினம் பார்வையாளர் மாடத்திலே இருந்து நம்முடைய மன்ற நடவடிக்கையை கவனிக்கிறார். அவருக்கு நமது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். (பலத்த ஆரவாரம்)

(அ) ரஷ்ய நாட்டிற்குச் செல்லும் அவை முன்னவருக்குப் பாராட்டு. (தொடர்ச்சி)

திரு. ஜே. ஜேம்ஸ்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் நமது அருமைக்குரிய நாஞ்சில் மனோகரன் அவர்கள் நாளையதினம் வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் மேற்கொள்ள இருக்கின்றார்கள். அதற்காக அன்னாரை வழி அனுப்புகின்ற முறையில், நாம் இங்கே ஆசிகூறி வழி அனுப்ப கடமைப்பட்டிருக்கிறோம். எனக்கு முன்னதாக அருமை நண்பர்கள் சிறப்பான பல கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறினார்கள். கடந்த இரண்டு மாத காலமாக, இந்த அவையில் பல்வேறு கருத்துக்களில் அரசோடு நாங்கள் மோதி, இன்றைய தினம் அவற்றையெல்லாம் மறந்து நம்மில் ஒருவராக நாஞ்சில் மனோகரன் அவர்கள் வெளிநாடு செல்ல இருக்கின்றார்கள் என்பதை அறிகின்றபொழுது, நிச்சயமாக இந்த அவையில் இருக்கின்ற அனைவரையும் விட நாங்கள் அதிக மகிழ்ச்சி அடைவோம் என்பதை இங்கே கூறாமலே, நீங்கள் அறிவீர்கள்.

எங்கள் மாவட்டத்திற்குச் சொந்தமானவரும்கூட (சிரிப்பு), எங்களில் ஒருவராகவும் இருக்கிறவர். ஒரு வேளை அவர் வெளிப்படையாக அதனை இந்த நாடு அறிந்துகொள்ளக் கூடாது என்று பல்வேறு சமயங்களில் முயற்சி எடுத்துக் கொண்டாலும் கூட அந்த எண்ணம் அவருக்கு இருக்கிறது

1979 ஏப்ரல் 26] [திரு ஜே. ஜேம்ஸ்]

என்பதை நாம் நன்றாக உணர்ந்திருக்கிறோம். ஆக அவர் போகின்ற நாடுகளில் எல்லாம் வெறும் மனோகரனாகப் போகாமல், நாஞ்சில் மனோகரனாகத்தான் போகிறார்கள் என்பதை எண்ணுகிறபோது, நாங்கள் மட்டும் அல்ல, எங்கள் மாவட்ட மக்கள் அனைவரும் நிச்சயமாக மகிழ்ச்சியடைவார்கள் என்பதை நான் இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அது மட்டும் அல்லாமல், இங்கே நான் சார்ந்திருக்கிற ஜனதா கட்சிக்கும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கட்சிக்கும் அல்லது அரசுக்கும், பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும்கூட அருமைக்குரிய நாஞ்சில் மனோகரன் அவர்கள் எங்கள் கட்சியிடமும் கட்சித் தலைவர்களிடமும் எந்த அளவுக்கு நெருங்கிப் பழகினார்—பழகுகிறார், எங்களிடம் எவ்வளவு நல்லெண்ணம் உள்ளவராக இருக்கிறார்கள் என்பதை நேற்றைய தினம் அவர் திறந்த மனத்தோடு எடுத்துக் கூறியதை நாம் அறிவோம். ஏற்கனவே அவர் பல தடவை வெளிநாடு சென்றிருந்தாலும்கூட, இந்த முறை அவர் வெளிநாடு செல்கிறார்கள் என்று சொன்னால் அதற்குஒரு தனித்தன்மை உண்டு என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பாராளுமன்றத்தில் அவர் இருந்தபோது கூட, பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்தாலும். இன்றையதினம் தமிழகத்தின் பிரதிநிதியாக செல்கிறார்கள் என்று சொன்னால் அது எவ்வளவு சிறப்பு வாய்ந்தது ஆகும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அவர் வெளிநாடுகளுக்குப் போகிறார் என்று சொல்கிறபோது, பல அரசியல் கொள்கை வேறுபாடுகள் உள்ள நாடுகளுக்கெல்லாம் செல்லவிருக்கிறார்கள். அப்படி அவர் செல்கின்ற நாடுகளில் இருக்கிற அரசியல் அமைப்புகளை அங்கே இருக்கிற மக்களின் வாழ்க்கைத்தரம் இவற்றையெல்லாம் நன்றாக அறிந்து அறிவுக் களஞ்சியமாக இங்கே திரும்பப் போகிறார்கள்.

சோவியத் நாட்டிற்குக் கூட செல்லவிருக்கிறார்கள். அங்கே குறிப்பாக மே தினத்திலே அவர் கலந்து கொள்ளவிருக் கிறார்கள் என்று கூறுகிறபோது நிச்சயமாக அங்கே தொழிலாளர்கள் வர்க்கம் எந்த அளவுக்கு இருக்கிறது, எந்த அளவுக்கு அவர்கள் சிறந்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்து அந்த முறையில் இந்த நாடு வெற்றியடைந்திடத் தக்க அனுபவத்தை அடைந்து வருவார்கள். அந்த வெளிநாட்டு அனுபவத்தைக் கொண்டு நமது மாநிலத்தில் இருக்கிற வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு, இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கிற வறுமையை விரட்டியடிப்பதற்குரிய வழி முறைகளையெல்லாம் தெரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1979 ஏப்ரல் 26

நமது மனோகரன் அவர்கள் அடுத்தபடியாக லண்டன் மாநகரத்திற்கும் செல்லவிருக்கிறார்கள். அங்கே சுதந்திரமாக பாராளுமன்றம் இயங்கும் முறைகளை, ஜனநாயகம் எந்த அளவுக்கு சிறப்பாக அங்கே செயல்படுகிறது என்பதை அறிந்து, இந்தச் சட்டமன்றம் கூட கட்டுப்பாடில்லாத முறையில், சிறந்த முறையில் செயல்படுவதற்கு அவர் அங்கே தனது அனுபவத்தை பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆக அந்த அனுபவத்தை எல்லாம் பெற்று, தெரிந்து வந்து நமக்கு, நமது தமிழகத்திற்கு பயன் உள்ளதாக ஆக்கமுடியும் என்பதில் நிச்சயமாக சந்தேகம் இல்லை. ஆகவே, இந்த நல்ல வாய்ப்பை பயன் படுத்திக் கொண்டு நமது தமிழகத்திற்கு பயன் உள்ளதாக அமைக்கிற வகையில் அவர் சொல்கிறார் அவர் தனிமையாகச் செல்லவில்லை அவருடைய துணைவியாரையும் அழைத்துத்தான் செல்கிறார்கள் என்று எண்ணுகிறேன். ஆகவே, அவர்கள் இருவரும் அவர்கள் செல்கிற வழியில் எல்லா நலன்களும் பெற்று வரவேண்டும் என்ற ஆசிகளையும், கூறி அவர்கள் பயணத்தை வெற்றிகரமாக முடிக்க வேண்டும் என்று இறைவனை விரும்பி வேண்டி அமர்கிறேன்.

(பிற்பகல் 1—20)

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடன் அன்போடும், நட்போடும் பழகக்கூடிய இனிய குணம் படைத்த நிதி அமைச்சர் அவர்கள் வெளிநாடு செல்கிறார்கள்; அதிலும் குறிப்பாக சோசலிச சமுதாய அமைப்பைக் கொண்டு இருக்கிற சோசலிச நாட்டிற்குச் செல்கிறார்கள். அவர்களுக்கு இது முதல் தடவையாக வெளிநாட்டுப் பயணம் இல்லை என்று சொன்னாலும்கூட, ஒரு நிதி அமைச்சர் என்கிற முறையில் ஒரு மாநிலத்தில் இருந்து வெளிநாட்டிற்குச் செல்லும் வாய்ப்பு முதன் முறையாக அவருக்கு இப்போது ஏற்பட்டு இருக்கிறது. இங்கே அவரைப் பாராட்டி பலர் பேசினார்கள். அவர்களோடு பங்கு கொண்டு நானும் அவர்களைப் பாராட்டிப் பேச வாய்ப்பு பெற்றமைக்கு பெருமை கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மதிப்பிற்குரிய தலைவர் கூறியது மாதிரி, நாட்டிலே பஞ்சம், பசி, வேலையில்லாத் திண்டாட்டம், இது போன்ற நிலைமைகளை ஒழித்த, ஒரு கம்யூனிச நாட்டிற்கு அவர்கள் செல்லும் இந்த நேரத்தில் இன்று அதிலும் குறிப்பாக, உழைப்பாளர்களின் மே தின விழாவை அங்கே கொண்டாடுகிற நேரத்தில், அவர்கள் அங்கே செல்கிறார்கள். அவர்கள் அங்கே சென்று, அங்கேயுள்ள சமுதாய அமைப்பில்

REPORTING SECTION

1979 ஏப்ரல் 26] [திரு. சோ. அழகர்சாமி]

உள்ள மாறுதல்களைக் கண்டு கொண்டு, அந்த நிலைமைகளை எல்லாம் தெரிந்து, நம்முடைய நாட்டிலும் இருக்கிற உழைக்கிற மக்களுக்கு இருக்கும் கஷ்டத்தைப் போக்கும் வகையில் இங்கேயும் அப்படிப்பட்ட ஒரு சமுதாயத்தை அமைக்க வேண்டும் என்கிற வகையில் அனைவரும் விரும்பினாலும்கூட அவர்கள் அப்படிக் கொண்டு வர என்னென்ன முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமோ அதை மேற்கொண்டு இங்கேயும் மக்கள் முன்னேற்றம் அடைய வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அத்தகைய ஒரு முயற்சி எடுக்க இந்தப் பயணம் வாய்ப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இன்றைக்கு அவர்கள் சோசலிச நாட்டிற்கும், மற்ற நாடுகளுக்கும் செல்கிறார்கள். அவர்களுடைய பயணம் வெற்றிகரமான முறையில் அமைந்து, அது நல்ல பயனை நமக்கு ஏற்படுத்தும் வகையில் பல நல்ல காரியங்களை செய்ய வாய்ப்பாக அமைய வேண்டும் என்கிற என் விருப்பத்தையும் தெரிவித்து, அவர்கள் பயணம் வெற்றிபெற, நல்ல பயன்பெற வாழ்த்துக்களைக் கூறி, என் வார்த்தைகளை முடித்துக்கொள் கிறேன். வணக்கம்.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே நாச்செல்வர், நாஞ்சிலார் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 4½ கோடி தமிழ் மக்களின் ஏக பிரதிநிதியாக உலகின் பல முக்கியமான நாடுகளுக்கு தனது துணைவியாரோடு மேற்கொள்ள இருக்கிற பயணத்திற்கு, மக்களின் நல்லெண்ணத்தோடும், இங்கேயுள்ள எல்லாக் கட்சித் தலைவர்களின் வாழ்த்துக் களோடும், என் வாழ்த்துக்களையும் இந்திய தேசிய பார்வார்ட் பிளாக்கின் சார்பிலே தெரிவித்து, இந்த வாய்ப்பு அளித்ததற்கு நன்றியையும் வணக்கத்தையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்களைப் பற்றி பல நல்ல கருத்துக்களை, எந்த அளவிற்கு அரசியல் கருத்துக்கள் பல கோணங்களில் நமக்குள்ளே வேறுபட்டாலும், நம்முடைய பிரதிநிதியாக, நல்லெண்ணத் தூதுவராக அவர் செல்கிறார் என்ற அளவிற்கு நமக்கு எல்லோருக்கும் மகிழ்ச்சி அளிக்கிறது என்பதை எடுத்துச் சொன்ன அத்துணை தலைவர்களின் நல்லெண்ணத்தோடும் சேர்ந்து நானும் என்னுடைய கட்சியின் சார்பாக வாழ்த்துக்களையும், நல்லெண்ணத்தையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அவர்கள் பண்பட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்து நல்ல முறையில் செயலாற்றியதோடு, வெளிநாடு சென்று பல அனுபவம் பெற்று இருந்தாலும், இன்று நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பலவிதமான சிக்கலைத் தீர்க்கக்கூடிய ஒரு நிலைமை,

அவசியம் ஏற்பட்டு இருக்கிறபோது, அவர்கள் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்கள். யு. எஸ். எஸ். ஆர். க்குச் செல்கிறார்கள். உழைக்கும் பெருமையால் மனிதன் எப்படி வாழ முடியும் என்பதை நிலை நிறுத்தி உலகுக்கு காட்டிக் கொண்டு இருக்கிற ஒரு நாட்டுக்கு செல்வதன் மூலம் இங்கே நாம் உழைப்பு, உழைப்பு என்று சொல்கிறோம். ஆனால் தொழிலாளர்கள் மத்தியில் பொறுப்பற்ற நிலைமை நிலவுகிறது. உழைப்பை, ஊதியத்தை, வருமானத்தைப் பெருக்கி அதிலிருந்து லாபம் நாட்டுக்குப் போகிறது, நாடு உயருகிறது. அங்கே உள்ள தொழிலாளர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்ற நிலையை தாங்கள் அருள் கூர்ந்து அறிந்து வந்து, முதலாளிகள், உழைக்கிறவர்கள், உழைக்காதவர்கள் என்ற வேறுபாடு இல்லாமல், தொழிலாளர்கள்—முதலாளிகள் நல்ல உறவோடு இந்த நாட்டில் வாழ, எந்த அளவிற்கு என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் கடந்தகாலத்தில் சினிமாவில் நடிக்கும்போது பாடிக் காட்டினார்களோ—எல்லாப் பொருள்களும் வைக்கப்பட்டு இருக்கும், அதனதன் விலை எழுதப்பட்டு இருக்கும். தேவையுள்ளோர் பொருளை எடுத்துக் கொண்டு, குறித்த காசை போட்டுவிட்டுச் செல்வார்கள் என்கிற அளவில் கடமை உணர்வோடும், நியாய உணர்வோடும் அந்த மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்று கண்டறிந்து, அந்த உணர்வு நமக்கு நடை முறையில் அரசியல் ரீதியாகச் செய்வதற்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், லண்டன் மாநகருக்குச் செல்கிறீர்கள். அந்த நாடு சோசலிச தத்துவத்திற்கு உகந்தது அல்ல. இருந்தாலும், நடைமுறையில் பாராளுமன்ற முறைகளை எந்த அளவிற்கு அவர்கள் முன்மாதிரியாகத் தந்து இருக்கிறார்கள் என்பதை அறியவும், பெடரல் சிஸ்டத்தில் அரசியல் அமைப்பை நாம் ஓரளவிற்கு அவர்களிடம் இருந்து எடுத்து இருக்கிறோம். அவைகளை நல்ல முறையில் அறியவும் வாய்ப்பாக இருக்க வேண்டும். நான் கேள்விப் படுகிறேன். அங்கே இருக்கிற போலீஸ் அதிகாரிகள் கேஸ் போடுவார்களாம். அதை அப்படியே அரசு கோர்ட்டில் ஒப்புக்கொண்டு தண்டனை விதிப்பார்களாம் நான் போனது கிடையாது.

அந்த அளவுக்கு இருக்கிறது என்றால் அந்த போலீஸ் அதிகாரிகளுடைய நாணயத்தைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். வாதாடுவதற்கு அவசியம் இல்லை. கொள்வார் இல்லையேல் கொடுப்பார் இல்லை என்று கம்பராமாயணத்தில் அயோத்தி பற்றி சொல்லும்போது அங்கே அந்த அளவுக்கு மக்கள் வறுமை இல்லாமல் மகிழ்ச்சியோடு வாழ்கிறார்கள் என்று சொல்கிறார். ஐயமிட்டு உண் என்றும் அதே நேரத்தில் அதற்கு நேர்மாறாக ஏற்பது இகழ்ச்சி என்றும் ஔவையார்

1979 ஏப்ரல் 26] [திரு. கே. கந்தசாமி]

குறிப்பிட்டிருக்கிறார். அங்கே பொய் கேஸ் போடுவது கிடையாது. அதனால் கோர்ட்டும் தேவையில்லை; வழக்கறிஞர்களும் தேவையில்லை. அப்படிப்பட்ட நிலையை இங்கும் கொண்டுவர முடியுமா, அதற்கு சாத்தியக்கூறு இருக்கிறதா என்பதை எல்லாம் அவர்கள் தெரிந்து வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

லண்டனை அடுத்து பாரிசுக்கும் ரோமுக்கும் செல்கிறார்கள். அந்த நாடுகளில் மதம் சம்பந்தப்பட்டவைகளில் அரசியல் தலையீடு கூடாது. தெய்வ நம்பிக்கைக்கும் அரசாங்கத்திற்கும் சம்பந்தமில்லை. அதே நேரத்தில் அங்கே தெய்வத்தை நம்புகிற ஒரு பிரதிநிதியைத் தலைவராகக் கொண்டு ஆட்சி நடக்கிறது. அப்படிப்பட்ட நாடுகளுக்கும் அவர்கள் செல்கிறார்கள். அங்கே அந்தத் தத்துவத்தை எப்படி நடைமுறைப்படுத்துகிறார்கள் என்பதைக் கண்டுவந்தால் அது இந்திய நாட்டுக்கு, குறிப்பாக நம்முடைய தமிழ்நாட்டுக்கு எந்த அளவுக்கு உகந்ததாக இருக்கும் என்பதை அறிந்து கொள்வார்கள் என்ற நமபிக்கை எனக்கு பரிபூரணமாக இருக்கிறது.

நீங்கள் செயல்வீரர் என்பதை புகழுரைக்காக சொல்லவில்லை. அதற்குக் காரணம் நேற்றே பார்த்தோம். இடர்பாடுகள் எவ்வளவு இருந்தாலும், சட்டமன்றத்திலே கருத்துச் சொல்லக்கூடிய நிலைமை இருந்தாலும் தன்னுடைய இனிய அறிவிப்புகளை அரசு ஊழியர்களுக்கு மட்டுமல்ல; சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவித்தீர்கள் என்பதைப் பற்றி மக்கள் மனதாரப் பாராட்டுகிறார்கள். மாண்புமிகு உமாநாத் போன்றவர்கள் கொள்கைக்காக அல்லது மக்கள் தன் பக்கம் வரவேண்டும் என்பதற்காக சொல்லலாமே தவிர நடைமுறையில் அவர்கள் சொல்வது சரியல்ல என்பது என்னைப் போன்றவர்களுக்குத் தெரியும். Charity must start from home என்பதிலே அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டவன் நான். To serve others I must have sufficient capacity ஆகையால் மற்றவர்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்று சொன்னால் முதலில் என்னை, என் குடும்பத்தை நிர்வகிக்கும் தகுதி பெற்றவனாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். வலு இல்லாதவனை போய் ஸ்போர்ட்சுக்குப் போ என்று சொன்னால் எப்படி முடியும்? ஆகவே, முதலில் தன்னை தகுதி உள்ளவனாக ஆக்கிக்கொண்டால்தான் மற்றவர்கள் மதிக்கும் நிலைக்கு தன்னை உயர்த்திக்கொண்டால்தான் நல்லது என்பதிலே மாண்புமிகு உமாநாத் போன்றவர்களுக்கும் கருத்து மாறுபாடு இருக்காது என்று கருதுகிறேன். அந்த வகையிலே நீங்கள் பல நல்ல அறிவிப்புகளைச் செய்திருக்கிறீர்கள். சில குறைபாடுகள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருந்தாலும் கூட எல்லோருக்கும் ஒரு நல்ல அறிவிப்பை செய்துவிட்டு வெளிநாடுகளுக்குச்

[திரு.கே.கந்தசாமி] [1979 ஏப்ரல் 26

செல்ல இருக்கிறீர்கள் ஜூலியஸ்சீசர் நாட்டினுடைய வெற்றியைப் பற்றிச் சொல்லும்போது, எப்படி வென்றார் என்பதைச் சொல்கிறார், Wen , saw and conquered என்று சொல்கிறார். சென்றேன், கண்டேன், வென்றேன் என்ற மூன்று வார்த்தைகளில் அழகாகச் சொல்கிறார். அதை நீங்கள் கவனத்தில் வைத்து, நீங்கள் சொல்லுகின்ற இடங்களில் எல்லாம் காண வேண்டும். கண்டவைகளை தன்னுடையதாக்கி, அதை தமிழ் நாட்டுக்குக் கொண்டுவரக்கூடிய திறமையையும், சக்தியையும் தங்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் தந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்து, விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு நேரத்தை சிறிது நீட்டிக்கிறேன்.

*திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களே தாங்கள் பல்வேறு அரசியல் அமைப்புகளைக்கொண்ட நாடுகளுக்கும், பல்வேறு வகையிலான அரசியல் முறைகளைக் கொண்ட நாடுகளுக்கும் பயணம் செல்வதாக இருக்கிறீர்கள். கம்யூனிச தத்துவத்தைக் கொண்டிருக்கிற நாடுகளுக்கும், சோஷலிச தத்துவத்தை, முடியாட்சிக் கொள்கையை, மதசார்புள்ள கொள்கையை கொண்டிருக்கிற பல நாடுகளுக்கும் செல்லும் போது தாங்கள் சென்று அந்த இடங்களையெல்லாம் பார்த்து, அதை உணர்ந்துகொண்டு வருகின்ற வாய்ப்பு ஒரு அரசினுடைய பொறுப்பிலே இருக்கிற தங்களுக்கு இருக்கிறது.

[பிற்பகல் 1-30]

வெளிநாடுகளுக்கு செல்வது என்பது எல்லோரும் செல்லலாம், ஆனால் சாதாரணமானவர்கள் அதாவது இந்த அரசின் ஆளுகைக்கு அப்பாற்பட்டவர்கள் செல்வதற்கும், தாங்கள் செல்வதற்கும் வித்தியாசங்கள் உள்ளன. மற்றவர்கள் செல்லலாம், பார்க்கலாம், உணரலாம். ஆனால் அதை அவர்கள் செயல்படுத்த முடியாது. ஆனால் தாங்கள் வகிக்கின்ற பொறுப்பிலே செய்ய முடியும். தமிழகத்தின் நிதியமைச்சர் என்ற பொறுப்பிலே இருக்கின்ற உங்களுக்கு, நீங்கள் பல தேசங்களிலே சென்ற அனுபவத்தின் வாயிலாக அறிந்து, அங்கே நடைபெறுகின்ற முறைகளைத் தெரிந்து அவற்றை இங்கே வந்து செயல்படுத்துவதற்குரிய வாய்ப்புக்கள் உங்களுக்கு இருக்கின்றன. அந்த வாய்ப்புக்களை நீங்கள் சரியாகப் பயன்படுத்திக்கொள்வீர்கள் என்பதில் எங்களுக்கு நிறைவான நம்பிக்கை இருக்கின்றது. ஒரு மனிதனுக்கு வயிறார உணவு தான் தேவை என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. சமீப காலத்திலே மக்கள் நிறைவான உணவைப் பெறவேண்டும்

1979 ஏப்ரல் 26] [திரு. ரா. மார்க்கபந்து]

என்கிற ஒரு கொள்கையின் அடிப்படையில், தாங்கள் செல்ல இருக்கின்ற மேலை நாடுகளிலே வெற்றி கண்டிருக்கிறார்கள். ஆனால் பல நாட்களாக பல ஆண்டுகளாக அந்த ஒரு தன்னிறைவைப் பெறவேண்டும் என்பதற்காக தமிழகமே துடித்துக்கொண்டிருக்கின்றது. வேலை கொடு, உணவு கொடு என்கிற கோஷத்தை விட்டுவிட்டு வேலை இருக்கின்றது. உணவு இருக்கின்றது என்கிற தன்மையிலே ரஷ்யநாடு நடந்து சென்று கொண்டிருக்கின்றது.

இந்த பட்ஜெட் கூட்டத்திலே தாங்கள், வேலை உண்டு உணவு உண்டு என்கிற ஒரு தத்துவத்தை தமிழக மக்களுக்கு அறிவித்திருக்கின்ற முறையில் நாட்டிலே சமத்துவத்தை உருவாக்குவதற்காக இந்த அரசு நடந்து செல்கிறது என்பதை நான் அறிகிறேன். அதைச் செயலாற்றுவதற்குரிய வாய்ப்புகள் உங்களுக்குக் கிடைத்திருக்கின்றன. நீங்கள் செல்கின்ற இடங்களிலே இருக்கின்ற மக்களின் வாழ்க்கை நிலையையும், அங்கே எல்லாம் எப்படி ஆட்சியை நடத்துகிறார்கள் என்பதையும், அங்கே எல்லாம் பிரச்னைகள் எப்படி தீர்க்கப்படுகின்றன என்பதையும் தொழிலாளி, முதலாளி பிரச்சினை இல்லை என்பதையும் நாம் அறிவோம். இங்கே எனக்கு முன்னாலே பேசிய திரு. கந்தசாமி அவர்கள் அங்கே உள்ள வழக்கு முறைகள் பற்றிச் சொன்னார்கள். அங்கே குறிப்பாக வழக்கு மன்றங்களுக்கு வேலை இல்லை, ஏனென்றால் ப்ராப்பர்ட்டி ரைட் இல்லாமல் ஆக்கப்பட்டிருக்கிறது. அங்கே சமுதாய ஒழுக்கக்கேடான குற்றங்கள் எல்லாம் இல்லாமல் ஆக்கப்பட்டிருக்கின்றது. அங்கே வழக்கறிஞர்களுக்கு வேலை இல்லை என்று சொன்னார்கள். அது வாஸ்தவம்தான். அங்கே ப்ராப்பர்ட்டி ரைட் இல்லாத காரணத்தினாலும் ஒழுக்கக்கேடுகள் இல்லாத காரணத்தினாலும் அங்கே வழக்கறிஞர்களுக்கு வேலை இல்லை என்று சொல்லப்படுகிறது. அங்கே வழக்கறிஞர்கள் அணிந்துள்ள கவுனில் ஒரு பவுச் என்பதை வைத்திருக்கிறார்கள். வழக்கு முடிந்த பிறகு பவுச் என்று சொல்லப்படுகின்ற அந்தப் பையிலே யாருக்காக வாதாடுகிறார்களோ அவர்கள் சிறப்பான முறையிலே வழக்காடியவருக்காக தக்க சன்மானத்தைப் போட்டுவிடுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் அங்கே இருக்கின்றன?

அடுத்து அங்கே இருக்கின்ற போலீஸைப்பற்றி எல்லாம் சொன்னார்கள். அதுபோன்ற சிறந்த நிர்வாகங்கள் பல தேசங்களிலே நடைபெறுவதை இங்கே அமலாக்குவதற்கு தாங்கள் மேற்கொண்டிருக்கின்ற சுற்றுப்பயணம் பயன்பட வேண்டும் என்று நான் சார்ந்திருக்கின்ற உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பாக எங்களுடைய மனமார்ந்த வாழ்த்துதலைத் தெரிவித்து அமைகிறேன்.

[1979 ஏப்ரல் 26

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவரவர்களே, மகிழ்ச்சிகரமான இந்த நேரத்தில் பேரவைத் தலைவராகிய தாங்கள் உங்களுடைய உள்ளன்பையும் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் மேற்கொள்ள இருக்கின்ற இந்த பயணம் சிறப்பாக வெற்றியாக மேற்கொள்ளவேண்டும் என்ற உங்கள் நல்லெண்ணத்தையும் வெளியிட்டீர்கள். உங்களை ஒட்டி இந்த அவையிலே உள்ள எல்லா கட்சித் தலைவர்களும் அத்தகைய வாழ்த்துக்களை நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சரவர்களுக்கு வழங்கி இருக்கிறார்கள். அவர்களோடு நானும் என்னுடைய உணர்வுகளை இணைத்துக்கொண்டு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் இந்த சுற்றுப்பயணம் சிறந்து விளங்க வேண்டும் என்றும் ஏற்கெனவே அவர்களுக்கு இருக்கின்ற அறிவாற்றலுக்கும் அனுபவத்திற்கும் அது மேலும் சிறப்பைச் சேர்க்கின்ற வகையில் அமையவேண்டும் என்றும் என்னுடைய சார்பாகவும் நான் சார்ந்துள்ள இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பாகவும் நான் என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் வாழ்த்து தெரிவிக்கக்கூடிய நிலையில் இல்லை. உண்மையாகவே அண்ணன் என்று நான்தான் சொல்வேன். அதை அவர் சொல்லக் கூடாது. அந்த வகையில் அண்ணன் என்ற முறையில் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு பான் வாயேஜ் என்ற வகையில் இந்தப் பயணம் அமைய வேண்டும் என்ற என்னுடைய மகிழ்ச்சியான விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு நாஞ்சிலார் அவர்கள் எனக்குப் பல ஆண்டுகளாக நண்பர் என்ற முறையிலே அல்ல, ஒரு அண்ணன் என்ற முறையிலும், தலைவர் என்ற முறையிலும், இருக்கக்கூடியவர்கள்.

நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது, அவரைத் தலைவராக வைத்து. அவர்கள் எங்கள் கல்லூரிக்கு வரவேண்டும் அவர்களுடைய பேச்சைக் கேட்கவேண்டும் என்று பெருவிருப்பம் கொண்டு, அவருடைய வீட்டைத் தேடி. ஒரு தேதியைத் தாருங்கள் என்று நாடிக் கொண்டிருந்த அப்பேர்ப்பட்டவர், எங்களுடைய உள்ளங்களைக் கவர்ந்த தலைவராக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இருந்தார்கள்; இப்போதும் இருந்து கொண்டிருக்கிறார்கள், மனோகரன் என்று சொன்னால், 'உள்ளத்தைக் கவர்பவர்' என்று பொருள். சமஸ்கிருத வார்த்தையில் 'மனோகர்' என்று சொன்னால், யார் விரும்பினாலும், விரும்பா விட்டாலும், விருப்பு வெறுப்பு இல்லாமல் இதற்கு அப்பாற்பட்ட ஒருவராக, விரும்புகிறவராக இருந்தாலும், அல்லது அவரை நேசிக்கக் கூடாது, என்று எவ்வளவுதான் நினைத்தாலும். நேசிக்கக்கூடிய வகையில் அமைந்த ஒருவரை 'மனோகர்' என்று கூறுவர் அப்பேர்ப்பட்ட இதயங்களைக் கவரக்கூடியவர்தான் நம்முடைய மாண்புமிகு நிதி

1979 ஏப்ரல் 26] [திரு. எம். ஏ. லத்தீப்]

அமைச்சர் அவர்கள். எவ்வளவு பெரிய கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், அவர் தம் பேச்சாலும், இன்சொல்லாலும், இன் முகத்தாலும் எல்லோரையும் அனைத்துச் செல்லக்கூடிய பாங்கில், எல்லோருடைய மதிப்பையும், மரியாதையையும், அனுபவத்தையும் இன்றைக்கு ஒட்டு மொத்தமாக பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால், அதிலே எங்களுக்கு எந்தவிதமான ஆச்சரியமும் இல்லை; விந்தையும் இல்லை.

அப்பேர்ப்பட்ட ஒரு நல்ல மனிதர், ஒரு நல்ல தலைவர் நிதி அமைச்சர் இன்று வெளிநாடுகளுக்கு செல்கின்றார்கள். அதற்கு நான் மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மூன்று முறையாக எங்கள் பிரதிநிதியாக பாராளுமன்றத்தில் இருந்திருக்கிறார்கள். வட சென்னையில் அவர்கள் போட்டியிட்டபோது அவர்களுக்காக வாக்கு வீடு வீடாக, தெருத்தெருவாக சென்று வாக்குகள் சேகரித்தோம் அவ்வாறு அவர்களுக்கு வாக்களித்து எங்கள் பிரதிநிதியாக 3 முறை பாராளுமன்றத்தில் மிகச் சிறப்பாக பணியாற்றிய ஒரு நல்ல பாராளுமன்றத் தலைவர் என்ற வகையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் திகழ்ந்தார்கள்.

பாராளுமன்றத்தில் இன்றைக்குக்கூட அவர்களுடைய அருமையான பேச்சை கவனித்துப் பார்க்கின்றார்கள். அவர்கள் பாராளுமன்றக் கட்சியின் தலைவராக இருந்து, அந்த மன்றத்தினுடைய சார்பாக ஆக்கத்தையும், ஊக்கத்தையும் தந்திருக்கிறார்கள். அவருடைய பேச்சு எவ்வளவு சிறப்பாக இருந்தது என்பதற்கு, ஆங்கிலத்திலே அவருடைய பேச்சு மிகச் சிறப்பாக இருந்தது என்பதற்காக, வடபுலத்திலே இருந்து வந்தவர்கள் எல்லாம் பெரும் பூரிப்போடு, சபையின் வெளியிலே சென்ட்ரல் ஹாலிலே இருந்தாலும், மனோகரன் பேசுகிறார்கள், போகலாம் என்று ஓடி வருவார்கள் என்று உறுப்பினர்கள் சொல்வார்கள். அவ்வளவு சிறப்பாக நம்முடைய தமிழகத்திற்கு பெருமையைத் தேடித் தந்திருக்கிறார்கள்.

இப்போது சோஷலிச நாடாகத் திகழும் ரஷ்யாவிற்கும், ஜனநாயகப் பாசறையாகத் திகழும் இங்கிலாந்திற்கும் நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் செல்வதோடு, ஆத்மீகத் துறையிலே உலகத்திலே ஒரு பெரும் சமுதாயத்திற்குத் தலைவர் வாழ்கின்ற வாடிகன் நகரத்திற்கும் அவர்கள் செல்கிறார்கள். ஆக அவர்கள், Spiritualism as well as materialism. He is seeking materialism and spiritualism என்ற வகையில், பௌதீக முன்னேற்றங்களையும் கண்ட நாடுகளைப் பார்க்கப் போகிறார்கள். அந்த நாடுகளைக் கண்டுவிட்டு வந்து, பிறகு

[திரு. எம். ஏ. லத்திப்] [1979 ஏப்ரல் 26

சோஷலிச நாடுகளைக் கண்டு, அங்குள்ள அனுபவங்களைப் பார்த்து, பிறகு மனதைப் பக்குவத்திற்கு உள்ளாக்குவதற்காக வாடிகன் நகரத்திற்கு வந்து, உலகத்தின் பெரும் சமுதாயத்திற்கு ஆன்மீகத் தலைவராக விளங்கும் போப் ஆண்டவர் அவர்களைப் பார்க்கப் போகிறார்கள்,

நீங்கள் ரஷ்ய நாட்டிற்குச் செல்லுங்கள். எங்கள் நாட்டில் தான், 'தனி ஒருவனுக்கு உணவு இல்லை எனில், ஜகத்தினை அழித்திடுவோம்' என்ற மாபெரும் தத்துவத்தை உருவாக்கினார்கள். அதேபோல், 'இறந்தும் உயிர்வாழ்தல் வேண்டின், பரந்து கெடுக உலகு இயற்றியான்' என்ற மிகப் பெரிய தத்துவத்தை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே எங்கள் நாட்டைச் சார்ந்தவர்தான், சோஷலிசத்திற்கு அடிப்படையை அமைத்துத் தந்தார். அவர்தான் வள்ளுவர் பெருந்தகை. எங்கள் தமிழகம், தமிழினம் மனித சமுதாயத்திலே சமத்துவத்தை நிலைநிறுத்துவதற்காகத் தான் வாழ்கிறது, அந்தத் தமிழகத்திலே இருந்து நான் வருகிறேன் என்று சொல்லுங்கள்

[பிற்பகல் 1-40]

அப்படி நீங்கள் அங்கே சொல்லுவதோடு, உங்கள் நடைமுறையை காண வந்திருக்கிறேன், நாங்கள் பல தத்துவங்களை உருவாக்கியிருக்கிறோம். நடைமுறையில் அவற்றில் கொஞ்சம் தொய்வு ஏற்பட்ட காரணத்தினால் எங்கள நாட்டில் ஏழ்மை இருக்கிறது, இந்த ஏழ்மை நிலையை அழித்துவிட்ட உங்கள் நாட்டில் என்னென்ன நடைமுறைகளை ஏற்படுத்தியிருக்கிறீர்கள். அதைப் பார்க்கத்தான் வந்து இருக்கிறேன் என்று சொல்லவேண்டும்.

இங்கிலாந்து நாட்டுக்குப் போகும்போது ஜனநாயகத்தினுடைய முதல் குரல் தோன்றியது நம்முடைய நாட்டில் தான். வள்ளுவத்தின் வாயிலாகவும், மற்ற நம்முடைய தமிழ் சாஸ்திரங்களின் வாயிலாகவும், ஜனநாயகத்தை உருவாக்கியவர்கள் தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள்தான். ஆகவே அப்பேர்ப் பட்ட நாட்டிலிருந்து வருகின்ற நான் உங்கள் நாட்டில் ஜனநாயகத்தைத் தெரிவிப்பதற்கும், ஜனநாயகத்தை கற்றுக் கொள்வதற்கும் வந்திருக்கிறேன் என்று சொல்லுங்கள்.

வாடிகன் நகருக்குப் போய் போப்பாண்டவரைப் பார்க்கும்போது, உலகத்திலேயே ஆஸ்திகத்தினுடைய இருப்பிடம் பாரத நாடு. உள்ள தூய்மையினுடைய ஆத்மீக உயர்வினுடைய கீதங்கள் பாடிய வானம்பாடிகள் தோன்றிய நாடு தமிழகம். நாயன்மார்களும், ஆழ்வார்மார்களும் சூஃபிகளும் தோன்றி இந்த நாட்டில் ஆத்மீகத்திற்கு வித்திட்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட நாட்டிலிருந்து நான் வந்திருக்கிறேன் உங்களைப் பார்க்க என்று போப்பாண்டவர் அவர்களிடத்தில் சொல்லவேண்டும். நீங்கள் இந்திய நாட்டினுடைய எல்லையை கடக்கும்போது . .

When you will be crossing the bo ders of India, you will cease to be a Tamilian. You will bet he accredited representative of the entire Nation. You will be the Ambassador of India You are going to the cradle of soc iarismthe grea Soviet Socialist Republic. Go there as an apostle of peace, as an ambassador of international tranquility and go there as an exponent of international amity and democracy and as a champion of international socialism. You will be going there only as an Indian and only as an ambassador of India and tell the countries in which you will be travellng that India stands for international peace, India stands for international understanding, India stands for international brotherhood and apernational sustenance peace, and tranquility. India is a friend no international peace. It does not want any prohferation of atomic energy. It is a friend of international understanding and nt any time it does not want to use the weapons, nuclear weapons tend weapons of mass-destruction. We stand for peace.

With this message, you will be going as a messenger of peace Even though you are not going there (abroad) for the first time. now you are going there in an official capacity. Let your officia, capacity be useful to project the image of India and to project the basic character of the great nation of Tamil; we stand for unity. But at the same time we do admit and we will have to admit the diversity of Indian sub - continent.

Therefore you want to be the best Indian because you are a true Tamilian; because of your true Tamilian character, you are the best Indian. So you will preach the true image of Tamil Nadu, true image of India and true character of the Nation of Tamil Nadu. With these words I bid good farewell and express very happy bon voyage, through Mr. Speaker to the Hon. Finance Minister who will be having his sojourn in the cradle of socialism, the great Soviet Republic and also England and other European countries and to the cradle of Spiritualism, our respected Pope.

With these words I conclude my speech.

திரு. ர. ஜெபமணி: சபாநாயகர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வெளிநாடு செல்லப் போகிறார்கள் என்று அறிந்து எல்லோரும் மகிழ்ச்சி அடைகிறார்கள். எல்லாத் தலைவர்களும் அவர்களை மனதார, உளமாற பாராட்டினார்கள். எனக்கு மெத்த மகிழ்ச்சியாக இருந்தது. இந்த அவையின் முன்னவராக இருக்கக்கூடிய நம்முடைய நிதிஅமைச்சர் அவர்கள், தமிழிலே ஒரு பழமொழி சொல்வார்கள்,

[திரு. ர. ஜெபமணி] [1979 ஏப்ரல் 26

'பதராத காரியம் சிதராது' என்று. எவ்வளவு பெரிய சங்கடங்கள்வந்தாலும், அவர் எப்போதும் நிதானத்தை இழந்தது கிடையாது. ரொம்ப நிதானமாக' அதே சமயத்தில் கொஞ்சமும் விட்டுக் கொடுக்காமல், தன்னுடைய கருத்துக்களை தாராள மாகவும், அதே சமயத்தில் மற்றவர்களுக்கு அது இலகுவாகப் புரியும்படியும் பேசுகின்ற முன்னவர் அவர்களைப் பார்க்கும் போதெல்லாம், அப்பேர்ப்பட்ட அமைதி எனக்கு ஏன் ஏற்பட வில்லை என்று அடிக்கடி நான் சிந்தித்தது உண்டு. அதற்குக் காரணம் என்ன? நல்லவை எங்கிருந்தாலும், அதைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசை உண்டு. நமக்குக் கிடைக்காமல் போய்விடுவதாக இருந்தாலும், நாம் பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவது அவசியம். எப்போதும் அவர் நிதானம் தவறியதில்லை. ஆத்திரத்தோடு ஏதாவது சொல்லிவிட்டால், அதைத் திருப்பிப் பெற முடியாது என்ற நல்லெண்ணம் இருப்பதால்தான், நிதானமாக எந்தக் காரியங்களையும் சிந்தித்து சீர் தூக்கிப் பார்த்து. அதே சமயத்தில் ஒழுக்கம் குறையாமல் பேசுவதைப் பார்க்கும்போது, இந்த மன்றத்திற்கே பெருமையாகும்.

இப்போது அவர் வெளிநாடுகளுக்கு செல்லயிருக்கிறார். அந்த நாடுகளிலே உள்ள நடைமுறைகளை அவர்கள் தெரிந்து வருவார்கள் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. நாம் எல்லா நாடுகளைப் பற்றி சிறிதளவு படித்திருக்கலாம், இன்னின்ன மாதிரி நடக்கும் என்று நினைத்துகூட இருக்கலாம். வேடிக்கைப் பார்ப்பதற்கோ, விளையாடுவதற்கோ செல்வதுண்டு. ஆனால், ஒரு நாட்டின் மேல்பகுதியிலே உள்ளவர், ஒரு நாட்டின் நிதி அமைச்சர், இந்த நாட்டிற்கு நிதி நிலை எப்படி இருக்க வேண்டும், இந்த நாட்டு மக்கள் வளர்ச்சி எப்படி இருக்க வேண்டும், இந்த நாட்டிலுள்ள மக்கள் ஒழுக்கம் குறையாமல், தூய பழக்க வழக்கங்களோடு எப்படி வாழ வேண்டும் என்பதையெல்லாம் பல நாடுகளைச் சுற்றி வரும் போது, அவர் ஒரு நல்ல முடிவுக்கு வர முடியும். அதை நிதி அமைச்சர் அவர்கள் நிச்சயம் பெற்று வருவார்கள் என்பதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

அவர்கள் சென்று வரும்போது, சோவியத் நாட்டுக்குச் செல்கிறார்கள். அந்த நாட்டினுடைய பொருளாதார அமைப்பு, அந்த நாட்டினுடைய மக்களுடைய ஜனநாயக அமைப்பு, அங்கே எப்படி இருக்கிறது என்பதை நேரிலே தெரிந்து வந்து சொன்னால், நாமே நேரில் பார்த்த மாதிரி ஒரு உணர்வு ஏற்படும். இப்போது எதையும் தூக்கியும், தாக்கியும் என்னால் பேச முடியாது. ஆனால் நிதானமாக ஒருவர் போய் நேரிலே பார்த்து வந்து சொல்லும்போது, அது உண்மை என்று புரியும்.

அதேமாதிரியாக, ஜனநாயகத்தின் பிறப்பிடம் என்று சொல்லக்கூடிய இங்கிலாந்து நாட்டிற்கும் அவர்கள் செல்கி றார்கள். அங்கே உள்ள அமைப்பு எப்படி இருக்கிறது,

1979 ஏப்ரல் 26] [திரு. ர. ஜெபமணி]

அங்கே மக்கள் எவ்வளவு சுதந்திரமாகச் செயல்படுகின்றார்கள், எண்ணுகின்றார்கள், எழுதுகின்றார்கள், பேசுகிறார்கள், அங்கே மனித உரிமை எந்த அடிப்படையில் பாதுகாக்கப்படுகின்றது என்பதை எல்லாம் தெரிந்து வந்தால், மனிதரில் மனிதர் உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்றில்லாமல், எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் மக்கள்தான் என்ற நல்லுணர்வையும் அந்தந்த நாடுகளிலே இருக்கின்ற நல்லவைகளையெல்லாம் கண்டு, கடைசியாக ஆண்டவனைச் சந்தித்து தரிசிப்பதுபோல், போப் ஆண்டவர் அவர்களை தரிசிக்கப் போகிறார்கள். நாம் எங்கே சென்று வந்தாலும், சந்திர மண்டலத்திற்கே சென்று இறங்கிய முதல் மனிதன் ஆம்ஸ்ட்ராங் கூட, இறங்கி வந்தவுடன், பாதிரியாகப் போய்விட்டான். காரணம், எங்கும் எனக்கு ஆத்ம சாந்தி கிடைக்கவில்லை. எவ்வளவுதான் வாழ்க்கை வசதி கிடைத்தாலும், மனதிலே சாந்தி, சமாதானம் இல்லாவிட்டால் எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை என்ற காரணத்தினால், பாதிரியாக மாறிவிட்டான்.

கடைசியாக நீங்கள் போப் ஆண்டவரைப் பார்க்கப் போகிறீர்கள், அப்படிப் பார்த்து வரும்போது, அந்த தெய்வ பக்தியோடு வாருங்கள்; தேச பக்தியோடு வாருங்கள். அப்படி வரக்கூடியதற்கு இறைவன் உங்களுக்கு எல்லாவிதமான சௌகரியங்களையும், தீர்க்கமான ஆயுளையும், திடகாத்திரமான உடம்பையும் அருள வேண்டும் என்று இறைவனை வணங்கி, விடை பெறுகிறேன். வணக்கம். ஜெய் ஹிந்த்.

(பிற்பகல் 1-50)

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நாளைக்கு வெளிநாடு செல்ல இருக்கும் என்னை இதய சுத்தியோடும், பாச உணர்ச்சியோடும் நீங்கள் வாழ்த்தி சென்று வாருங்கள், வென்று வாருங்கள், என்று கூறியிருக்கிறீர்கள் அப்படி வாழ்த்துக் கூறியபோது 'எனது அண்ணன் சென்று வரட்டும்' என்று வாஞ்சையோடு நீங்கள் சொன்னீர்கள். அப்படியாவது உங்களது வயது என்னை விடக் குறைவாக வராதா என்ற உற்சாகத்தோடு பேசியிருக்கிறீர்கள்; எனினும் ஊர் நம்பப்போவதில்லை உங்களது இதயத்திலிருந்து வெளி வந்த அத்தனை வார்த்தைகளும் எந்த அளவுக்குப் பாசத்தின் அடிப்படையில் பிறந்தவைகள் என்பதை நான் ஒரு கணம் எண்ணிப்பார்க்கிறேன்.

நீங்கள் மட்டுமல்லாமல் இங்கே பேசிய கட்சிகளின் மூத்த தலைவர்கள் எல்லாம் எந்த அளவுக்கு என்மேல் பாசம் வைத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக இந்த ஒரு சந்தர்ப்பத்தை பார்க்கிறேன். சில நேரங்களில் என்னைக் கோபத்தோடு கவனிக்கிற தலைவர்களும், எனது கருத்துக்களுக்கு மறு கருத்துக்களைத்

தெரிவிக்கிறபோது ஆவேசத்தோடு நோக்குகிற தலைவர்களும், இன்றைக்கு என்னை வழி அனுப்பி வைக்கிற இந்த நேரத்தில் பேசிய பேச்சுக்களைக் கவனிக்கிறபோது அவர்களது உள்ளத்தில் என்னைப் பற்றி எந்த அளவுக்கு ஆசை வைத்திருக்கிறார்கள், என்பதை நான் நினைத்துப் பார்த்து உண்மையிலேயே பூரிப் படைகிறேன்.

மதிப்பிற்குரிய இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த தலைவர் மாரிமுத்து அவர்கள் பேசும்போதும், எனது பெரு மதிப்பிற்கும் பாசத்திற்கும் உரிய பெரியவர் சங்கரய்யா அவர்கள் பேசும்போதும், அதேபோல் அருமை கந்தசாமி அவர்கள் பேசும்போதும், மாவட்ட உரிமை பாராட்டி அன்பைக் கொட்டிய அருமை நண்பர் ஜேம்ஸ் அவர்கள் பேசியபோதும் மார்க்கபந்து அவர்கள் மன மகிழ்ச்சியோடு தனது வாழ்த்துக் களைத் தெரிவித்தபோதும், எனது பெருமதிப்பிற்குரிய லத்தீப் அவர்கள் இரு மொழிக் கொள்கையின் அடிப்படையில் எனக்கு இரண்டு மொழிகளிலும் வாழ்த்துச் சொன்னபோதும், எல்லா வற்றுக்கும் முத்தாய்ப்பு வைக்கின்ற வகையில் பெரியவர் ஜெபமணி அவர்கள் பேசியபோதும் (குறுக்கீடு) நான் யாரையும் மறக்க மாட்டேன்—சோஷலிச சமுதாயத்திற்கு அடிப்படையாக அமைந்துவிட்ட ஒரு பெரிய நாட்டுக்கு நீங்கள் செல்லு கிறீர்கள், அங்கே நீங்கள் கற்றுக்கொண்டு வரவேண்டியவைகள் ஏராளம் என்று சொல்லி எனக்குப் புத்திமதி சொல்வதற்குத் தகுதி படைத்த அழகிரிசாமி அவர்கள் பேசியபோதும் நான் நெஞ்சம் நெகிழ்ந்தேன் என்பதையும் அவர்களுக்கு எப்படி வார்த்தைகளால் அவர்களைப் பாராட்டுவது என்று தெரியாமல் திகைக்கிறேன் என்பதையும் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு இருக்கிற ஒரே குறை—எதிர்கட்சித் தலைவராக இருக்கிற டாக்டர் கலைஞர் அவர்கள் இங்கே இருந்து என்னை வாழ்த்தி அனுப்பவில்லையே என்ற கவலை எனக்குண்டு, ஆனால் அவர் எங்கிருந்தாலும் நிச்சயமாக மானசீகமாக என்னை வாழ்த்துவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அவரது வாழ்த்துக்களையும் பெற்றுத்தான் நான் நாளைக்கு விடைபெற இருக்கிறேன் என்பதை உங்கள் அனைவருக்கும் தெரிவிக்க விரும்புகிறேன்.

செல்லுகின்ற நாடுகளில் எல்லாம் நிறையக் கற்று வாருங்கள் என்று நீங்கள் எல்லோரும் பொதுவாகச் சொன் னீர்கள். யோசனை கூறினீர்கள், அறிவுறை பகன்றீர்கள். ஆனால் நான் ஒவ்வொரு நாட்டிலும் குறிப்பிட்ட நான்கு நாட்கள் அல்லது மூன்று நாட்கள் என்ற அளவில் தான் இருக்கிறேன் என்பதையும் அந்தக் குறிப்பிட்ட நாட்களுக் குள்ளாக எந்த அளவுக்குக் கற்றுக்கொள்ள முடியுமோ அந்த

1979 ஏப்ரல் 26] [திரு. கி. மனோகரன்]

அளவுக்குக் கற்றுக்கொள்ள முயற்சிப்பேன் என்பதையும், தமிழகத்தின் பண்பை, இந்தியத் துணைத் கண்டத்தின் தரத்தை அல்லது தகுதியை அல்லது உயர்வை உயர்த்தத்தக்க வகையில் எனது பயணத்தை அமைத்துக் கொள்வேன் என்பதையும் இந்த அவைக்கு அடக்கத்தோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

அனைத்துக் கட்சிகளும் என்னைப் பாராட்டினார்கள். அவர்கள் அனைவருக்கும் எனது அன்பை மீண்டும் ஒரு முறை தெரிவிக்கிறேன். அந்த நட்பும் பாசமும் பட்டுப் போகாமல் நிச்சயமாக காலம் காலமாக வளரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதற்கு ஒவ்வொரு உறுப்பினரும் தலைவர்களும் உறுதுணையாக இருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். பெரியவர் இறுதியிலே பேசிய பேச்சு என்னை பெருமளவிற்கு ஈர்த்துவிட்டது என்பதை நான் ஒருமுறை கூட சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். திரும்பி வரும்பொழுது போப்பாண்டவரைப் பார்த்துவிட்டு நீங்கள் திரும்பி வரும் பொழுது தெய்வ நம்பிக்கையோடு வாருங்கள் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் அந்தப் பெரியவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் தெய்வத்தோடு சண்டை போடுபவன் அல்ல. ஆனால் தெய்வம் நமக்கு இட்டிருக்கிற கட்டளை மனிதர்களை வாழவைப்பதற்குத் திட்டம் தீட்டி அந்த ஏழையின் சிரிப்பில் இறைவனைப் பார்ப்பதற்கு நீ முயற்சி செய் என்று சொன்ன அந்தக் கடமையை ஒரு அரசியல் கட்சி என்ற முறையில் நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம் என்பதை பெரியவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நல்லவேலை பாதிரியாக திரும்பி வா என்று சொல்லாமல் இருந்தாரே என்பதற்காக மகிழ்ச்சி. திரு. கந்தசாமி அவர்கள் பேசும்பொழுது அருமையான அறிவிப்பைச் செய்தீர்கள். இன்றைக்கு மகிழ்ச்சியோடு அனுப்புகிறேன் என்று சொன்னார். அறிவிப்புச் செய்யாமல் போனால் பாராட்டாமல் விட்டு விடுவார்கள் என்று கூட நான் கருதவில்லை என்பதையும் அந்த அறிவிப்பைச் செய்யாவிட்டாலும் அவர் பாராட்டுகிற உள்ளம் படைத்தவர் என்பதையும் நான் தெரிவித்து அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் உறுப்பினர்களும் சபாநாயகராகிய உங்களுக்கும் எனது இதய பூர்வமான வணக்கத்தையும் தெரிவித்து நன்றியையும் கூறி அமர்கிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-57 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(9) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்—

எதுவுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

*197. உடுக்குறியிடாத வினா—விடை பட்டியல் (751 முதல் 850 வரை).

** 198. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1978—79 மற்றும் 1979—80 ஆம் ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கைகள் குறித்தும் 1977-78 மற்றும் 1978-79 ஆம் ஆண்டுகளுக்கான துணை நிதி நிலை அறிக்கைகள் குறித்தும் விவாதத்தை தொடங்கி வைத்து மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்).

* 24-4-1979 அன்று பேரவைமுன் வைக்கப்பெற்றது.

** 25-4-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு.

[..75-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1978-79 மற்றும் 1979-80ஆம் ஆண்டுகளுக்கான நிதி நிலை அறிக்கைகள் குறித்தும் 1977-78 மற்றும் 1978-79ஆம் ஆண்டுகளுக்கான துணை நிதி நிலை அறிக்கைகள் குறித்தும் தமிழ்நாடு சட்ட மன்றத்தில் விவாதத்தை தொடங்கி வைத்து மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள் ஆற்றும் உரை:—

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே:

அவை முன் வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின் வாரியத்தின் 1978-79 மற்றும் 1979-80ஆம் ஆண்டுகளுக்கான நிதி நிலை அறிக்கைகளையும் 1977-78 மற்றும் 1978-79ஆம் ஆண்டுகளுக்கான துணை நிதி நிலை அறிக்கைகளையும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன்.

ஒவ்வொரு ஆண்டும், ஆண்டு நிதி நிலை அறிக்கையை நிதியாண்டின் மத்தியில் பேரவை முன் வைப்பது வழக்கமாக உள்ளது. இதற்கிணங்க 1978-79ஆம் ஆண்டின் அறிக்கை 1978ஆம் ஆண்டு செப்டெம்பர் திங்கள் 7ஆம் நாளன்று அவை முன் வைக்கப்பட்டது. ஆனால் இப்போது 1979-80ஆம் ஆண்டின் அறிக்கை நிதியாண்டின் தொடக்கத்திலேயே மாண்பு மிகு உறுப்பினர்களின் முன்னிலையில் உள்ளது.

2. தமிழ்நாடு மின் வாரியம், தமிழ்நாடு மின்சார ஆலோசனைக் குழுவின் ஒப்புதலுடன், இந்த நிதி நிலை அறிக்கைகளை 1948 ஆம் ஆண்டு மின்சாரச் (வழங்கல்) சட்டத்தின் 61ஆவது பிரிவின்படி, அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது. மின்வாரியம் செயல்படுவது பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் தெரிவித்துள்ள கருத்துக்களை அரசும் வாரியமும் கவனத்தில் கொள்ளும். மின் வாரியத்தின் 1977-78ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை பற்றி இந்த அவையில் நடைபெற்ற விவாதத்தின் போது மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் மீது வாரியம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை விளக்கும் அறிக்கை மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு தனியே அனுப்பப் பட்டுள்ளது.

[1979 ஏப்ரல் 26

3. தமிழ்நாடு மின் இணைப்பு ஏற்பாட்டின் மொத்த நிறுவுத் திறன் 2,509 மெகாவாட் ஆகும். இது 1977-78ஆம் ஆண்டைக் காட்டிலும் 85 மெகாவாட்டும், 1976-77ஆம் ஆண்டைக் காட்டிலும் 145 மெகாவாட்டும் உயர்ந்துள்ளது. 18 புனல் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து கிடைக்கும் 1,369 மெக்கா வாட் மின் உற்பத்தியும் இரண்டு அனல் மின் நிலையங்களி லிருந்து கிடைக்கும் 540 மெகாவாட் மின் உற்பத்தியும், மத்திய அரசு நிறுவனமான நெய்வேலி அனல் மின் உற்பத்தி நிலையங் களிலிருந்து கிடைக்கும் 600 மெகாவாட் மின் உற்பத்தியும் இதில் அடங்குகிறது. இது, தென் வட்டாரத்தில் உள்ள மின் உற்பத்தி நிலையங்களின் மொத்த நிறுவுத் திறனில் சுமார் 40 சதவீதமாகும்; நாட்டிலுள்ள மின் உற்பத்தி நிலையங்களின் மொத்த நிறுவுத் திறனில் 9 சதவீதமாகும்.

1978ஆம் ஆண்டு நவம்பரில் மின்சார உச்சத் தேவை 1,779 மெகாவாட் அளவை எட்டியது; இது 1977-78 இல் 1,641 மெகாவாட் ஆகவும் 1976-77 இல் 1,313 மெகாவாட் ஆகவும் இருந்தது. தென் வட்டாரத்தில் மின்சார உச்சத் தேவையானது 1978 நவம்பரில் 4,004 மெகாவாட் ஆகவும் 1977-78 இல் 3,717 மெகாவாட் ஆகவும் இருந்தது. தமிழ்நாட்டின் மின் இணைப் பின் உச்சத் தேவை தென் வட்டாரத்தின் உச்சத் தேவையில் சுமார் 44 சதவீதமாகும்.

1977-78-ல் மொத்த மின் உற்பத்தி 9,448 மில்லியன் யூனிட்டுகள் ஆகும்; இதில், வாரியம், உற்பத்தி செய்த மின் சாரம் 5,620 மில்லியன் யூனிட்டுகள். நெய்வேலி, கேரளம் மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து வாங்கிய மின்சாரம் 3,828 மில்லியன் யூனிட்டுகள், 1976-77இல் வாங்கப்பட்டது உட்பட 8,350 மில்லியன் யூனிட்டுகள் இருந்தது. 1977-78-ல் மொத்த மின் உற்பத்தி, தென் வட்டார மின் உற்பத்தியில் சுமார் 42 சதவீதமாகும். இம்மாநிலத்தின் மின்சார உச்சத் தேவை, மின் உற்பத்தி ஆகியவை நாட்டின் உச்சத் தேவையி லும் உற்பத்தியிலும், முறையே 10·00 சதவீதமும் 9·57 சதவீத மும் ஆகும். மின்சாரத்தைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 1978-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் நிலவரப்படி 34·09 இலட்சமாகும். அந்த எண்ணிக்கையில், வீட்டுப் பணிகளுக்காக மின்சாரத்தைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 18·58 இலட்சமும், வேளாண்மைப் பணிகளுக்காக மின்சாரத்தைப் பயன்படுத்துவோர்களின் எண்ணிக்கை 8·06 இலட்சமும், தொழில் மற்றும் எஞ்சிய பல்வகைப் பணிகளுக்காக மின்சாரத் தைப் பயன்படுத்துவோர்களின் எண்ணிக்கை 1·41 லட்சமும் ஆகும். நாளொன்றுக்கு செய்யப்படும் உயர்ந்தளவு மின் உற்பத்தி 32·67 மில்லியன் யூனிட்டுகள். வேளாண்மைத் துறை யால் 24·0 சதவீத மின்சாரமும், தொழில் துறையால் 47 சதவீத மின்சாரமும், வீட்டுப் பணிகளுக்காக 7 சதவீத மின்சாரமும்,

1979 ஏப்ரல் 26]

ஏனைய வகை பணிகளுக்காக எஞ்சிய சதவீத மின்சாரமும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே தமிழ் நாட்டில்தான் அதிக அளவில் மின் தொடர்புகள் உள்ளன. 2.94 இலட்சம் கிலோ மீட்டர் நீளத்திற்கு மின்சாரம் அனுப்பும் கருவித் தொடர்களும் 324 கூடுதல் மிக உயர் அழுத்த/உயர் அழுத்த துணை மின் நிலையங்களும், 43,650 பங்கீட்டு மின் அழுத்த மின் மாற்றிகளும் இங்கு உள்ளன. மொத்த கிராமங்களில் சிற்றூர்களில் 98 சதவீதத்திற்கு மேற்பட்டு அதாவது 64,198 கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும், 24,526 அரிசன குடியிருப்புகளுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு உயர்ந்தளவு எண்ணிக்கையான 8.43 இலட்சம் விசையேற்றங்களுக்கு மார்ச்சு 1979 வரை மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இது, நாட்டில் உள்ள விசையேற்றங்களில் 24.57 சதவீதத்திற்கு ஒப்பாகும்.

4. மின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதற்கான அவசியம் மாநில அரசின் கவனத்தில் தொடர்ந்து முன்னுரிமை அளிக்கப்பெற்று வருகிறது. தற்போதுள்ள மின் நிலையங்களில் விரிவாக்கப்பணி, குந்தா மின் நிலையத்தின் 4 ஆவது கட்டத்தின் கீழ் அண்மையில் முடிவடைந்தன. இதனால், மின் இணைப்பின் உச்ச திறன் 110 மெகாவாட் சேர்ந்துள்ளது. இவ்வாண்டு திட்டமிட்டபடி சுருளியாற்றில் 35 மெகாவாட் நிறுவுத் திறனுடன் ஒரு புதிய மின் நிலையம் ஒன்றும் அண்மையில் தொடங்கப்பட்டுள்ளது, தூத்துக்குடி அனல் மின் நிலையத் திட்டத்தின் முதற்கட்டப் பணிகள் முன்னேற்றக் கட்டத்தில் உள்ளன. முதல்பிரிவு, இவ்வாண்டில் செயல்படத் தொடங்கும்.

5. 1978 ஆம் ஆண்டில் மின் உற்பத்தி, சுமார் 10,580 மில்லியன் யூனிட்டுகளாக உள்ளது. இது 1977ஆம் ஆண்டில் இதே காலத்தில் 8,892 மில்லியன் யூனிட்டுகளாக இருந்தது. இது 18.98 சதவீத உயர்வினைக் காட்டுகிறது.

வருகிற ஆண்டுகளில் இம்மாநிலத்தில் 10-லிருந்து 15 சதவீத மின்சக்தி அதிகரிப்புக்கான வாய்ப்பு உள்ளது. இந்த அம்சம் இந்திய அரசு அமைத்துள்ள 11ஆவது ஆண்டு மின் ஆய்வுக் குழுவின் ஒப்புதலுக்காக வலியுறுத்தப்படும்.

6. அமைக்கப்பட்டு வரும் மின் உற்பத்தி நிலையங்கள், செயல்பட்டு வரும் மின் உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றின் முன்னேற்றத்தையும் செயல் திறனையும் ஆய்வு செய்வதற்கென எனது தலைமையின்கீழ் அண்மையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அனல் மின் உற்பத்தி நிலையங்களில் மின் உற்பத்தியை எந்த அளவு உயர்த்த இயலுமோ அந்த அளவுக்கு உயர்த்துவது பற்றி வாரியமும், அரசும் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகின்றன. 450 மெகாவாட் திறனுள்ள எண்ணூர் அனல் மின் உற்பத்தி நிலையம், சீரமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்ட பிறகு, தன் செயல் திறனைப் பெருக்கியுள்ளது. இந்த மின் உற்பத்தி நிலையத்தில் 1978 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 8ஆம் நாளன்று மின் உற்பத்தி மிக உயர்ந்த அளவான 440 மெகாவாட்டை எட்டியது. 1977-78ஆம் ஆண்டில் மின் உற்பத்தி 1,430 மில்லியன் யூனிட்டுகளாக இருந்தது. 90 மெகாவாட் திறனுள்ள பேசின் பிரிட்ஜ் மின் நிலையத்தின் பழைய பிரிவுகளைப் புதுப்பித்ததன் மூலம் மேம்பாடுகள் செய்யப்பட்டு, 1977-78ஆம் ஆண்டில், மின் உற்பத்தி அளவு 76.5 மெகாவாட் அளவை எட்டியது.

7. தூத்துக்குடி அனல் மின் திட்டம் (3×210 மெகாவாட்); சேர்வலாறு புனல் மின் திட்டம் (20 மெகாவாட்); காடம்பாறை நீரேற்று சேமிப்புத் திட்டம் (4×100 மெகாவாட்); கீழ் மேட்டூர் புனல் மின் திட்டம் (120 மெகாவாட்): சென்னை அணுமின் திட்டம் (2×235 மெகாவாட்) போன்ற நடந்தேறி வரும் திட்டங்களை முடிப்பதன் மூலம் மாநிலத்தின் மின் உற்பத்தி நிலைமை மேலும் மேம்பாடடையும். மாநிலத்தின் நீண்டகால மின் தேவையைக் கருத்தில் கொண்டு ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட ஆறு திட்டங்களை நிறைவேற்றுவது தவிர 6-வது வரைவு திட்டத்தில் (1978-83) 17 புதிய திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. தொடர்ந்து நிறைவேற்றி வரும் நான்கு திட்டங்களும் இந்த காலத்தில் முடிக்கப்படும். சென்னை அணுமின் திட்டம், நெய்வேலி இரண்டாவது சுரங்க அனல் மின் நிலையம் ஆகிய இரண்டு மத்திய திட்டங்களும் மாநிலத் திட்டத்தில் அடங்கா. மேற்சொன்ன திட்டங்களின் மொத்த நிறுவனத் திறன் 5,503 மெகாவாட்டாகும். இதில் 2,095 மெகாவாட் திறன் 6-வது திட்டத்தில் சேர்க்கப்படும். எஞ்சிய 3,408 மெகாவாட் 6ஆவது திட்டத்திற்குப் பின்னர் சேர்த்துக்கொள்ளப்படும்.

8. திட்ட ஆணைக் குழுவிடமிருந்து இசைவு கிடைக்கப் பெறுவதை எதிர்ப்பார்த்து, கீழ் மேட்டூர் புனல் மின் திட்டப் பணிகள் (120 மெகாவாட்) எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மேல் அமராவதி புனல் மின் திட்டம் 30 மெகாவாட்) சண்முகாநதி புனல் மின் திட்டம் (30 மெகாவாட்) ஆகியவற்றிற்காகத் திட்ட ஆணைக் குழுவின் ஒப்புதல் விரைவில் கிடைக்கப்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

9. ஆறாவது, அய்ந்தாண்டுத் திட்டத்தில் மின்சாரத்தை அனுப்புதல் வழங்குதல் திட்டன்கீழ் 100-க்கு மேல் கூடுதல் உயர் அழுத்த மின் கம்பித் தொடர்களை நிறுவக் கருதப்படுகிறது.

1979 ஏப்ரல் 25]

இவற்றில் 400 கே. வி. திறன் கொண்ட 730 கிலோ மீட்டர் தூரம் உள்ள 6 மின் கம்பித் தொடர்களும், 230 கே. வி. திறன் கொண்ட 1,040 கிலோ மீட்டர் தூரம் உள்ள 20 மின் கம்பித் தொடர்களும் அடங்கும். மாநிலத்தில் முதன் முதலாக 400 கே. வி. திறன் கொண்ட மின் கம்பித் தொடர்கள் அமைக்கப்படும். இவை உபரியான மின்சாரத்தை ஆந்திரப் பிரதேசத்திலிருந்து பெறுவதற்கு நமக்கு உதவி புரிவதோடு, இயக்குதலை நிலைப்படுத்தவும் இது உதவும். 400 கே. வி. திறன் கொண்ட 5 மின் நிலையங்கள், 230 கே. வி. திறன் கொண்ட 27 மின் நிலையங்கள் உட்பட பல கூடுதல் உயர் அழுத்த மின் நிலையங்கள் அமைக்கப்படும்.

10. மின்சாரத்தைக் கொண்டு செல்லுதல்-வழங்குதல் பணிகளைச் செவ்விய முறையில் வலுப்படுத்துவதற்கான தேவையைக் கருத்தில்கொண்டு, அண்மையில் மூன்று புதிய வட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் ஒன்று 400 கே. வி. மின் திட்டத்திற்கான அமைப்பாகும். புதிய மின் பங்கீட்டுத் திட்டம் ஒன்று புதுக்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

11. மின்சாரத் திட்டங்களுக்காக ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்த நிதி ஒதுக்கீடு 1,095 கோடி ரூபாய் ஆகும். அதன் விவரம் பின்வருமாறு :—

(ரூபாய் கோடியில்.)

மின் உற்பத்தி	708
மின்சாரத்தைக் கொண்டு செல்லுதல்—வழங்குதல் ..	225
கிராமப் பகுதி மின் இணைப்புத் திட்டங்கள்	125
ஏனையவை	37
மொத்தம் ..	1,095

12. 1977-78 ஆம் ஆண்டிற்கான மொத்த திட்ட நிதி ஒதுக்கீடு 89.64 கோடி ரூபாய் ஆகும். ஆனால், 1978-79-ல் ஒதுக்கப்பட்டுள்ள மொத்த திட்ட நிதி ஒதுக்கீடு 118.86 கோடி ரூபாய் ஆகும். 1979-80 ஆம் ஆண்டுக்கு 152.00 கோடி ரூபாய் நிதி ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது. இதன் விவரம் பின் வருமாறு:

இனங்கள்.	1977-78 (கணக்குகள்.)	1978-79 திருத்த மதிப்பீடு.	1979-80 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கக் கருதியுள்ள மொத்த நிதி ஒதுக்கம்.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் கோடியில்.)		
மின் உற்பத்தி ..	55·90	66·00	86·00
மின்சாரத்தைக் கொண்டு செல்லுதல்—வழங்குதல்	19·75	30·00	47·00
கிராமப்பகுதி மின் இணைப்புத் திட்டங்கள்.	13·74	20·00	19·00
..ஏனையவை	0.25	2·86	..
மொத்தம் ..	89·64	118·86	152·00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

13. 1979-80 ஆம் ஆண்டில், மின் உற்பத்தித் திட்டங்களின் கீழ் அதிக அளவிற்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. தூத்துக்குடி அனல் மின் திட்ட இரண்டாவது நிலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள 47 கோடி ரூபாய் ஆகும். மூலதனச் செலவு 152 கோடி ரூபாய், அரசிடமிருந்து கிடைக்கும் கடன் தொகையான 90 கோடி ரூபாய், வெளியிலிருந்து கிடைக்கும் கடன் தொகையான 40 கோடி ரூபாய், ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து கிடைக்கும் கடன் தொகையான 7.70 கோடி ரூபாய், கிராமப்புற மின் இணைப்புக் கழகத்திடமிருந்து கிடைக்கும் கடன் தொகையான 2.66 கோடி ரூபாய் ஆகிய வற்றைக் கொண்டும், எஞ்சியுள்ள தொகையை வாரியத்தின் உள் நிதி வாயில்களிலிருந்தும், வணிக வங்கிகளிடமிருந்தும், பெறுவதன் மூலமும் சரிக்கட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[1]979 ஏப்ரல் 25]

14. 1977 ஆம் ஆண்டில் நீர்த் தேக்கங்களுக்கு வரப் பெற்ற நீரின் அளவு 3,801 மில்லியன் யூனிட்டுகள் மின் சக்தி உற்பத்திக்குரிய அளவாகும். ஆனால், 1978 ஆம் ஆண்டில் வரப்பெற்ற நீரின் மொத்த அளவு 4,051 மில்லியன் யூனிட்டுகள் மின் உற்பத்திக்குரிய அளவாகும். 1977 ஆம் ஆண்டில் ஜூன், அக்டோபர், டிசம்பர் ஆகிய திங்கள்களின் முதல் நாளில் நீர்த் தேக்கங்களில் இருந்த நீர் அளவு முறையே 140 மில்லியன் யூனிட்டுகள், 1,003 மில்லியன் யூனிட்டுகள், 1,532 மில்லியன் யூனிட்டுகள் மின் உற்பத்திக்குரிய அளவு ஆகும். ஆனால், இதற்கு நிகரான கால அளவில் 1978—ல் நீர்த் தேக்கங்களில் இருந்த நீர் அளவு முறையே 226 மில்லியன் யூனிட்டுகள், 1,363 மில்லியன் யூனிட்டுகள், 1,643 மில்லியன் யூனிட்டுகள் மின் உற்பத்திக்குரியதாகும்.

15. தமிழ்நாடு மின் இணைப்பு ஏற்பாடு 1978 ஆம் ஆண்டு கோடைக்காலத்தை மின்வெட்டு ஏதுமின்றி சமாளிக்க முடிந்தது. இது முந்தைய ஆண்டில் இருந்த நிலைமைக்கு எதிரிடையான தாகும். 1971–72-லிருந்து ஜூன் 1977 வரை தொழில் துறைகள் மீது அதிக அளவிற்கு மின்வெட்டு செய்யப்பட்டது. 1975—ல் தொழில், வணிக நிறுவனங்களின்மீது 75 சதவீதம் வரையில் மின்வெட்டு செய்யப்பட்டது.

சோதனை அடிப்படையில் 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து வேளாண்மைக் காரியங்களுக் காகவும், கிராமத் தொழில்களுக்காகவும் வழங்கப்படும் மின் சுமையில் தொகுப்புக் கட்டுப்பாடு விதிப்பதை நீக்கப்பட்டது. குறைந்த அழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்தும் தொழிற் சாலைகள் மீது விதிக்கப்பட்டிருந்த காலை நேரத்து உச்ச சுமை கட்டுப்பாடு தளர்த்தப்பட்டது. இருப்பினும், கன்னியாகுமரி, இராமநாதபுரம், தருமபுரி, தஞ்சாவூர், புதுக் கோட்டை ஆகிய மின் வழங்கு திட்டங்கள் நீங்கலாக ஏனைய மின் வழங்கு திட்டங்கள் அனைத்திலும் இக் கட்டுப் பாட்டை, 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி 1 ஆம் நாளிலிருந்து மீண்டும் கொண்டுவர வேண்டியதாயிற்று. ஆனாலும் மின் உச்சத் தேவையில் ஏற்பட்ட சில பிரச்சனைகள் காரணமாக 1979-ம் ஆண்டு மார்ச் திங்கள் 27-ம் நாள் முதல் உயர் அழுத்த மின்சாரம் பெறும் தொழில்களில் தொடர்ந்து மின்சாரம் பயன்படுத்தும் தொழில்களுக்கு 15 சதவீதமும், தொடர்ந்து மின்சாரம் பயன்படுத்தா தொழில்களுக்கு 30 சதவீதமும் உச்சத் தேவை குறைப்பு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் பயன்படுத்தும் மின்சார அளவில் வெட்டு ஏதும் செய்ய வேண்டிய தேவை ஏற்படவில்லை.

16. அண்டை மாநிலங்களிலிருந்து மின்சாரம் பெறுவதற்குச் சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கருநாடக மாநிலத்தில் மின்சாரம் பற்றாக்குறையாக உள்ளதால் 1978 மே திங்களிலிருந்து கருநாடக மாநிலமும் தமிழ்நாடும், கேரளா

[1979 ஏப்ரல் 25

மாநிலத்திலிருந்து கிடைக்கப்பெறும் உபரியாக உள்ள மின்சாரத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டியுள்ளது. கருநாடக மாநிலத்திற்கும் கேரள மாநிலத்திற்கும் இடையே 230 கே.வி. திறன் கொண்ட மின் கம்பித் தொடர் புதிதாக அமைக்கப்பட்டு செயல்படத் தொடங்கியுள்ளது. கேரளத்திலிருந்து வாங்குவதற்காகத் தமிழ்நாட்டிற்கும், கேரளத்திற்கும் இடையே செய்து கொண்ட மூன்றாண்டுக் கால ஒப்பந்தம் 1979-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 ஆம் நாளில் முடிவடைந்துவிட்டது. 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12 ஆம் நாளிலிருந்து ஓராண்டுக் காலததிற்கான ஒரு புதிய ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. ஒரு யூனிட் மின்சாரத்தின் விலை 16 காசுகள்; தவிர மின்சாரத்தின் மீதான மத்திய ஆயத்தீர்வை இரண்டு காசுகள். 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 1979 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாள் வரையுள்ள காலத்தில் தன்னிடம் உபரியாகும் என கேரளா மதிப்பீடு செய்துள்ள மின்சாரத்தின் அளவு 1,500 மில்லியன் யூனிட்டுகள் ஆகும். இதில் 1,200 மில்லியன் யூனிட்டுகளைத் தமிழ்நாட்டிற்குத் தர கேரளா ஒத்துக் கொண்டுள்ளது. 1979 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாளுக்குப் பிறகு தமிழ்நாட்டிற்குத் தருவதற்காக உள்ள உபரி மின்சாரம் பற்றி விரைவில் மதிப்பாய்வு செய்யப்படும்.

ஆந்திரப் பிரதேசம் திங்கள் ஒன்றுக்கு 20 மில்லியன் யூனிட் வீதம் 6 திங்களுக்கு 1979 ஜூன் முடிய வழங்க ஒப்புக் கொண்டுள்ளது. ஆந்திரப் பிரதேச மாநில மின்சார வாரியத்திற்குத் தேவைப்படும் E.G. தர அலுமினியத்தை மால்கோவிடமிருந்து வழங்குவதற்குப் பதிலாகவே இந்த மின்சாரம் பெறப்படுகிறது.

ஆந்திரப் பிரதேசத்தில் இராமகுண்டம் உயர் அனல் மின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்திலிருந்து நியாயமான பங்கு அளவைப் பெறுவது குறித்து இந்த அரசு மத்திய அரசோடு தொடர்பு கொண்டுள்ளது.

17. தமிழ்நாட்டில் 12 இலட்சம் வேளாண்மைக் கிணறுகளுக்கு உரிய மின்சார விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்குதல் என்று திட்டமிட்டதில் சுமார் 8.43 இலட்சம் வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று கோரி வந்த விண்ணப்பங்களில் 2.5 இலட்சம் விண்ணப்பங்கள் குறித்து இன்னும் மின் இணைப்பு வழங்கப்படாமல் உள்ளது. இத்தேக்கத்தை விரைவாகப் போக்கும் நோக்கோடு, விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்குவது குறித்த கொள்கைகள், நடைமுறைகளை வாரியம் திருத்தி அமைத்துள்ளது. இதுவரையில், மின் இணைப்பு வழங்குவதற்கான திட்டங்களின்

1979 ஏப்ரல் 26]

பேரில் 10 சதவீத வருவாய் கிடைக்க வேண்டும் என்று வாரியம் வலியுறுத்தி வந்தது. இது, வாரியத்தின் சில பணியாளர்களிடையே விரும்பத்தகாத குறிப்பிட்ட சில நடைமுறைகளை ஊக்குவித்ததால், வாரியம் வேளாண்மைத் துறைக்கு இயலுகின்ற எல்லா ஊக்கத்தையும் அளிக்கும் நோக்கத்துடன், மேற்சொன்ன இந்த வரையறையை வருங்காலத்தில் வலியுறுத்துவதில்லை என்று தற்போது தீர்மானித்துள்ளது. 1978 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் நிலவரப்படி முடிவுறாமல் உள்ள விண்ணப்பங்கள் அனைத்தும் நிறுவன நிதி உதவி பெற்ற விண்ணப்பங்கள், வாரியத்தால் ஒப்புதல் வழங்கப்பட்ட திட்டங்களின்கீழ் வரும் விண்ணப்பங்கள் ஆகியவற்றிற்கு, உயர் முன் உரிமை வழங்கப்படுவதற்கு உட்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு முடிவு செய்யப்படும். 1978 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1ஆம் நாளிலிருந்து புதிய விண்ணப்பங்கள் அனைத்தும் மனு செய்த தேதியின் அடிப்படையில் மட்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு முடிவு செய்யப்படுகிறது. இருப்பினும், கம்பம் நடுதல், மின் மாற்றிகளின் திறனை அதிகரித்தல், பீடர்களை இரட்டித்தல், கண்டக்டர்களை வலுப்படுத்துதல், கம்பித் தொடரை விரிவாக்குதல் முதலிய பணிகள் இல்லாமல் இருக்கும் மனுக்கள் தனியாக பதிவு செய்யப்பட்டு, மின் இணைப்பு நேரடியாக வழங்கப்படும்.

18. 1978–79-ல், 2,35.16 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும் என்றும், 1,94·56 கோடி ரூபாய் செலவு ஏற்படும் என்றும் மதிப்பிடப்பட்டது. நெய்வேலி மின்சக்திக்கு 61.39 கோடி ரூபாய் செலவாகும் என்றும் கேரளத்திலிருந்து வாங்கப்படும் மின்சாரத்திற்கு 26·32 கோடி ரூபாய் செலவாகும் என்றும் அனல் மின் நிலையங்களுக்கு தேவைப்படும் எரிபொருள்களுக்கு 31·28 கோடி ரூபாய் செலவாகும் என்றும் மதிப்பிடப்பட்டது. இயக்குதல், பராமரித்தல், நிறுவுதல் ஆகியவை குறித்து மொத்தம் 76 கோடி ரூபாய் செலவாகும். தேய்மான சேமநிதி 21·53 கோடி ரூபாய், 3·16 கோடி ரூபாய் நிலுவைத் தொகையில் 0.04 கோடி ரூபாய் பொது சேமநிதியாக வரையறை செய்யப்பட்டது. அரசுக்குச் சேரவேண்டிய 22·22 கோடி ரூபாய் வட்டித் தொகையை வருவாய் கொண்டு சரிக்கட்ட இயலாது. 1979–80-ல், வருவாய் 2,54·38 கோடி மற்றும் செலவு ரூபாய் 2,30·61 கோடி என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. மின்சார வாரியம் தனது கடன்களின்பேரில் செலுத்த வேண்டிய வட்டி பொறுப்புகளுக்கும், பொது தேய்மான சேமிப்பு நிதிகளுக்கு செலுத்த வேண்டிய நிதி ஒதுக்கீடுகளை செய்தால் ரூ. 48·66 கோடி துண்டு விழும்.

19. அண்மை ஆண்டுகளில் மூலப் பொருட்களின் விலை திடீரென உயர்ந்ததன் காரணமாக, வாரியத்தின் நிதி நிலை பாதிக்கப்பட்டுள்ளது. 1972–73-ல் டன் ரூ. 76 ஆக இருந்த நிலக்கரி விலை தற்போது டன் ரூ. 137 ஆக உயர்ந்துள்ளது.

[1979 ஏப்ரல் 26

1972-73-ல் கிலோ லிட்டர் ரூ. 304 ஆக இருந்த எரி எண்ணெய் விலை தற்போது கிலோ லிட்டர் ரூ. 1,017 ஆக உயர்ந்துள்ளது. 1972-73-ல் யூனிட் 8·1 காசாக இருந்த நெய்வேலி மின்சக்தி கட்டண வீதம் தற்போது யூனிட் 16·12 காசாக உயர்ந்துள்ளது. நெய்வேலியில் எண்ணெய் மூலம் எரியூட்டப்பட்டு உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியின் விலை யூனிட் ஒன்றுக்கு 42 காசாகும். 1972-73-ல் யூனிட் ஒன்றுக்கு 6.25 காசாக இருந்த கட்டண வீதத்தை ஒப்பிடுகையில், 1979ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 ஆம் நாள் அன்று முடிவடைந்த ஒப்பந்தம் ஒன்றின்கீழ் கேரளா வழங்கிய மின்சக்திக்கான கட்டண வீதம் யூனிட் ஒன்றுக்கு 12.5 காசாக இருந்தது. இனி வரும் ஆண்டுகளில் நம்முடைய மின் இணைப்பு ஏற்பாட்டின்கீழ் கிடைக்கும் அனல் மின் சக்தியின் பங்கு அளவு அதிகமாகவே இருக்கும்; அதன் விளைவாக மின் உற்பத்திக்கான செலவு உயர்ந்தே இருக்கும். யூனிட் ஒன்றுக்கு 2 காசு என்னும் வீதத்தில் மின் உற்பத்திக்காக இந்திய அரசு விதித்த மத்திய ஆயத் தீர்வையும் இந்த வாரியம் செலுத்தி வருகிறது; இவ்வாறு செலுத்தப்படுகிற ஆயத் தீர்வை ஆண்டொன்றுக்கு 15 கோடி ரூபாய்க்கும் அதிகமாகிறது. இவ்வாறு மின் உற்பத்திச் செலவு பெருமளவில் உயர்ந்திருப்பினும் மாநில அரசு பின்பற்றும் கொள்கையின் காரணமாக, விவசாயிகள், மின்சக்தியை அதிக அளவில் பயன்படுத்தும் தொழிற்சாலைகள் வீட்டுப்பயனீட்டாளர்கள் ஆகியோருக்கு குறைந்த கட்டணத்தில் வாரியம் மின்சாரம் வழங்கி வருகிறது.

20. இந்த அரசு பதவி ஏற்பதற்கு முன்னர், வேளாண்மைக் காரியங்களுக்காக மின்சக்தியைப் பயன்படுத்துபவர்களுக்கு 1975 செப்டம்பர் திங்கள் 1ஆம் நாள் முதல் மின்சக்திக் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு 16 காசாக உயர்த்தப்பட்டிருந்தது. விவசாயிகளின் இடர்பாடுகளைக் கருத்தில் கொண்டு, யூனிட் ஒன்றுக்கு 16 காசாக இருந்த மின் கட்டணத்தை 1977 ஜூலை 1 ஆம் நாளிலிருந்து சிறு விவசாயிகளுக்கு 14 காசாக இந்த அரசு குறைத்தது. இதனை மேலும் பரிசீலனை செய்து, வேளாண்மைத் துறைக்குக் கணிசமான அளவிற்கு நிவாரணம் வழங்கும் பொருட்டு மின் கட்டணத்தை 1978ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து சிறு விவசாயிகளுக்கு 14 காசிலிருந்து 12 காசாகவும், ஏனைய விவசாயிகளுக்கு 16 காசிலிருந்து 14 காசாகவும் இந்த அரசு குறைத்துள்ளது. வேளாண்மை பம்பு செட்டுகளுக்கான மீட்டர் வாடகை மாதமொன்றுக்கு ரூ. 5-லிருந்து ரூ. 4ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது. இந்தச் சலுகைகள் வகையில் வாரியத்திற்கு ஆண்டொன்றுக்குத் தோராயமாக 7 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுவதாக மதிப்பிடப்படுகிறது.

தற்சமயம் 130 குதிரைத் திறனுக்கு அதிகமான மின் பளு, உயர் அழுத்தமாக கருதப்படுகிறது. இதற்கிணங்க மாநிலத்தில் உள்ள 130 குதிரைத் திறனுக்கு அதிகமாக மின் பளுகொண்ட நீரேற்று பாசன கூட்டுறவு சங்கங்களுக்கு உயர் அழுத்த மின்

1979 ஏப்ரல் 26]

கட்டணம் II விதிக்கப்படுகிறது. இதன்படி இச்சங்கங்களுக்கான மொத்த யூனிட் கட்டணம் 35 காசு முதல் 37 காசு வரையாகும். ஆனால் இச்சங்க உறுப்பினர்களான விவசாயிகளுக்கும் விவசாயத்திற்கான சலுகை கட்டணத்தின் நன்மை கிடைக்க வேண்டுமென அரசு கருதுகிறது. இதற்கிணங்க 1978 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாள் முதல் இச்சங்கங்களுக்கு யூனிட் ஒன்றுக்கு 14 காசு என்ற வீதம் அறிவிக்கப்பட்டுள்ளது.

21. மின் கம்பித் தொடரில் ஏற்படும் மின்சக்தி இழப்புகள் அனைத்து மின் வாரியங்களுக்கும் ஒரு தொல்லை தரும் பிரச்சினையாக இருக்கிறது. இந்த மின்சக்தி இழப்புகளை மிகக் குறைந்த அளவுக்குக் குறைக்கும் பொருட்டு இந்த வாரியம் போராடிக் கொண்டு வருகிறது. மின்கடத்தி மின் பங்கீடு ஏற்பாடு முறையில் மேம்பாடுகள் செய்வதன் மூலம், தொழில் நுட்ப வகையில் ஏற்படும் இழப்புகள் சரிசெய்யப்படுகின்றன. மின்சாரம் திருடுவதையும் மின் கட்டண மோசடியையும் கண்டுபிடித்துத் தடுக்க மின் இணைப்புகள் குறித்து முறையான திடீர் சோதனைகள் நடத்துவது தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. 1977–78ஆம் ஆண்டில், 35·58 இலட்சம் சோதனைகள் செய்யப்பட்டன. மின்சக்தி திருடுபோதல், மின் கட்டண மோசடி ஆகியவற்றைக் கண்டுபிடித்த வகையில் ரூ. 33·31 இலட்சம் வருவாய் ஏற்படுமென்று மதிப்பிடப்பட்டது. இந்த நடவடிக்கைகளால், 1973-74-ல் 21·4 சதவீதமாக இருந்த மின்கம்பித் தொடர் மின்சக்தி இழப்புகள் 1977–78-ல் 18·6 சதவீதமாகக் குறைந்துள்ளன. நமது நாட்டிலேயே தமிழ்நாடு மின்வாரியம் மிகப் பரந்த மின்கம்பித் தொடர்களைக் கொண்டுள்ளது என்பதனால் ஏனைய பிற மாநிலங்களில் உள்ள நிலையுடன் ஒப்பிடுகையில் மின்சக்தி இழப்புகளில் நமது நிலை நியாயமான அளவிலேயே உள்ளது. ஆனாலும் வாரியம் தன் முயற்சிகளில் ஓய்ந்திருக்கப்போவதில்லை.

22. வாரியத்தை எதிர்நோக்கியுள்ள வேறு இரண்டு பிரச்சினைகள் என்னவெனில், மின்சுமை ஏறும் உச்ச கட்ட நேரங்களில் குறைந்த வோல்டேஜ்களும், இரவு நேரங்களில் அதிக வோல்டேஜ்களும் ஏற்படுகின்றன. கூடுதலாக உயர் அழுத்த துணை மின் நிலையங்களில் உடனடியாக மாறக்கூடிய மின் அழுத்த மாற்றி இயந்திரங்களை நிறுவும் பணியை வாரியம் தொடங்கியுள்ளது. கூடுதல் உயரழுத்த மின் நிலையங்கள் அனைத்திலும் மின் அழுத்த மாற்றிகளை அமைப்பதற்கு, முறையான படிப்படியாக அமைந்த திட்டமொன்றுள்ளது. ஏற்கனவே இந்த மின் அழுத்த மாற்றிகள் 43 துணை மின் நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ளன. வரும் ஆண்டில் 77 துணை மின் நிலையங்களில் மின் அழுத்த மாற்றிகளை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது குறைந்த மின் அழுத்த நிலைமை இருப்பதை இது மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மின்சாரம் அடிக்கடி நின்று மின் தடைகள் ஏற்படுவதைக்

குறைக்கும் பொருட்டுப் பல்வேறு நிலைகளில் மின்கம்பித் தொடர்களையும் உபகரணங்களையும் நன்கு பராமரித்து வருவதற்கு அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. பல்வேறு மின் ஏற்பாடுகளுக்கான மேம்பாட்டுச் செயற்குறிப்புகள் தயாரிக்கப்பட்டு அவை படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

23. மின்வாரியம் தெரு விளக்குகளை நன்கு பராமரித்து வராதது பற்றி உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து தொடர்ந்து பல புகார்கள் வந்ததன் விளைவாகத் தெரு விளக்குகளைப் பராமரிக்கும் பொறுப்பு, 1977 ஆம் ஆண்டு மே திங்களில் அந்தந்த உள்ளாட்சி மன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டது என்பதை உறுப்பினர்கள் நினைவு கூர்தல் வேண்டும். இருப்பினும், தெருவிளக்குகளைப் பராமரிக்கும் பணி நன்கு கவனிக்கப்பட வேண்டியுள்ளது. தெருமின் விளக்குகளின் பராமரிப்பு பற்றி அனைத்து சாத்தியக் கூறுகளையும் பரிசிலனை செய்து புதிய வழிமுறைகளை அரசு தற்போது வகுத்துள்ளது.

பஞ்சாயத்துக்களுக்குத் தேவையான பல்புகள் மற்றும் குழல் விளக்குகளை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் வாங்கி வழங்கும். நகராட்சிகளுக்குத் தேவையான பல்பு மற்றும் குழல் விளக்குகளை அவையே வாங்கிக் கொள்ளும். பழுதடைந்த பல்பு மற்றும் குழல் விளக்குகளை மாற்றியமைக்கும் பொறுப்பு மின்வாரியத்தையே சாரும். இவ்வாறு மாற்றியமைக்கும் ஒவ்வொரு பல்புக்கும் 50 காசு வீதமும் குழல் விளக்குக்கு ரூ. 1 வீதமும் பெற மின்வாரிய தொழிலாளிகள் தகுதியுடையவராவர். இந்த மாறுதலுக்குட்பட்டு இவை 'பியூஸ் ஆப்-கால்' ஆகக் கருதப் பிடும். மேற்கண்ட வீதத்தில் மின்வாரியத்தின் பிரிவு அலுவலர் மின்வாரிய தொழிலாளிக்கு பல்பு மற்றும் குழல் விளக்குகளை மாற்றி அமைப்பதற்கான தொகையை வழங்குவர். பிறகு இது மின்கட்டண பில்லுடன் சேர்க்கப்படும்.

24. மின்சாரப் பயனீட்டாளர்களிடம், மூன்று திங்களுக்குப் பயன்படுத்தப்படும் உயரளவு மின்சாரத்திற்காகும் கட்டணத்திற்குச் சமமான ஒரு தொகையை பிணைய வைப்பீட்டுத் தொகையாக செலுத்த வேண்டுமென்று குறிப்பிட்டுள்ள நிபந்தனை காரணமாக, தொழிற்சாலைகள் சிலவற்றுக்கு இன்னல் விளைந்துள்ளது. இதனால் தொழிற்சாலைகள், கணிசமான அளவு மூலதனத்தை மின்வாரியத்திடம் போட்டு வைக்க வேண்டியுள்ளது. இந்தத் தொழிற்சாலைகளுக்கு இதனால் ஏற்பட்டுள்ள இன்னல்களைப் போக்கும் கருத்துடன் அரசு, உயரழுத்த மின்சாரப் பயனீட்டாளர்களிடம் முந்தைய 12 மாத கால அளவில், 3 திங்கள் உயரளவு மின் பயனுக்கான கட்டணத் தொகையைப் பிணையமாகக் கேட்பதற்குப் பதிலாக, $1\frac{1}{2}$ திங்கள் உயரளவு மின் பயனுக்கான தொகையைப் பிணைய வைப்பீட்டுத் தொகையாக வசூலிக்கலாம் என்று நவம்பர் 1978-ல் ஆணை

1979 ஏப்ரல் 26]

யிட்டது. இத்தகைய தொழிற்சாலைகளில் அமைக்கப்பட்ட மின் அமைப்பைப் பொறுத்த மட்டில் ஒவ்வொரு திங்கள் முடிந்து மூன்று நாட்களுக்குள் பயன்படுத்தப்பட்ட மின் அளவைக் கணக்கிட வேண்டுமென்றும், அந்த இடத்திலேயே மின் கட்டணப் பட்டியல்கள் கொடுக்கப்பட்டு 15 நாட்களுக்குள் பட்டியலுக்குரிய தொகை கொடுத்துத் தீர்க்கப்பட வேண்டுமென்றும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அந்த பயனீட்டாளர்களைப் பொறுத்தமட்டில், பிணை வைப்பீட்டுத் தொகையைக் குறைத்ததன் காரணமாக வாரியத்தின் நலன் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு இந்த ஏற்பாடு உறுதியளிக்கும்.

25. மின்சாரப் பயனீட்டாளர்கள் பெருமளவிற்கு மனநிறைவு அடைவதற்கு உறுதி செய்யும் பொருட்டு இதே போன்று அந்தந்த இடத்திலேயே மின் கட்டணப் பட்டியல்கள் கொடுக்கப்படும் முறை, செயலாக்கப்படுவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

26. தற்போது மின் சப்ளை பெறுவதற்கு தனித்தனியே மீட்டர் வைத்துக் கொள்ள வேண்டுமென்ற விதி இருப்பதால் குடிசைவாசிகள் மின் சப்ளையை பயன்படுத்திக்கொள்ள சிரமமாகக் கருதுகின்றனர். எனவே, குடிசைவாசிகள் விரும்பினால் தனித்தனியே மீட்டர் வைக்காமல் மின் சப்ளை கொடுத்து ஒத்த வீத அடிப்படையில் மின் கட்டணம் வசூலிக்க அரசு முடிவு செய்துள்ளது. தற்போதைக்கு இத்திட்டம் கிராமப்புறங்களில் மட்டும் செயலாக்கப்படும். இத்திட்டத்திற்கு ஒரு குடிசை என்பது 200 சதுர அடிக்கு அதிகப்படாமல் மண் சுவரும் கீற்றுக் கூரையும் கொண்ட வசிக்கும் இடமாகும். இத்திட்டத்தின் கீழ் ஒரு விளக்கு மட்டும் அனுமதிக்கப்படும். மின் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2-50 (ரூபாய் இரண்டும் ஐம்பது காசும்) ஆகும். வைப்புத் தொகையான ரூபாய் 2-50 (ரூபாய் இரண்டும் ஐம்பது காசும்) வசூலிக்கப்படும். பயனீட்டாளர்கள் விரும்பினால் ரூ. 10 வசூலித்துக் கொண்டு குடிசையின் உட்பகுதியில் ஒரு விளக்குக்கான ஒரு முனை ஒயரிங் செய்து ஒரு பல்பும் மின்வாரியம் வழங்கும்.

27. வாரியத்தின் சாதனைகள், மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர்களால் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட வேண்டுமென்பதிலும், வாரியம் தனது நிர்வாகத் திறமையை வளர்க்கும் வகையில் மதிப்பிற்குரிய உறுப்பினர்களின் கருத்துரைகளையும், ஆலோசனைகளையும் பெற வேண்டுமென்பதிலும் அரசு ஆர்வம் கொண்டுள்ளது. இவ்வகையில் முதற்படியாக அரசு என்னுடைய தலைமையின்கீழ் மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் 21 பேர் கொண்ட மின்சாரம் பற்றிய ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்துள்ளது.

28. கிராமப்புறங்களுக்கு மின்சக்தி பகிர்ந்தளிப்பதைப் பரவலாக்குதலையும், கிராமப்புறங்களுக்கு மின்வசதி வழங்க வகை செய்வதையும், ஒருங்கிணைந்த பொருளாதார வளர்ச்சிக்கு வகை செய்வதையும் தனது நோக்கமாகக் கொண்ட கிராமப்புற

மின்சக்திக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கு, கிராமப்புற மின் வசதிக் கழகம் நிதி உதவி அளிக்க முன் வந்துள்ளது. இந்த வாயப்பைப் பயன்படுத்த அரசு முடிவு செய்து இம் மாநிலத்தில் முன்னோடித் திட்ட அடிப்படையில் இரண்டு கிராமப்புற மின்வசதிக் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க ஆணையிட்டுள்ளது. இச்சங்கங்களில் ஒன்று கோயம்புத்தூர் மாவட்டம், துடியலூர் என்னுமிடத்திலும், மற்றொன்று தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த கும்பகோணத்திலும் செயல்படும். இச்சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் மூலதனச் செலவாக சுமார்ரூபாய்150இலட்சம்செலவாகும். கிராமப்புறமின்இணைப்புக் கழகத்திடமிருந்து கடனாக ரூபாய் 90 இலட்சம் பெறப்படும். மாநில அரசு ரூபாய் 35 இலட்சம் வழங்கும். மின்சார வாரியம் ரூபாய் 15 இலட்சம் வழங்கும். உறுப்பினர்களிடமிருந்து ரூபாய் 10 இலட்சம் பெறப்படும்.

29. மத்திய அரசு, 1978-79 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 1—3—1978 ஆம் நாளிலிருந்து உற்பத்தியாகும் ஒவ்வொரு யூனிட் மின்சாரத்திற்கும் 2 காசு என்ற வீதத்தில் ஆயத்தீர்வை விதிக்க முடிவு செய்திருந்தது. அவ்வாறு தீர்வை விதிப்பதற்கு முதலில் எதிர்ப்புத் தெரிவித்த மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. மின்சாரக் கட்டண உயர்வு மூலமாகக் கிடைக்கும் கூடுதல் வருவாய், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் திட்டங்களுக்கும் மாநிலத் திட்டத்திற்கும் ஒரு நிதி ஆதாரமாக முழு அளவில் கிடைத்து வந்திருந்தது என்றும் புதிதாகத் தீர்வை விதித்ததினால் இந்த வருவாய் கடுமையாகப் பாதிக்கப்படும் என்றும் சுட்டிக் காட்டி நமது முதலமைச்சர் இவ்வாறு தீர்வை விதிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதமருக்கும், மத்திய நிதி அமைச்சருக்கும் கடிதம் எழுதினார். மத்திய அரசு மாநிலங்களுக்குக் கூடுதலான நிதி ஆதாரங்களை மாற்ற வேண்டும் என்று மாநிலங்களெல்லாம் வற்புறுத்தி வருகின்ற நேரத்தில் இவ்வாறு தீர்வை விதிப்பதனால், அந்த நிலை மாறி, மின்சார வாரிய நிதி ஆதாரங்கள் மத்திய அரசுக்கு செல்கின்றன என்பதையும் முதல் அமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். மத்திய அரசு இந்த முறையீடுகளுக்குச் செவிசாய்த்து, மின்சார உற்பத்தியின் மீதான ஆயத்தீர்வையின் மூலம் கிட்டும் நிகர வருவாயை மாநிலங்களுக்கு மாற்றுவதென தற்போது முடிவு செய்துள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். எனினும் 1—3— 1978 முதற்கொண்டு மேற்கண்டவாறு ஆயத்தீர்வை விதிக்கப்பட்டு வருகின்ற போதிலும், அதன் மூலம் கிட்டும் நிகர வருவாய் 1—4—1979-லிருந்துதான் மாநிலங்களுக்கு மாற்றப்படும் என்று தெரிகிறது. இந்த முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டுமெனக் கேட்டும் 1—3—1978-லிருந்தே அதனைச் செயலுக்குக் கொண்டுவர வேண்டுமெனக் கோரியும் நமது நிதி அமைச்சர் அவர்கள் மத்திய நிதி அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்கள்.

1979 ஏப்ரல் 26]

30. மின்சாரக் கட்டணப் பாக்கி காரணமாக மின்சார வாரியம் கடுமையான இக்கட்டுக்காளாகியுள்ளது. அவற்றை வசூலிக்க சிவில் நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்வது அலைக் கழிப்பதாக இருப்பதுடன், நீண்ட காலமும் ஆகிறது. மின் இணைப்புத் துண்டிக்கப்படும் என்ற அச்சுறுத்தல் போதிய பலன் அளிப்பதில்லை. அதுவுமில்லாமல், பொது நன்மையைக் கருதிப் பார்க்கும்போது அவ்வாறு துண்டிப்பது எல்லா சமயங் களிலும் சாத்தியமும் அல்ல. இந்த நிலையை மாற்றிச் சீர் படுத்துவதற்காக வரி வசூல் சட்டத்தின் விதிமுறைகளைப் பயன் படுத்த வாரியத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு மின்சார வாரிய (பாக்கித் தொகையை வசூலித்தல்) சட்டம் இயற்றப் பட்டுள்ளது.

31. தமிழ்நாடு 1949 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு, கேட்டுப் பெறுதல் (தற்காலிக அதிகாரங்கள்) சட்டத்தின்கீழ் அறிவிப்புகள் வெளியிட்டு மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்கான கட்டணமும் மின் சாரத்தைப் பயன்படுத்துவதற்கான பல்வேறு வரைமுறைகளும் கட்டுப்பாடுகளும் அவ்வப்போது அரசால் வரையறுக்கப்பட்டு வந்தன. மின்சார உற்பத்தியின் மீது மத்திய அரசு ஆயத் தீர்வை விதித்த போதும், இதற்குக் கடந்த ஒரு தேதியிலிருந்து செயல் வடிவம் கொடுத்து, தீர்வை விதிக்கப்படுகின்ற நாளி லிருந்து நுகர்வோருக்கு மாற்ற வேண்டிய அவசியம் வாரியத் திற்கு ஏற்பட்டபோதும், ஒரு தனிச்சட்டம் இல்லாமல், கடந்த ஒரு தேதியிலிருந்து கட்டணம் வசூலிக்கயியலாது எனத் தெரிய வந்தது. எனவேதான், தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண வீதங்களைத் திருத்தியமைக்க தற் போது விதிக்கப்படுகின்ற எல்லாக் கட்டணங்களையும் குறிப்பிட்டு விரிவானதொரு சட்டமாக இயற்றியது. இதற்கிடையில், தற்காலிகச் சட்டமான தமிழ்நாடு 1949 ஆம் ஆண்டு இன்றி யமையாப் பொருட்கள் கட்டுப்பாடு, கேட்டுப் பெறுதல் (தற்காலிக அதிகாரங்கள்) சட்டம் 1979 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 25ஆம் நாளுடன் காலாவதியாகி விட்டது. எனவே, இந்தச் சட்டத்தை நிரந்தரமானதாக்கி, அரசு, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு, கேட்டுப் பெறுதல் (தற்காலிக அதிகாரங்கள்) திருத்த அவசரச் சட்டத்தை (4/1979) அதிகார முறையில் வெளியிட்டது. இந்த அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அதே அடிப்படையில் ஒரு சட்டம் தற்போது இயற்றப்பட்டுள்ளது.

32. மின்சார வாரியம் அதன் பணியாளர்களுக்கு 1977 டிசம்பர் திங்களிலிருந்து பல்வேறு சலுகைகளையும் நன்மைகளையும் வழங்கி வந்துள்ளது. 1977-78 ஆம் ஆண்டில், 8.33 சதவீத ஊதியக் கொடை வழங்கப்பட்டது. 1975-76 ஆம் ஆண்டில் சட்டப்படி ஊதியக் கொடை எதுவும்

[1979 ஏப்ரல் 26

வழங்கப்பட வேண்டியதில்லையானாலும் ஊதியத்தில் 4 சதவீதம் பணியாளர்களுக்கு கருணைத் தொகை வழங்கப்பட்டது. அனல் மின் நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களை ஊக்குவித்து செயல் திறனை மேம்படுத்துவதற்காக, ஊக்கப்படி, ஊதியக் கொடைத் திட்டம் ஒன்று 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. சுருளியாறு நீர் மின் திட்டத்தை திட்டமிட்ட நாளுக்கு முன்பாகவே தொடங்க இயலும் வகையில் ஆற்றிய நல்ல பணியினை பாராட்டும் வகையில் அத் திட்டத்தில் பணிபுரிந்த பணியாளர் அனைவருக்குமே ஒரு மாதத்திற்குரிய ஊதியமும் அகவிலைப் படியும் வழங்கப்பட்டது.

33. எனது உரையை முடிக்கும் முன்னர், இவ்வரசு மத்திய அரசுடன் விவாதிக்கக் கருதியுள்ள முக்கியமானதொரு கொள்கை பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன். மாநில மின்சார வாரியங்களின் அமைப்பு, பணிகள், அதிகாரங்கள், மாநில அரசுக்கும் அவற்றுக்கும் இடையேயான உறவு ஆகியவை தற்போது 1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டம் என்னும் ஒரு மத்தியச் சட்டத்தினால் நெறிப்படுத்தப்படுகிறது. இச்சட்டத்தைத் திருத்த மாநில அரசுக்கு அதிகாரமில்லை. இச்சட்டம், மாநில அரசு, மின்சார வாரியம் ஆகியவற்றின் பங்கை தனித் தனியே வரையறுத்துக் கூறுகிறது. மின்சார வாரியம் சரியான முறையில் இயங்குதல், திறம்படச் செயல்படுதல் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், மாநிலச் சட்ட மன்றத்திற்கும் பொது மக்களுக்கும் மாநில அரசு கொண்டுள்ள உள்ளார்ந்த பொறுப்புகளுக்கு ஏற்ப இச்சட்டம் அமையவில்லை. இது இன்றுள்ள நிர்வாக நடைமுறைகளுக்கு சிறிதுகூட ஏற்றதல்ல. பொது நிறுவனங்களை நடத்துவதில் அரசு மேற்கொள்ள வேண்டிய பொறுப்புகளுக்கும் உகந்ததல்ல. மாநில அரசின் அதிகாரங்களை இவ்வாறு மத்திய அரசு வைத்துக் கொண்டிருப்பது அகற்றப்பட வேண்டும் என்பது இவ்வரசின் ஆழ்ந்தாராய்ந்த கருத்தாகும். மத்தியச் சட்டத்தில், மாநில மின்சார வாரியங்களின் அமைப்பை நெறிப்படுத்துகின்ற விதி முறைகள் ரத்து செய்யப்பட்டு, மாநில அரசின் ஏனைய பொதுத்துறை நிறுவனங்கள் தொடர்பாகச் செய்யப்படுவது போலவே, மின்சார வாரியங்கள் அமைப்பு, அவற்றின் பணிகள், பொறுப்புகள், மின்சார வாரியங்கள் மீது மாநில அரசின் கட்டுப்பாடு, மேற்பார்வை ஆகியவற்றிற்கு வகை செய்யக் கூடிய சட்டங்களைச் சம்பந்தப்பட்ட மாநில அரசுகளே இயற்றிக் கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்.

34. மின்சார வாரியம் செயல்படுகின்ற விதத்தைச் சீரமைப்பதற்கான கருத்துரைகளைத் தெரிவிக்குமாறு அவையினரனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

———

2860